www.padippakam.com

Registered as a News Paper in Sri Lanka

பக்கம் 20 ரூபா 12/00

දිනමුරසු වාරමලර්

ஒக்.24-30,1999

# வாரமலர் தினமுரசு

THINAMURASU SRI LANKA'S NATIONAL TAMIL WEEKLY முரசு 332

## தேர்தலுக்காக ஆயுதங்கள் வாக்குகளுக்காக ரவைகள்

## எல்லையில் ஆயுதக் குவிப்பு விபரீதமான வியூகம்



## புதிய ஆட்சிக்கு புலிகள் செய்தி!



ராஜேஸ்குமாரின் புதிய தொடர்

## சிகப்பு வணக்கம்

சூடு - சுவை - சுவாரசியம் அது தான் தினமுரசு

படிப்பகம்

www.padippakam.com

# முரசம்

## நண்பர்களாய் இருப்போம்!

**அன்புள்ள உங்களுக்கு,
வணக்கம்.**

இந்தியப் பிரதமராக
மறுபடி பொறுப்பேற்றுள்ளார்
மதிப்புக்குரிய வாஜ்பாய்!

முரசின் வாசகநெஞ்சங்கள்
சார்பாக- முரசு
வாழ்த்துக்களை உரித்தாக்குகிறது!

இலங்கைத் தமிழர் நலனில்
அக்கறையும், அனுதாபமும் உள்ள
வை.கோ. போன்றவர்கள்
வெற்றி பெற்றிருப்பதும்
மகிழ்வுக்குரிய நிகழ்வே!

இந்தியாவிடம் இருந்து
கட்டளைகளையல்ல,
கரிசனையான போக்கையே
இங்குள்ள தமிழ் பேசும் மக்கள்
நாடி நிற்கிறார்கள்!

இந்தியா
நல்லதொரு நண்பனாக
இருப்பதையே விரும்புகிறார்கள்!

கடந்த காலத்தில்
இந்திய அரசியல் தலைவர்கள்
தங்களை எஜமானர்களாக
கருதிக் கொண்டதால்தான்
இங்குள்ள பிரச்சனைகளுக்கு
தம் விருப்பப்படி தீர்வுகளை
திணிக்க முற்பட்டனர்.

அதன் விளைவால்
விரும்பத்தகாத விளைவுகள்
இருதரப்பு உறவிலும்
விரிசலை விதைத்தன!

இலங்கைக்கு படையை
அனுப்பியது தவறான முடிவு
என்பதை வாஜ்பாயும்
சமீபத்திய பிரசாரங்களில்
பகிரங்கமாகக் கூறியிருந்தார்.

அவசர கோலத்திலும்
ஜே. ஆரை நம்பியும்
ராஜீவ் செய்த முடிவு,
நண்பர்களை மோதவிட்டு
ஜே. ஆர். வேடிக்கை பார்க்க
வசதியாக மாறியிருந்தது!

வடக்கு-கிழக்கை
பிரிப்பதற்கான ஷரத்தை
தமிழ் பேசும் தரப்பின் சம்மதமின்றி
ராஜீவ் ஒப்புக்கொண்டதற்கு
கூறப்படும் காரணங்கள்
வலுவில்லாதவை!

இந்த ஒப்புதல்தான்
ஒப்பந்தம்மீது நம்பிக்கையீனத்தை
உருவாக்கியிருந்தத!

தம் உரிமைகளுக்காக
உதிரத்தைச் சிந்தி,
எண்ணற்ற விலை கொடுத்த
போராடிய தமிழ் பேசும் தரப்பின்
கருத்தைக் கணக்கில் எடுக்காது,
கட்டளையிட்டு
கட்டுப்படுத்த முயன்றமை
எஜமானப் போக்கே தவிர
நண்பருக்குரிய முறையல்ல!

அத்தகைய அணுகுமுறைகள்
இல்லாதளவுக்கு,
ஒருவருக்கொருவர் பாதகமற்ற,
ஒருவர் நலனுக்காக
இன்னொருவர் நலனை கீழ்ப்படுத்தாத
நட்பு மலர்வதே நன்று!

இலங்கைத் தீவில்
இந்தியாவின்
நிரந்தர நண்பர்கள்
தமிழ் பேசும் தரப்பினர்தான்!

தென்னாசியாவில்
வாலை நீட்ட நோட்டமிடும்
அமெரிக்காவால்
இலங்கைத் தமிழர் நலன் மட்டுமல்ல;
இந்திய நலனும்
ஆபத்துக்கு உள்ளாகலாம்!

அதேபோன்று
தமிழ் பேசும் தரப்பும்
இந்தியாவுடன் நட்பை
கெட்டிப்படுத்த
முன்வந்தாக வேண்டும்!

வை.கோ.
டாக்டர் ராமதாஸ்
போன்றவர்களது உதவியுடன்
கடந்த கால கசப்புக்களை
மாற்றும் விதமான
புதிய உறவுக்கு
வழி கோலுவது முக்கியம்!

பாரதிய ஜனதா அரசு
பதவிக்கு வந்திருப்பதால்
இலங்கை தொடர்பான
இந்திய நிலைப்பாட்டில்
உடனடியான
தலைகீழ் மாற்றங்கள்
நிகழும் என்றில்லை!

ஆனாலும்,
தற்போதைய சூழ்நிலையில்
உதவியாக இல்லாதுவிட்டாலும்
உபத்திரவம் இல்லை என்றளவில்
பயன் உண்டு!

சென்றமுறை
வை.கோ. ஐ.நா.சபைவரை
இங்குள்ள பிரச்சனையை
எடுத்துச் சென்றதையும்,
அதற்கு வாஜ்பாய் அரசின்
மறைமுக ஆதரவு இருந்ததையும்
மறந்துவிடலாகாது!

தமிழக முதல்வர்
கூறியுள்ள கருத்துக்களும்
நம்பிக்கை தருகின்றன!

தமிழ் பேசும் தரப்பையும்
இந்தியாவையும்
மோதவிடும் சதிகளுக்கு
இடமளியாது இருப்பது
தமிழ் பேசும் தலைமையின்
கடமையுமாகும்.

மீண்டும் மறுமடலில்
வந்து கலக்கும்வரை

**என்றென்றும் அன்புடன்,
ஆசிரியர்**

## சத்துவ குணம்

கீதையில் பகவான் மனிதர்களை மூன்று வகையாக விவரிக்கிறான். மொத்த மானிட வர்க்கத்தையே மூன்று குணங்களாகப் பிரிக்கிறான். சத்துவகுணம், ரஜோ குணம், தமோ குணம்.

சத்துவ குணம் கொண்டவனைத்தான் நாம் 'சாது' என்கிறோம். ரஜோ குணம் கொண்டவனைத்தான் நாம் 'அவனுக்கென்னப்பா ராஜா' என்கிறோம். தமோ குணம் கொண்டவனை 'சுத்தத்தாமசம்' என்கிறோம். முதல் வகையான சத்துவகுண மனிதன் ஆன்மாவை தன் ஆதிக்கத்துக்குக் கொண்டு வந்து விடுகிறான். எல்லோருக்கும் சத்துவகுணம் அமைவது கடினம். விவேகமும், புலனடக்கமும், எதிலும் உணர்ச்சி வசப்படாத தன்மையும் 'எல்லாம் தன்னுடைய தகுதிக்குக் கீழ்பட்டவையே' என்ற எண்ணமும் ஒரு மனிதனை சத்துவகுண மனிதனாக்குகிறது.

உலகத்தையும், உடம்பையும் பற்றிய ஆழ்ந்த நுண்ணறிவுகொண்ட ஒருவனுக்கே சத்துவகுணம் கைகூடும். உடம்புக்கு தனித்து இயங்கும் சக்தி உண்டு. மனதை அது கசக்கிப்பிழியும். போகக்கூடாத இடத்திற்கு எல்லாம் போகச் சொல்லும். செய்யக்கூடாத காரியங்களையெல்லாம் செய்யச் சொல்லும். தேவையற்ற விஷயங்களில் ஈடுபடச் சொல்லும்.

உடம்பு சரியாக இருந்தால் மனதும் செழிப்பாக இருக்கும். உடம்பு தளர்ந்து போனால், மனதும் தளர்ந்து போகும். உடம்பு ஓடினால் மனதும் ஓடும். உடம்பு படுத்தால் மனதும் படுக்கும். மனதின் செழுமையான வடிவமே ஆன்மா.

உடம்புக்கு ஆன்மாவின் மீது அவ்வளவு ஆதிக்கம் இருக்கிறது. இந்த ஆதிக்கத்தை பிரித்தெடுத்தவனுக்குப் பெயரே சாது. அவனே சாத்விக குணம் படைத்தவன். உடம்புக்கு ஆன்மாவின்மீது ஆதிக்கமே இல்லாமல் அடித்தவர்கள்தான், உலகத்தை திருத்திய உத்தமர்களாக இருக்கிறார்கள். அவர்களின் பெயரே சாதுக்கள்!

தொகுப்பு: கொலலாந்தை எஸ்.என்.ராஜரட்ணம்.

## ஆன்மீகம்



## உழைத்து வாழ வேண்டும்

ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்கள் பின்வருமாறு நவின்றார்கள்:

"ஒருவருக்கு தானமாக பொருள் கிட்டினாலும், கிட்டாவிட்டாலும் கையேந்திப் பிழைப்பதைவிட, விறகை தன் முதுகில் சுமந்து அதனை விற்றுப் பிழைப்பதே மேல்!" (நூல்: புஹாரி, முஸ்லிம்)

"தனது கரங்களால் கடினமாக உழைத்துப் பெற்ற செல்வத்தில் உண்ணுவதைவிட சிறந்த உணவு எதுவும் இல்லை." (நூல்: புஹாரி)

"எவரிடத்தும் எதற்காகவும் கையேந்துவதில்லை என்ற உறுதி மொழியை ஒருவர் எனக்கு அளித்தால், அவர் சுவனம் செல்வதற்கான உறுதி மொழியை நான் அவருக்கு அளிக்கிறேன்." (நூல்: அபூதாவூத்)

"இறைவனால் அனுப்பப்பட்ட எல்லா இறைத் தூதர்களும் ஆடுகளை மேய்ப்பவர்களாகவே இருந்தனர்", என நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் கூறினார்கள்.

"நீங்களும் அவ்வாறே செய்தீர்களா?" என்று அன்னாரிடம் வினவப்பட்டபோது, "ஆம் நானும் மக்காவாசிகளின் மந்தைகளை மேய்த்து சில காசுகளைக் கூலியாகப் பெற்றேன்!" என்று கூறினார்கள் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள். (நூல்: புஹாரி)

இறைதூதர் ஸக்கரியா (அலை) அவர்கள் ஒரு தச்சராக இருந்தார்கள். (நூல்: முஸ்லிம்)

இறுதித்தூதர் வழியில் நாமும் சென்று உழைத்து வாழ முயற்சிப்போமாக.

தொகுப்பு: மருதமுனை அபூகிஷோர்

## கவிதைப் போட்டி இல.329

### பரிசுக்குரிய கவிதை

#### ஏமாற்று

மேலெழுந்த வெண்புறா
சிறகொடிந்து வீழ்ந்தது
அரசடிக்கும் பொதிப் பந்து
அந்தரத்தில் ஆடுது!

ம. திருவரசுராசா-வவுனியா.

இடம் உள்ளவரை இடம் பிடித்துள்ள வியக்க வைத்த கவிதைகள்:

**பொதி**

உயரப் பாய்ந்து
பந்தைப் பிடித்தாலும்
பொதியைப் பிடிக்க முடியுமோ?

மூதூர்-மனுமிக்கேல்.

**பறிபோகும்...!**

அடிபடும் பந்து
வலையிற் சிக்கினால்
ஆட்டங்கள் பறிபோகும்!
மிதிபடும் மக்கள்
கொதித்து எழுந்தால்
பதவிகள் பறிபோகும்!

அ.சந்தியாகோ-அசோகா
வித்தியாலயம், கண்டி.

**ஆட்சி**

ஒரு பகுதியில்
பந்து விளையாட்டு...!
மறுபகுதியில்-விமான
குண்டு விளையாட்டு

சி. திவாகரன்- ஆரையம்பதி



**இனவாத பந்து**

நீல அணியும்
பச்சை அணியும்-இந்த
இனவாத பந்தை
எத்தனை காலத்துக்கு
அடித்துக் கொண்டிருப்பார்கள்?

ஆர்.அசோக்- ஆண்டிமுனை,
உடப்பு.

**பதிலடி**

பந்தை உன்னைப்
பாதிக்க எறிந்தால்,
தயங்காமல்...
திருப்பி அடி!

ந. மதி-மோதரா.

**முயற்சி**

துணிந்து நில்!
உருண்டைப் பந்து மட்டுமல்ல;
உலகப்பந்தும் உன் கையில்
நண்பா!

எஸ். ஷாமிலா-மதுரங்குளி.

**அழிவு**

அடிக்கும் கரம்
கொடிய போர்!
அடிபடும் பந்து
மனித உயிர்!

அ. சுதர்சன்,
மட்டக்களப்பு.

**அநியாயம்**

பந்தடிக்கலாம்-அதை
பாய்ந்தடிக்கலாம்...!
பறந்து வரும்
குண்டடிக்கலாமா?

சு. கமலகாந்தன்-
வவுனியா.

**இருநீதி**

விழாவும் விளையாட்டும்
அவர்களுக்கு!
விலங்கும் வில்லங்கமும்
நமக்கு!

ஞா. ஞானதி-
வாழைச்சேனை.

**ஆட்டம்!**

நாடே ஆடும்போது
உனக்கொரு...
பந்தாட்டமா...?

கயல்வண்ணன் -
வவுனியா.

## கவிதைப் போட்டி இல.332



எண்ணத்தில் தோன்றும் கவிதைகளை வார்த்தைகளின் எண்ணிக்கை அதிகமில்லாமல், தபாலட்டையில் மட்டும் பதிவு செய்து அனுப்பி வையுங்கள்.
அனுப்பப்படவேண்டிய கடைசித் திகதி 30.10.1999

கவிதைப் போட்டி இல.332
தினமுரசு வாரமலர், த.பெ. இல-1772, கொழும்பு.

## இரு தரப்பும் எதிர்ப்பு

முரசே!

'ஐ.நா. தலையிடக் கூடாது' என்று வெளிநாட்டமைச்சர் கூறியதற்கு ஆசிரியர் கருத்து தக்க பதிலாக அமைந்தது. 'மூன்றாம் தரப்பு மத்தியஸ்தம்' தேவை என முரசு வலியுறுத்தி வந்திருக்கிறது. அரசும், எதிர்க் கட்சியும் இதனை ஏற்கமாட்டார்கள் எனக் கூறியுமிருந்தது. இப்போது அதனை இருதரப்புமே உறுதி செய்து விட்டனவே? முரசே உன் இராஜதந்திரிக்கு பாராட்டு.

ம. ஐங்கரன், கனடா.

'வீரன் தான் பிரீன்' தொடரில் அயர்லாந்து போராட்டத்தை எளிமையாக நாம் அறிந்து கொள்கிறோம். போராட்டம் ஒன்றில் ஈடுபடுவோர் அனுபவிக்கும் கஷ்ட நஷ்டங்களை நாம் அறிந்து கொள்ள ஏதுவாக உள்ளது. அயர்லாந்து எதிர்நோக்கிய பல பிரச்சனைகள் நமக்கும் இங்கு பொருந்துகின்றன.

ஏ. வரதராஜன்,
யாழ்ப்பாணம்.

அன்பிற்குரிய முரசுக்கு,

உன் பணி ஓங்க வாழ்த்துக்கள். 'காதிலை பூ கந்த சாமி' சிந்தனைக்கு சிரிப்போடு தரும் கருத்துக்கள் அருமை. 'இலக்கிய நயம்' காலத்துக்கேற்ற படைப்புக்களையும் தருகிறது.

செல்வி. ம. அருந்ததி,
திருமலை.

அன்பின் முரசே! அரசியல் முதல் 'திருமறை தரும் பொதுநெறி'வரை மிக மிக அழகாகத் தரும் உனக்கு என் பாராட்டுக்கள். மேலும் அடுத்த முரசு எப்போது வரும் என்று எதிர்பார்த்திருப்பேன்!

லலிதா,
லெபனான்.

# வாசக(ர்)சாலை

## கை கழுவப்பட்டவர்





முரசே!

மாணிக்கதாசன் அநாதையாக, மரணத்திற்கு ஒரு துளிக் கண்ணீர்விடக்கூட யாருமில்லாதவராக மரணமானது, இதுபோன்ற ஏனையோருக்கும் ஒரு படிப்பினை. ஆட்கொல்லியாகவே மாணிக்கதாசனை வவுனியா மக்கள் கருதினர். தாசனின் இறப்பை தீபாவளி என்று தமக்குள்ளே பேசிக்கொண்டனர் பலர். நரகாசுரன் அழிந்த நாள்தான் தீபாவளி. கொள்கை இன்றி, புலி எதிர்ப்பு என்று தமது சுயநல நோக்கங்களை ஈடேற்ற முற்பட்டவர்களில் தாசன் முன்னிலை வகித்தார். இறுதியில் அவரது கட்சியினரே அவரைக் கைகழுவியுள்ளனர்.

கோ. ராகுலன், வவுனியா.

## உறவு வளர்ப்போம்

அன்புள்ள முரசுக்கு:

இந்தியத் தேர்தல் பற்றிய உனது கணிப்புக்கள் பலித்துவிட்டன. பாரதிய ஜனதா ஆட்சியில் இலங்கைத் தமிழர் நலனில் அக்கறை காட்டப்பட வேண்டும். அதற்கான முயற்சிகளை தமிழர் தரப்பினர் மேற்கொள்வதே சிறந்தது. நடந்ததை மறப்போம். நல்லவற்றை நினைப்போம் என்பதற்கு ஏற்ப இந்தியாவுடன் நெருங்கி உறவு வளர்ப்போமாக!

பி. சூரியகுமார், மட்டக்களப்பு.

## விளக்கம் கேட்பார்கள்!

தொல்லை தவிர்ப்புக் குழு கைதுகளை விட்டு கவனம் செலுத்துவதால், கைதுகள் குறைந்துள்ளதாக பல மாதங்களுக்கு முன்னதாக இரா.சம்பந்தன் கூறியிருந்தார். இதனை முரசும் கிண்டல் செய்ததாக ஞாபகம். அண்மையில் கொழும்பில் இதுவரை இல்லா தளவுக்கு கைதுகள் நடந்துள்ளன. இக் கைதுகள் திறம்பட நடந்து முடிந்து, ஓய்ந்த பின்பு தொல்லை தவிர்ப்புக்குழு விளக்கம் கேட்டுள்ளதாக செய்திகள் வரும். தமிழ் மக்களது காதுகளில் பூவைப்பதில் இன்று முன்னணியில் நிற்பவர்கள் இந்தக் குழுவினர் தான்.

கோ. சதாசிவம், கொழும்பு-06.

## தோதான மெழுகல்

நுளம்புக்கு மருந்து அடிக்க மட்டும்தான் ஐ.நா.சபை இருக்கிறதாம். அப்படியாயின் திருமலையை சமாதான நகராக்கும் நாடகத்திற்கு ஐ.நா நிறுவனமான யுனெஸ்கோவை எவ்வாறு அனுமதித்தனர்? வன்னிப் பாதைத் திறப்பு விடயத்தில் சர்வதேச செஞ்சிலுவைச் சங்கம் மத்தியஸ்தம் செய்ய அனுமதித்தது எவ்வாறு? மத்தியஸ்தத்தை மறுப்பதற்கு ஒரே ஒரு காரணம் நியாயமான தீர்வை வழங்க முடியாத நெருக்கடிதான். இதனை உணராது எம்மில் சிலர் மத்தியஸ்தம் வேண்டாம், அனுசரணையாளர் போதும் என்றெல்லாம் ஆட்சியாளருக்கு தோதாக பூசிமெழுகப் பார்க்கிறார்கள்.

இ. பேரின்பராஜா,
அம்பாறை.

முரசுக்கு மடல் அனுப்பியவர்களில் இடம் உள்ளவரை பெயர் பதிவு செய்யப்படுபவர்கள்.

* எஸ்.ரமேஷ், தெனியாய.
* குணசிங்கம் தவச்செல்வன், கொழும்பு-13.
* கே.எஸ்.ஏறாவூர்-01.
* வி.ஆனந்த், கந்தானை.
* க.நித்தியானந்தன், பளை.
* மு.பரமேஸ்வரன், பலாங்கொடை.
* பிரான்சிஸ் பர்னாண்டஸ், கொழும்பு-15.
* பா.கமலாதேவி, திருமலை.
* எஸ்.மஞ்சு, மட்டக்களப்பு.
* வை.குரு, அம்பாறை.
* பா.கரன், வல்வெட்டித்துறை.
* இ.உஷா, ஜெயபுரம்.
* ஆர்.இராசசேகரம், திருக்கோவில்.
* மனுமிக்கேல், மூதூர்-07.
* எம்.தாஹிர், அக்குறணை.
* ம.கோபிதரன், திருக்கோணமலை.
* மு.சந்திரகாந்தன், வாழைச்சேனை.
* வி.விஜயசுதன், புதுக்குடியிருப்பு.
* இரா.அரி, கட்டுநாயக்க.
* மு.அருள், முழங்காவில்.
* கா.சுகந்தா, கல்லடி.
* ந.குருபரன், கருநாட்டுக்கேணி.
* பொ.மணிமாறன், முல்லைத்தீவு.
* ஆர்.கலையரசி, பொகவந்தலாவ.
* மு.அனீஸ், ஓட்டமாவடி.
* சி.ரஜினிகாந்த், கண்டி.
* சோ.கோபிநாத், வைரவபுளியங்குளம்.
* மு.க.றிபாயா, ஏறாவூர்.
* இ.சிவபாலன், வவுனியா.
* எம்.ஜேசுரட்ணம், கொழும்பு-10.
* ம.கஜந்தன், யாழ்ப்பாணம்.
* ஏ.இந்திரன், ஜெயபுரம்.
* வீ.ரவிக்குமார், கனடா.
* ம.உதயகுமார், ஜெர்மன்.
* கு.ஜோன்சன், ஃபிரான்ஸ்.
* எம்.விஜிதரன், ஃபிரான்ஸ்.
* அ.நகுலன், கனடா.
* மு.சந்திரபாலன், சுவீடன்.
* பா.வைத்தியநாதன், அமெரிக்கா.
* எஸ்.ரகுராம், மலேசியா.
* கே.றொபின்சன், சுவிற்ஸர்லாந்து.
* அ.புவீந்திரன், டென்மார்க்.
* செல்வி கி.வினோதினி, கனடா.
* மிதுளா விஜயகுமார், ஜெர்மன்.
* அ.வேணுகரன், இந்தியா.
* எம்.சர்த்தார், குவைத்.

மடல்கள் மற்றும்
ஆக்கங்கள்- உட்பட சகல
தொடர்புகளுக்கும்:
தினமுரசு வாரமலர்,
த.பெ.இல:-1772, கொழும்பு.
தொலை நகல் (Fax):- 074-513266

### அறிவித்தல்

உங்கள் கரம் சேரும் முரசில் அச்சுப் பிழையோ அல்லது ஏதாவது பக்கத்தில் அச்சாகத் தவறியோ இருந்தால், உங்கள் முகவரிடம் திருப்பிகொடுத்துவிட்டு வேறுபிரதி வாங்கிக் கொள்ளுங்கள். 'முரசு' அச்சாகும் வேகத்தில் அரிதாக சில தாள்களில் தவறு நேர்ந்துவிடுகிறது. மாற்றித்தர மறுக்கும் முகவர்கள் பற்றி எம்மிடம் புகார் தரலாம். புகாருடன் குறிப்பிட்ட தாளையும் அனுப்ப வேண்டும். திருப்தியான சேவையே முரசின் மூச்சு. -நிர்வாகி.


படிப்பகம்

www.padippakam.com

## தேர்தலுக்கான இராணுவ நகர்வுகள்

### ஜனாதிபதியின் பேட்டி முன்னறிவிப்பு!

ஜனாதிபதித் தேர்தலுக்கு முன்பாக அரசாங்கம் புலிகளோடு பேச்சு நடத்தும் என்றும், ஜனாதிபதிக்கு போரைத் தொடர விருப்பம் இல்லை என்றும் பத்திரிகைகள் சிலவும், விமர்சகர்கள் சிலரும் ஆருடம் கூறிவந்தமை தெரிந்ததே.

தேர்தலுக்கு முன்பு பேச்சுக்கு அரசாங்கம் ஒருபோதும் முன்வரமாட்டாது. மாறாக போரை முடுக்கிவிடும். ஜனாதிபதியின் நோக்கமும் அதுவே என்று 'முரசு' தெரிவித்து வந்ததும் வாசகர்கள் அறிந்ததே.

தமிழ் நாட்டில் இருந்து வெளியாகும் 'இந்து' ஆங்கில பத்திரிகைக்கு ஜனாதிபதி சந்திரிக்கா பண்டாரநாயக்கா அளித்துள்ள பேட்டியில் மனம் திறந்து சில கருத்துக்களைக் கூறியுள்ளார்.

மூன்றாம் தரப்பு மத்தியஸ்தத்தை முற்றாக நிராகரித்துள்ளதுடன், புலிகளுடன் தற்போதைக்கு பேச்சே கிடையாது என்று திட்டவட்டமாகக் கூறியுள்ளார்.

அடுத்து வரவுள்ள தேர்தல்களை முன்னிட்டு வகுக்கப்பட்டுள்ள யுத்த உபாயங்களை மனதில் கொண்டே ஜனாதிபதி மேற்படி பேட்டியில் கருத்துக்களைக் கூறியுள்ளார்.

'ஒருவாரத்தின் முன்னர் கருத்துத் தெரிவித்த ஜனாதிபதி, பேச்சுவார்த்தை மூலமே தீர்வு காணப்படமுடியும் என்று கூறியிருந்தார். 'இந்து' பேட்டியில் பேச்சுவார்த்தையே கிடையாது எனக் கூறியுள்ளார்,' என்று ஜனாதிபதியின் இருவிதமான பேச்சுக் குறித்து பி.பி.சி. செய்தியாளர் ஆச்சரியம் தெரிவித்துள்ளார்.

ஜனாதிபதித் தேர்தலுக்கான அரசியல் பிரச்சாரங்களை பொதுஜன முன்னணி இப்போதே முடுக்கிவிட்டுள்ளது.

எனினும் போர் முனையில் பாரிய வெற்றி ஒன்றுக்காகவே அரசாங்கம் ஆவலோடு காத்துள்ளது.

அடுத்து எடுக்கப்படப்போகும் தீவிரமான இராணுவ நடவடிக்கைகளை சர்வதேச அரங்கில் நியாயப்படுத்தும் விதமாகவே ஜனாதிபதியின் 'இந்து' பேட்டி கொடுக்கப்பட்டுள்ளதாக நம்பப்படுகிறது.

# பேரினவாத எதிர்ப்புக்கு பணிவு!

# அன்று பண்டா! இன்று சந்திரிக்கா!

## பேரினவாதிகளுக்கு பலம் சேர்த்ததே பலன்

சமவாய்ப்புச் சட்டத்தைக் கொண்டு வரப்போவதாக ஆரவாரம் செய்து, சிங்களப் பேரினவாதிகளை வீதியில் இறங்க வைத்ததே அரசாங்கம்தான்.

இப்போது சமவாய்ப்புச் சட்டத்தை கொண்டுவராது பின்வாங்கியுள்ளது மூலம் அரசாங்கத்தின் வரையறை தெளிவாகி விட்டது.

இவ்வாறான ஒரு சட்டத்தையே கொண்டுவர முடியாத அரசாங்கத்தால், இனப்பிரச்சனைக்கு நியாயமான தீர்வு காணமுடியும் என்பது பகற்கனவேயாகும். இவ்வாறு அரசியல் விமர்சகர்கள் பலர் ஒருமித்துக் கருத்துக் கூறியுள்ளனர்.

குறிப்பிட்ட தினத்தில் சமவாய்ப்புச் சட்டத்தைக் கொண்டுவராது அரசாங்கம் பின்வாங்கியது தொடர்பாக கடந்தவார முரசில் சந்தேகம் தெரிவிக்கப்பட்டிருந்தது. அச்சந்தேகம் தற்போது உண்மையாகி விட்டமை குறிப்பிடத்தக்கதாகும்.

சமவாய்ப்புச் சட்டத்தை கொண்டு வருவதால் இனப்பிரச்சனை தீர்க்கப்பட மாட்டாது. சட்டம் கொண்டுவரப்பட்டிருந்தால், அதனைக் கூறியே தமிழ் பேசும் மக்களுக்கு பரிகாரம் செய்துவிட்டதாக அரசாங்கம் பிரசாரம் செய்திருக்கும். எனவே சட்டம் கொண்டு வரப்படாதது நன்மையே என்றும் அரசியல் ஆர்வலர்கள் கூறியுள்ளனர்.

சமவாய்ப்புச் சட்டம் கொண்டு வரப்படாதது நன்மையானாலும், இத்தகைய சட்டத்தைக் கூட கொண்டுவர முடியாதளவுக்கு பேரினவாத சக்திகள் முன்பு அரசாங்கம் மண்டியிட்டுள்ளது என்பது நன்கு தெளிவாகிவிட்டது.

அன்று பண்டாரநாயக்கா பண்டா-செல்வா ஒப்பந்தத்தைக் கிழித்தெறிந்தார். இன்று அவரது மகளான சந்திரிக்கா அம்மையார் சமவாய்ப்புச் சட்டத்தைக் கிழித்துப் போட்டுவிட்டார். இருவருமே பேரினவாத நிர்ப்பந்தங்களுக்கு அப்பட்டமாகப் பணிந்துள்ளனர் என்று விமர்சகர்கள் விவரித்துள்ளனர்.

தீர்வுப் பொதி விவாதமும், இன்று சமவாய்ப்புச் சட்ட ஆரவாரமும் பேரினவாதிகள் தங்களை வளர்த்துக் கொள்ளவும், தங்கள் பலத்தைப் பரீட்சித்துப் பார்க்கவுமே களம் அமைத்துக் கொடுத்துள்ளன. தூங்கிய பேரினவாதத்தை இடறி உசுப்பிய அரசாங்கம் பொதிக்கும் முழுக்குப் போட்டுவிட்டது. சமவாய்ப்புச் சட்டத்துக்கும் முற்றுப் புள்ளி வைத்துவிட்டது, என்று விமர்சகர்கள் கூறியுள்ளனர். ■

## "தமிழக பொலிஸ் எஸ்.பிக்கு இலங்கை தூதரகத்துடன் தொடர்பு"

'தமிழ் நாட்டிலிருந்து நாடு கடத்தப்பட்ட இளைஞர் எரிக் செளந்தரநாயகமா?' என்று சந்தேகங்கள் எழுந்திருந்தன.

இது தொடர்பாக 'முரசு'க்கு கிடைத்துள்ள தகவல்களின்படி, எரிக் செளந்தரநாயகம் நாடு கடத்தப்பட்டது உறுதியாகியுள்ளது.

இதனை தமிழர் தேசிய இயக்கத் தலைவர் பழ. நெடுமாறன் மிக வன்மையாகக் கண்டித்துள்ளார்.

சுவிற்ஸர்லாந்தில் உள்ள ஈழத்தமிழருக்கான பாதுகாப்பு ஒன்றியமும் இதனை காட்டமாகக் கண்டித்துள்ளது.

'உலகில் எந்த நாட்டிலிருந்தம் இலங்கை அரசால் தேடப்படும் ஒருவர் இதுவரை திருப்பி அனுப்பப்படவில்லை. மத்திய அரசின் அனுமதி இன்றித்தான் இது நடந்திருக்க வேண்டும். ஏனெனில் இவ்வாறு நாடு கடத்தும் ஒப்பந்தம் இந்தியாவுக்கும், இலங்கைக்கும் கிடையாது,' என்று ஈழத் தமிழர் பாதுகாப்பு ஒன்றியம் விடுத்த அறிக்கையில் தெரிவித்துள்ளது.

சென்னையில் உள்ள இலங்கைத் தூதரகத்துடன் நெருங்கிய தொடர்புடைய கியூ பிராஞ்ச் கண்காணிப்பாளர் ரவிச்சந்திரன் என்பவர் இன்ஸ்பெக்டர் ஜெனரல் ராமானுஜத்தின் அனுமதியோடு எரிக் செளந்தரநாயகத்தை கைது செய்துள்ளார் என்றும் குறிப்பிடப்பட்டுள்ளது. ●

## 'எரிக்' கைதானது எப்படி?

### கடும் விசாரணைக்கு உள்ளாகியுள்ளார்!

நீலன் திருச்செல்வம்மீதான தாக்குதலுக்கான ஏற்பாடுகளில் பங்கெடுத்ததாகத் தேடப்பட்டவர் எரிக் செளந்தரநாயகம்.

இவர் இங்கு தேடப்பட்ட நிலையில் இந்தியாவுக்குச் சென்றிருந்தார். கொழும்பில் கைதான எரிக்கின் நண்பர்கள் மூலம் இத் தகவல்களை இரகசிய பொலிசார் பெற்றுக் கொண்டனர். இதனையடுத்து 'முரசு'ம் இச் செய்தியை வெளியிட்டிருந்தது தெரிந்ததே.

எரிக் தமிழ்நாட்டில் எங்கு தங்குவார் என்ற விபரங்களை கொழும்பிலுள்ள எரிக்கின் உறவினர்கள் மூலம் இரகசியப் பொலிசார் திரட்டியதாகத் தெரிகிறது.

எரிக் தமிழ்நாட்டில் திருவான்மியூரில் தங்கியிருப்பதாக அறிந்துகொண்டனராம். எரிக்கின் சகோதரி ஒருவருக்கு திருமணம் செய்து வைத்த பாதிரியார் திருவான்மியூரில் இருக்கிறார். அங்கேதான் எரிக் இருப்பதாக அறிந்து, தமிழ்நாடு கியூ பிரிவு இரகசியப் பொலிசாருக்கு இங்குள்ள இரகசியப் பொலிஸ் பிரிவால் தகவல் கொடுக்கப்பட்டதாகக் கருதப்படுகிறது.

இலங்கைப் போராளிகள், தமிழக தீவிரவாதிகள் பற்றி ஆராய தமிழ்நாட்டில் நியமிக்கப்பட்டதே 'கியூ பிராஞ்ச்' எனப்படும் துப்பறியும் இலாகாவாகும்.

கியூ பிராஞ்ச் அதிகாரி ஒருவரது தலைமையில் சென்ற பொலிஸ் கோஷ்டியினர் ஒக்டோபர் 8ம் திகதி எரிக்கை கைது செய்தனர். பின்னர் சென்னையில் இருந்து திருச்சிக்கு கொண்டுசென்று வைத்திருந்தனர். அக்டோபர் 16ம் திகதி திருச்சி விமான நிலையத்தில் வைத்து இலங்கை புலனாய்வுத் துறையினரிடம் தமிழக கியூ பிரிவினரால் ஒப்படைக்கப்பட்டார்.

விமானத்தில் ரி.56 துப்பாக்கிகள் ஏந்திய மூன்று காவலர் புடைசூழ எரிக் கொண்டு வரப்பட்டதை பயணிகள் கண்டுள்ளனர்.

எரிக் கொழும்புக்குக் கொண்டுவரப்பட்டதை அடுத்து, எரிக் தொடர்பு வைத்திருந்த தொலைத் தொடர்பு நிலையத்துக்கு அருகில் வசிக்கும் தமிழ் இளைஞர் ஒருவரும் கைதாகியுள்ளதாகத் தெரிகிறது. எரிக் கடும் விசாரணைக்கு உள்ளாக்கப்பட்டுள்ளதாக தகவல்கள் கூறுகின்றன. ●

## தமிழ்ப் பெண் நிரபராதி!

### நஷ்டஈடு வழங்கவேண்டும்!

கொழும்பு-மருதானையில் கடந்த வருடம் மார்ச் 05 ஆம் திகதி இடம்பெற்ற எதிர்பாராத குண்டு வெடிப்பின் சூத்திரதாரி எனப் பொலிஸாரால் தேடப்பட்டுவருபவர் புலேந்திரன்.

அவரது மனைவி சுவேந்திராதேவி (29) கைது செய்யப்பட்டு கடந்த ஒன்றரை வருடகாலமாக கொழும்பு-வெலிக்கடைச் சிறைச்சாலையில் தடுத்து வைக்கப்பட்டுள்ளார். இவர் கைதாகும்போது, 09 மாதக் கைக்குழந்தையொன்றும், 18 மாதக் குழந்தையொன்றும் அவருடன் இருந்தன.

மருதானைக் குண்டு வெடிப்பின் பின்னர் புலேந்திரன் கொழும்பிலிருந்து புலிகளின் நிர்வாகப் பகுதிக்குத் தலை மறைவாகியிருந்தார். அதன் பின்னர் அவரது மனைவி ஏறாவூர் பொலிஸாரினால் வீட்டில் வைத்து 05.03.98 அன்று கைது செய்யப்பட்டார்.

கொழும்பு-வெலிக்கடைச் சிறையில் தடுத்து வைக்கப்பட்டிருக்கும் சுவேந்திரா தேவிக்கு எதிரான வழக்கு கடந்த 04.10.1999 அன்று கொழும்பு உயர் நீதி மன்றத்தில் விசாரணைக்கு எடுக்கப்பட்டது.

சுவேந்திராதேவி சார்பாக அவரது சட்டத்தரணிகளால் முன்வைக்கப்பட்ட வாதங்களை ஏற்றுக்கொண்ட நீதிபதிகள் அவரைத் தடுத்துவைத்திருந்தது சட்ட முரணானது எனக் கூறி அவருக்கு 20,000/- ரூபாவை அரசு நஷ்டஈடாக வழங்க வேண்டும் என்று தீர்ப்பளித்தது.

இருப்பினும் அரச தரப்பு சுவேந்திரா தேவிக்கு எதிராக உச்ச நீதிமன்றத்தில் வழக்குத் தாக்கல் செய்யவுள்ளது.

மேல் நீதிமன்றம் இந்த அப்பாவிப் பெண்ணை நிரபராதி எனக் கண்டு அவரைத் தடுத்து வைத்திருந்தது சட்ட முரணானது எனத் தீர்ப்பளித்திருந்தும் அவருக்கெதிராக,அரச தரப்பு உச்ச நீதிமன்றத்தில் மேன் முறையீடு செய்ய விருக்கிறது. ●

## கொலையாளிகள் யார்? எங்கே?

### கனடா பொலிஸ் திணறல்!

ரொரன்ரோ நோத்யோக்கில் (NORTH YORK) வசித்து வந்த பதினைந்து வயதுடைய பாடசாலை தமிழ் மாணவி கடந்த ஜூன் மாதம் கோடைகால பாடசாலை விடு முறையில் வேலை ஒன்றுக்கு விண்ணப்பிப்பதற்காக சென்றவர் வீடுதிரும்பவில்லை. கடந்த வாரம் அவரது மண்டைஓடும் சில எலும்புகளும் அவரது வீட்டுக்கு அருகில் உள்ள பூங்கா ஒன்றில் இருந்து பொலிஸாரால் கண்டு பிடிக்கப்பட்டு அடையாளம் காணப்பட்டது.

இளவாலையைச் சேர்ந்த ஆனந்தவேல் சாமினி என்ற பாடசாலை மாணவியின் மண்டையோடும் சில எலும்புகளும் நான்கு மாதத்தின் பின் அவரது வீட்டுக்கு அருகில் உள்ள பூங்கா ஒன்றினுள் இருந்து கண்டு பிடிக்கப்பட்டுள்ளன. ஏனைய பகுதிகளை பொலிஸார் தொடர்ந்தும் தேடி வருகின்றனர். அவரது பல்லை பரிசோதனை செய்த நிபுணர்கள் இது சாமினியுடைய எலும்புப் பாகங்கள் என அடையாளம் கண்டுள்ளனர்.

இக்கொலை பற்றி கருத்து தெரிவிக்கும் பொலிஸார் உடலின் சில எலும்புகள் மட்டுமே காணக்கூடியதாக இருந்தது என்றும் ஏனையவைக்கு என்ன நடந்திருக்கலாம்? என்றும் கேள்வி எழுப்பியுள்ளனர்.

கொலையாளி அல்லது கொலையாளிகள் இன்னும் கைது செய்யப்படவில்லை. எவ்வாறு கொலை செய்யப்பட்டார் என்பதும் கண்டு பிடிக்க முடியாமல் உள்ளது என பொலிஸார் தெரிவிக்கின்றனர்.

கடந்த நான்கு மாதங்களாக தமிழர் ஐக்கிய அமைப்பும் தமிழ் ஊடகங்களும் கனேடிய ஊடகங்களும் இக்கடத்தல் சம்பந்தமாக முக்கியத்துவம் கொடுத்திருந்தனர். ஆனால் பலன் இல்லாமல் போய் விட்டது.

ஏற்கனவே ஐந்து வருடங்களுக்கு முன்னர் கல்வியங்காட்டைச் சேர்ந்த பொன்னையா பாலச்சந்திரன் என்ற குடும்பஸ்தர் கடத்தப்பட்டு கொலைசெய்யப்பட்டு மூன்று மாதங்களின் பின் அவரது உடல் கண்டு பிடிக்கப்பட்டது. பல்கலைக்கழக மாணவனான கபிலன் பாலசந்திரன் தேநீர் கடையில் இனந்தெரியாத நபர்களினால் சுட்டுக் கொல்லப்பட்டார், தற்போது அந்த வரிசையில் சாமினியும் கொல்லப்பட்டுள்ளார். இக்கொலைகளைப் புரிந்த கொலையாளிகள் இன்னும் கண்டுபிடிக்கப்படவில்லை என்பதும் குறிப்பிடத்தக்கது.

சாமினியின் கொலையினால் ரொரன்ரோ வாழ் தமிழ் சமூகம் அதிர்ச்சியும் கவலையும் அடைந்துள்ளனர்.

ஏற்கனவே சாமினி உயிரோடு இருப்பதாக சில விஷமிகள் வதந்திகளைப் பரப்பி வந்தனர். இக்கொலை தொடர்பாக பொலிஸார் கனடா வாழ் தமிழ் மக்களின் உதவியைக் கோரியுள்ளனர். ■

## திடீர்த் தாக்குதல்

மன்னார் மாவட்டத்தில் இருப்பது வங்காலை என்னும் மீன்பிடிக்கிராமம். இங்கு இராணுவ பயிற்சி பெற்ற பொலிஸ் விசேஷ அணியினர்மீது புலிகள் அதிரடித் தாக்குதல் ஒன்றை நடத்தியுள்ளனர்.

18.10.99 காலை மன்னார் மாவட்ட புலிகளது சிறப்பு அணியே இத்தாக்குதலை நடத்தியது. அதிகாலை 2.30 மணிக்கு நடைபெற்ற இத்தாக்குதலில் பத்துப் பொலிசார் பலியாகினர். புலிகள் தரப்பில் உயிரிழப்பு எதுவும் இல்லை என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

நறுவிலிக்குளம் பகுதி வழியாக வந்த புலியணியே இத்தாக்குதலை நடத்தி,ஆயுதங்களையும் கைப்பற்றிச் சென்றுள்ளது.

தாக்குதலில் காயமடைந்த பொலிஸார் இராணுவத்தினரது உதவியுடன் அநுராதபுரம் மருத்துவமனைக்கு கொண்டு செல்லப்பட்டனர்.

தாக்குதலுக்கு மறுநாள் இப்பகுதியில் கூடுதலான பொலிசார் குவிக்கப்பட்டு பலத்த தேடுதல் நடவடிக்கையும் மேற்கொள்ளப்பட்டது.

மன்னாரில் விசேஷ அதிரடிப்படை மீதும் புலிகள் குறிவைத்துள்ளதாக கூறப்படுகிறது. பொதுமக்கள்மீது அதிரடிப்படையினர் கெடுபிடியாக நடப்பதாக மன்னார் புலிகள் கண்டித்து வருகின்றனர். ●

## வயர்களைப் புதைத்துவைத்து நோட்டம்

### பல இடங்களில் கண்டுபிடிப்பு-படையினர் உஷார்!

சமீப சில நாட்களாக மட்டக்களப்பு-கொழும்பு நெடுஞ்சாலையில் ஆங்காங்கே மறைத்து வைக்கப்பட்டிருந்த கண்ணி வெடி பொருத்தும் சாயலில் காணப்பட்ட வயர்களை வீதிக் கண்காணிப்பில் ஈடுபடும் படையினர் கண்டுபிடித்துள்ளனர்.

மட்டக்களப்பு-மைலம்பாவெளி, தன்னாமுனை மற்றும் செங்கலடி போன்ற இடங்களில் பிரதான வீதி மருங்குகளிலிருந்து நீண்ட தூரத்திற்கு இழுத்துச் செல்லப்பட்டிருந்த வயர்கள் கண்டு பிடிக்கப்பட்டுள்ளன. ஆனால் கண்ணி வெடிகள் ஏதும் அகப்படவில்லை.

தினமும் வீதிச் சோதனையில் ஈடுபடும் பாதுகாப்புத் தரப்பினர் ஜாக்கிரதையாக இருக்கிறார்களா அல்லது கோட்டை விட்டு விடுகிறார்களா என்பதை முன்கூட்டியே அறிவதற்காகவே புலிகள் இவ்வாறு வீதி மருங்குகளில் வெறும் வயர்களை மாத்திரம் பொருத்தி வைத்து அவதானிக்கின்றனர்.

படையினரின் வாகனத் தொடரணி செல்லும்போது தெருவோரங்களிலுள்ள சகல கடைகளும், வீடுகளும் திறந்திருக்க வேண்டும்; அவற்றின் உரிமையாளர்களும் இருக்க வேண்டும் என்று பாதுகாப்பு விதியைப் படையினர் அமுல்படுத்தி வருகின்றனர்.

புலிகளைத் தேடியழிக்கும் நடவடிக்கையைவிட, விடுமுறையிற் செல்லும் படையினரையும் விடுமுறை முடிந்து கடமைக்கு வரும் படையினரையும் ஏற்றிவரும் இராணுவ வாகனத் தொடரணிகளைப் புலிகளின் பொறியில் சிக்காது பத்திரமாகக் கொண்டு சேர்ப்பதே படையினருக்குப் புதிய நெருக்கடியைத் தோற்றுவித்துள்ளது. ●

## நேரங்கெட்ட நேரத்தில் திடீர் சோதனை!

### மட்டக்களப்பில் சுற்றி வளைப்புகள்!

மட்டக்களப்பு நகரப் பிரதேசத்தில் நேரங்கெட்ட நேரங்களில் திடீர் சோதனைகள் இடம் பெறுவதால் பொதுமக்கள் மிகுந்த கெடுபிடிகளைச் சந்திக்க வேண்டியுள்ளது.

அண்மைய நாட்களில் நகரப் பகுதியில் புலிகள் தமது நடவடிக்கைகளைத் தீவிரப் படுத்தியுள்ளதாலேயே இவ்வித சுற்றிவளைப்புத் தேடுதல்கள் இடம் பெறுவதாகக் கருதப்படுகிறது.

எனினும் தமிழ்ப் பொதுமக்களை வேண்டுமென்று இம்சைப் படுத்தும் நோக்கத்துடனேயே நேரங்கெட்ட நேரங்களில் திடீர்ச் சுற்றி வளைப்புக்களை நடத்தி கெடுபிடி உண்டாக்கப்படுகிறது.

இந்தவிதக் கெடுபிடிகளை வெளியில் கூறுவதற்குப் பொதுமக்கள் அஞ்சுகிறார்கள். முறைப்பாடு தெரிவிப்பவர்களை நோட்டமிட்டு பின்னர் பழி வாங்கக் கூடுமென்பதாலேயே பொதுமக்கள் வெளியே தெரியப்படுத்துவதற்குத் தயங்குகிறார்கள்.

இதனிடையே 15, 20 வருட பொலிஸ் நிருவாக சேவையில் அனுபவமுள்ள உள்ளூர்ப் பொலிஸாரையே சுற்றி வளைப்புகளுக்கும், மற்றும் கஷ்டமான காவலரண்களுக்கும் கடமையில் ஈடுபடுத்துவதாகவும், அதற்குப் பதிலாக பொலிஸ் நிலையங்களில் நிர்வாகக் கடமைகளைச் செய்வதற்கு அனுபவமில்லாத-செல்வாக்குள்ள ஒருசிலர் மட்டக்களப்பு பொலிஸ் நிலையத்தில் அமர்த்தப்பட்டிருப்பதாகவும் கூறப்படுகிறது. ■

## வாக்குத் தேட நோட்டம்

(கண்டி நிருபர்)

ஜனாதிபதி தேர்தலும் நாடாளுமன்ற பொதுதேர்தலும் அண்மையில் நடைபெற இருக்கின்ற இவ்வேளையில் ஆளும் கட்சியைச் சேர்ந்த எம்பீக்களும் மாகாண சபை உறுப்பினர்களும் பிரதேச சபை உறுப்பினர்களும் அடிக்கடி இடம்பெறும் கட்டட அடிக்கல் நடும் வைபவங்களில் கலந்துகொண்டு வருகின்றனர்.

இதற்கு மறுபுறமாக எதிர்க்கட்சியைச் சேர்ந்த ஐ.தே.கட்சியின் பிரமுகர்கள் நகர்ப் புறங்களிலும் கிராமப்புறங்களிலும் இடம் பெறும் மரணச் சடங்குகளிலும் கலந்து கொள்கின்றனர்.

மத்திய மாகாணத்தில் இந்த செயற்பாடுகளை நன்கு அவதானிக்க முடிகின்றது. பொதுமக்கள் வேடிக்கை பார்க்கின்றனர்.

## காவல் நிலை மீது தாக்குதல்

அம்பாறை மாவட்டத்தில் சிங்கள குடியேற்றவாசிகளுக்கு பாதுகாப்புக்காக அமைக்கப்பட்டிருந்த காவல் நிலை ஒன்று புலிகளின் தாக்குதலுக்கு இலக்கானது.

இங்கிருந்த ஊர்காவல் படையினரும், பொலிசாரும் புலிகளது தாக்குதலால் அவ்விடத்தை விட்டு விலகியதால், அந்த நிலை புலிகளால் எரித்து அழிக்கப்பட்டது.

இத் தாக்குதலில் ஊர்காவல் படையினர் ஒருவர் பலியானதாக தெரிகிறது. சில ஆயுதங்களும் புலிகளால் கைப்பற்றப்பட்டன.

அம்பாறையில் ஊர்காவல் படையினரின் தொல்லைகள் அதிகரித்து வருகின்றன. தமிழ்க் கிராமங்களை சேர்ந்த மக்கள் இடம் பெயர்ந்து வருகிறார்கள். அம்பாறையில் கடத்தப்பட்ட மூன்று தமிழர்கள் பற்றி இது வரை அறியப்படவில்லை. ●



படிப்பகம்

# தமிழ் வெற்றிடத்திற்கு சிங்களவர்!

மட்டக்களப்பு- கூட்டுறவு மொத்த விற்பனவு பிராந்திய நிலையத்தில் காலியான பிரதேச முகாமையாளர் பதவிக்கு பொலன்னறுவையைச் சேர்ந்த ஒரு சிங்களவரே நியமிக்கப்பட்டுள்ளார்.

இந்தப் பதவி வெற்றிடம் கடந்த ஒரு வருடத்திற்கு முதல் காலியாகியிருந்தது.

அவர் சம்பளத்தையும், ஏனைய விஷேட சலுகைகளையும் பெறுவதற்காக மட்டுமே இந்த நியமனத்தைப் பெற்றிருப்ப தாகத் தெரிகிறது. ஏனெனில் நியமனம் பெற்ற பின்னர் அவர் மட்டக்களப்பு பிரதேச கூட்டுறவு மொத்த விற்பனவு நிலையத்தை எட்டியும் பார்க்கவில்லை.

நூறு வீதம் தமிழ் பேசும் மக்களைக் கொண்ட மட்டக்களப்புப் பிரதேச நிலையத்திற்கு ஒரு சிங்களவர் நியமிக்கப்பட்டிருப்பது விந்தையாக உள்ளது.

மட்டக்களப்பு மாவட்டத்தில் பொருட்கள் விநியோகிப்பதற்கு கூட்டுறவு மொத்த விற்பனவு நிலையத்தின் லொறிகள் அனுப்பப்படுவதில்லை.

மட்டக்களப்புப் பிரதேசத்திற்குப் பொருட்கள் தேவையாயின் வேறு லொறிகளை வாடகைக்கு அமர்த்தித்தான் பெற வேண்டியுள்ளது. இதனால் உரிய வேளைக்குப் பொருட்களை விநியோகம் செய்ய முடியாத நிலையுள்ளது. பல்வேறு பிரச்சனைகளை எதிர்கொண்டே மட்டக்களப்பு கூட்டுறவு மொத்த விற்பனவு நிலையம் இயங்கி வருகிறதென்று களஞ்சிய உதவி முகாமையாளர் பி. வரதராஜன் தெரிவித்தார்.

மட்டக்களப்பு கூ.மொ.வி. நிலையம் புறக்கணிக்கப்பட்டிருப்பது ஒரு புறமிருக்க; 1995ஆம் ஆண்டு அங்கு நியமிக்கப்பட்ட 8 ஊழியர்கள் இதுவரை நிரந்தரமாக்கப்பட வில்லை. தற்பொழுது அவர்களுக்கு மாதத்தில் 12 நாட்களே வேலை வழங்கப்படுகிறது.

# சோதனைச் சாவடிகளில் மு்ட்கம்பி வேலி!

## ஆடைகளைக் கிழித்துக்கொண்டு அவஸ்தை!

கிழக்கு மாகாணத்தின் பல இடங்களில் முட்கம்பிச் சோதனைச் சாவடிகள் உள்ளன. நடந்து செல்ல முடியாதவாறு மிக நெருக்கமாக, குறுகலான அகலத்தில் இரு பக்கங்களுக்கும் முட்கம்பி வேலி அடைத்துள்ளார்கள்.

வாகனங்களில் வரும் பயணிகள் இந்த முட்கம்பிவேலி வழியினூடாகத்தான் நடந்து சென்று சோதனை முடிக்க வேண்டும். எதுவித மனிதாபிமான உணர்வுகளுமின்றி தமது அடிமைகளைப் போன்று நடத்தப்படும் இந்நிலையால் பல்வேறு உடல், உளத்தாக்கங்கள் ஏற்படுகின்றன.

சோதனைச் சாவடிகளுக்குச் செல்லும் முட்கம்பி வழி மிகக் குறுகலானதாக இருப்பதால் பயணிகளின் உடைகள் முட்கம்பி வேலிகளில் கொழுவி கிழிந்து விடுகின்றன.

பெண்களின் சேலைகள், சட்டைகள், என்பனவும் ஆண்களின் வேட்டிகள், சாரம்கள், சோட்கள் என்பன இடைவழிப் பயணத்தில் கிழிந்து விடுவதால் அதிக வேதனை உண்டாகிறது.

மழை, வெய்யில் என்றும் பாராது நீண்ட தூரம் பெண்கள், நோயாளிகள், குழந்தைகள், வயோதிபர்கள் ஆகியோரை இறக்கி நடக்க வைப்பது ஒருபுறமிருக்க உடைகளைக் கிழித்துக் கொண்டு முட்கம்பி வேலிகளில் தட்டுத் தடுமாறி அவஸ்தைப் படுவதைக் காண அவ்வளவு கண்குளிர்ச்சியா? என்று தமிழ் பேசும் மக்கள் வேதனை வெளியிடுகின்றனர்.

# காட்டு மரங்கள் கடத்தல்

## புலிகள் கடும் நடவடிக்கை

மட்டக்களப்பு- வாகரை- குப்பிளாக்கொடி எனுமிடத்தில் வைத்து, அப்பகுதிக் காடுகளுக்குச் சென்ற ஓட்டமாவடி முஸ்லிம்களின் 7 மாட்டுவண்டிகளையும் 14 எருதுகளையும் புலிகள் பறித்துச் சென்றுள்ளனர்.

புலிகளின் ஆளுகையின் கீழுள்ள பகுதிகளில் காட்டு மரங்களை வெட்டி அழிப்பதை புலிகள் எப்பொழுதும் தடை விதித்தே வந்துள்ளனர்.

தடையையும் மீறி காட்டு மரங்களை வெட்டிக் கடத்துவதாலேயே புலிகள் அவர்களின் மாட்டு வண்டிகளையும் எருதுகளையும் கடத்திச் சென்றிருப்பதாக ஓட்டமாவடி முஸ்லிம்கள் தெரிவிக்கிறார்கள்.

தமது மாட்டு வண்டிகளைப் பறிகொடுத்த முஸ்லிம்கள் இது குறித்து ICRC இனரிடம் முறையிட்டுள்ளனர். புலிகளினால் பறித்துச் செல்லப்பட்ட மாட்டு வண்டிகளினதும் எருதுகளினதும் பெறுமதி சுமார் 3 1/2 இலட்ச ரூபாய் என்று கூறப்படுகிறது.


ஹோமியோபதி

தமிழ்நாட்டின் பிரபல ஹோமியோபதி சிகிச்சை நிபுணர்

Dr. R. தியாகராஜன் D.H.M.S. AMRSH (Lond)

நாட்பட்ட தீராத வியாதிகளுக்கு சிறப்பான சிகிச்சை அளிக்கிறார்.

ஹோட்டல் கிறீன்லண்ட்ஸ். தொ.பே: 585592 - 581986

20.10.1999 - 25.10.1999

இந்தியத் தொ.பே: 0091-431-432946, 0091-431-432046

வெளிநாடுகளில் இருப்பவர்களுக்கும் சிகிச்சை அளிக்கப்படும்.



மனோதத்துவ வைத்தியம்

வவுனியாவிலும் (வன்னி இன்னில்) சந்திக்கலாம்

இளைஞர்களே! சக்தி இழந்து மெலிந்து, நித்திரையின்மை, பயம் நடுக்கம், ஞாபக மறதி, தாழ்வு மனப்பான்மை ஏற்படக்காரணமான தவறுகளை நிறுத்தி எதிர்காலம் பிரகாசிக்க பிரபல மனோதத்துவ நிபுணர் DR.P. ஆறுமுகம் அவர்களை நாடுங்கள்.

SEXUAL DISORDERS (தாம்பத்திய கோளாறுகள்)

தாம்பத்திய கோளாறுகளுக்கு நோயும் காரணமானாலும் 85% தாழ்வு மனப்பான்மையே காரணமாகும். தாழ்வு மனப்பான்மையை 90 நிமிடத்தில் நீக்கி, நான் வீரியம் உள்ள ஆண்மகனாகி விட்டேன் என்று அடிமனதில் பதிய வைத்தே பணம் பெறப்படும்.

வெளிநாட்டில் வசிப்போருக்குவிஷேட ஏற்பாடுகள்

எந்தவித தாம்பத்திய பாதிப்புனாலும் தயக்கமின்றி எழுதவும். உமது கேள்விகளுக்கு விரிவான பதில் தந்தபின் முடியாதவன், இயலாதவன் என்ற தாழ்வு மனப்பான்மை நீங்க மனோதத்துவ சிகிச்சை பதிவு நாடா மூலமும், உடல் பாதிப்பிற்கு நல்ல மூலிகை மருந்தும் பெற்று தாம்பத்திய குறைகளை முற்றாக நீங்கிய ஆண்மகனாகுங்கள். (அந்தரங்கம் உறுதியாக பேணப்படும்) பதில் பெற முத்திரை செலவு அனுப்பவும்.

மட்டக்களப்பு விலாசத்திற்கு மட்டும் கடிதத் தொடர்பு கொள்ளவும்

நீரிழிவு நோய் முற்றாக சுகமாக்கலாம். மனநோய்கள், தாழ்வு மனப்பான்மை 'ஹிஸ்டீரியா' என்பனவற்றுக்கும் மனோதத்துவ சிகிச்சை உண்டு. ஆஸ்துமா, தலையிடி, வாதம், வெள்ளை போதல், கிரந்திநோய், குழந்தை பேறு இன்மை, முடி உதிர்தல் எல்லாவற்றுக்கும் மருந்துகள் உண்டு.

கல்முனையில் நொவம்பர் 6,7ம் திகதிகளில்

T.M.M. பாமஸி, கல்முனை. T.P. - 067- 29329

வவுனியாவில் நொவம்பர் 13,14 திகதிகளில்

(Vanni Inn) 2ம் குறுக்குத் தெரு, ஞான 'வைரவர் கோயில் ஒழுங்கை, வவுனியாவில் சந்திக்கலாம் T.P.024-22074,

கொழும்பில் ஒப்டோபர் 20 முதல் 27 வரை

DR.P.ARUMUGAM S.A.M.P. REG. 9492

SRI SAWBAKIYA INN, 67/A, WOLFENDHAL STREET, COLOMBO-13

(5 லாம்புச்சந்தியில் இருந்து 100 யார் தூரத்தில் உம்பிச்சி பிளேஸ் பள்ளி வாசலுக்கு முன்னால் உள்ளது) T.P. 338165, 338166, 338164 FAX: 338161.

கொழும்பு நாட்களில் மட்டும் செல்டெல் No-072-609388

கடிதத் தொடர்பு: RESIDENT T.P:- 065-24019

DR.P.ARUMUGAM S.A.M.P.,
NO.51/5. Koolavady Road,
Batticaloa. SRI LANKA.


வலிகாமம் மேற்கு பிரதேச சபை, சுழிபுரம்

## மேற்கொண்ட வேலைத் திட்டங்கள்

வலிகாமம் மேற்கு பிரதேச சபையை ஈழமக்கள் ஜனநாயக கட்சி கையேற்ற பின்பு கௌரவ கே.என்.டக்ளஸ் தேவானந்தா அவர்களின் முயற்சியால் மாண்புமிகு ஜனாதிபதி அவர்களிடமிருந்து பெறப்பட்ட விசேட நிதி 30 இலட்சத்திலிருந்து 32 வேலைத்திட்டங்கள் நிறைவேற்றப்பட்டுள்ளன.

மேலும், பன்முகப்படுத்தப்பட்ட வரவு செலவுத்திட்ட நிதியிலிருந்து 04 வேலைத்திட்டங்களும், பிரமாண அடிப்படையிலான மூலதன நன்கொடை நிதியிலிருந்து 08 வேலைத்திட்டங்களும், சபை நிதியிலிருந்து 20 வேலைத்திட்டங்களும், நான் நிதியிலிருந்து 22 வேலைத்திட்டங்களும் நிறைவேற்றப்பட்டுள்ளன.

மேலும், 2000 ஆண்டு பல வேலைகள் மக்களின் தேவைக்கேற்ப நடைமுறைப்படுத்த சபை தீர்மானித்துள்ளது.

எக்கோ, ஜி.ரி.சற் ஆகிய உதவி வழங்கும் நிறுவனங்களால் 02 நீர் விநியோகத்திட்டங்களும் புனரமைக்கபட்டுள்ளன.

எம்முடன் ஒத்துழைத்த சக உறுப்பினர்கள், உத்தியோகத்தர்கள், அனைவருக்கும் சபை நன்றி தெரிவித்துக் கொள்கின்றது.

| | |
|---|---|
| வே.மகேந்திரன்,<br>உப தலைவர்,<br>வலிகாமம் மேற்கு பிரதேச சபை,<br>சுழிபுரம். | ந.திரிலோகநாதன்,<br>தலைவர்,<br>வலிகாமம் மேற்கு பிரதேச சபை,<br>சுழிபுரம். |


BRIGHT BOOK CENTRE (PVT) LTD

தபால் மூலம் கல்வி நெறிகள்

- ☆ Nursery Teacher Training Course (NTTC) பாலர் பள்ளி ஆசிரியர் பயிற்சி நெறி
- ☆ Method of Computerised Book Keeping & Accountancy (MCBA) கணனியின் உதவியுடன் கணக்கு பதிவியலும் கணக்கீடும்
- ☆ Spoken English & Sinhala - பேச்சு ஆங்கிலம் / சிங்களம்
- ☆ Business English - வியாபார ஆங்கிலம்.

மேலதிக விபரங்களுக்கு 3.50 முத்திரையொட்டப்பட்ட தபாலுறையுடன் கீழ்க்காணும் விண்ணப்பப் படிவத்துடன் தொடர்பு கொள்க.

APPLICATION FORM

NAME ..........

ADDRESS ..........

விரும்பும் பாடநெறி: ..........

BRIGHT FUTURE IN YOUR HAND

BRIGHT BOOK CENTRE (PVT) LTD.
S-27 FIRST FLOOR, COLOMBO CENTRAL
SUPER MARKET COMPLEX. COLOMBO - 11.
P.O. BOX NO:162, TELEPHONE: 434770.



தெய்வீக மருத்துவம்

THEIVEEGAM INTERNATIONAL SOCIAL AND SPIRITUAL SERVICES

சர்வதேச சமூக தெய்வீக சேவை

NTSF-CHARITY REG. NO.HA04BT219

கிரகப்பகை மற்றும் வேறு தீவினைகளால் வாழ்க்கையில் தீராத மனத்தாக்கம் காதல், கல்வி, தொழில், விவாகம், வெளிநாட்டுப் பிரயாணம், வேறு முயற்சித்தடை, கணவன்-மனைவி குடும்பவாழ்க்கையில் சந்தோஷமின்மை, உறவுப்பகை, வெளியில் சொல்லமுடியாத வெட்கமான பிரச்சனை, தீய பழக்கம், மனிதத்தீமை, மருந்தீடு, போன்ற தீமைகள் ஏற்படுகின்றது. இது போன்ற வேறு எவ்வித பிரச்சனைகளானாலும் காண்டம் கூறும் சோதிடத்தினால் பிரச்சனைக்குரிய காரணத்தைக் கண்டறிந்து துன்பம் நீங்கி மகிழ்ச்சியாக வாழ இறைவனால் சித்தர்களுக்கு போதித்தருளப்பட்ட புனித புராதன தீங்கற்ற மாந்திரீக தெய்வீக மருத்துவத்தினால் நிவர்த்தியளித்து வருகின்றோம்.

ஆயுர்வேத மருத்துவர் "பாலு சோதிடர் (SAMP)" காலை 8.00 மணி முதல் பிற்பகல் 2.00 மணி வரை. நேரில் வரமுடியாதோர், வெளிநாட்டவர்கள் தம் பிரச்சனைகளை எழுதினால், அல்லது பக்ஸ், தொலைபேசி மூலம் தொடர்பு கொண்டு, கடல் கடந்த உடன் பயன்தரும் தெய்வீக மருந்துப்பொருட்களை தபால் மூலம் பெற்று தம் எண்ணங்களை நிறைவேற்றிக் கொள்ளலாம். தபால் செலவுகளை அனுப்பாதவர்களின் விடயங்கள் கவனிக்கப்படமாட்டாது. இரகசியம் பாதுகாக்கப்படும்.

தெய்வீகம் ஸ்ரீ லங்கா
கல்லடி அரசவிடுதி வீதி,
மட்டக்களப்பு.

வெளிநாட்டவர்களின் தொடர்புக்கு: T.PHONE/FAX: 0094 65 24825

THEIVEEGAM SRI LANKA
HEAD OFFICE
BATTICALOA-SRI LANKA
T.PHONE/FAX: 065-24825

வாழ்வினிருளை நீக்கி ஒளியையேற்றுவோம்"
"DISPEL DARKNESS IN LIFE AND LET LIGHT SHINE"



அதிஷ்டத்தை அள்ளித் தரும் அதிசயக் கற்கள்

பல வருடங்கள் ஆராய்ச்சியின் பின் மண்ணுக்கடியில் மறைந்து நிற்கும் மகத்தான இரத்தினங்களை உங்கள் கைபிடிக்குள் கொண்டு வந்துள்ளோம். வாழ்வில் வியாபாரம், தொழில், திருமணம், கல்வி, வெளிநாட்டுப் பயணம் மற்றும் பல வகைகளில் அதிஷ்டத்தை அள்ளித் தரும் முழு சரீரத்திற்கும் பொருந்தும். இரத்தினங்களை நியுமராலஜி முறையில் இலவசமாகக் கணித்துக்கூற அதை அணிந்து நீங்களும் அதிஷ்டசாலியாக மாறலாம்.

Accredited by National Gem & Jewellery Authority

ARUL JEWELLERS 3, Sea Street, Colombo-11, Sri Lanka. T.P:436331

Branch: 105, Galle Road, Wellawatte, Colombo-06.



ஜேர்மன்-தமிழ் அகராதி

- ☆ 30 ஆயிரத்திற்கும் அதிகமான ஜேர்மன் மொழிச் சொற்களுக்கான தமிழ் மொழிச் சொற்கள்.
- ☆ இலக்கண விளக்கம்.
- ☆ புதிய அணுகுமுறையிலான சரியான உச்சரிப்பு விளக்கம்.
- ☆ மாதிரிக்கடிதங்கள்.

தொடர்பு கொள்ளவும்-

K.Chandrasegaran (Swiss) 01/461 57.49, 01/241 16 30
Natel 079/285 83 09, Kanonengasse 19,8004 Zurich
V.Sivanesarajah (Swiss) 01/492 02 61

தமிழ் விற்பனை நிலையங்களிலும் பெற்றுக் கொள்ளலாம்.



CIMA ASIAN TAKE AWAY

Indische Spezialitated

இந்திய-இலங்கை அறுசுவை உணவுகளை சுவைத்து மகிழ்ந்திட நாடுங்கள்

CIMA ASIAN TAKE AWAY

Kanonengasse 19, 8004 Zurich. Zurich Kaserne யின் பின்புறம்

தினசரி சைவ-அசைவ உணவுகள்

புரியாணி
தண்டூரி வகைகள்
சப்பாத்தி

கொத்து ரொட்டி
நாண்
சமோசா மற்றும்

அனைத்துவகை தமிழ் உணவுகள்

Take away & Party Service

CIMA ASIAN TAKE AWAY

Kanonengasse-19,
8004 Zurich.
Tel: 01/241 16 30 Natel 079/ 285 83 09



நிள்மா

நறுமணச் சொட்டுநீலம்

ஒளிவீசும் வெண்மைக்கு நவீன தாய்மாரின் புதிய தெரிவு.




தூய அன்புக்கு அம்மா, அம்மாதான்
ஒளிவீசும் வெண்மைக்கு நிள்மா, நிள்மாதான்.

சந்தைப்படுத்துவோர்:
ஏஜே டிரேடிங் கொம்பனி
95, ஜெயந்த வீரசேகர மாவத்தை, கொழும்பு - 10

LOTUS





மலையாள மாந்திரிகம்



மலையாள மாந்திரிகத்தை இலங்கையில் திட்டவட்டமாக கற்றவர் பி.கே.சாமி அவர்களே. இதை ஒட்டி எத்தனை எத்தனையோ விருதுகள் பெற்றுள்ளார். இச்சேவையில் கெடுதலுக்கு இடமில்லை. நன்மைக்கே இடம். நிச்சயமாக ஒருவரை விரும்பினால் திருமணம் செய்வதென்று முடிவெடுத்தால் பரிபூரண உதவி செய்வார். காதலர்களை சேர்த்து வைப்பது, பிரிந்த காதலை ஒன்று சேர்ப்பது, பிரிந்தவரை அழைத்து எடுப்பது, திருமண தோஷத்திற்கு சாந்தி பரிகாரம் செய்வது, பிறந்த திகதி, மாதத்தை வைத்து வாடிக்கையாளரை கண்ட மாத்திரத்தில் இதுதான் இவர்களின் பிரச்சனை என்று கூறுவதுடன் கணவன் மனைவி பிரச்சனை, தொழில் முன்னேற்றம், வெளிநாட்டுப் பிரயாண தடைநீங்க, இன்னும் மாந்திரிக வேலைகளுக்கும் ஜாதக வேலைகளுக்கும் வெளிநாட்டிலும் உள் நாட்டிலும் 33 வருட உண்மை சேவை புரிவதாலும் வாடிக்கையாளர் மனதை கோணாது செயல்படுவதாலேயும் இன் நிறுவனம் வரையறுக்கப்பட்ட நிறுவனமாக விஸ்தரிக்கப்பட்டுள்ளது. கடல் கடந்து செயல்படக்கூடிய எத்தனை எத்தனையோ வசிய யந்திரங்கள் உண்டு.

தேவையான வெளிநாட்டவர்கள் உங்கள் ஆடர்களை இலங்கை நேரப்படி காலை 9 மணி முதல் இரவு 9 மணி வரையே தொலைபேசி அல்லது பெக்ஸ் ஆடர்கள் ஏற்றுக்கொள்ளப்படும்.

தேவைகளுக்கு உலக மாந்திரிக சக்கரவர்த்தி
Dr.P.K. SAAMI J.D.G.A.N&JP
SRI DURGAADEVI MANTHIRIKA
UCHCHADA PEEDAM
NO. 162, KOTAHENA STREET,
MAY FIELD ROAD, COLOMBO-13.

நவரெலியாவிலும் வழமையான சேவைகள் நடைபெறுகின்றன.

வெளிநாட்டவர்கள் தொடர்பு கொள்ள வேண்டிய தொலைபேசி
Fax-00941342464.
Tel-00941431137.
உள்நாட்டவர்கள் தொடர்பு கொள்ள வேண்டிய தொலைபேசி எண்கள்
342463-344831



பெண் பார்ப்பதற்கு
அலங்கரித்து படம் எடுக்க

ஸ்டூடியோ
சாயா
Col-6, P-594492

www.padippakam.com

**எக்ஸ்ரே ரிப்போர்ட்**

# முந்திக்கொண்டு ஊடறுத்த புலிகள்

ரணகோஷ 05 படை நடவடிக்கை பின்னடைவை சந்தித்த பின்னர் ஒருமாதம் வரை வன்னிப் போர் அரங்கில் அமைதி நிலவியது.

கடந்த மாதம் 10ம் 11ம் திகதிகளில் போலியோ சொட்டு மருந்து வழங்குவதற்காக போர் தவிர்ப்பில் இருதரப்பும் ஈடுபட்டிருந்தது.

போர் தவிர்ப்பு முடிந்த மறுநாள் 12ம் திகதி பெரும் படைநகர்வு மேற்கொள்ளப் பட்டது.

இம்முறையும் போலியோ சொட்டு மருந்து கொடுப்பதற்காக 15,16 ஆகிய தினங்களை போர் தவிர்ப்பு நாளாக இருதரப்பும் ஏற்றுக்கொண்டிருந்தது.

சென்றமுறை போர்தவிர்ப்பு முடிந்த மறுநாளே நடவடிக்கையை ஆரம்பித்த படைத் தரப்பு, இம்முறை போர் தவிர்ப்புக்கு முதல்நாள் படை நகர்வில் ஈடுபட திட்டமிட்டிருந்தது.

போர் தவிர்ப்பு 15ம் திகதி வெள்ளிக்கிழமை என்பதால், 14ம் திகதி வியாழக்கிழமை படை நகர்வில் ஈடுபட்டு புதிய இடங்களைப் பிடித்து விடவேண்டும். போர்தவிர்ப்பு நாட்களான வெள்ளி, சனி இருநாளிலும் புலிகள் தாக்க மாட்டார்கள் என்பதால், அந்த அவகாசத்தில் தாம் பிடித்த பகுதிகளில் போதிய தற்காப்பு நிலைகளை அமைத்துவிடலாம் என்பது படைத் தரப்பின் திட்டம்.

வன்னியில் அடைமழை பொழிந்து கொண்டிருப்பதால் புலிகளது தாக்குதல்களை படையினர் எதிர்கொள்ள வேண்டியிருக்கும். இதனால் முகாமுக்குள் முடங்கியிருக்காது வரையறுக்கப்பட்ட நகர்வுகளில் படையினர் ஈடுபடுவர் என்று சில வாரங்களுக்கு முன்னர் கூறியிருந்தோம்.

அவ்வாறான ஒரு நகர்வை வன்னிப் போர் அரங்கின் சகல முனைகளிலும் புலிகளும் எதிர்பார்த்துக் காத்திருந்தனர்.

போர் அரங்கின் உள்ளேயும், முன்னரங்கப் பகுதியிலும் புலிகளது உளவுப் பிரிவு 24 மணி நேரமும் விழிப்பாக இருந்தும், குறிப்புக்கள் அறிந்தும் கொண்டிருந்தது.

வவுனியா-யாழ் சாலையின் கிழக்கே, அதாவது மாங்குளத்தின் கிழக்கே உள்ள ஒலுமடு, அம்பாகாமம் பகுதிகளில் படை நகர்வுக்கான ஆயத்தங்கள் நடைபெறுவதை உளவுப் புலிகள் கண்டறிந்துவிட்டனர்.

வவுனியா-யாழ் சாலையின் கிழக்குப் புறமாக உள்ளது அம்பாகாமம். ஜயசிக்குறுய் நடவடிக்கையின்போது 1998 மே மாதம் 28ம் திகதி அம்பாகாமம் பகுதி படையினரால் கைப் பற்றப்பட்டது.

அம்பாகாமம் ஊடாக உள்பாதை வழியாக நகர்ந்து கிளிநொச்சியை சென்றடையவே 'ஜயசிக்குறுய்' படையினர் அப்போது திட்ட மிட்டனர்.

மாங்குளத்தை நேரடியாக கைப்பற்ற முடியாததால், அதனை உள்பாதையால் மேவிக் கொண்டு கிளிநொச்சிக்கு செல்வதற்கே படையினர் வியூகம் வகுத்தனர்.

1998 மே 28ம் திகதி அம்பாகாமப் பகுதியில் நடைபெற்ற சண்டையில் 50 படையினர்வரை பலியாகினர். 200 பேர்வரை காயமடைந்தனர்.

அம்பாகாமத்தை படையினர் கைப்பற்றிய பின்னர் கிளிநொச்சியை புலிகள் கைப்பற்றி னார்கள். இதன் பின்பு மாங்குளம் படையின ரால் கைப்பற்றப்பட்டது.

படையினரால் அதனையடுத்து ஒட்டுசுட்டான் பகுதியும் கைப்பற்றப்பட்டது.

இந்த நகர்வுகளின் பின்னர் 'ஜயசிக்குறுய்' நடவடிக்கை முற்றுப்பெற்றது.

வவுனியா யாழ் சாலையில் நேர்ப்போக்காக மாங்குளம்வரை படையினர் நிலைகொண்டுள்ளனர். இதன் நீளம் 45 கிலோமீட்டர்.

வவுனியா-யாழ் சாலையின் கிழக்கே உள்ள வவுனிக்குளம் முதல் மேற்கே உள்ள ஒட்டுசுட்டான் வரை குறுக்குப் போக்காக படையினரின் முன்னரங்க நிலைகள் விரிவடைந்துள்ளன. இதன் நீளம் 40 கிலோமீட்டர். இதற்குள் அம்பாகாமம், ஒலுமடுப் பகுதிகளும் அடங்குகின்றன.

மாங்குளத்திற்கு கிழக்கே உள்ள கரிப்பட்ட முறிப்பு, ஒலுமடு, அம்பாகாமம் பகுதிகளில் உள்ள படை நிலைகளது கட்டளை மையம் ஒலுமடுப் பகுதியிலேயே இருக்கிறது.

அம்பாகாமம் பகுதியில் இருந்து புதிய படைநகர்வுக்கான ஏற்பாடுகளுக்கு ஏற்பாட்டு தளமாகவும் ஒலுமடுவே இருந்தது.

மாங்குளத்தில் இருந்து ஐந்து கிலோ மீட்டர் தூரத்தில், மாங்குளம் முல்லைத்தீவு வீதியில் இருக்கிறது ஒலுமடு.

ரணகோஷ மூலம் மன்னார் பூநகரி பாதையைக் கைப்பற்றும் முயற்சி பின்னடைந்தமையால், மறுபடி வவுனியா-யாழ் சாலையை கைப்பற்றும் முயற்சி ஒன்றுக்கு படைத்தரப்பு ஆழம் பார்க்க நினைத்தது.

ரணகோஷ படைகளை முறியடிக்க புலிகளது அணிகள் யாழ் சாலையின் மேற்கே உள்ள பள்ளமடு, பெரியமடு பகுதிகளில் காத்திருக்கின்றன.

புலிகளது பீரங்கிப் படையணிகள், டாங்கி எதிர்ப்பு அணிகள் உட்பட விசேஷ அணிகள் மேற்குப் பக்கம் நகர்த்தப்பட்டுள்ளதால், கிழக்குப் பக்கம் பலவீனமாக இருக்கும் என்று படைத்தரப்பு கணக்குப் போட்டிருக்கிறது.

மன்னார், பூநகரிப் பாதையைப் பிடிப்பதற்கான ரணகோஷ படைகளது நகர்வைத்தான் புலிகள் எதிர்ப்பார்கள். யாழ் சாலையை கைப்பற்றுவதற்கு 'ஜயசிக்குறுய்' படைகள் மறுபடி களமிறங்கும் என்று எதிர்பார்க்க மாட்டார்கள் என்பது படைத்தரப்பின் கணிப்பு.

அதுமட்டுமன்றி இன்னொரு தந்திரோபாய நோக்கமும் இருக்கிறது.




ரணகோஷ படைகள்மீது முழுக் கவனத்தையும் செலுத்தி அங்கு செறிந்துள்ள புலிகளை கிழக்குப்பக்கம் சண்டைக்கு இழுத்தால் அங்கு செறிவு குறையும். ரணகோஷ படைகள்மீது புலிகள் மழைக்காலத் தாக்குதலுக்கு பெரும் ஏற்பாடு செய்வதும் பாதிக்கப்படும் என்பதே அந்தத் தந்திரோபாயம்.

ரணகோஷ 05 இன் பின்னர் ரணகோஷ படைகள் தங்களை மீளச் சீரமைக்கவும், இன்னொரு நகர்வுக்கு ஆயத்தமாகவும் கால அவகாசம் தேவை.



ஆகவே ரணகோஷவுக்கு சிறிது ஒய்வு கொடுக்கவும், அந்த ஓய்வைப் புலிகள் குழப்பாது இருக்கவும், யாழ் சாலையின் கிழக்கே அம்பாகாமத்தில் போர் அரங்கைத் திறக்க முடிவு செய்யப்பட்டது.

புலிகள் எதிர்பாராத முனையில் எதிர்பாராத நேரத்தில் சண்டையை ஆரம்பித்து வெற்றி பெறுவதுதான் படைத்தரப்பின் நோக்கம்.

இந்த நடவடிக்கைக்கு படைத்தரப்பு சூட்டிய பெயர் 'வோட்டர் ஷெட்'. 'வோட்டர் ஷெட்' என்றால் ஆங்கில அகராதியில் 'நீர் கீழ்நோக்கிப் பாயும் சரிவு' என்றும் அர்த்தம்.

மழைக்காலம் என்பதால் நீர் கீழ்நோக்கிச் செல்வதுபோல, படைகளும் கீழ்நோக்கி அதாவது கிளிநொச்சி நோக்கி பாய்ந்து செல்லும் என்ற அர்த்தத்தில் பெயர் சூட்டியுள்ளனர்.

புலிகள் இதனை 'நீர்ச்சிந்து' என்று தமிழ்ப்படுத்தி உள்ளனர்.

'வோட்டர் ஷெட்' நடவடிக்கைக்கு 14.10.99 அன்று படையினர் தயாராகிக் கொண்டிருக்கையில், 'எதிரி நம்மைத் தேடி வருமுன்னர் நாம் எதிரியின் வாசல்படிக்கு தேடிச் செல்லவேண்டும்' என்ற பிரபாகரனின் உத்திப்படி புலிகள் முந்திக்கொண்டனர்.

புலிகளது விசேஷ அணிகள் ஊடறுப்புத் தாக்குதல் ஒன்றுக்கு களம் இறக்கப்பட்டனர்.

அம்பாகாமம் பகுதியில் இருந்து ஆரம்பமாகப் போகும் நடவடிக்கைக்கான கட்டளை தலைமைப்பீடம் இருப்பது ஒலுமடுவில் என்பதால், ஒலுமடுவில் ஊடறுப்புக்கு புலிகள் திட்ட மிட்டனர்.

14ம் திகதி வியாழக்கிழமை புலிகளது பீரங்கிப் படையணி குறித்த நேரத்தில் ஒலுமடு கரிப்பட்ட முறிப்பு, மணவாளன் பட்டமுறிப்பு ஆகிய பகுதிகளில் இருந்த படை நிலைகளை நோக்கி ஷெல்களை ஏவியது.

ஷெல் மழை ஓய்ந்ததும் புலிகளது அணிகள் ஒலுமடுவுக்குள் புகுந்து ஊடறுப்பு தாக்குதல் ஒன்றை ஆரம்பித்தன.

இத்தாக்குதலை முறியடிக்க படையினரும் கடும் தாக்குதலைத் தொடுத்தனர். படைத் தரப்பின் கட்டுப்பாட்டுப் பகுதிக்குள், உயர் பாதுகாப்பு வலயத்துக்குள் புலியணிகள் பிரவேசித்ததால் பொறிக்கிடங்குகள், பொறி வெடிகள் என்பவற்றுக்குள் புலிகள் பலர் சிக்கிக் கொண்டனர்.

படைத்தரப்பிலும் பலத்த இழப்பு ஏற்பட்டது. ஊடறுத்த புலியணிகள் தாக்குதலை முடித்து தளம் திரும்பியபோது, உள்ளே பலியான தமது சகாக்களது உடல்களை கொண்டு செல்லத்தக்க சூழல் இருக்கவில்லை.

படைத்தரப்பின் பாதுகாப்பு பிரதேசத்துக்குள் நின்று தமது சகாக்களது உடல்களை சேகரிக்க கால அவகாசம் இருக்கவில்லை.

படையெடுப்புக்கான தயாரிப்புக்களை அதன் கட்டளை தலைமையக பகுதிக்குள்ளேயே புகுந்து சீர்குலைக்கும் நோக்கத்துடனேயே புலிகளது இத் தாக்குதல் நடத்தப்பட்டது. இதனை சீர்குலைப்பு தாக்குதல் என்றே அழைக்கலாம்.

புலிகளது ஷெல் தாக்குதலில் படைநடவடிக்கைக்கு தயாராக நின்ற டாங்கிகள் சிலவும் சேதமுற்றதாகக் கூறப்படுகிறது.

எனினும் இந்த சீர்குலைப்பு தாக்குதல் நடைபெற்ற பகுதி படைத்தரப்பின் அதி உயர் பாதுகாப்பு பிரதேசம் என்பதால் ஆயுதக் களஞ்சியப் பகுதியை புலிகளால் தாக்கியழிக்க முடியாமல் போய்விட்டது.

புலிகளது சீர்குலைப்பு தாக்குதலால் அதிர்ச்சியடைந்தபோதும், சுதாகரித்துக் கொண்ட படையினர் 'வோட்டர் ஷெட்' நடவடிக்கையை உடனடியாக ஆரம்பித்தனர்.

அம்பாகாமத்தில் இருந்து டாங்கிகள், பீரங்கிகள் சகிதம் படைகள் நகர்ந்தபோது, யாழ் சாலையின் மேற்கே உள்ள வவுனிக் குளத்தில் இருந்தும் கிளிநொச்சி நோக்கி படைகள் முன்னேறுவதுபோல போக்குக் காட்டின.

எனினும் அம்பாகாமத்திலேயே உண்மையான சண்டை நடந்தது. புலிகளது காவலரண்களை நோக்கி டாங்கிகள் பாய்ந்தோடின. காவலரண்களை மோதி தகர்க்க முற்பட்டன. சில காவலரண்கள் தகர்க்கவும் பட்டன.

புலிகளது டாங்கி எதிர்ப்பு படையணிகள் முறியடிப்பு தாக்குதல் நடத்தியபோதும், டாங்கிகளை நெருங்குவது சண்டைக்களத்தில் கடினமாக இருந்தது.

முன்னேறிய படைகளை வளைத்து தாக்கும் விதமாக புலியணிகள் படையினரை இரண்டாகப் பிளக்க முற்பட்டு ஊடறுத்து தாக்க ஆரம்பித்தனர்.

இவ்வாறான தாக்குதலை செய்வதற்காக படைத்தரப்பின் பகுதிகளுக்குள்ளேயும் புலியணிகள் புகவேண்டியிருந்தது.

அவ்வாறு புகுந்தபோது படையினரின் முன்னேற்பாட்டு பொறிகளுக்குள்ளும் சிக்க நேரிட்டது.

எனினும் புலிகளது இந்த தாக்குதலால் படை நகர்வு குலைந்தது. புலிகளது வியூகத்துக்குள் சிக்காதிருக்க படைத்தரப்பு முன்னேறும் நகர்வை நிறுத்தியது.

வெள்ளி மாலையில் சண்டை ஓரளவு ஓய்ந்தபோதும், இருதரப்பும் எறிகணை வீச்சுக்களை தொடர்ந்தன.

ஞாயிறு வரையான போர் அரங்க நிலவரப்படி புலிகள் தரப்பில் 52 பேர் பலியானார்கள். படையினர் தரப்பில் 100 பேர் வரை பலியானதாகவும், இரு நூறுக்கு மேற்பட்டோர் காய மடைந்ததாகவும், மொத்தம் 500 பேர் வரையான வெற்றிடம் படைத்தரப்பில் ஏற்பட்டிருப்பதாகவும் சுயாதீன செய்திகள் கூறுகின்ற போதும், படைத்தரப்பு தமது தரப்பில் 40 பேர் பலியானதாக கூறியுள்ளது.

தம்மில் 40 பேர் பலியானதாக படைத்தரப்பே கூறுகிறது என்றால், இழப்பு பற்றி நாமும் ஒரு முடிவுக்கு வரலாம் தான்.

இதில் ஒரு வேடிக்கை என்னவென்றால், புலிகள் தரப்பில் 55 பேர் பலியானதாகவும், புலிகளிடம் 155 உடல்கள் ஒப்படைக்கப்பட உள்ளதாகவும் அரச பத்திரிகை செய்தி வெளியிட்டிருந்தது. உயிரற்ற உடல்கள் குட்டி போடும் என்று அப்பத்திரிகைக்கு யார் கூறினார்களோ?

சண்டையில் படையினர் கைப்பற்றியதாக கூறப்படும் உடல் எண்ணிக்கைக்கும், ஒப்படைக்கும் எண்ணிக்கைக்கும் இடையே தொடர்பு இருப்பதில்லை. கூடுதலாகக் கூறுவர். குறைவாகக் கொடுப்பர்.

32 உடல்கள் சர்வதேச செஞ்சிலுவைச் சங்கத்திடம் ஒப்படைக்கப்பட்டன. அதில் பல உடல்கள் புலிகளுடையவை அல்ல என்று திருப்பி விடப்பட்டன.

தமது தரப்பில் இழப்பை கூறுவதற்கோ, தமது உடல்களை ஏற்பதற்கோ புலிகள் ஒரு போதும் மறுத்தது கிடையாது.

1995 இல் மணலாற்று முகாம் தாக்குதலில் 180 புலிகள் பலியாகி உடல்கள் படையினரிடம் இருந்தபோது, அதனை ஒப்புக்கொண்டு உடல்களை புலிகள் ஏற்க முன்வந்தனர்.

போரில் பலியான புலிகளது விபரங்களை கூறுவதும், உடல்களை ஏற்பதும் புலிகள் தமது கடமையாகக் கருதுகிறார்கள். உடல்களை ஏற்க மறுத்தால் புலிகள் ஒரு இயக்கமாக இருப்பதும் முடியாமல் போய்விடும்.

அம்பாகாமம் சண்டைகளில் 48 புலிகள் பலியானதாக புலிகள் சனிக்கிழமை கூறியிருந்தனர். படையினரால் ஒப்படைக்கப்பட்ட உடல்கள் 32. தமது உறுப்பினர்களது உடல்கள்தான் அவை எனில் புலிகள் அவற்றைப் பொறுப்பேற்பதில் பிரச்சனை இருந்திருக்காது.

ஏற்கனவே பள்ளமடு மோதலின்போதும் புலிகளது உடல்கள் என்று புதைக்கப்பட்டதில் படையினரது உடல்களும் சேர்த்தே புதைக்கப்பட்டன. பின்னர் உண்மை தெரிந்து புதைகுழி தோண்டப்பட்டு உடல்கள் மீட்கப்பட்டன.

ஊடறுப்பு தாக்குதல் என்பதால் புலிகள் அனைவரும் சீருடையுடன்தான் களமிறங்கியுள்ளனர். படையினர் யார், நம்மவர்கள் யார் என்று இனம் காணவேண்டும் என்பதால் ஊடறுப்புக்களுக்கு தமது சீருடையுடன்தான் புலியணிகள் சென்றுள்ளனர்.

எனவேதான் சீருடையுடன் இல்லாத உடல்களை புலிகள் பொறுப்பேற்கவில்லை. சிவில் உடையில் நின்ற படையினர் புலிகளின் ஊடறுப்புத் தாக்குதலில் பலியாகி இருக்கலாம்.

எப்படியோ 'வோட்டர் ஷெட்' எதிர் பார்த்தது போல கீழ் நோக்கிப் பாயாது, புலிகள் முறியடிப்பு அரண் அமைத்து தடுத்துவிட்டனர்.

–★–

## கடலில் மோதிய கரும்புலிப் படகுகள்

**ம**ன்னார் கடற்பரப்பில் தமது துணைத் தளபதி நிரோசனை பறிகொடுத்ததுக்கு கடற்புலிகள் பதிலடி கொடுக்க முனைவர் என்று கடந்தவாரம் கூறியிருந்தோம்.

14.10.99 அன்று தரையில் சண்டை நடைபெற்றுக் கொண்டிருக்கும்போது, கடலில் ஒரு சண்டைக்காக கடற்புலிகளது படகுகள் அலைந்து கொண்டிருந்தன.

கடற்புலிகளது தளத்தில் இரண்டு கடற்கரும்புலிப் படகுகள் தயாராக காத்திருந்தன.

இரவு பத்து மணியளவில் கொக்கிளாய் கடற்பரப்பில் ரோந்து சென்ற கடற்படையினரின் டோரா படகுகள் இரண்டை கடற்புலிப் படகுகள் வழிமறித்து தாக்குதலை ஆரம்பித்தன.

இதனையடுத்து மேலும் சில டோராப் படகுகள் கடற்படையினரின் உதவிக்கு விரைந்தன.

கடற்புலிகள் சண்டையை ஆரம்பித்து சில மணிநேரங்களுக்குள் கடற்கரும்புலிப் படகுகள் இரண்டும், கடற்புலிகளது படகுகளும் சண்டை அரங்கை நோக்கிப் புறப்பட்டன.

ஆனால் எதிர்பாராத விதமாக புறப்பட்ட வேகத்திலேயே இரு கடற்கரும்புலிப் படகுகளும் மோதிக் கொண்டன.

இதனால் கடற்கரும்புலிப் படகுகள் இரண்டும் வெடித்துச் சிதறியதுடன், அருகில் நின்ற கடற்புலிப் படகுகளும் சேதமாகின. அதில் இருந்த கடற்புலிகள் இருவரும் பலியாகினார்கள்.

கடற்கரும்புலிப் படகுகள் தாக்குதலில் ஈடுபடாமையால் அதிகாலை மூன்று மணியளவில் கடற்புலிகள் சண்டையை நிறுத்தினார்கள்.

கடற்சண்டையில் கடற்படையினரின் நான்கு டோராப் படகுகள் சேதமாகின. கடற்புலிகள் தரப்பில் ஒருவர் பலியானார். மேஜர் துவாரகன் (சங்கரன் ராஜ்குமார். யாழ்ப்பாணம்) என்பவரே பலியானவர்.

கடற்பரப்பு விபத்தில் பலியான கடற்கரும்புலிகள் நால்வரில் இருவர் தாக்குதல் தளபதிகள். லெப்டினன்ட் கேணல் தரத்தில் உள்ளவர்கள்.

லெப்டினன்ட் கேணல் அருந்தவன் (கிருஸ்ண பிள்ளை உதயகுமார், யாழ்ப்பாணம்) லெப்டினன்ட் கேணல் பழனியப்பன் (ரெங்கையா மோகேந்திரன், வவுனியா) ஆகியோரே பலியான கடற்புலி தாக்குதல் பிரிவு தளபதிகள்.

கடற்கரும்புலி மேஜர் கோபி (ஆரிய போகானந்தன் அமீர்நாத், யாழ்) கடற்கரும்புலி மேஜர் கலைமகள் (ஆரிக்குட்டி கலைமதி யாழ்) ஆகியோரே ஏனைய இரண்டு கடற்கரும்புலிகளாவர். இவர்களோடு கடற்புலி மேஜர் சூரியப்பிரபா (அல்போன்ஸ் ராஜா ஜான்சிராணி, யாழ்) கடற்புலி கப்டன் சுதாகர் (இராசநாயகம் பிரசன்னா- யாழ்) ஆகியோரும் பலியாகினர்.

கடற்கரும்புலிப் படகுகள் விபத்தில் சிக்கியிருக்காது விட்டால், கடற்படை தரப்புக்கு அன்று பலத்த சேதம் ஏற்பட்டிருக்கலாம்.

கரும்புலிகளாக சாதாரண உறுப்பினர்கள் மட்டுமே செல்கின்றனர் என்ற நிலை ஏற்படக்கூடாது என்பதற்காக தளபதி தரத்தில் உள்ளவர்களும் கரும்புலிகளாக செல்கிறார்கள்.

கொழும்பில் நீலன் திருச்செல்வம்மீதான தாக்குதலில் முக்கியமான உறுப்பினர் ஒருவரே கரும்புலியாக பங்கெடுத்ததாகக் கூறப்படுகிறது.

கடற்சமர்களிலும் லெப்டினன்ட் கேணல் தரத்தில் உள்ள கடற்புலிகள் பலர் கடற் கரும்புலிகளாக சென்று பலியாகியுள்ளனர்.

நீண்டகால பயிற்சி, சண்டை அனுபவம் போன்றவற்றை பெற்றுள்ள இத்தகைய கடற்புலி தளபதிகள் பலியாவது கடற்புலிகளுக்கு ஒருவகையில் பலவீனமாகவும் இருக்கப் போகிறது. ○

**நாரதர்**

## அதிரடி அய்யாத்துரை



***ரெண்டு எழுத்தாரின்*** ஆலோசகர் சுகவீனமாக உள்ளாராம். அவரைப் பார்ப்பதற்கு பலர் ஒற்றைக்காலில் நிற்கிறார்கள். ஆனாலும் சிலருக்கு மட்டுமே அனுமதி கொடுக்கப்படுகிறது. அவரது உடல் நிலையை அனுசரித்தே அவ்வாறு செய்கிறார்கள். இலண்டனைவிட்டு வேறு பகுதிக்குப் போய்விட்டதாகவும் கூறிச் சமாளிக்கிறார்களாம்.

***வவுனியாவில் கழக*** மாணிக்கத்தின் மரணச்சடங்கின்போது ரெஸ்ட்ஹவுஸில் இருந்துதான் இரவிரவாக 'தண்ணீர்' விநியோகமாம். அதற்கான செலவு சில இலட்சங்களாம். இப்பணத்தை இன்னமும் கொடுக்கவில்லையாம். எந்தக் கழகத்திடம் வசூலிப்பது என்று தெரியாமல் ரெஸ்ட் ஹவுஸ்காரர் கையைப் பிசைந்து கொண்டிருக்கினமாம்.

***இந்தப் பகுதியில்*** சுட்டிக்காட்டிய சூட்டோடு கழக மாணிக்கத்துக்கு வவுனியாவில் நினைவுதினம் சின்னதாய் அவசர கோலத்தில் அனுஷ்டிக்கப்பட்டது. ஆனால் பத்திரிகை விளம்பரத்தில் 45 நாள் நினைவு என்று போட்டிருந்தவை. அதேநாளுக்கான அழைப்பிதழில் 41வது நாள் என்று போட்டிருக்கினம். ஏனோதானோ என்று செய்யும் போது, செத்த நாள்கூட சிந்தையில் இருக்காதுதானே!

***யாழ்ப்பாணத்தில்*** செக்கிங் முடித்து பயணிகள் விமானத்தில் ஏறும்போது பயணி ஒருவர் கூறினாராம் "இனி நாங்கள் சிறீலங்காவுக்குப் போகப்போகிறோம்" என்று போக்குவரத்துத்தான் நாட்டை கூறுபோட்டுக் கொண்டிருக்குது.

***முறுக்காக கதைத்துக்*** கொண்டிருந்த கிழக்கின் தனித்துவத் தலைவர் அம்மாவைக் கண்டதும் சாந்த சொரூபி ஆகிவிட்டாராம். கல்விக்குப் பொறுப்பானவர் மன்னிப்புக் கேட்க வேண்டும் என்ற முடிவையும் கைவிட்டுப்போட்டு, அடுத்த தேர்தலில் சக்தியானவரின் வெற்றிக்கு உழைக்க உறுதி கொடுத்துவிட்டாராம்.

***தமிழ்நாட்டில் தேர்தல் முடிந்த*** களிப்பில் இருந்த கலைஞருக்கு சரியாக விளங்கப்படுத்தாமல்தான் நாடு கடத்தல் நடந்ததாக கூறப்படுகிறது. இந்த விஷயம் வெளியே தெரியவராமல் அமுக்கத்தான் பார்த்தவையாம். ஆனால் குமாரருக்கு விஷயம் தெரிந்ததால் பெரும் பூகம்பமாக மாறிப் போட்டுது. சக்தியானவருக்கு எழுதிய கடிதத்துக்கு பதில் வந்தே ஆகவேண்டும் என்று பிடிவாதமாக நிற்கிறார் குமாரர்.

***நாடு கடத்தப்பட்ட*** 'இளைஞர்' நீலமானவர் கொலை தொடர்பாக துருவப்பட்டுக் கொண்டிருக்கிறாராம். நாலாவது மாடியில் இருப்பதாகத் தகவல்.

***குற்றமில்லை என்று*** தெரிந்தும் மன்னார் அதிபரை இறுக்க முயற்சிகள் நடக்குதாம். இப்படியே சிவில் அதிகாரிகளை முடக்கினால், சீருடை அதிகாரிகளைப் போட்டு நிரவலாம்தானே! அதுக்குத்தான் இந்த இறுக்கமோ? அதிபர் இல்லாத கச்சேரி இழவு வீடுபோலக் கிடக்குதாம்.

***யாழ்ப்பாணத்துக்கு*** தங்கச் சங்கிலிகளை கொத்துக் கொத்தாக கொண்டுபோன ஒருத்தருக்கு அப்படிக் கொண்டுபோக முடியாது என்று அனுமதி மறுக்கப்பட்டதாம். தங்கம் கொண்டு செல்ல அனுமதி இல்லை என்பது யார் போட்ட சட்டமாம்? சட்டம் என்ன சட்டம்? தமிழ்ச் சனம் என்றால் போடுகினம் ஒரு வட்டம்.

***வவுனியா நகரம்*** 'இராணுவ முகாம்' மாதிரி மாறிப்போச்சுது. நகரில் கைக்குண்டு வெடிச்சதை சாட்டாக வைத்துத்தான் கெடுபிடியை இறுக்கியவையாம். கைக்குண்டு யாரால் வெடிக்க வைக்கப்பட்டது என்று திருவாளர் பொதுஜனம் திறம்பட அறிந்து குசுகுசுக்கிறார். நமக்கேன் வம்பு தும்பு?!

***இலங்கை இராணுவத்தின்*** பொன்விழா பாகிஸ்தான் தளபதியால் உலகப் பிரசித்தமாகிவிட்டது. பொன்விழாவில் கலந்து கொள்ள போயிருந்தபோதுதான் பதவி பறிக்கப்பட்டது என்று விளக்கம் கூறும்போது பொன்விழாவும் பிரபலமாகும்தானே? எப்படியோ தளபதியாக வந்தவர் தலைவராகத் திரும்பியிருக்கிறார். இன்னொரு செய்தி- இலங்கை இராணுவத் தளபதியும் பாகிஸ்தான் தளபதியும் பாகிஸ்தானில் ஒரே இராணுவக் கல்லூரியில் பாடம் படித்தவர்களாம். ஆனாலும் அவர் வழியில் இவர் போகமாட்டார்தானே.

***இந்தவாரப் பொன்மொழி***

> "பேய், பூதம் சாத்தானை
> நினைத்துப் பயப்படவேண்டாம்!
> மனிதர்களுக்குள்ளேயே
> அதைவிடப் பயங்கரமானவர்கள்
> இருக்கின்றனர்!"

# அல்பிரட் துரையப்பா முதல் காமினி வரை

256

# குடாநாட்டுக்குச் சென்ற பௌத்த குருமார்கள்

**1992** ஏப்ரல் மாதத்தில் பௌத்த குருமார் தூதுக்குழு ஒன்று யாழ்ப்பாணம் சென்றது.

யாழ் குடாநாடு என்றாலே தென்னிலங்கை மக்களுக்கு பல்வேறு கற்பனைகள் தோன்றிய காலகட்டம் அது.

யாழ் சென்று வருவது என்பது விண்வெளிக்கு சென்று வருவதைவிட கஷ்டமான காரியம் என்பது போன்றே தென்னிலங்கையில் கருதப்பட்டது.

அவ்வாறான சூழலில் பௌத்த குருமார் தூதுக்குழு யாழ் செல்வது என்பது பெரும் ஆச்சரியத்துக்குரிய ஒன்றாகவே இருந்தது.

பௌத்த குருமாரின் விஜயத்துக்கு பிரேமதாசா அரசாங்கமும் அனுமதி கொடுத்திருந்தது. பௌத்த குருமார் தூதுக்குழுவினர் அனைவரும் விமானம் மூலம் பலாலிக்கு அழைத்துச் செல்லப்பட்டனர்.

பலாலியில் இருந்து சேந்தாங்குளம்வரை செஞ்சிலுவைச் சங்க அதிகாரிகள் தூதுக் குழுவினரை அழைத்துச் சென்றனர்.

சேந்தாங்குளத்தில் வைத்து அவர்களைப் புலிகள் பொறுப்பேற்று அழைத்துச் சென்றனர்.



புலிகளின் அரசியல் ஆலோசகர் அன்ரன் பாலசிங்கம், தமிழ்ழக் காவல்துறைத் தலைவர் நடேசன், யோகி, பேபிசுப்பிரமணியம், மகளிர் அணித் தலைவி ஜெயா ஆகியோர் பௌத்த குருமார்களை சேந்தாங் குளத்தில் வரவேற்றனர்.

வாகனத்தில் அழைத்துச் செல்லப்பட்ட அவர்கள் அனைவரும் யாழ்ப்பாணம் சுபாஸ விடுதியில் தங்கவைக்கப்பட்டனர்.

இலங்கையில் இனப்பிரச்சனைக்கு தூபமிட்டதில் என்றுமே முக்கிய பங்கு பௌத்த மதகுருமாருக்கு இருக்கிறது.

இலங்கைத்தீவு முழுவதும் பௌத்த சிங்கள நாடாக மாறியாகவேண்டும் என்பதை முன்னின்று முழங்கிவருவதே பௌத்த குருமார்கள் தான்.

இவ்வாறான பௌத்த மதகுருமாரில் ஒரு சாரார் சமாதானத்திற்காக சிந்திக்கின்றனர், புலிகளைச் சந்திக்க வருகின்றனர் என்ற செய்தி புதுமையானது.

இதனால்தானோ என்னவோ பௌத்த குருமார்களைக் காண்பதற்கு யாழ் குடாநாட்டு மக்களும் வெகு ஆர்வமாக இருந்தனர்.

யாழ் நகரில் பௌத்த குருமார்களை யாழ் விசேஷ தளபதி தமிழ்ச் செல்வன், யாழ் தளபதி செல்வராசா, இளம்பரிதி ஆகியோர் வரவேற்றனர்.

ஆயுதம் தாங்கிய புலிகள் இயக்க உறுப்பினர்களும், அவர்களது நடமாட்டங்களும், தமிழ்ழ காவல்துறை செயற்பாடுகளும் பௌத்த மத குருமார்களுக்கு தாம் வேறு ஒரு நாட்டுக்குள் சென்றுவிட்ட மன உணர்வையே ஏற்படுத்தியது.

தம்மைத் தமிழ் மக்கள் எவ்வாறு எதிர்கொள்வார்களோ என்னும் தயக்கத்துடனேயே யாழ் சென்ற குருமார்களுக்கு அங்கு கிடைத்த வரவேற்பு மகிழ்ச்சியாக இருந்தது.

பௌத்த மதகுருமார் குழுவுக்கு பாலபிட்டியே சிறீசித்தார்த மகாநாயக்க தேரோ தலைமை வகித்தார். இக் குழுவின் செயலாளராக மடம்பாகம தேரோ இருந்தார். பாலகண்டே ரத்தினசார தேரோ, ரத்காம சுடேவா தேரோ, பாலபிட்டிய ரத்தின சிறீ தேரோ, இதிகாசுவெ சுத்தானந்த தேரோ, காசிறீ தேரோ, கித்துல்வாலா ஆசாஜி தேரோ, எடரமுலே தேரோ, தம்மிகா தேரோ, விஜயபுர மகாநாம தேரோ ஆகியோர் குழுவில் அங்கம் வகித்தனர்.

யாழ்ப்பாணத்தில் பௌத்த குருமாரின் விஜயத்தை வரவேற்று கூட்டம் ஒன்று நடைபெற்றது. அக் கூட்டத்தில் அன்ரன் பாலசிங்கம் உரையாற்றினார்.

"தமிழ் மக்களது உண்மையான நிலைப்பாடுகள் என்ன, தமிழ மக்களது தலைமைத்துவமான விடுதலைப் புலிகளது நிலைப்பாடு என்ன என்பதை அறிவதற்காக பௌத்த குருமார்கள் இங்கு வந்துள்ளனர்.

பௌத்த குருமாரின் சமாதான முயற்சியை நாம் வரவேற்கிறோம். தமிழ் மக்களது பிரதிநிதிகளான விடுதலைப் புலிகள் சமாதானக் கதவை எப்போதும் திறந்து வைத்துள்ளனர்.

சிறீலங்கா அரசாங்கம் இந்த நல்ல சூழ்நிலையைப் பயன்படுத்திக் கொள்ள வேண்டும். ஆக்கபூர்வமான சமாதான முயற்சிகளில் ஈடுபட வேண்டும்" என்று அன்ரன் பாலசிங்கம் தனது உரையில் குறிப்பிட்டார்.

புலிகளது வரவேற்புக்கு பௌத்த குருமார்கள் சார்பாக மடம்பாகம தேரோ நன்றி தெரிவித்து உரையாற்றினார்.

"சிங்கள, தமிழ் மக்களிடையே வரும் காலத்தில் ஒற்றுமை ஏற்படவேண்டும். அரசாங்கத்திற்கும், விடுதலைப் புலிகளுக்கும் இடையே சரியான தொடர்புகளும், பரஸ்பர புரிந்துணர்வும் இல்லாத காரணத்தினால்தான் இனப் பிரச்சனை இந்தளவுக்கு சிக்கல் அடைந்துள்ளது.

எமது சமாதான விஜயத்துக்கு தென்னிலங்கையில் பலத்த எதிர்ப்புக்கள் ஏற்பட்டன.

அவ்வாறிருந்தும் தமிழ், சிங்கள மக்களிடையே ஒற்றுமை ஏற்படவேண்டும் என்பதற்காகவே நாம் இங்கு வந்துள்ளோம்" என்று கூறினார்.

பௌத்த குருமார் தூதுக்குழுவின் விஜயத்தைக் கண்டித்து கொழும்பில் சிங்கள பத்திரிகைகள் பல கட்டுரைகள் வெளியிட்டன. இனவாத பௌத்த குருமார்கள் பலர் தூது போன குருமார்களை திட்டித் தீர்த்தனர்.

யாழ்ப்பாணத்தில் பௌத்த தூதுக்குழு தங்கியிருந்த சுபாஸ் விடுதிக்குப் புலிகள் பலத்த பாதுகாப்பு வழங்கியிருந்தனர்.

யாழ் குடாநாட்டில் விமானக் குண்டு வீச்சுக்களால் பாதிக்கப்பட்ட பகுதிகளை பௌத்த குருமார்கள் சுற்றிப் பார்வையிட புலிகள் ஏற்பாடு செய்தார்கள்.

புலிகளது முகாம்கள் என்று கூறி விமானப் படையினரால் குண்டு வீச்சுக்கு இலக்கான சாதாரண கட்டடங்களையும், வீடுகளையும், குண்டு வீச்சுக்களால் பாதிக்கப்பட்ட சாதாரண மக்களையும் தூதுக்குழுவினர் கண்ணாரக் கண்டனர்.

யாழ் பொது மருத்துவ மனைக்கு சென்ற தூதுக்குழுவினர் அங்குள்ள நிலை கண்டு அதிர்ச்சியடைந்தனர்.

பொது மருத்துவ மனைக்கு தகுந்த மருந்துகளோ, மருத்துவ உபகரணங்களோ அரசாங்கத்தால் அனுப்பப்படுவதில்லை. அங்குள்ள மருத்துவர்கள், தாதிகள் ஆகியோரின் தன்னலமற்ற சேவையால்தான் மருத்துவமனை இயங்கிக் கொண்டிருக்கிறது என்பதை நேரில் கண்டனர்.

ஷெல் தாக்குதல்கள், குண்டுவீச்சுக்கள் என்பவற்றால் பாதிக்கப்பட்டு, அங்கங்கள் இழந்த சிகிச்சை பெற்றவர்களையும் நேரில் கண்டனர்.

புலிகளது தடுப்புமுகாமில் 40 பொலிசாரும், ஒரு இராணுவச் சிப்பாயும் தடுத்துவைக்கப்பட்டிருந்தனர். அவர்களைப் பார்வையிட புலிகளிடம் தூதுக்குழு அனுமதி கேட்டிருந்தது.

41 கைதிகளையும் தூதுக்குழு பார்வையிடலாம் என்று புலிகளது தலைவர் வேலுப்பிள்ளை பிரபாகரன் அனுமதி கொடுத்திருந்தார்.

அதனால் 41 கைதிகளையும் சந்தித்து பௌத்த குருமார்கள் உரையாடினார்கள். புலிகள் தம்மை மரியாதையாக நடத்துவதாகவும், உபசரிப்பதாகவும் கைதிகள் கூறினார்கள். தம்மை விடுவிப்பதற்கு அரசாங்கம் உருப்படியான நடவடிக்கை எதனையும் எடுக்கவில்லை என்றும் கைதிகள் குறை கூறினார்கள்.

யாழ்ப்பாண அரச செயலகத்திற்கும் தூதுக்குழுவினர் சென்றனர். அப்போது யாழ் அரச அதிபராக இருந்தவர் கே. மாணிக்கவாசகர். செயலக வாசலில் பூரண கும்ப மரியாதை செலுத்தி தூதுக்குழுவினரை வரவேற்றனர்.

## பேச்சு

யாழ் நகரில் புலிகளுக்கும் பௌத்த தூதுக் குழுவினருக்கும் இடையே பேச்சுவார்த்தை நடைபெற்றது.

பௌத்த தூதுக்குழுவினர் இனப்பிரச்சனைத் தீர்வுக்கு சில யோசனைகளை தயாரித்துக் கொண்டு சென்றனர்.

இந்த யோசனைகள் சிலவற்றுடன் அரச மட்டத்தினருக்கு உடன்பாடு இருந்தது.

புலிகளது சம்மதத்தைப் பெற்றால் அந்த யோசனைகளுக்கு பிரேமதாசாவின் ஆதரவையும் பெறமுடியும் என்று பௌத்த மதகுருமார்களுக்கு அரச மட்டத்தில் இருந்து கூறப்பட்டிருந்தது.

அதுபற்றி புலிகளிடம் தூதுக்குழுவினர் எதனையும் குறிப்பிடவில்லை. தமது யோசனைகளை புலிகளின் முன்பாக சமர்ப்பித்தனர்.

இப் பேச்சுவார்த்தையில் புலிகள் தரப்பில் மாத்தையா, அன்ரன் பாலசிங்கம், யோகி, தமிழ்ச் செல்வன் ஆகியோர் கலந்துகொண்டனர்.

பௌத்த மதகுருமார் முன்வைத்த யோசனைகள் இவைதான்:

1. சிறீலங்காவின் ஒற்றையாட்சி முறையைப் பாதுகாத்து சமூகங்களுக்கிடையே ஒற்றுமையைப் பேணுதல்.
2. பிரதேச சபைகள் மூலம் அதிகாரத்தைப் பரவலாக்குதல்.
3. கிழக்கு மாகாண மக்களது ஒப்புதலை ஒரு வாக்கெடுப்பு மூலம் பெற்றுக்கொண்டு, வடக்கு-கிழக்கு மாகாணங்களை இணைத்தல்.
4. மத்திய அரசின் கடன்பளுவை அதிகரிக்காத விதமாக பிரதேச சபைகள் வெளிநாடுகளில் கடன் உதவி பெறுவதற்கு அதிகாரம் வழங்குதல்.
5. தொலைக்காட்சி, வானொலி ஆகியவற்றின் தனிப்பிரிவுகளை வடக்கு-கிழக்கு பிரதேசத்தில் அமைத்தல்.
6. பிரதேச காவல்துறை நிறுவுதல்.
7. நாடாளுமன்றத்தில் பிரதேச சபைகளைப் பிரதிநிதித்துவப்படுத்தும் இரண்டாவது சபை நிறுவுதல்.

இந்த ஏழு யோசனைகள்தான் பௌத்த மதகுருமார் தூதுக் குழுவினால் முன்வைக்கப்பட்டன.

இதற்கு புலிகள் சார்பாக பின்வருமாறு பதிலளிக்கப்பட்டது!



"தென்னிலங்கையில் எதிர்ப்பு இருந்த போதும்கூட அவற்றையும்மீறி நல்லெண்ணச் சமாதான தூது வந்துள்ள பௌத்த குருமாரைத் தமிழ் மக்கள் சார்பாகப் பாராட்டுகிறோம்.

தமிழ் மக்கள் எதற்காகப் போராடுகிறார்கள் என்பதை சிங்கள மக்களுள் பெரும்பாலோர் புரிந்து கொள்ளவில்லை. சிறீலங்கா அரசாங்கத்தின் பயங்கரவாதத்தின் விளைவே தமிழ் மக்களது ஆயுதம் தாங்கிய போராட்டமாகும்.

பல தலைமுறைகளாக நாம் நடத்திய அறவழி சாத்வீகப் போராட்டங்கள் ஈவு இரக்கமின்றி ஒடுக்கப்பட்டன. எனவே எங்கள் மக்களைக் காக்க வேறு வழி இருக்கவில்லை" என்று புலிகள் கூறினார்கள்.

பௌத்த குருமாரின் யோசனைகள் தமிழ் மக்களது அபிலாசைகளுக்கு குறைவானவை என்பதைச் சுட்டிக் காட்டிய புலிகள், பின்வரும் மாற்று யோசனைகளையும் சமர்ப்பித்தனர்.

1) வடக்கு-கிழக்கு தமிழரது தாயகப் பிரதேசமாக அங்கீகரிக்கப்படவேண்டும்.

2) வடக்கு-கிழக்கு நிரந்தரமாக ஒன்றிணைக்கப்படவேண்டும்.

பௌத்த தூதுக்குழுவின் தலைவர் ஆற்றிய உரை முக்கியமானது. அவர் தனது உரையில்;

"1975ம் ஆண்டு நான் இங்கு வந்திருந்தேன். அப்போது ஓடித்திரிந்த குழந்தைகள் இன்று துப்பாக்கிகளுடன் காணப்படுகின்றனர். இன்று நான் காணும் சிறுவர்களும் இனப்பிரச்சனை தீராதுபோனால் வருங்காலத்தில் துப்பாக்கியுடன் தான் காணப்படுவார்கள்.

யுத்தத்தை உடன் நிறுத்தி சமாதானத் தீர்வொன்றைக் காணவேண்டியது மிக அவசியமாகும்.

இந்த நிலை மேலும் நீடிக்காமல் சமாதான தீர்வொன்றைக் காண்பதற்கு நாம் அரசுடன் பேச்சுவார்த்தை நடத்துவோம்.

யுத்தத்தால் அழிவுதான் ஏற்படும். அபிவிருத்தி ஏற்படாது. மக்களின் சொத்துக்கள், ஆலயங்கள், பாடசாலைகள், சந்தைகள், மற்றும் வியாபார நிலையங்கள் அழிந்து போயிருப்பதைக் காணும்போது மிகுந்த துக்கமாக இருக்கிறது.

எமது குழுவினர் அரசாங்கத்தின் சார்பிலோ, அரசியல் கட்சிகளின் சார்பிலோ இங்கு வரவில்லை. பௌத்த குருமார்கள் என்ற ரீதியிலேயே வந்துள்ளோம்.

இவ்வளவு காலமும் வராமல் காலம் தாமதித்து வந்தமைக்கு துக்கப்படுகிறோம். தமிழ்ழ விடுதலைப் புலிகளின் அழைப்புக் கிடைத்ததும் இங்கு வந்தோம்" என்று கூறினார்.

புலிகளோடு மூன்று கட்டமாக பேச்சுக்கள் நடத்திவிட்டு பௌத்த குருமார் தூதுக்குழுவினர் கொழும்பு திரும்பினர்.

புறப்பட முன்பாக யாழ் பத்திரிகையாளர்களிடம் பின்வருமாறு கூறினார்கள்:

"ஜனாதிபதி பிரேமதாசாவையும் முக்கிய அமைச்சர்களையும் சந்தித்து யுத்த நிறுத்தத்துக்கான பேச்சுவார்த்தையை நடத்துவோம். தமிழ் மக்களது அவல நிலையை அரசுக்கும், சிங்கள மக்களுக்கும் தெரியப்படுத்தி தமிழர் துயர் துடைப்பதற்கு எம்மாலான சகல முயற்சிகளிலும் ஈடுபடுவோம்."

பௌத்த குருமாரின் விஜயம் பற்றிய செய்திகளும், யுத்த நிறுத்தம் ஏற்படப் போவது போன்ற ஊகங்களும் வெளியாகி ஒரே ஆரவாரமாக இருந்தன.

கொழும்பு திரும்பிய தூதுக்குழுவும் வெகு உற்சாகமாக ஓடுப்பட்டுத் திரிந்தது. தாம் கண்ட காட்சிகளையும், புலிகளோடு பேசிய விடயங்களையும் தென்னிலங்கையில் பிரசாரப்படுத்தினார்கள்.

இவை எல்லாம் சில மாதங்கள் நீடித்தன. யுத்த நிறுத்தமும் வரவில்லை. பேச்சுவார்த்தையும் நடக்கவில்லை. பௌத்த குருமார் தூதுக்குழுவின் உற்சாகமும் நீடிக்கவில்லை.

அரசாங்கம் நியாயமான தீர்வுக்கு தயாராக இல்லாதபோது, எத்தனை தூதுக் குழுக்கள் வந்தாலும் பயன் இல்லை என்பதற்கு பௌத்த குருமார் தூதுக்குழுவின் தோல்வியும் ஒரு எடுத்துக்காட்டாக முடிந்தது.

(தொடர்ந்து வரும்)

அரசியல் தொடர் அற்புதன் எழுதுவது

---

# மறுபிறவி

**ரா**ஜீவ் கொலை வழக்கில் தூக்குத் தண்டனை பெற்று, மேன் முறையீட்டில் விடுதலையானவர் புகைப்படப் பிடிப்பாளர் சுபா சுந்தரம். ராஜீவ் கொலை வழக்கு தொடர்பான புதிய தகவல்கள். விசாரணை நடந்த முறைகள் பற்றி அவர் கூறும் தகவல்கள் புதியவை. கண்டிப்பாக நாம் அறிந்து கொள்ள வேண்டியவை.

10



## சுபா சுந்தரம்

**ஹ**ரிபாபு மரணமடைந்த செய்தியை அறிந்த பத்திரிகையுலக நண்பர்கள் எனது அலுவலகத்திற்கு வந்தனர். "ஹரிபாபுவின் படம் இருக்கிறதா?" என்று கேட்டபோது அவர்களுக்கு பிரிண்ட் போட்டுக்கொடுத்தேன்.

பத்திரிகை புகைப்படக்காரனாக எனது கடமையைச் செய்து கொண்டிருந்த வேளையில், மே 22ந் தேதி இரவு சென்னை பொலிஸார் விசாரணைக்காக என் அலுவலகப் படிகளில் ஏறிக்கொண்டிருந்தனர்.

ஸ்டுடியோவுக்குள் நுழைந்த பொலிஸார் எடுத்த எடுப்பிலேயே ஹரிபாபு பற்றித்தான் விசாரித்தனர். அவர்களின் வளையத்திற்குள் நான் சிக்கவேண்டும் என்ற கோணத்திலேயே கேள்விக்கணைகள் பாய்ந்து வந்தன.

"ஹரிபாபுவை எத்தனை ஆண்டுகளாக உங்களுக்குத் தெரியும்?"

"எவ்வளவு காலம் உங்களிடம் பணியாற்றினார்?"

"கடைசியாக அவரை எப்போது சந்தித்தீர்கள்?"

தொடர்ந்து வந்த கேள்விகளுக்கு அமைதியாகவே பதிலளித்து வந்தேன். எனக்குத் தெரிந்த உண்மைகள் எதையும் மறைக்காமல பொலிசாருக்குத் ஒத்துழைத்தேன். நான் பிரிண்ட் போட்டு வைத்திருந்த ஹரிபாபுவின் படங்களை வாங்கிக்கொண்டு பொலிஸார் சென்றனர்.

விசாரணை அத்துடன் முடிந்தது என்று தான் நினைத்திருந்தேன். ஆனால் காலைச் சுற்றிய பாம்பாக விசாரணை கெடுபிடிகள் தொடர்ந்தன. தமிழக பொலிஸார் விசாரித்துச் சென்றபின், அடுத்தடுத்த நாட்களில் மத்திய உளவுத்துறையான ஐ.பி.சி.யிலிருந்து அதிகாரிகள் வந்தனர். விசாரணைக் கேள்விகள் கடுமையாகவே இருந்தன. அதையடுத்து, சிறப்புப் புலனாய்வுக் குழு SIT- யிலிருந்து அதிகாரிகள் வந்தனர். அவர்களும் ஹரிபாபு பற்றித்தான் விசாரித்தனர்.

ராஜீவ் மரணத்தின்போது ஹரிபாபு எடுத்திருந்த புகைப்படங்கள் சிலவற்றை என்னிடம் காட்டினார். மரணத்திற்கு முன்பான நிமிடங்களில், மாலை அணிவிக்க காத்திருந்த பெண்களுடன் ராஜீவ் இருக்கும் புகைப்படத்தைக் காட்டி, "இந்த படத்தை ஹரிபாபு எப்படி எடுத்திருப்பார்?" என்றார் எஸ்.ஐ.டி அதிகாரி ஒருவர்.

"இது Wide angle லென்ஸ் மூலம் எடுக்கப்பட்டிருக்கிறது. தலைக்கு மேலே கேமராவைத் தூக்கிப்பிடித்து படமெடுத்திருக்கிறார்," என்று விளக்கினேன்.

எனது பதில் அவருக்குத் திருப்தி அளித்திருந்தாலும் அவரது பார்வையில் கோபக்கனல் வீசியபடி இருந்தது.

"படத்தில் இருப்பவர்கள் யார்? யாரென்று சொல்லுங்கள்?" அதிகாரியிடமிருந்து வெளிப்பட்ட கேள்வி இதுதான்.

"ராஜீவ்காந்தியைத் தவிர மற்றவர்கள் யாரென்று எனக்குத் தெரியாது."

அந்தப் பதிலைக் கேட்டதும் எஸ்.ஐ.டி.யினர் முறைத்துப் பார்த்தனர். 'உன்னை அப்புறம் பார்த்துக் கொள்கிறோம்.' என்பது போல் பார்வையை வீசிவிட்டு அவர்கள் சென்றனர்.

அவர்களின் அணுகுமுறைகள் கரடுமுரடாக இருந்தாலும், கடமையைத் தானே செய்கிறார்கள் என்ற வகையில் நானும் அவர்களுக்கு ஒத்துழைப்பாகத்தான் இருந்தேன். அதேநேரத்தில், பத்திரிகை புகைப்படக்காரனாக நானும் எனது கடமையைச் செய்து கொண்டுதான் இருந்தேன்.

ராஜீவ் மரணத்தின்போது ஹரிபாபு எடுத்த படங்களையும் மற்றொரு புகைப்படக்காரர் எடுத்த படங்களையும் வைத்து 45 நிமிட நேர தேர்தல் பிரசாரக் கேசட் தயாரிக்கும் பணியில் இறங்கினேன்.

ஹரிபாபு எடுத்த படங்களில் ஒரு செட் கிடைத்தது. அதை 10' x 8' என்ற அளவில் மூன்று செட் பிரிண்ட் போட்டுக் கொண்டேன். திரைப்பட இயக்குநர் எம்.ஜி.வல்லபன் மூலமாக ஆடியோ பிரசார கேசட் தயாரிக்கும் வேலையும் நடைபெற்று வந்தது. வல்லபன் எழுதிய பாடல்களை மலேசியா வாசுதேவன், வாணிஜெயராம் ஆகியோர் பாட, ஆடியோவில் பதிவானது.

இந்த பணிகள் நடந்துகொண்டிருந்த போதுதான், மே 29ந் தேதியன்று மத்திய அரசின் செய்திப் பிரிவான PIB ஹரிபாபுவின் கடைசி நேர 'க்ளிக்'கில் சிவராசன், தனு ஆகியோரின் கலர் படங்களை பத்திரிகைகளில் வெளியிட்டது.

அந்த சிவராசன் படம்தான் பெரிய பெரிய போஸ்டர்களாக தமிழகம் முழுவதும் ஒட்டப்பட்டு, பரபரப்பை ஏற்படுத்தியது. PIB வெளியிட்ட சிவராசனின் கலர் படத்துடன் போட்டோகிராபர் ராமமூர்த்தி என்னை சந்திக்க வந்தார்.

அவற்றை கருப்பு வெள்ளையாக பிரிண்ட் போட வேண்டுமென்றார். அவருக்கு ஒரு செட் பிரிண்ட் போட்டுக் கொடுத்துவிட்டு, நானும் ஒரு செட் பிரிண்ட் போட்டுக்கொண்டேன். பிறகு, அவருடனேயே வெளியில் வந்து, சிவராசனின் கருப்பு வெள்ளை படத்தை AFPக்கு அனுப்பிவிட்டு, ராமமூர்த்தியை பீட்டர்ஸ் காலனியில் உள்ள அவரது வீட்டில் விட்டுவிட்டு நான் ஸ்டுடியோவுக்குத் திரும்பினேன்.

ராஜீவ்காந்தியின் அஸ்திக் கலசம் தமிழகத்திற்கு வரும்போது அந்த அஸ்திக் கலசத்துடன் வைப்பதற்காக ராஜீவ் படம் ஒன்று வேண்டும் என தமிழ்நாடு காங்கிரஸ் கமிட்டியினர் கேட்டிருந்தனர்.

அதற்காக 24' x 20' அளவில் அழகும் அமைதியும் தவழும் ராஜீவ் படம் ஒன்றைக் கொடுத்திருந்தேன். ராஜீவின் அஸ்திக் கலசத்துடன் அந்தப்படம் தான் அஞ்சலிக்காக வைக்கப்பட்டிருந்தது.

ஜூன் 5ந் தேதி மாலையில், சத்தியமூர்த்தி பவனில் வைக்கப்பட்டிருந்த ராஜீவின் அஸ்திக் கலசத்திற்கு ஏராளமானவர்கள் திரண்டு வந்து அஞ்சலி செலுத்தினர்.

பவனில் மெட்டல் டிடெக்டர் சோதனை கடுமையாக இருந்தது. காங்கிரஸ் பிரமுகர்களிடம் நான், "இந்த பாதுகாப்பை ஸ்ரீபெரும்புதூரில் காட்டியிருக்கலாமே... ஆளுக்கு வைக்கவேண்டிய மெட்டல் டிடெக்டரை அஸ்திக்கு வைத்திருக்கிறீர்களே?" என்று கேட்டபோது லேசாக சிரித்துக்கொண்டார்கள். அஞ்சலிக்காக மக்கள் திரண்டிருந்த வேளையில், பிரசார ஆடியோ கேசட் ஒலிபரப்பப்பட்டது.

மக்களிடம் அதற்கு கிடைத்த வரவேற்பைக் கண்டு மகிழ்ந்தபடி ராயப்பேட்டையில் உள்ள எனது அலுவலகத்திற்கு திரும்பினேன்.

(தொடர்ந்து வரும்)

www.padippakam.com

அலசுவது - இராஜதந்திரி

# எல்லைகளில் ஆயுதக் குவிப்பு!

# இராணுவ முகாமாகும் குடியேற்றக் கிராமங்கள்

வடக்கு-கிழக்கில் திட்டமிட்ட சிங்களக் குடியேற்றங்களைப் பாதுகாப்பதில் தற்போதைய ஆட்சியாளர்களும் அதிக ஆர்வம் காட்டி வருகின்றனர்.

கிழக்கில் கோணகலையில் மூவாயிரம் சிங்கள குடியேற்றவாசிகள். ஆயுதபாணிகளாக்கப்பட்டுள்ளனர். இவர்களில் பெரும்பாலானோர் குற்றச் செயல்களுக்கு பெயர் போனவர்களாக இருக்கின்றனர்.

வடக்கில் வவுனியாவில் உள்ள சிங்களக் கிராமவாசிகளுக்கும் ஆயுதம் கொடுத்து உக்கிரம் கொள்ள வைக்கும் ஏற்பாடுகளும் நடைபெற்று வருகின்றன.

கோணகலையில் உள்ள சிங்கள மக்களுக்கு மேலும் சில வாரங்களுக்கு நிவாரண உதவி வழங்குமாறு ஜனாதிபதி சந்திரிக்கா அம்மையார் நேரடியாக உத்தரவிட்டுள்ளார்.

வடக்கு-கிழக்கில் சந்திரிக்கா அரசாங்கம் மேற்கொண்டுவரும் யுத்தத்தால் பல இலட்சம் தமிழ் பேசும் மக்கள் அகதிகளாகியுள்ளனர். இடம் பெயர்ந்து நிர்க்கதியாகியுள்ளனர்.



சந்திரிக்கா

இது தொடர்பாக ஜனாதிபதியோ அவரது செயலகமோ இதுவரை அனுதாபமான கருத்து எதனையும் தெரிவித்தது கிடையாது.

முன்னேறிப் பாய்ச்சல் நடவடிக்கையில் ஆரம்பித்து, ரணகோஷ 05 இன் பின்னர் நடைபெற்ற புதுக்குடியிருப்புத் தாக்குதல் வரை இலக்கற்ற குண்டு வீச்சுக்களால் எண்ணற்ற தமிழர்கள், குழந்தைகள், பெண்கள் உட்பட பலியாகியுள்ளனர்.

இந்த துயரங்கள் தொடர்பாக இன்று வரை ஜனாதிபதியிடம் இருந்து வருத்தம் எதுவும் தெரிவிக்கப்பட்டதேயில்லை.

ஆனால் கோணகலவில் புலிகள் தாக்குதல் நடத்திய தினத்தில் இருந்து இன்று வரை அங்கு ஜனாதிபதி தன் கவனத்தைச் செலுத்திவருகிறார். அவ்வப்போது பணிப்புரைகளை வழங்கிவருகிறார்.

துப்பாக்கிகள், ரவைகள், உணவுகள் ஆகிய மூன்றும் தங்குதடையின்றி விநியோகிக்கப்பட்டு வருகின்றன.

இனிமேல் நிவாரணம் தேவையில்லை என்று அரச அதிகாரிகள் முடிவு செய்தபோதும், ஜனாதிபதி தலையிட்டு நிவாரணத்தைத் தொடர்ந்து வழங்க உத்தரவிட்டுள்ளார்.

இதே கோணகலவில் ஆயுதம் தாங்கிய ஊர்காவல் படையினரால் தமிழர்கள் சிலர் கடத்திச் செல்லப்பட்டுள்ளனர். இவர்கள் பின்னர் கண்டதுண்டமாக வெட்டப்பட்டு வீதிகளில் பிணமாகக் கிடந்ததாக செய்திகள் வந்தன. அச் செய்திகளில் உண்மையில்லை. இதுவரை அவர்கள் என்ன ஆனார்கள்? என்பதே தெரியவில்லை.

இது தொடர்பாக அரசாங்கமோ, படையினரோ சிறிதும் அக்கறை காட்டவில்லை. காணாமல் போன தமிழர்களைக் கண்டு பிடிக்கவோ, அவர்களைக் கடத்திய ஊர்க்காவல் படையினரை விசாரிக்கவோ எவ்வித முயற்சியும் செய்யப்படவில்லை.

கோணகல தாக்குதலைக் கண்டித்து தமது மனிதாபிமானத்தை பறைசாற்றிய அமைப்புக்கள்கூட இந்த ஆட்கடத்தலைப் பற்றியும், இது தொடர்பாக அரசாங்கம் அலட்சியம் செய்தது பற்றியும் கண்டுகொள்ளாமல் இருப்பதும் குறிப்பிடத்தக்கதாகும்.

கோணகலையில் தமிழர்கள் கடத்தப்படுவது மட்டுமன்றி, அம்பாறையில் தமிழர்களது காணிகளில் சிங்களவர்கள் சட்டவிரோதமாக பயிர்ச் செய்கைகளிலும் ஈடுபட்டுள்ளனர்.

இவற்றைத் தமிழர்கள் தட்டிக் கேட்க முடியாதளவுக்கு சிங்கள குடியேற்ற வாசிகள் ஆயுதபாணிகளாக மாற்றப்பட்டு வருகின்றனர். படையினரும், பொலிசாரும் அவர்களது ஆக்கிரமிப்புகளுக்கு பாதுகாப்பு அரண்களாக உள்ளனர்.

கோணகலையில் சிங்கள மக்கள் தாக்கப்பட்டதால்தான் ஆயுதங்கள் வழங்கப்பட்டன என்று ஆட்சியாளர்கள் கூறத்தலைப்படுகின்றனர்.

ஆனால் வவுனியாவில் சிங்களக் குடியேற்றவாசிகளுக்கு தமிழர்களால் எவ்வித அச்சுறுத்தலும் ஏற்படவில்லை.

சிங்களக் குடியேற்ற வாசிகள்தான் தமிழ மக்கள் தங்கியிருந்த நலன்புரி நிலையம் ஒன்றைத் தாக்குவதற்கு பயங்கரமான ஆயுதங்களுடன் திரண்டு வந்திருந்தனர்.

எனவே இங்கு ஆட்சியாளர்கள் ஆயுதங்கள் வழங்குவதாயின் நலன்புரி நிலையத்தில் தங்கியுள்ள தமிழ் அகதிகளுக்கே ஆயுதங்கள் வழங்கியிருக்க வேண்டும்.

ஆனால் நடந்ததோ நேர்மாறாக இருந்தது. வவுனியாவில் உள்ள சிங்களக் குடியேற்றவாசிகளை ஆயுதபாணிகளாக்கும் வேலையில் சந்திரிக்கா அரசாங்கம் ஈடுபட்டுள்ளது.

கோணகலவில் சிங்கள் கிராமவாசிகள் தாக்கப்பட்டதால்தான் ஆயுதங்கள் வழங்கப்பட்டன என்று கூறப்படும் நியாயம் வவுனியா விவகாரத்தில் அர்த்தமற்றுப் போயுள்ளது.

வடக்கு-கிழக்கில் சிங்களக் குடியேற்றங்களை இராணுவ முகாம்கள் போன்று பலப்படுத்தி, நிலப் பறிப்பை உறுதிப்படுத்தும் நோக்கமே ஆட்சியாளரின் அணுகுமுறையில் காணப்படுகிறது.

அதுமட்டுமன்றி எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலில் வடக்கு-கிழக்கில் குடியேறியுள்ள சிங்கள மக்களது வாக்குகளைக் குறிவைத்தும் ஆயுதங்களும், ரவைகளும் வழங்கப்பட்டு வருகின்றன.

அம்பாறையிலும், ஏனைய எல்லைப் புறச் சிங்களக் கிராமங்களிலும் கடந்த தேர்தல்களில் பொது ஜன முன்னணிக்கே கணிசமான வாக்குகள் கிடைத்திருந்தன.

எல்லைப்புறக் கிராமங்களிலும், குடியேற்றவாசிகளிடமும் பேரினவாதம் மேலோங்கிக் காணப்படுவது இயல்பாகும்.

சிங்களக் குடியேற்றவாசிகள் தமது ஆதிக்கத்துக்கு புலிகளையே தடையாக நினைக்கிறார்கள். புலிகள் இல்லையானால் தமது விருப்பப்படி தமிழ்க் கிராமங்கள்மீது ஆதிக்கம் செலுத்தலாம், அச்சப்பட வேண்டி இருக்காது என்று குடியேற்றவாசிகள் கருதுகின்றனர்.

எனவே புலிகளுக்கு எதிராக போர் நடத்தும் பொதுஜன முன்னணிக்கு எல்லைக் கிராமங்களிலும், குடியேற்றவாசிகளிடமும் பெரும் ஆதரவு உருவாகியுள்ளது.

இந்த ஆதரவை கோணகலவில் புலிகள் நடத்திய தாக்குதல் சேதமாக்கிவிடக்கூடாதே என்றுதான் ஆளும் தரப்பினர் கவலை கொண்டுள்ளனர்.

இதனால்தான் கோணகல மக்களுக்கு தேவைக்கு அதிகமாகவே ஆயுதங்கள் வழங்க துரித நடவடிக்கை எடுக்கப்பட்டதோடு, தமிழர்கள்மீது வீரத்தைக் காட்டவும் மறைமுக அனுமதி தரப்பட்டுள்ளது.

இவ்வாறான சூழ்நிலையை ஆட்சியாளர்கள் தமது நலன்கருதி உருவாக்குவது, அவர்களுக்கே ஆபத்தானதாக மாறவும்கூடும்.

தேர்தல் காலகட்டத்தில் ஆயுதபாணிகளான சிங்களக் குடியேற்றவாசிகள் புலிகளால் தாக்கப்பட்டால், ஆட்சியாளருக்கு எதிராக அங்குள்ள வாக்குகள் திரும்பிவிடலாம்.

தம்மை பாதுகாக்க முடியாத ஆட்சியாளருக்கு வாக்களிக்க முடியாது என்று குடியேற்றவாசிகள் எதிராக மாறவும் சந்தர்ப்பம் இருக்கிறது.

எனவே ஜனாதிபதித் தேர்தல் காலத்தில் களமுனைகளில் மட்டுமல்லாது, சிங்கள குடியேற்றக் கிராமங்களது பாதுகாப்பிலும் ஆட்சியாளர் கவனம் செலுத்த வேண்டிய கட்டாயம் ஏற்பட்டுள்ளது.

சிங்களக் குடியேற்றங்கள்மீது புலிகள் நடத்திய தாக்குதல்களை பலரும் கண்டித்துள்ளனர். இந்தக் கண்டிப்புக்கள் என்பவை ஒருவிதமான சம்பிரதாயம் போன்றும் விளங்குகின்றன.

இவ்வாறு கண்டிப்பவர்கள் பிரச்சனைக்கு பரிகாரம் என்ன என்பது பற்றி கூறாது நழுவிவிடுகின்றனர்.

கோணகலையில் தமிழர்கள் கடத்திச் செல்லப்பட்டுள்ளனர். தமிழர் காணிகளில் சிங்கள குடியேற்றவாசிகள் அடாத்தாக பயிர் செய்கின்றனர். இக் காணிகள் படிப்படியாக சிங்கள மயப்படுத்தப்பட்டுவிடும்.

இவற்றையிட்டு அரசாங்கம் பாராமுகமாய் இருப்பதோடு, சிங்கள குடியேற்றவாசிகளை ஆயுதபாணிகளாக மாற்றி வருகிறது. இந்நிலையில் தமிழ் மக்கள் நீதியை நிலை நாட்ட என்ன செய்வது? என்ற கேள்விக்கு பதில் கூறவேண்டியதும் கண்டிப்போரது கடமையாகும்.

அரசாங்கம் குடியேற்றவாசிகளுக்கு உறுதுணையாக உள்ளபோது, தமது நிலங்களையும், நலன்களையும் பாதுகாக்க குறிப்பிட்ட பகுதி மக்கள் வன்முறையில் ஈடுபட நிர்ப்பந்திக்கப்படுகின்றனர்.

இவ்வாறுதான் அயர்லாந்தில் நடைபெற்றது. அயர்லாந்தை ஆக்கிரமிக்க குடியேற்றத் திட்டத்தையே ஆங்கில அரசாங்கம் முடுக்கிவிட்டது.

அயர்லாந்து மக்களது தனித்துவத்தையும், பலத்தையும் சிதைப்பதற்கு குடியேற்றங்களை உருவாக்குவதே சிறந்த வழியென்று ஆங்கிலேயர்கள் தீர்மானித்தனர்.



டி.எஸ்.சேனாநாயக்கா

ஆயினும் அயர்லாந்தில் நடைபெற்ற ஆங்கிலேயக் குடியேற்றங்களை எதிர்த்து ஐரிஸ் மக்கள் தீரத்துடன் போராடினார்கள். குடியேறிய ஆங்கிலேயர்கள் கொன்று குவிக்கப்பட்டனர். பலரை உயிருடன் பிடித்து காது, நாக்கு என்பவற்றை அறுத்துவிட்டு அனுப்பினார்கள். இவர்களைக் காணும் ஆங்கிலேயர்கள் குடியேற வரமாட்டார்கள் என்று ஐரிஷ் மக்கள் நினைத்தனர்.

இங்கிலாந்தில் இருந்த கொலைக் குற்றவாளிகள், திருடர்கள், வீதிகளில் அலைந்து திரிந்தோர் முதலியவர்களை அயர்லாந்தில் குடியேற்றியது ஆங்கிலேய ஆட்சி.

ஆனால் ஐரிஷ் மக்கள் இந்தக் குற்றவாளிகளுக்கு தமது மண்ணில் தண்டனை கொடுத்தனர். இதனால் ஆங்கிலேயரின் சவக்குழியாக அயர்லாந்து மாறியது.

தமது மண்ணில் குடியேறிய ஆங்கிலேயர்மீது ஐரிஷ் மக்களும் அவர்களது போராட்ட இயக்கங்களும் மேற்கொண்ட நடவடிக்கைகள் கடுமையானவைதான். ஆனால் 'அந்நிய ஆட்சியாளரது முழு ஆதரவுடன் ஆயுதபாணிகளாக குடியேறும் கூட்டத்தை தடுப்பதற்கு வேறு எவ்வழிகளும் தமக்கு இருக்கவில்லை' என்றே ஐரிஷ் புரட்சியாளர்கள் கூறினார்கள்.

அயர்லாந்தில் ஆங்கிலேயர்களைக் குடியேற்றிய இங்கிலாந்து ஆட்சியாளர்கள்தான் அங்கு நிகழ்ந்த விபரீதங்களுக்கு உண்மையான பொறுப்பாளிகளாகும்.

அயர்லாந்தில் இங்கிலாந்து ஆட்சியாளர்கள் மேற்கொண்ட குடியேற்றங்களைப் போன்றே, ஜே.ஆர்.ஆட்சிக் காலத்தில் வன்னியில் குடியேற்றங்கள் மேற்கொள்ளப்பட்டன.

டொலர் பாம், கென் பாம் போன்ற பகுதிகளில் தென்னிலங்கையின் மோசமான குற்றவாளிகள் கொண்டு சென்று குடியேற்றப்பட்டனர். ஆயுதங்களும் வழங்கப்பட்டிருந்தன.

அயல் கிராமங்களில் உள்ள தமிழர்களை விரட்டியடித்து, மேலும் நிலங்களை ஆக்கிரமிக்க இக் குண்டர்கள் திட்டமிட்டிருந்தனர்.

இதனையறிந்த விடுதலைப் புலிகள் இக் குடியேற்றவாசிகள்மீது தாக்குதல் தொடுத்தனர். அதன் காரணமாக தமிழ் மக்களை விரட்டியடிக்கும் திட்டம் முறியடிக்கப்பட்டது.

இத் தாக்குதலை புலிகள் நடத்தியபோது ஏனைய மூன்று தமிழ் இயக்கங்களோடு ஐக்கிய முன்னணியாக செயற்பட்டு வந்தனர்.

புலிகளது இத் தாக்குதலை ஏனைய தமிழ் இயக்கங்கள் கண்டிக்கவில்லை. அப்போது ஈ.பி.ஆர்.எல்.எஃப். வெளியீடாக வந்த 'ஈழச்செய்தி'யில் 'டொலர் பாம்' 'கென்பாம்' தாக்குதல் பெரிதும் பாராட்டப்பட்டிருந்தது.

இந்தியப் படையினர் இங்கு நிலை கொண்டிருந்தபோது திருமலையில் சிங்களக் குடியேற்றங்கள்மீது தாக்குதல் நடத்துவதற்கு ஈ.பி.ஆர்.எல்.எஃப். அமைப்புக்கு 24 மணிநேர அவகாசம் கொடுக்கப்பட்டிருந்தது.

அந்த அவகாசத்துக்குள் சிங்களக் குடியேற்றங்கள்மீது ஈ.பி.ஆர்.எல்.எஃப். பெரும் தாக்குதல் ஒன்றை நடத்தி முடித்திருந்தது.

ஆக்கிரமிப்பு நோக்கத்துடன் ஆட்சியாளராலேயே நடத்தப்பட்ட குடியேற்றங்களே திட்டமிட்ட சிங்களக் குடியேற்றங்கள் என்று அழைக்கப்படுகின்றன.

இந்தத் தீவில் உள்ள சிங்கள, தமிழ், முஸ்லிம் மக்கள் தாமாக விரும்பி, தமது தேவைகள் கருதி தீவின் எப்பாகத்திலும் வாழ்வதற்கு உரித்துடையவர்களாவர். அதனையிட்டு தமிழ் பேசும் மக்களும் மாற்றுக் கருத்து தெரிவித்தது கிடையாது.

ஆனால் தமிழ் பேசும் மக்களது பாரம்பரிய பிரதேசங்களை ஆக்கிரமிக்கும் நோக்கத்தோடு நடைபெற்ற திட்டமிட்ட குடியேற்றங்களையே எதிர்த்து வந்துள்ளனர்.

> "அரசன் தான் கைப்பற்றிய பகுதியைத் தனது ஆதிக்கத்தின்கீழ் தொடர்ந்து வைத்திருக்க வேண்டுமாயின் அங்கு தனது குடியேற்றங்களை ஸ்தாபிப்பது, இராணுவ முகாம்களை ஸ்தாபிப்பதைவிட மேலானதாகும்.
>
> -மாக்கியவல்லி-

இனப்பிரச்சனைத் தீர்வில் வடக்கு-கிழக்கில் குடியேறியுள்ள சிங்கள மக்களது நிலைபற்றியும் ஒரு முடிவுக்கு வந்தாக வேண்டும்.

ஒரு குறிப்பிட்ட காலவரையறையை தீர்மானித்து, அதன் பின்னர் குடியேறியவர்கள் திருப்பி அனுப்பப்பட வேண்டும் என்றே தமிழ்க் கட்சிகள் கூறிவந்துள்ளன.

ஆனால் சந்திரிக்கா அம்மையாரின் அரசாங்கம் முன்வைத்த பொதியில் வடக்கு-கிழக்கில் சிங்கள மக்கள் குடியேறிய பிரதேசங்களை கோதி எடுக்கும் திட்டமே உள்ளடங்கி இருந்தது.

தற்போது ஜனாதிபதி தேர்தலை முன்னிட்டு அம்மையார் அரசாங்கம் மேற்கொண்டுவரும் நடவடிக்கைகள் வடக்கு-கிழக்கில் சிங்கள குடியேற்றவாசிகளை பலப்படுத்தி மேலாதிக்கம் பெறவைப்பதாகவே விளங்குகின்றன.

இந்த சூழ்நிலையால் சிங்களக் குடியேற்ற கிராமங்களை அண்மித்த தமிழ்க் கிராமங்கள் பெரும் அச்சுறுத்தலை எதிர் கொள்ளப்போகின்றன.

தமிழர்கள் காணாமல் போகும் சம்பவங்கள் சர்வசாதாரண நிகழ்வுகளாக மாறப்போகின்றன.

ஒவ்வொரு சிங்களக் குடியேற்றமும் இராணுமுகாம் போன்று மாற்றப்பட இருப்பதால், இராணுவத் தீர்வு நகர்வின் அங்கமாகவே திகழப்போகின்றன.

அரசியற் சிந்தனையாளனான மாக்கியவல்லி என்பவர் திட்டமிட்டக் குடியேற்றங்கள் பற்றி கூறியுள்ள கருத்தே இங்கும் ஆட்சியாளரால் பிரயோகிக்கப்படுகிறது.

"அரசன் தான் கைப்பற்றிய பகுதியைத் தனது ஆதிக்கத்தின்கீழ் தொடர்ந்து வைத்திருக்க வேண்டுமாயின் அங்கு தனது குடியேற்றங்களை ஸ்தாபிப்பது, இராணுவ முகாம்களை ஸ்தாபிப்பதைவிட மேலானதாகும். ஏனெனில் இராணுவத்துக்கு அரசனே ஊதியம் கொடுக்க வேண்டும். அதேவேளை இராணுவத்தினர் அந்த மண்ணுக்கு பரிச்சயமானவர்கள் அல்ல.

ஆனால் குடியேற்றம் அவ்வாறில்லை. அவர்கள் அந்த மண்ணுக்குப் பரிச்சயமாகி விடுகிறார்கள். அவர்களுக்கு அரசன் ஊதியம் கொடுக்க வேண்டியதில்லை. அவர்கள் கூலிக்காக மாரடிப்பவர்கள் அல்ல. சந்ததி சந்ததியாக தாம் உயிர் வாழ உணர்ச்சியோடு நின்று தாக்குப் பிடிக்கக்கூடியவர்கள். எனவே குடியேற்றம் இராணுவத்தைவிட மேலான நிரந்தர இராணுவமாகும்" என்று குறிப்பிட்டுள்ளார் மாக்கியவல்லி.

இங்கும் இலங்கைத் தீவை சிங்கள பௌத்த நாடாக்கும் இறுதி இலக்குக்கும், அதனை அடைய முன்னெடுக்கப்படும் இராணுவத் தீர்வுக்கும் தோதாகவே சிங்களக் குடியேற்றங்கள் ஆயுதமயப் படுத்தப்படுகின்றன.

டி.எஸ்.சேனநாயக்கா காலத்தில் ஆரம்பமான சிங்களக் குடியேற்றம், இன்று சந்திரிக்கா அம்மையார் காலத்தில் ஆயுதபாணிகளாக மாற்றப்பட்டு, நிரந்தர



ஜே.ஆர்.

இராணுவமுகாம்கள் போன்று செயற்படப் வழிவகுக்கப்பட்டுள்ளது.

கோணகலவில் ஆயுதம் வழங்கப்பட்ட சிங்கள ஊர்காவல் படையினர் அம்மன் ஆலயத்தை சுற்றிவளைத்து தேடுதல் நடத்தியுள்ளனர்.

இவையெல்லாம் தற்போதைய யுத்தத்தில் சிங்கள மக்களையும் ஆயுதபாணிகளாக்கி பங்காளிகளாக மாற்றும் புதியதொரு கட்டத்தையே குறிக்கின்றன.

தமிழ் மக்களுக்கு எதிரான போருக்கு எல்லைக் கிராமங்களிலும், குடியேற்றங்களிலும் சிங்கள மக்களை திரட்டுகின்ற தோற்றப்பாட்டையே இப்போது காணக்கூடியதாகவுள்ளது.

வெளிப்படையாக அல்லாது, நடைமுறையில் பேரினவாத உணர்ச்சிகளுக்கு தீனிபோடக்கூடிய சகல வழி முறைகளையும் தற்போதைய யுத்தம் உள்ளடக்கி இருக்கிறது.

வீரவிதான போன்ற அமைப்புக்கள்தான் இனவாதம் பேசுவதாக வெளியே தெரிகிறது. ஆனால் ஆட்சியாளர் முன்னெடுக்கும் யுத்தம் தொடர்பான ஒவ்வொரு அணுகுமுறையும், நிலைப்பாடுகளும் பேரினவாதத்தை சீவிச் சிங்காரித்து திருப்திப்படுத்தும் விதமாகவே அமைந்துள்ளன.

## சந்திக்கு வராத சங்கதிகள்

நக்கீரன்

அக்டோபர் 07ம் திகதி நாடாளுமன்றத்தில் சமவாய்ப்புச் சட்டத்தை சமர்ப்பிக்கப்போவதாக கூறிவிட்டு, பின்னர் மடக்கி இழுத்து வைத்து விட்டார்கள்.

இது ஏதோ தற்செயல் நிகழ்ச்சியல்ல. நீதிய மைச்சர் நாட்டில் இல்லாததுதான் சட்டம் சமர்ப்பிக் கப்படாமைக்கு காரணம் என்பது நம்பத் தகுந்த காரணம் அல்ல.

அதுதான் உண்மையானால் பிறிதொரு தினத் தில் சமர்ப்பித்திருக்கலாம்தானே. ஆனால் நடந்தி ருப்பது என்ன?

சமவாய்ப்புச் சட்டத்தை மறுபடி ஆய்வு செய்ய அமைச்சர்கள் கொண்ட குழு நியமிக்கப்பட் டுள்ளது!

அப்படியானால் எப்படி 7ம் திகதி சமர்ப்பிக்க இருந்தார்? திருத்தப்பட வேண்டிய சட்டத்தை எப்படி முன்வைக்க முன்வந்தனர்?

எல்லாமே நாடகம்தான் ஐயா! முன்வைப்பது போல ஒரு போக்குக்காட்டி பேரினவாத சக்தி களின் நாடித்துடிப்பை அறிந்தனர்.

ஆளும் தரப்புக்குள் சிலரே வீரவிதான போன்றவற்றைத் தாண்டிவிட்டனர். ஆர்ப்பாட்டம், ஊர்வலம் எல்லாம் கச்சிதமாக நடந்தன.

அதன்பின்னர் சட்டத்தை மீள ஆய்வு செய்ய குழு போடப்படுவதாக அரசாங்கம் சமர்த்துப் பிள்ளையாக அறிவிப்புச் செய்தது.

வீரவிதான ஒரு பொருட்டல்ல என்றால், வேறு யாருக்காக இப்போது மீள் ஆய்வுக் குழு நியமித்துள்ளனர்?

வீரவிதானாவின் குரலுக்கு ஆட்சியில் மதிப் புண்டு என்பதற்கு மீள் ஆய்வுக்குழு நியமனம் தக்க சான்று.

பிள்ளையையும் கிள்ளி தொட்டிலையும் ஆட்டி விட்டிருக்கிறது அரசாங்கம்.

இது புரியாமல் அரசாங்கம் நல்லதோர் வினை செய்ததாகவும், பேரினவாதிகள் அதனைப் புழுதியில் எறிந்ததாகவும் புலம்புவோரும் நமக்குள் உள்ளனர்.

-★-

இந்தியாவின் பாதுகாப்பு அமைச்சராக மறு படியும் ஜோர்ஜ் பெர்னாண்டஸ்தான் பொறுப் பேற்றுள்ளார்.

இலங்கை அரசுக்கு வயிற்றில் புளி கரைக்க இந்த ஒரு செய்தி போதும்.

புலிகளது கடற்போக்குவரத்தில் இந்தியக் கடற்படை தலையீடு செய்வதை பெர்ணாண்டஸ் அனுமதிக்க மாட்டார்.

இந்திய-இலங்கை கடற்படைகள் கூட்டு ரோந்து நடத்தவும் பாரதிய ஜனதா ஆட்சியில் பச்சைக்கொடி காண்பிக்கப்படமாட்டாது.

அரசியல் ரீதியாக இந்தியா, இலங்கை விவ காரத்தில் பகிரங்கமாகக் கருத்துக் கூறாது இருந்தா லும், புலிகளுக்கு மறைமுகமாக பல சாதகங்கள் உள்ளன.

### வாஜ்பாயும் வை.கோ.வும்

புலிகளது கப்பல்கள் சர்வதேசக் கடற்பரப்பில் சுதந்திரமாக வந்து போக ஒரு தடையும் இருக்காது.

அதேபோல புலிகளுக்கு எதிரான எத்தகைய உதவியையும் இந்திய அரசு செய்யப்போவதும் இல்லை.

தமிழ்நாட்டில் புலிகள் நடமாட்டத்தை குறைத் துக் கொண்டாலும், புதுடில்லியில் புலிகளது பிர முகர்கள் இராஜதந்திர நகர்வுகளில் ஈடுபடக் கூடும்.

இதையெல்லாம் விட, வை.கோ. ஊடாக இலங்கைத் தமிழர் பிரச்சனையை உலக அரங்குக்கு கொண்டு செல்ல இந்திய அரசு மறைமுகமாக உதவலாம்.

வை.கோ. இம்முறையும் அமைச்சர் பதவியை புறங்கையால் தட்டி விட்டுள்ளார். தனது கட்சியைச் சேர்ந்த ஒருவருக்கே வாங்கிக் கொடுத்திருக்கிறார்.

வை.கோ.வின் இந்த மனப்பாங்கு பிரதமர் வாஜ்பாயிடம் அவருக்கு மிக நெருக்கத்தை ஏற் படுத்தியுள்ளது.

வை.கோ. என்றால் பாரதிய ஜனதா தலைவர் கள் அனைவருமே பெரும் மரியாதை வைத்திருக் கிறார்கள்.

இந்த மதிப்பும், மரியாதையும் இலங்கைப் பிரச்சனை தொடர்பான வை.கோ.வின் கருத்துக்களையும் சபையேற வைக்கும்.

வை.கோ. அமைச்சரல்ல என்பதால், ஒரு எம்.பி. என்ற ரீதியில் சுதந்திரமாகச் செயற்படலாம். இலங்கைத் தமிழர் பிரச்சனை தொடர்பாக உலகின் கவனத்தைக் கவர இம்முறை வை.கோ. அதிக முயற்சி செய்ய உள்ளதாகவே அவருக்கு நெருக்க மான வட்டாரங்கள் கூறியுள்ளன.

தமிழக மக்கள்மீதும் வாஜ்பாய்க்கு அபிமானம் உண்டு. அமைச்சரவையிலும் அந்த அபிமானம் புலப்படும்விதமாக பிரதான இடம் கொடுத்தி ருக்கிறார்.

எனவே இலங்கைத் தமிழர்கள் விடயத்தில் தமிழக மக்கள், தமிழகத் தலைவர்கள் ஆகியோரது கருத்தையும், உணர்ச்சிகளையும் மீறி பாரதிய ஜனதா அரசு ஒருபோதும் செயற்படாது என்பது நூறுவீத உறுதி.

-★-

வன்னிக்கு உணவு லொறிகளை கூடுதலாக அனுப்பும்படி கோரிக்கை விடுக்கப்பட்டது. அதனை வன்னிப் படைத்தளபதி நிராகரித்துள்ளார்.

அதுமட்டுமல்ல குறிப்பிட்ட தினத்துக்குள் குறிப்பிட்ட லொறிகள் போக முடியாவிட்டால், மறு வாரம் அவை போகமுடியாதாம். இது அக்கிரமம்.

அடிக்கடி படை நடவடிக்கை இடம்பெறுவதால் குறிப்பிட்ட நாளில் லொறிகள் செல்ல முடியாது. எனவே வன்னி மக்களை அரைப் பட்டினி போடுவது தான் நோக்கமா?

கோணகல மக்களுக்கு தொடர்ந்து நிவாரணம் வழங்குமாறு ஜனாதிபதி நேரடியாக உத்தரவு.

வன்னி மக்கள் விடயத்தில் மட்டும் ஜனாதிபதி தலையிடார். இராணுவத்தினர்தான் தலையசைக்க வேண்டும். ஒரே நாடு ஒரே மக்கள். எல்லோரும் இந்நாட்டு குடிமக்கள்.



படிப்பகம்

www.padippakam.com

## உண்மைத் தொடர்

### அதிர் இடி 84

**கடந்தவாரம்**

**அமீனின் பெண்வேட்டை உகண்டா முழுக்க தெரிந்த விஷயமாகிறது. அமீனின் கண்களில் அழகான பெண்கள்பட்டால் அவர்களை படுக்கையறைக்குக் கொண்டுவந்தே தீருவான். அவர்களில் மனைவிகள் என்றும் காதலிகள் என்றும் சிலரை மட்டுமே நிரந்தரமாக வைத்துக்கொண்டான்.**

**இனி...**

# இடி அமீன்

கௌதா அமீனைச் சந்தித்தது நேர்முக பரீட்சை ஒன்றில்.

அமீனுக்கு செயலாளர்களாக வேலை செய்ய இரண்டு அழகான பெண்கள் தேவை என்னும் குறிப்பு புலனாய்வுத் துறைக்கு இரகசியமாக அனுப்பப்பட்டது.

அதற்கு முன்னரும் அழகிகள்தான் செயலாளர்களாக இருந்தனர். அவர்கள் அமீனுக்குத் திகட்டிவிட்டனர்.

**"எத்தனை நாளைக்குத்தான் அலுவலகத்தில் ஒரே பெண்களைப் பார்த்துக் கொண்டிருக்க முடியும்? புதிய புத்திசாலிப் பெண்கள், செழிப்பான ரகங்களில் தேவை!"** என்று புலனாய்வுப் பொறுப்பாளரிடம் வெளிப்படையாகவே கூறினான் அமீன்.

பெண்களின் மீது தனக்குள்ள ஆசையைக் கூறுவதற்கு அமீன் வெட்கப்பட்டது கிடையாது. மாறாக, பெருமையாக நினைத்தான்.

அதிகமான பெண்களை ஆண்டு அனுபவிப்பவனே ஆண்மகன், வீரியமுள்ள ஆண்மகன், என்று எல்லோரும் பிரமிப்பாக நினைக்க வேண்டும் என்று அமீன் விரும்பினான்.

அமீன் 'செயலாளர்கள் தேவை' என்றதுமே புலனாய்வுப் பிரிவு ஏனைய அமைச்சுக்களில் பணியாற்றும் நம்பகமான பெண்கள் பற்றி விபரம் சேகரித்தது.

புலனாய்வுப் பிரிவுப் பொறுப்பாளருக்க நன்கு அறிமுகமான குடும்பத்தைச் சேர்ந்தவள் கௌதா.

"அமைச்சுக்களில் உள்ள பெண்களை விட கௌதா திறமைசாலி. சகல விதத்திலும் திறமைசாலி" என்று அமீனுக்கு அறிமுகம் செய்து வைத்தான் புலனாய்வுப் பொறுப்பதிகாரி.

அமீன் அவளை நேர் முகத்தேர்வு நடத்தினான்.

**"உனக்குப் பிடித்த தலைவர் யார்?"** என்று கேட்டான்.

அவள் சிறிதும் யோசிக்காது, சிறிதும் தாமதிக்காது, **"நீங்கள்தான்!"** என்றாள்.

**"உனக்குப் பிடித்த தலைவருக்காக நீ என்ன செய்வாய்?"** என்று இடக்காகக் கேட்டான்!

அவளும் மிகத் தைரியமாய் நெஞ்சு நிமிர்த்திக் கூறினாள்: "என்ன வேண்டுமானாலும் செய்வேன்!"

அமீன் அவளைத் தின்பதுபோலப் பார்த்துக் கொண்டே கூறினான், **"இன்று முதல் என் செயலாளரில் நீயும் ஒருத்தி!"**

அமீனின் செயலாளர் என்றால் சும்மாவா? கைநிறையச் சம்பளம். சலுகைகள். மரியாதை.

கௌதாமீது அமீனின் கைகள் மெல்ல மெல்ல நீண்டன. அவளது திறமையைப் பாராட்டும் சாக்கில் முதுகில் தட்டினான். பின்னர் முதுகை வருடினான். அவள் வெட்கப்பட்டாள்.

மறுநாள் அவளது பின்புறத்தில் தட்டிச் சிரித்தான். அவள் எதிர்ப்பின்றி, முகச் சுளிப்பின்றிச் சிரித்தாள்.

அமீன் நினைந்திருந்தால் அவளை ஒரே நாளில் கட்டிலில் தூக்கி எறிந்திருக்க முடியும்; தன் ஆசைக்கு தீனியாக்கி இருக்க முடியும்.

ஆனால் கௌதா விஷயத்தில் அமீன் அப்படிச் செய்ய எண்ணவில்லை. தன் பலத்தால் அவளை அடையாது, தன் சாகசம் மூலம் வீழ்த்த எண்ணினான்.

தானாகக் கனிந்து தன் மடியில் விழுந்தபின்னர் அமீன் சுவைக்க விரும்பிய கனிகளில் கௌதாவும் ஒருத்தி.

கௌதா அமீனின் ஆசைக்கு இணங்கினாள். அவளிடம் சில கேள்விகள் கேட்டான் அமீன்.

**"என்னிடம் ஏன் உன்னைத் தருகிறாய்? என் அதிகாரத்துக்காகவா?"**

"இல்லை!"

**"என் விருப்பத்தை மறுத்தால் விரோதத்தைச் சம்பாதிக்க வேண்டுமே என்பதாலா?"**

"இல்லை!"

**"பின்னே ஏன்?"** என்றான் அறியும் ஆவலோடு.

இதுவரை வேறு எந்தப் பெண்ணும் கூறாத காரணத்தை கௌதா அமீனிடம் கூறினாள்.

"உங்கள் கருவை சுமக்க வேண்டும் என்று எனக்கு ஆசை! உலகில் சிறந்த ஆண்மகன் நீங்கள்தான். உங்கள் உடலை சுமந்து பார்க்கவும் ஆசைப்பட்டேன்!"

அமீனுக்கு அவளை அப்படியே கடித்துத் தின்ன வேண்டும்போல ஆசை எழுந்தது. இறுக அணைத்துக் கொண்டான்.

கௌதா கருவுற்றாள். அவளுக்கு பிரசவ விடுமுறை கேளாமலேயே கிடைத்தது. ஏனைய காதலிகளைவிட கௌதா அமீனிடம் அதிக உரிமை எடுத்துக் கொண்டாள்.

அமீனுடன் நேருக்கு நேராகத் துணிந்து பேசக்கூடியவளும் அவள்தான். அவளது புத்திசாலித்தனத்தினாலும், அவள் தன்னிடம் கொண்டுள்ள அளவற்ற ஆசையை எண்ணி மகிழ்ந்ததாலும், அவளை அமீன் செல்லக் காதலியாக நடத்தினான்.

கௌதா இரட்டைக் குழந்தைகளைப் பெற்றெடுத்தாள்.

அமீனின் மனைவியரிலும், காதலிகளிலும் முதன் முதலில் இரட்டைக் குழந்தைகள் பெற்றவள் கௌதாவேதான்.

இரட்டைக் குழந்தை பிறப்பதற்கும் ஆண்மைக்கும் எவ்வித தொடர்பும் கிடையாது. ஆனால் அமீன் தனது திறமையால்தான் இரட்டைக் குழந்தை பிறந்ததாக தம்பட்டம் அடிக்க ஆவலுற்றான்.

கௌதாவை தன் மனைவி என்று பகிரங்கமாக அறிவிக்காத போதும் தனக்கு இரட்டைக் குழந்தைகள் பிறந்துள்ளதாக பகிரங்கமாக அறிவித்தான்.

இரட்டைக் குழந்தைகளுக்கு பள்ளிவாசலில் வைத்து பகிரங்கமாக பெயர் சூட்டுவிழாவும் நடைபெற்றது.

அரச வானொலி, தொலைக்காட்சி, பத்திரிகைகள் யாவற்றிலும், அமீனுக்கு இரட்டைக் குழந்தைகள் பிறந்த செய்தியே பெரிதாக வெளியாகியது.

உகண்டா பெண்கள் எல்லோரும் தன் திறமையை எண்ணி தூக்கமின்றித் துடிக்கப் போகிறார்கள் என்று தனக்கு நெருக்கமானவர்களிடம் கூறிக்கூறி அமீன் புளகாங்கிதம் அடைந்தான்.

இரட்டைக் குழந்தைகள் பிறந்ததாகச் செய்திகள் கூறப்பட்டபோதும், அந்தக் குழந்தைகளது தாய் பற்றி எவ்விதக் குறிப்பும் கூறப்படவில்லை.

அமீனுக்குப் பல மனைவியர் இருப்பது மக்களுக்குத் தெரியும் என்பதால், அவர்களில் ஒரு மனைவிக்குப் பிறந்திருக்கலாம் என்று நினைத்துவிட்டனர்.

தன்னைப் பற்றி எதுவும் குறிப்பிடாதது கௌதாவுக்கு வருத்தமாக இருந்தது. அதனை அவள் வெளியே காட்டிக் கொள்ளாது இருந்துவிட்டாள்.

ஆனாலும் தனது பெயரை கௌதா அமீன் என்று வெளிப்படையாகக் கூறத் தொடங்கிவிட்டாள்.

அமீனின் மனைவியரிலும், காதலிகளிலும் அமீனின் பெயரைத் தன் பெயருடன் இணைத்து அழைத்துக் கொண்ட முதலாவது தைரியசாலியும் கௌதாதான்.

கௌதாவுக்கும் அமீனுக்கும் இடையேயான உறவு நீண்டகாலம் நிலைக்கவில்லை. அமீனது போக்குகளோடு கௌதா விரைவாக பிணக்குப் பட ஆரம்பித்தாள்.

அவள் கண்முன்னாலேயே இன்னொரு பெண் செயலாளருடன் அமீன் கட்டிப் பிடித்து சல்லாபித்தான். அவளால் இதனைப் பொறுக்க முடியவில்லை.

"இன்னமும் பெண்கள் தேவைதானா? இனிமேலாவது இந்தத் தாவுதலை நிறுத்தலாமே?" என்று கேட்டாள்.

தன் கோபங்களை, அருவருப்பை உள்ளே மறைத்துக் கொண்டு நிதானமாகத் தான் அக் கேள்வியைக் கேட்டாள் கௌதா.



**தருவது ரசிகன்**

அமீன் கூறிய பதில் அவளது பொறுமைக்கு வேட்டு வைத்தது.

**"சாகும்வரை கட்டிலில் சல்லாபித்துக் கொண்டே இருப்பேன். அதற்கு தோதாக அவ்வப்போது புதுப் புதுத் துணையும் தேடிக் கொண்டிருப்பேன். என் அனுமதியின்றி என் தனிப்பட்ட படுக்கையறைக்கு நீ வந்தது தவறு. அதனால்தான் என்னை இன்னொருத்தியோடு பார்க்கக்கூடாத கோலத்தில் பார்த்துவிட்டாய். இனிமேல் இப்படிப் பார்க்காதே. உனக்குரிய இடத்தில் நீ இருந்துகொள்!"** என்று சொல்லிவிட்டு அலட்சியமாகக் சிரித்தான்.

அந்தச் சிரிப்பு அவளுக்கு முகத்தில் அறைந்தது. தன்னை அமீன் பயன்படுத்திவிட்டு குப்பையில் தூக்கி எறிந்ததுபோல அவமானமாய் உணர்ந்தாள்.

மறுநாள் ஒரு தீர்க்கமான முடிவோடு அமீனைச் சந்தித்தாள்.

"நான் தனியாகப் போகலாம் என்று நினைக்கிறேன்!" எனக் கூறினாள். அமீன் கோபத்தில் துள்ளிக்குதிப்பான். ஒருவேளை எட்டி உதைப்பான் என்றெல்லாம் கௌதா நினைத்திருந்தாள்.

ஆனால் அமீன் அவள் நினைத்ததுக்கு நேர்மாறாக, அவளை ஒரு தினுசாகப் பார்த்துக் கொண்டே, **"உன் விருப்படி செய்ய உனக்கு உரிமை தருகிறேன்!"** என்று ஏதோ பிச்சை போடுபவன்போல கூறினான்.

"அப்படியானால் மிக்க சந்தோசம். இன்றே நான் புறப்படலாம் அல்லவா?" என்று கேட்டாள்.

**"ஆம்! ஆனால் என் குழந்தைகளை அழைத்துப்போக அனுமதி கிடையாது. அமீனின் குழந்தைகள் அநாதைகளாகக் கூடாது!"** என்று கண்டிப்பான குரலில் கூறினான்.

அவள் சற்று யோசித்துவிட்டு "ஒரு குழந்தை உங்களோடு இருக்கட்டும். இன்னொன்றை நான் எடுத்துப் போகிறேன்!" என்றாள்.

அமீன் மிகத் திடமான, கறாரான குரலில், **"அது மட்டும் முடியாது!"** என்று கூறிவிட்டு, அவள் அங்கிருந்து போகலாம் என்பதற்கு அடையாளமாக கையால் சைகை செய்தான்.

கௌதா தன் பிள்ளைகளை ஜனாதிபதி மாளிகை விடுதியில் ஒப்படைத்துவிட்டு, கொஞ்சநேரம் அழுதாள். பின்னர் புறப்பட்டாள்.

கௌதாவுக்கு அமீன்மீது கடும் வெறுப்பும், கசப்பும் கைகோர்த்துக் கொண்டு நின்றன. என் பிள்ளைகளைப் பிரித்துவிட்டானே சண்டாளன், என்று திட்டித் தீர்த்தாள்.

அமீனைவிட்டு கௌதா பிரிந்து விட்டாள் என்றதும், அவளை சில செய்தி முகவர்கள் இரகசியமாகத் தொடர்பு கொண்டனர்.

வெளிநாட்டு செய்தி நிறுவனங்களுக்கு உகண்டாவில் இருந்து மிக இரகசியமாக செய்திகளை அனுப்புபவர்கள் அவர்கள்.

"அமீனைவிட்டுப் பிரிந்தது ஏன்?" என்று கௌதாவிடம் கேள்விகளால் ஒரு குட்டி யுத்தமே நடத்திவிட்டார்கள்.

கௌதா அமீன்மேல் இருந்த கோபத்தில் துணிந்து கூறினாள்:

"கட்டுக்கடங்காத பாலியல் தாகம் கொண்டவன் அமீன். பல பெண்களுடன் உறவு கொள்ள தவியாய் தவிப்பவன். ஒரே நேரத்தில் பல பெண்களுடன் உறவு கொள்வதிலும் இன்பம் காண்பவன். சுருக்கமாகச் சொன்னால் செக்ஸ் மிருகம்." என்று அமீனைப் பற்றிக் கூறியிருந்தாள் கௌதா.

கௌதாவின் விவரிப்பு உலக செய்தி நிறுவனங்களுக்கு தித்திப்பான செய்தி. உலகெங்கும் சுடச்சுட வெளியாகின. உகண்டாவில் மட்டும் அச் செய்தி வெளியாகவில்லை. உகண்டாவில் வெளிநாட்டு வானொலிகள் கேட்கும் ஒரு சாரார் மட்டுமே அச் செய்தியை அறிந்தனர்.

அமீனின்மீது இருந்த பயம் காரணமாகவே உகண்டா செய்தி நிறுவனங்கள் அதனை வெளியிடாது இருந்தன.

ஆனால், அமீனின் விருப்பமோ வேறு விதமாக இருந்தது.

வெளிநாடுகளில் வெளியான செய்தி பற்றி தூதரகங்கள் ஊடாக உடனடியாக அமீன் அறிந்து கொண்டான்.

அவ்வாறிருந்தும் கௌதாமீது அமீனுக்குக் கோபம் வரவில்லை. தன் ஆண்மையைப் பற்றி உலகறிய பிரசாரம் செய்துள்ளாள் என்று நினைத்து சந்தோசப்பட்டான்.

அதனால் அமீனிடம் இருந்து சென்ற உத்தரவு செய்தி தொடர்பு துறைஅமைச்சைக் குழப்பிவிட்டது.

**"கௌதா கூறியதாக வெளிநாடுகளில் வெளியான செய்தியை அரச செய்தி ஊடகங்களில் வெளியிட ஏற்பாடு செய்க!"** என்பதுதான் அமீனின் உத்தரவு.

அதன்படியே செய்தி ஒலிபரப்பான போது, உகண்டாவில் ஆட்சி மாறிவிட்டதோ, என்று செய்தி கேட்டவர்கள் குழம்பினார்கள்.

அமீனின் விசுவாசிகளும் ஏதோ தவறு நிகழ்ந்துவிட்டதாக பதறியடித்தனர்.

அத்தனையையும் அமீன் இரசித்தான். அடுத்து இன்னொரு விசித்திரமான உத்தரவையும் வெளியிட்டான். **(இடி தொடரும்)**

## அரபாத் மணவாழ்வில் விரிசல்

**பா**லஸ்தீனிய மக்களது தலைவர் யசீர் அரபாத். 1990இல் சோகா என்னும் இளம் பெண்ணை அரபாத் காதல் மணம் புரிந்து கொண்டார். தற்போது சோகாவுக்கு வயது 36. அரபாத்தின் வயது 70.

அரபாத்-சோகா தம்பதிக்கு 1995 இல் மகள் பிறந்தார். 'ஜக்வா' என்று பெயரிட்டனர்.

அரபாத் 24 மணிநேரமும் அரசியலில் இருப்பவர். தூங்கும் நேரம் தவிர ஏனைய நேரங்களில் அரசியல்தான். சோகாவை



காதலித்ததும், கைப்பிடித்ததும் யாரும் நம்பமுடியாத அதிசயமாக இருந்தது.

கடந்த ஒன்பது ஆண்டுகால அரபாத், சோகா மணவாழ்க்கையில் தற்போது விரிசல் ஏற்பட்டுள்ளது.

சோகா ஆடம்பரமாக வாழ எண்ணுகிறார். தன்னோடும், தன் குழந்தையோடும் அரபாத் குறிப்பிட்ட நேரத்தை செலவிட வேண்டும் என்று எதிர்பார்க்கிறார்.

ஆனால் அரபாத்தோ நள்ளிரவு தாண்டித்தான் தினமும் வீடு திரும்புகிறார். குழந்தை ஜக்வா அரபாத்தின் முகத்தைப் பார்ப்பதே அரிது. வானத்தில் விமானம் பறக்கும்போது 'அதோ அப்பா வருகிறார்' என்று குழந்தை ஜக்வா குதூகலிப்பாளாம்.

வசிப்பதற்கு நல்ல வீடு தேவை என்று தமது வீட்டை மாடிவீடாக கட்டினார் சோகா. தரைக்கு பளிங்குக் கற்கள் பதிப்பித்தார்.

ஆனால் அரபாத் கீழே தரையில் உள்ள தளத்தில் சிறிய அறையில்தான் தொடர்ந்து படுத்து உறங்கினார்.

அரபாத்தின் பின்னர் தனது எதிர்காலமும், குழந்தையின் எதிர்காலமும் கருதி பெரும் நிதியை தருமாறு அரபாத்திடம் சோகா கோரினார்.

தருவதாகக் கூறிய அரபாத் தாமதப் படுத்திக் கொண்டிருந்தார். இவ்வாறு பல காரணங்களால் இருவருக்கும் இடையே மன விரிசல் வளர்ந்தது.

கடந்த ஏப்ரல் மாதம் தனது குழந்தையுடன் அரபாத்தின் வீட்டைவிட்டு வெளியேறினார் சோகா.

இப்போதுவரை அவர் எங்கிருக்கிறார் என்பது மர்மமாகவே உள்ளது. அரபாத்தின் 70வது பிறந்தநாள் வைபவத்திலும் சோகா கலந்துகொள்ளவில்லை. சோகாவின் தாயாரும், தந்தையும் மட்டுமே கலந்து கொண்டனர்.

"அரபாத் தனது இளம் மனைவியின் அடிப்படைத் தேவைகளைக்கூடப் பூர்த்தி செய்யவில்லை. அரசியல்தான் அவருக்கு எல்லாமும் என்றால் அவர் திருமணமே செய்திருக்கக் கூடாது." என்று பலரும் கூறுகின்றனர்.

இதற்கிடையே லெபனான் நாட்டு தொழில் அதிபரான பியர் ரிஸ்க் என்பவருக்கும் சோகாவுக்கும் இடையே உள்ள நட்புப் பற்றியும் பல்வேறு விதமான தகவல்கள் கூறப்படுகின்றன.

"இது அரபாத்தின் எதிரிகள் வேண்டுமென்றே கட்டிவிட்ட கதை. அரபாத்தின் புகழுக்கு இப்படிக் களங்கம் கற்பிக்க முயல்கிறார்கள்." என்று அரபாத்தின் ஆதரவாளர்கள் கூறுகிறார்கள்.

அரபாத்திற்கு நெருக்கமான தலைவர்கள்கூட சோகாவை விரும்பவில்லையாம். அரபுப் பெண்போல பாரம்பரிய முறைப்படி சோகா வாழ மறுத்ததால் அவரை எதிரியாக நினைக்கிறார்கள்.

கிறிஸ்தவ மதத்தவரான சோகா அரபாத்தை மணந்தபின்னர் முஸ்லிம் மதத்துக்கு மாறினார்.

"சோகா தற்போது எங்குள்ளார் என்பது அவரது கணவருக்குத் தெரியும்" என்று சோகாவின் தாயார் கூறியிருக்கிறார்.

## காதல் கொலை

∴**பி**ரான்ஸ்நாட்டில் பாட்ரிக் டாயல் என்பவருக்கு ஒரு காதலி இருந்தார். காதலியின் பெயர் பேச்சர்.

தன்னுடைய காதலியான பேச்சருக்கு புதியதொரு காதலன் கிடைத்திருப்பதாகக் கருதினார் பாட்ரிக். இரகசியமாகக் கண்காணித்ததில் சந்தேகம் உண்மை என்பது உறுதியானது.

கொதித்துப் போன பாட்ரிக் பேஸ்போல் மட்டையால் தனது காதலியையும், அவளது காதலனையும் அடித்துக் கொன்று விட்டார்.

இதில் உள்ள விஷயம் யாதெனில், பாட்ரிக்கின் வயது எண்பது. காதலியின் வயது எழுபத்தேழு!

## அங்கு அதிகம்



**உ**லகிலேயே பெண்கள் மிக அதிகமாகப் பாதிக்கப்படுவது தென்னாபிரிக்காவில்தான். கடந்த ஆண்டு மட்டும் அங்கு 50 ஆயிரம் பெண்கள் பாலியல் வல்லுறவுக்கு உள்ளாகினர்.

இத்தகைய கொடுமைகளுக்கு உள்ளாகும் பெண்களுக்கு உதவுவதற்கு தென்னாபிரிக்க அரசிடம் பணம் இல்லை. இதனால் பாலியல் வல்லுறவால் பாதிக்கப்படும் பெண்களுக்கு உதவ காப்புறுதித் திட்டம் ஒன்றை தென்னாபிரிக்க அரசு ஆரம்பித்துள்ளது.

இந்த காப்புறுதி நிறுவனத்தை நடத்தும் பொறுப்பு தனியார் நிறுவனம் ஒன்றிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது

## நுளம்பின் ருசி

**ப**த்துப்பேர் ஒரே இடத்தில் அமர்ந்திருக்கிறார்கள். நுளம்பு ஒன்றோ அல்லது பலவோ வந்து உங்களை மட்டும் கடிக்கிறது. 'ச்சே என்ன இப்படி... நான் மட்டும்தான் இளிச்சவாயனா?' என்றுதானே தோன்றுகிறது.

"அப்படி இல்லை", என்கிறார் மியாமியைச் சேர்ந்த ஆராய்ச்சியாளரும் பேராசிரியருமான ஜெர்ரி பட்லர்." உங்கள் உடம்பில் கொழுப்பும், விட்டமின்களும் நிறைய இருக்கின்றன என்று அர்த்தம். நாம் எப்படி சத்தான மற்றும் சுவையான உணவைத் தேடி உண்கிறோமோ அதே போலத் தான் நுளம்புகளும், அவை நல்ல சத்தான மற்றும் ருசியான இரத்தத்தைத் தேடி உறிஞ்சும்" என்றும் விளக்கமளிக்கிறார் அவர்.

இப்படி ஒரு நல்ல ருசியான உணவை 64.3 கிலோமீட்டர் தூரத்தில் இருந்தே உணர்ந்து கொள்ளும் ஆற்றல் அவைகளுக்கு உள்ளதாகவும் வேறு பயமுறுத்துகிறார் பட்லர்.

நல்ல ஆரோக்கியமாக இருப்பதில் கூட எத்தனை இடைஞ்சல் பாருங்கள்.

## முத்தச் சிக்கல்



**இ**ந்தியாவின் பிரபல பத்திரிகையாளர் குஷ்வந்த்சிங் ஜாலியான ஆசாமி. நாடாளுமன்ற உறுப்பினராகவும் இருந்தவர்.

அரசியல் முதல் பாலியல்வரை சிறப்பாக அலசுபவர். பெண்கள் என்றால் தனக்குப் பிடிக்கும் என்று வெளிப்படையாகவே கூறுபவர். இப்போது இவருக்கு வயதானாலும் குறும்புகளுக்கு குறைச்சலில்லை.


தற்போது சர்ச்சை ஒன்றில் மாட்டியிருக்கிறார். பாகிஸ்தான் தூதரின் மகளை விழா ஒன்றில்வைத்து கன்னத்தில் முத்தமிட்டார் குஷ்வந்த்சிங்.

இந்த முத்த விடயம் படத்தோடு பாகிஸ்தான் வரை போய்விட்டது. 'முத்தமிடலாமா? இதனை அனுமதிக்கலாமா?' என்று பாகிஸ்தான் பத்திரிகைகள் சர்ச்சை கிளப்பிவிட, விவகாரம் பெரிதாகிவிட்டது.

"நான் எத்தனையோ பெண்களுக்கு ஆசையோடு முத்தமிட்டிருக்கிறேன். அப்போதெல்லாம் பிரச்சனை வரவில்லை. இப்போது அன்போடு முத்தமிட்டதுதான் பிரச்சனையாகிவிட்டது" என்று கூறுகிறார் குஷ்வந்த்சிங்.

www.padippakam.com

# நின்றால் பார்க்கலாம்




சிலருக்கு வாகனத்தில் போகும்போது கிரிக்கெட், உதைப்பந்தாட்டம் போன்ற விளையாட்டுக்களைப் பார்க்க ஆசைவரும்.

இப்போது வாகனங்களுக்குள் பொருத்தக்கூடிய ரி.விக்கள் இருப்பதால், அதனைப் பார்த்துக்கொண்டே வாகனம் செலுத்தி விபத்துக்களை உருவாக்குகிறார்கள்.

இதனைத் தடுக்க புதுவிதமான ரி.வியை இஸ்ரபிள் நிறுவனம் தயாரித்துள்ளது.

காரை நிறுத்தி 'ஹேண்ட் பிரேக்' போட்டால் மட்டுமே இந்த ரி.வி இயங்கும். ஓடிக்கொண்டே பார்க்க ஒத்துழைக்காது. சமர்த்தான ரி.வி.

# இதுவும் சாய்ந்தது



சாய்ந்த கோபுரம் இருப்பது இத்தாலியில் உள்ள பைசா நகரில் என்பது தெரியும். இங்கு நீங்கள் காண்பதும் சாய்ந்த கோபுரம் தான். என்ன ஆச்சரியமாக இருக்கிறதா?!

இந்த சாய்ந்த கோபுரம் இருப்பது மலேசியாவில். அங்கு தெலுக் இன்டான் என்னும் நகரில் இருக்கிறது.


எட்டு அடுக்குமாடிகள் இதில் உள்ளன. 1885 இல் சியோங் ஆன் சோல் என்னும் பண முதலையால் இது கட்டுவிக்கப்பட்டது. 84 அடி உயரத்தில் சீன கட்டடக் கலைக்கு ஏற்ப கட்டப்பட்டுள்ளது. கோபுரத்தில் விலை உயர்ந்த கற்கள் பொறிக்கப்பட்டுள்ளன. ஏழாவது மாடியில் சுவர் கடிகாரம் உள்ளது.

1889 முதல் 1895 வரை இக் கோபுரம் சரிய ஆரம்பித்தது. ஒரு அடி அளவு சரிந்தது. ஆனால் அதன்பின்னர் சாயவே இல்லை. அருகே சென்று உற்றுப் பார்த்தால் மட்டுமே சாய்வு தெரியுமாம். இது சுற்றுலா மையமாக உள்ளது.

# உறுதி

கைகள் இல்லாத சின்னம் சிறுவன். ஊனம் உடலில்தான். மனதில் கோணல் இல்லை. அதனால் இந்த சின்ன வயதிலேயே கைகள் இல்லாத குறையை கால்களைப் பயன்படுத்தி தீர்த்துக்கொள்கிறான்.

கால்களை கைகள் போலவே இலாவகமாக இயக்க கற்றுக் கொண்டுள்ளதால், தன் வேலைகளைத் தானே செய்கிறான். மனதில் உறுதி இருந்தால், சோதனைகள் தூசுதானே!



# புதுமையான கல்லறை

மிலேனிய ஆண்டில் கம்பியூட்டர்கள்தான் எங்கும் புகுந்து விளையாடப் போகின்றன.

இதனை நன்கு உணர்ந்த ஃபிரான்ஸ் நாட்டு குடிமகன் ஒருவர் தனது கல்லறையில் கம்பியூட்டர் ஒன்றையும் வைத்திருக்கிறார். அந்த கம்பியூட்டரில் தன்னைப்பற்றிய விபரங்களை ஆதியோடு அந்தமாய் பதித்து வைத்திருக்கிறார். இன்னமும் இவர் மரணத்தை தழுவவில்லை என்பதால் இறந்த திகதி மட்டும் பூர்த்தியாக்கப் படாமல் உள்ளது.




இவர் செத்தபின்னர் இவரது சந்ததி வந்து கம்பியூட்டர் பட்டனைத் தட்டினால் போதும், இவரது வரலாற்றை புட்டுப் புட்டு வைக்கும்.

முதன் முதலில் கல்லறையில் கம்பியூட்டர் நிறுவிய மனிதர் இவர்தான். இதனால் கின்னஸில் கூட இவரது பெயர் இடம்பெறலாம்.

கருவில் உள்ள குழந்தை ஆணா பெண்ணா என்பது முதல் கல்லறையில் உள்ளவரது ஜாதகத்தை அறிவது வரை கம்பியூட்டர் பயன்படுகிறது.

# தகவல் பெட்டி

# பெரிய்ய்ய் கேக்



இங்கு படத்தில் உள்ளதுதான் உலக மகா ஐஸ்கிரீம் கேக். இதனை துபாயில் உள்ள ரொபின்ஸ் நிறுவனம் தயாரித்துள்ளது. இதற்கு முன்பு 7.85 தொன் ஐஸ்கிரீம் கேக் உலக சாதனையாக இருந்தது. அதனை முறியடித்து விட்டது இந்த மகா கேக். எனினும் இக் கேக்தான் உலக சாதனை கேக் என்று கின்னஸில் இதுவரை பதிவு செய்யப்படவில்லை.



# பாய்மர நடனம்

உயிருக்கு அஞ்சாத நடனம் இது. கப்பலின் பாய்மரங்களில் ஏறி நின்று கை கோர்த்தபடி களிப்பு நடனம் ஆடுகிறார்கள். நல்லவேளையாக யாரும் நழுவி விழவில்லை.

'டி கொலம்பியா' என்னும் இக் கப்பல் பழமையும், புதுமையும் கலந்து வடிவமைக்கப்பட்டது. கொலம்பியா கடற்படைக்குச் சொந்தமானது.

160 பேருடனும் 11 அதிகாரிகளுடனும் 192 நாட்கள் பயணம் செய்து கனடாவின் வான்கூவர் கடற்கரையில் உள்ள கனடா பிளேஸ் என்ற துறையில் நங்கூரமிட்டு நின்றது. அப்போதுதான் இந்த துணிச்சலான புதுமையான நடனம் ஆடப்பட்டது.



# நண்பன்

இந்தக் குட்டிக் குழந்தைக்கு கள்ளமற்ற நண்பன் இந்தக் குரங்கார்.

இருவரும் அன்போடு தழுவிக் கொள்கிறார்கள். பண்போடு பழகிக் கொள்கிறார்கள்.

அணைக்கும் கையில் கொலைவாள் இருப்பதும், முதுகில் குத்துவதும் மனிதரிடையே உள்ள குறுமதி. அது இந்தக் குரங்காரிடம் இருக்காது. கைமாறு கருதாத நட்பு இது.

www.padippakam.com



# கவிதாவுக்கு வந்த சோதனை நகைச்சுவை நடிகர்கள் போட்டி

அம்மா, அக்கா, அண்ணி போன்ற பாத்திரங்களில் நடித்து வருபவர் கவிதா.

தொலைக்காட்சித் தொடர்களிலும் நடித்து வருகிறார். குடும்பம் தொலைக் காட்சித் தொடரில் கொள்ளைக்கூட்டத் தலைவி போன்ற கம்பீரமான பாத்திரம்.

கவிதா இயல்பாகவே கம்பீரமான தோற்றம் உள்ளவர். இதனால் இயக்குநர்கள் மட்டுமன்றி சில நடிகர்களுக்கும் கவிதாமீது சபலம் உண்டு.

இளம் கதாநாயகிகளைவிட கவிதா போன்ற நடுத்தர வயது நடிகைகள்மீது சில கதாநாயகர்களுக்கும், நடிகர்களுக்கும் ஆசை அதிகம்.

'குடும்பம்' தொலைக்காட்சித் தொடரில் நடித்தபோது கவிதாவுக்கும், வடிவுக்கரசிக்கும் இடையே கௌரவப் பிரச்சனை.

இயக்குநரைக் கைக்குள் போட்டுக் கொண்டு கவிதா முக்கியத்துவம் பெற்று விட்டதாக வடிவுக்கரசி குமுறினார்.

"கவிதாவின் பாத்திரத்தை பெரிதுபடுத்தினால் நான் தொடர்ந்து நடிக்கமாட்டேன்" என்றும் வடிவுக்கரசி கூறிவிட்டார்.

அத்தோடு விடவில்லை 'குடும்பம்' இயக்குநரின் மனைவிக்கு போன் செய்து "உனது கணவனை கவிதா மயக்கிவிட்டாள். படுக்கையில் விழ்த்திவிட்டாள். நீ ஏமாறப்போகிறாய்" என்று எச்சரித்துள்ளார் வடிவுக்கரசி.

இயக்குநருக்கும் கவிதாவுக்கும் இடையே நெருக்கம் இருந்தது உண்மைதான். எனினும் அதற்காக கவிதாவுக்கு முக்கியத்துவம் கொடுக்கவில்லை. கதைப்படி அந்தப் பாத்திரம் காத்திரமாக இருந்தது.

இயக்குநரது மனைவியின் தலையீட்டால் கவிதாவின் பாத்திரம் குறைக்கப்பட்டது. எப்போதாவதுதான் கவிதா தலைகாட்டுகிறார்.

இதனையடுத்து கவிதா பத்திரிகைகளுக்கு ஒரு அறிக்கை விடுத்திருக்கிறார். அதில் வடிவுக்கரசியை மட்டுமல்ல, சில நடிகர்களையும் ஒரு பிடி பிடித்திருக்கிறார்.

"தெலுங்குப் பட கதாநாயகன் ஒருவர் என்னைச் சீண்டினார். நான் இணங்கிப் போகவில்லை. இன்னமும் ஒரு கணவரோடு தான் இருக்கிறாயா? என்று கேட்டார் அந்தக் கதாநாயகன்.

"ஆம், ஒரே கணவரோடுதான் இருக்கிறேன். ஒரு பிள்ளையும் இருக்கிறது. நான் மற்றவர்கள் போல இல்லை" என்று முகத்தில் அடித்தது போலக் கூறிவிட்டேன்.

சில நடிகைகள் போன்று எப்படியும் வாய்ப்புத் தேட எனக்குத் தெரியாது. என்னைப் பற்றி நாக்கில் நரம்பு இல்லாமல் பழி சொல்கிறார் வடிவுக்கரசி! என்று கூறியிருக்கிறார் கவிதா.

இப்படிக் கூறியுள்ள கவிதாவுக்கு சோதனை மேல் சோதனை. இரண்டு நகைச்சுவை நடிகர்கள் இவர்மீது கண் வைத்தார்கள்.

## மிரட்டல்

ஒருவர் 'வேல்' நடிகர். இன்னொருவர் 'மணி'நடிகர். இருவரும் கவிதாவை தம் ஆசைக்கு இணங்குமாறு தொல்லை கொடுத்து வந்திருக்கின்றனர். கவிதா இருவரையும் தவிர்த்து வந்தார்.

அவர்கள் விட்டபாடில்லை. 'வேல்' நடிகர் தன் பணபலத்தைக் காட்டி பணிய வைக்க முயற்சி செய்தார். 'அம்பிக' நடிகையின் பின்னால் சுற்றியவர் 'வேல்' நடிகர். 'அம்பிக' நடிகை திருமணமாகிப் போய்விட்டதால் கவிதாமீது கண்வைத்தார்.

'வேல்' பக்கம் போகவேண்டாம் என்று தூது மேல் தூதுவிட்டார் 'மணி'நடிகர். இருவரில் ஒருவரையாவது அனுசரித்தால்தான் தொல்லை இன்றி இருக்க முடியும். இல்லாவிட்டால் நிம்மதியாக இருக்க விடமாட்டார்கள் என்பதால், 'மணி' நடிகரின் அழைப்பை ஏற்றார் கவிதா.

இதனை அறிந்த 'வேல்' நடிகர் "நான் யார் என்று காட்டுகிறேன் பார்" என்று கறுவிக்கொண்டு திரிகிறார். "'வேல்' நடிகரின் மிரட்டலுக்கு பயப்பட வேண்டாம். நான் பார்த்துக் கொள்கிறேன்' என்று தைரியம் கொடுத்திருக்கிறார் 'மணி' நடிகர்.

'சுத்தமாக இருக்க நினைத்தாலும் விடமாட்டார்கள். யாராவது ஒரு நடிகனுக்கு பணிந்துதான் போகவேண்டும். அதுதான் நம் தலைவிதி" என்று தனக்கு நெருக்கமானவர்களிடம் புலம்புகிறார் கவிதா.

'சுயம்வரம்' படத்தில் நடித்தபோது எஸ்.எஸ்.சந்திரனும் கவிதாவுக்கு தொல்லை கொடுத்தாராம். படம் முடியும்வரை சந்திரனின் இம்சைகளை தாங்கிக் கொண்டிருந்தாராம்.

## அமெரிக்க தொழில் அதிபர்

சூப்பர் ஸ்டார்' படம் இரண்டில் அடுத்தடுத்து கதாநாயகியாக நடித்த ஐந்தெழுத்து நடிகை அவர்.

தற்போது அமெரிக்கத் தொழில் அதிபர் ஒருவருடன் நகமும் சதையுமாக இருந்து வருகிறார்.

வெளிநாட்டு தொழில் அதிபர்களை நடிகைகள் நாடுவதற்கு பல காரணங்கள் உள்ளன. பணத்தை தண்ணீராய் செலவழிப்பார்கள். மனதுக்கு பிடித்துவிட்டால் கொட்டிக் கொடுக்கத் தயங்கமாட்டார்கள்.

தமிழ், தெலுங்கு நடிகைகளது உடற்கட்டும், வசீகர முகமும் அமெரிக்கத் தொழில் அதிபர்கள் பலரது மனதைக் கவர்ந்துள்ளதாம்.

ஐந்தெழுத்து நடிகையுடன் பழகி வரும் தொழிலதிபருக்கு ஏற்கனவே இரண்டு மனைவிகள் இருக்கின்றனர்.

'சிலகாலம் ஜாலியாக இருந்து விட்டு போய்விடுவார். அதுவரை இலாபம்தானே! என்று கணக்குப் போட்டிருக்கிறார் நடிகை.

## ஜேம்ஸ் பாண்டு

பார்த்திபன்-பிரபுதேவா இருவரும் இணைந்து நடிக்கும் படத்திற்கு 'ஜேம்ஸ்பாண்டு' என்று பெயர் சூட்டியுள்ளனர்.

இப்படத்தை இயக்குகிறார் செல்வா. கதையை பார்த்திபன் எழுதி இருக்கிறார். இசை: எஸ்.ஏ.ராஜ்குமார்.

பார்த்திபன் ஏற்கனவே முரளி, அஜித்குமார் ஆகியோருடன் இணைந்து நடித்துள்ளார். இப்போது பிரபு தேவாவுடன் நடிக்கிறார்.

## மூவரும் இணைகின்றனர்

சத்யராஜ், மம்முட்டி, பிரபுதேவா மூவரும் நடிக்கும் படம் ஒன்றை தயாரிக்கத் திட்டமிட்டுள்ளார் ராமநாதன். இவர் முன்பு சத்யராஜின் மனேஜராக இருந்தவர். ராஜ் பிலிம்ஸ் என்ற பெயரில் பல படங்களைத் தயாரித்தவர்.

இப்படத்தை பி.வாசு இயக்கவுள்ளார். இன்னமும் பெயர் சூட்டப்படவில்லை. 'மலபார் பொலிஸ்'வெற்றிப் படத்தின் பின்னர் மறுபடி இக்கூட்டணி இணைகிறது.

வேலு பிரபாகரன் இயக்கத்தில் சத்யராஜ் தற்போது 'புரட்சிக்காரன்' என்னும் படத்தில் நடித்து வருகிறார். இதில் ரேகாவும் நடிக்கிறார். பிடல் காஸ்ரோ, சேகுவேரா போன்றோர் அணிந்த தொப்பிபோல அணிந்துகொண்டு பகுத்தறிவு வாதியாக நடிக்கிறார்.

கதை முற்போக்கானதாக இருப்பதால் தனது சம்பளத்தைக் குறைத்து வாங்கியுள்ளார் சத்யராஜ்.

இந்திப் பட உலகி... ரிப்பாளர் என்று ... சுபாஸ்கை. இவர் ... தெலுங்கு ஆகிய ... போகிறார்.

இதற்காக சரத்... வார்த்தை நடந்து வ... மாரின் 'நாட்டாமை' ... பார்த்துவிட்டே அவ... நாடி வந்துள்ளார் சுபாஸ்கை.



மோகன்-மேகா
படம்: அன்புள்ள காதலுக்கு

## முகப்பில்

அம்சவிர்தன்-சுஷ்வா
படம்: மானசீகக் காதல்




## மினி சினி

* பிரபுவை வைத்து 'சின்னத் தம்பி' உட்பட பல படங்களைத் தயாரித்த கே.பாலு விரைவில் பிரபு-மம்முட்டி இணைந்து நடிக்கும் படமொன்றைத் தயாரிக்கவுள்ளார்.
* மணிரத்னத்தின் 'அலைபாயுதே' படத்தில் கதாநாயகனாக புதுமுகம் மாதவன் நடிப்பது தெரிந்ததே. இப்படத்தில் இன்னொரு நாயகனாக ஹரிநாயர் என்பவரும் அறிமுகமாகிறார்.
* 'வாலி' படத்தினை இயக்கிய சூர்யா இப்போது விஜய்-ஜோதிகா நடிக்கும் 'குஷி' படத்தை இயக்கி வருகிறார். இந்தப்படத்திற்கு முதலில் 'ப்ளாஷ்பேக்', 'முத்தம்' எனப் பெயர்கள் சூட்டி மாற்றப்பட்டன.
* குஷ்பு மலையாளத்தில் நடித்த 'இன்டிபெண்டன்ஸ்' தமிழில் 'சிட்டி கமிஷனர்' என்ற பெயரிலும் தெலுங்கில் 'பிரதிகடனா' என்ற பெயரிலும் மொழிமாற்றப்பட்டு வருகின்றது.
* 'கலியுகம்', "நினைவிருக்கும் வரை' போன்ற படங்களை இயக்கிய கே. சுபாஷ் இப்போது 'ஏழையின் சிரிப்பில்' என்ற படத்தை இயக்கி வருகிறார். அத்துடன் இப்படத்தில் முக்கிய வேடமொன்றில் நடித்தும் வருகிறார்.
* பார்த்திபன் முரளி இணைந்து நடிக்கும் 'வெற்றிக்கொடி கட்டு' படத்தில் இரண்டு நாயகிகளில் ஒருவராக நடிக்கவிருந்த ரம்யா கிருஷ்ணன் இப்போது அதில் நடிக்கவில்லை.
* பாசில் இயக்கத்தில் விஜய் நாயகனாக நடிக்கும் புதிய படத்தில் இரண்டு நாயகிகள். ஒருவர் ஷாலினி, மற்றவர் மலையாளத்தில் முன்னணி நடிகைகளில் ஒருவராகத் திகழும் காவேரி.
* 'ஹலோ' படத்தைத் தயாரித்து வரும் நிறுவனம் அடுத்ததாகத் தயாரிக்கும் படத்திற்கு 'பார்த்தேன் ரசித்தேன்' என்று பெயரிட்டுள்ளது. இப்படத்தை 'அமர்க்களம்' பட இயக்குநர் சரண் இயக்கவுள்ளார்.
* 'வராக நதிக்கரையோரம்...' பாடல் மூலம் பிரபலமானவர் சங்கர் மகா தேவன். இவர் ரவிச்சந்திரன் இயக்கத்தில் பிரசாந்த் கதாநாயகனாக நடிக்கும் 'மஜ்னு' படத்தின் மூலம் இசையமைப்பாளராக அறிமுகமாகிறார்.
* ஷங்கர் இயக்கத்தில் அர்ஜுன்-மனிஷா ஜோடியாக நடித்து வரும் 'முதல்வன்' படத்தில் முன்னாள் 'பிரபஞ்ச அழகி' சுஷ்மிதா சென் ஒரே ஒரு பாடல் காட்சியில் நடனமாடுகிறார்.

## நடன ராம்ஜி

'சன்' தொலைக்காட்சி நாடகமான 'இப்படிக்கு தென்றல்' இங்கும் ஒளிபரப்பாகிறது. அதில் அசடாக நடிப்பவர் ராம்ஜி. 'காதல் கோட்டை'யில் வெள்ளரிக்கா பாடலில் கலக்கிய பின்னர் 'கனவே கலையாதே', 'கண்ணோடு காண்பதெல்லாம்' போன்ற படங்களிலும் சலிக்காமல் ஆடியிருக்கிறார். தேவா இசையமைக்கும் படங்களில் ராம்ஜிக்கு ஆடுவதற்கு வாய்ப்புக் கொடுத்துவருகிறார். கானாப் பாடல்களுக்கு ராம்ஜியின் ஆட்டம் பிரமாதம்.

தொலைக்காட்சி நாடகங்களிலும் நடித்து வரும் ராம்ஜி 'ஜுட்டி' படத்தில் முரளியின் தம்பியாக நடிக்கிறார். 'அமர்க்களம்' படத்தில் 'சத்தம் இல்லாத' பாடலுக்கு நடனம் அமைத்திருப்பதும் ராம்ஜிதான்.

'கமலும் நடன உதவியாளராகவே சினிமா உலகில் புகுந்து, எங்கோ உயரத்தில் நிற்கிறார். அவர் அளவுக்கு இல்லையானாலும் அதில் சிறு அளவாவது சாதிப்பேன்' என்கிறார்.

## ஆட வ...

தமிழில் கதாநாயகிய... மல் பிறமொழிப் படங்... இப்போது மறுபடி... கிறார்கள். கதாநாய... காக.

'உன்னருகே ... டன் கொட்டும் ... கிறாராம்.

இந்த கா... கும் சிணுகி... புண்ணிய...



சினி விசிட்

## பாடல் காட்சி

'சிணுக்கு சிணுக்கு சிணுக்கு தான்
சின்ன கொலுசு எனக்குத்தான்
கிட்ட வாடி நானும் உனை மீட்ட
அடி 'ஒத்துக்கடி உற்சவத்தைக் காட்ட'

இப்படி தொடங்கும் பாடல் ஒன்று 'ஹலோ' படத்துக்காக படமாக்கப்பட்டுள்ளது. பிரசாந்த், ப்ரீத்தி இருவரும் 60 நடனக் கலைஞர்களுடன் ஆடினார்கள். பாடலை எழுதியவர் வைரமுத்து. இசை: தேவா. இயக்கம்: கே.செல்வபாரதி.

## அஞ்சலா கலக்கல்

தமிழில் 'பகைவன்' படத்தில் அஜித்குமாரின் ஜோடியாக நடித்தவள் அஞ்சலா. பின்னர் தமிழ்ப்பட உலகில் இருந்து காணாமல் போனார்.

ஆனால் தெலுங்குப் பட உலகில் கனவுக் கன்னியாக வலம்வருகிறார். இவரும் வெங்கடேஷும் இணைந்து நடித்த தெலுங்குப் படம் ஒன்று 200 நாட்களைத் தாண்டி ஓடியிருக்கிறது.

'பிரேமிஞ் சிக்குந்தாம் ரா' என்ற பெயரில் தெலுங்கில் வெளியான அப்படம்தான் தமிழில் 'அழகே உன்னை காதலிக்கிறேன்' என்ற பெயரில் மொழிமாற்றப்பட்டுள்ளது.

தெலுங்குப் படம் என்றாலே பாடல்கள்தானே பிரதானம். இப்படத்துக்காக சுவிஸர்லாந்தில் பனி மழை கொட்டும் காட்சிகள் படமாக்கப்பட்டுள்ளன.



படிப்பகம்

## இந்தியில் சரத்

...ராசியான தயா
...ழைக்கப்படுபவர்
...த்குமாரை வைத்து தமிழ், இந்தி,
...ாழிகளில் படம் தயாரிக்கப்

...மாருடன் பேச்சு
...கிறது. சரத்கு
...டத்தை
...ர



## காதோடு சொல்லுகிறோம்

நட்சத்திரத்தின் பெயர் கொண்ட 'கார்' நடிகர், மனைவியின் தங்கையையே இரண்டாம் கல்யாணம் செய்துகொண்டார். இப்போது மனைவிகளுக்குள் உரசல், விரிசல். இடையே சிக்கிக்கொண்டு தவிக்கிறார் நடிகர். அவரது குடும்பம் ரோஜா வனமாக இல்லை. பூகம்பமாக இருக்கிறது.

'தேவ' நடிகைக்கு உடம்பு மளமளவென்று தேய்பிறையாகி வருகிறது. உடல் இளைத்து துரும்பாகக் காணப்படுகிறார். கேட்பவர்களிடம் 'டயட்'டில் இருக்கிறேன் என்று கூறுகிறார். ஆனால் சித்த மருத்துவர்கள் சிலரை வீட்டுக்கு வரவழைத்து இரகசியமாக மருந்து சாப்பிடுகிறாராம்.

தமிழில் அதிகம் சம்பாதிக்கும் சூப்பரும், உயரமான இந்தி நடிகரும் இணைந்து அடுத்த படம் எடுக்க உள்ளனராம். ஆனால் பணத்தை எப்படிப் பங்கு பிரித்துக் கொள்வது என்பதில் சிக்கல் ஆரம்பித்து பேச்சுவார்த்தை நீண்டு கொண்டு போகிறதாம்.

சூர்ய நடிகரின் பார்வைபட்டு பனித்துளியாய் கரைந்து கொண்டிருக்கிறார் ஜோதிமயமான நடிகை. இருவரது நெருக்கத்தையும் அறிந்துள்ள அப்பா நடிகர் சிவசிவா என்று புலம்பிக் கொண்டிருக்கிறார்.

நிழலோடு தொடர்புடைய இரண்டெழுத்து நடிகர் இப்போது சின்னத்திரையில் ஓய்வில்லாமல் நடிக்கிறார். அதேபோல வினோதமான நடிகையும் ஓய்வின்றி நடிக்கிறார். இந்த இருவரும் நெருக்கமாகி விட்டனர். இருவரும் சகல விதங்களிலும் ஒன்று கலந்து விட்டனராம்.

## வா ராஜா வா

'கடலோரக் கவிதைகள்' படத்தில் ஆரம்பித்து கடந்த பத்தாண்டுகளாக நடித்துக் கொண்டிருப்பவர் ராஜா. குறிப்பிடும்படியான பாத்திரம் எதுவும் கிடைக்காமல் நொந்து போயிருந்தார்.

இப்போதுதான் கிடைத்திருக்கிறது அருமையான வாய்ப்பு. 'கண்ணுக்கு கண்ணாக' என்ற படத்தில் அற்புதமான பாத்திரம். ஜோடி தேவயானி.

முரளியுடன் பல படங்களில் ஜோடியாக ஆடிப்பாடிய தேவயானியை இப்படத்தில் அவரது தங்கையாக நடிக்க வைத்துள்ளனர். இப்படத்தை இயக்குபவர் தயாளன். கே.எஸ். ரவிக்குமாரிடம் வித்தை கற்றவர்.

## தாராளம்

'டைம்' படத்தில் பிரபுதேவாவுடன் ஒரு பாடல் காட்சியில் எக்கச்சக்கமாக கவர்ச்சி காட்டியுள்ளார் சிம்ரான்.

இந்தப் பாடல் காட்சியைப் படமாக்கியபோது ஐந்தே ஐந்துபேர் மட்டும் அனுமதிக்கப்பட்டனர். இயக்குநர், ஒளிப்பதிவாளர், பிரபுதேவா, சிம்ரான் மற்றும் ராஜு சுந்தரம்.



விஜய்-ஜோதிகா

## ...ந்தவர்

...நடித்துவிட்டு, வாய்ப்பில்லா...க்கு போனவர் இந்திரஜா. ...ம்மணியை அழைத்து வந்திருக்...யாக அல்ல, கவர்ச்சி விருந்துக்...

...விருந்தால்' படத்தில் பார்த்திபனு...ழையில் ஆடி ரசிகர்களை சூடேற்று...

...மில் பார்த்திபனுக்கும், இந்திரஜாவுக்...பான அசைவுகளை கற்றுக் கொடுத்த...ன் நடன இயக்குநர் சம்பத் ராஜ்.

மீனா, ரம்பா, இந்திரஜா மூவரும் பார்த்திபனுடன் நடிக்கிறார்கள். மீனா பார்த்திபன் ஜோடி. டாக்ஸி சாரதியான பார்த்திபன் கனவில் அடிக்கடி வரும் நடிகையாக ரம்பா, ரம்பாவாகவே நடித்துள்ளாராம்.



மீனா
படம்: வட்டாக்குடி இரணியன்

## பணம் மட்டுமா?

ரோஜாவுக்கு கடன் சுமை கழுத்து வரை இருக்கிறது. சொந்தப்படம் தயாரித்தும், இயக்குநர் செல்வமணிக்கு கடன் கொடுத்தும் கையைச் சுட்டுக் கொண்டார்.

இப்போது கடன் சுமையைக் குறைப்பதற்கு எந்தப் பாத்திரமானாலும் நடிக்க ஒப்புக் கொள்கிறார்.

இது பற்றி ரோஜா கூறுவதாவது:

"நடிக்கிறது பணத்துக்காகத்தான். அதை இல்லை என்று மறுக்கவில்லை. அதேசமயம் பணத்தை மீறிய விஷயங்களும் இருக்கின்றன.

நல்ல பாத்திரத்தில் நடித்த திருப்தி, நம் நடிப்புக்குக் கிடைக்கும் பாராட்டு, பரிசு இப்படி பல விஷயங்கள் உண்டு" என்று கூறுகிறார் ரோஜா.

## முகம்

'முகம்' படத்தில் வித்தியாசமான ஒப்பனை யோடு தோன்றுகிறார் நாசர். துருத்திய பற்கள்,பருக்கள் என்று பார்ப்பதற்கே அவலட்சணமான தோற்றம்.

திறமையான மனிதனாக இருந்தாலும், அவனது தோற்றத்தின் காரணமாக எவ்வாறு புறக்கணிக்கப்படுகிறான் என்பதுதான் கதையாம். ரோஜா, மணிவண்ணன், விவேக், தாமு ஆகியோரும் நடிக்கிறார்கள். ஞான ராஜசேகரன் இயக்க, பி.சி.ஸ்ரீராம் ஒளிப்பதிவு செய்ய, இளையராஜா இசையமைத்துள்ளார். வெளிவந்து ஓடிக்கொண்டிருக்கிறது.



பிரபு-ஐஸ்வர்யா-கவிதா-எஸ்.எஸ்.சந்திரன்



இஷாக் ஹுஸைனி-சங்கீதா

## ஊட்டி ஜாலி

'குடும்பம்' தொலைக் காட்சித் தொடரில் மேகாவாக நடித் திருப்பவர் ராகசுதா. இவர் கே.ஆர். விஜயாவின் சகோதரியின் மகள். படங்களிலும் நடித்துள்ளார். 'காதலர் தினம்' படத்தில் சோனாலியின் நண்பியாக வருகிறார் ராகசுதா.

'ஊட்டி' படப்பிடிப்பின்போது அப்பட இயக்குநருக்கும் ராகசுதாவுக்கும் இடையே பலத்த நெருக்கம் ஏற்பட்டுவிட்டது. இருவரும் ஊட்டி குளிர் தீர ஒரே அறையில் தங்கி கும்மாளமடித்தனர்.

இவர்களது கும்மாளம் கண்டு 'ஊட்டி' பட நாயகனான முரளிகூட முகம் சுளித்தாராம்.

## உன்னையறிந்தால்

மணிவண்ணன் இயக்க சத்யராஜ், அப்பாஸ், விந்தியா இணைந்து நடிக்கும் படத்தின் பெயர் அடிக்கடி மாறிக்கொண்டிருக்கிறது.

'மக்கள் நண்பன்' என்று முதலில் பெயர் வைத்து மாற்றி, 'ஆறுவது சினம்' என்று பெயரிட்டனர். இப்போது அதனையும் தூக்கிப் போட்டுவிட்டு, 'உன்னையறிந்தால்' என்று வைத்திருக்கிறார்கள்.

சத்யராஜுக்கு பெரும் திருப்பம் ஏற்படுத்தவென்றே மணிவண்ணன் இயக்கும் படம் இது.



www.padippakam.com
படிப்பகம்

www.padippakam.com

## மன்னித்து விடு....!

இனியவனே!
இன்னும்
உன் ஞாபகமே...!
-o-
இன்றோடு
நிறைவு பெறுகிறது
நம் காதல்....
ஆம்
நாளை
எனக்குத் திருமணம்...!
-o-
காதல்
என்றவுடன்
நெருப்பில் விழுந்த
உப்புக் கட்டிகளாய்
வெடிக்க மட்டுமே
தெரிந்தவர்கள் முன்
காதலுக்கு என்றும்
கரு கலைப்பே
முடிவாகிறது...!
-o-
எத்தனை
காதல் தோல்விகளுக்கு
மணமேடைகள்
துணைபோயிருக்கின்றன...?
-o-
உன்
விரசமில்லா வார்த்தைகளும்
விரல்படாத நெருக்கமும்தான்
என்னை
உன்னுடன்
காதலுற வைத்தது...!
-o-
என்னை
காதலித்ததால்
இன்று நீ
தனிமைப்படுத்தப்
பட்டு விட்டாய்...!
-o-
நாளை
நான் மணந்துவிட்டால்
உனக்காக
என்னிடம்
எஞ்சியிருப்பது
நட்பு மட்டுமே...!
-o-
உள்ளத்தை
ஒருவனுக்கும்
உடலை
ஒருவனுக்கும் கொடுப்பது
விபச்சாரம் என்று
விளக்கம்
தந்தவன் நீ..!
-o-
மணமேடையேறிய
மறுநிமிடமே
உள்ளத்திலிருந்து
உன்னை
உதறிவிடுவேன்...!
-o-
மன்னித்து விடு
மரியாதைக்குரிய
காதலனே...!

ராம். யுவாரஜ்– கண்டி.

## வழி தவறிய வாக்குகள்

"வீதி அபிவிருத்தி
மின்சார வழங்கல்!
வானொலிச் செய்தியில்
வடிவாய் வாசித்தார்கள்
யோசித்துப் பார்க்கையில்
செம்மண் புழுதிகள்தான்
எங்களுக்கு
சொர்க்கமென்று புரிந்தது!
**
அன்றும் இப்படித்தான்
போக்குக் காட்டிய
பூசாரிகளை நம்பி
வாக்குகளை எல்லாம்
வாரி வழங்கினோம்!
நாசமாகியது நம்பிக்கைகள்
மட்டுமல்ல...
தேச வளமும்தான்!
**
குழந்தை
குற்றுயிராய்
தொட்டிலிலே
துடிக்கையில்
கைகளிலே
பால்மா பைக்கற்றுகள்
திணிக்கப்பட்டது.
**
கட்டடங்கள்
கட்டாந்தரைகளாக
அபிவிருத்தி அடைகையில்
வீட்டுத் திட்டங்களின்
விளம்பரம் வந்தது.
**
பள்ளிக் கூடங்களின்
எல்லை தாண்டி
பிள்ளைகள் துள்ளி
விழுந்து துடிக்கையில்–
அழகான பொதியிலே
வெள்ளைச் சீருடைகள்!
**
மரம்
நிழலும் கொடுக்கும்
என்றார்கள்
நாங்கள்
கைகொடுத்தோம்.
கதிரைக்குப் போனதும்
நிஜமரங்கள் கூட
நிழலற்றுப் போயிற்று!

தி.ரமண்–வவுனியா.

## தேன் கிண்ணம்

## உண்டோ?

இலங்கை நாடு எம்நாடு!
எலும்புக் கூடாய் வருநாடு!
கலங்கும் குண்டு வீழ்நாடு!
கால் கை இல்லார் வாழ்நாடு!
**
பொதிகள் கட்டி வை நாடு!
புலம்பும் ஓசை கேள் நாடு!
மதங்கொண்டேறி மாய் நாடு!
மனிதம் செத்த மா நாடு!
**
பொய்யே மெய்யாய்ப் புகழ் நாடு!
பொருளும் உயிரும் அழிநாடு!
வையம் தன்னில் இது போலோர்
வாக்கில் வீழும் நாடுண்டோ?

பொடிப் புலவன்.



## மனித இலக்குகள்

↗ இரண்டாம் உலகப் போரில் தூரகிழக்கு நாடுகள் பலவற்றை ஜப்பான் ஆக்கிரமித்தது. கைப்பற்றப்பட்ட நாடுகளில் ஜப்பான் படைகள் விவரிக்க முடியாத கொடுமைகளை அரங்கேற்றின.

சீனாவின் நாங்கிங் பிரதேசத்தில் ஜப்பான் படையினருக்கு பயிற்சி நடைபெற்றது. துப்பாக்கி முனையில் பொருத்தப்பட்டுள்ள கத்தியை எதிரிமீது எப்படிச் செருகுவது என்றுதான் பயிற்சி.

சீனர்களை பிடித்து வைத்து குழிகளுக்குள் இறக்கி அவர்கள்மீது இலக்குவைத்து பயிற்சி பெற்றார்கள். சீனர்கள் பலர் மடிந்தார்கள். இந்தக் கொடுரவதையைச் சித்தரிக்கும் இக்காட்சி ஜப்பானிய சிப்பாய் ஒருவரால் படம் பிடிக்கப்பட்டு அமெரிக்காவுக்கு இரகசியமாகக் கடத்திச் செல்லப்பட்டது. உலகுக்கு இக் கொடூரம் தெரியவந்தது.

ஜப்பானிய படைகள் இறுதியில் சீன மக்கள் விடுதலைப் படையால் தோற்கடிக்கப்பட்டு, சீனாவில் இருந்து துடைத்தெறியப்பட்டன.

## யார் இவர்?



இந்தக் குட்டிச்
சிறுவன்
இன்று
வளர்ந்து
உயர்ந்த தமிழ்ப்
படக் கதாநாயகன்.
வில்லனாக
வெளுத்து வாங்கியவர்.

யார் என்று தெரிகிறதா? கண்டுபிடிக்க முடிந்தவர்களும், முடியாதவர்களும் பதிலுதவிக்கு 18ம் பக்கம் செல்க.

## நில்-கவனி-முன்னேறு

### ஐந்து ஆண்டுத் திட்டம்

- இன்னும் ஐந்தாண்டுக்குப் பிறகு நீங்கள் எந்த நிலையை அடைய விரும்புகிறீர்கள் என்பதை முடிவு செய்து கொள்ளவேண்டும். இதுவரை அப்படி ஓர் எண்ணம் இல்லாது போனாலும், இனிமேலாவது அந்த எண்ணத்தை வளர்த்துக் கொள்ளுங்கள். ஐந்தாண்டு திட்டமிட்டால் அதை நோக்கி வளர்வது சுலபம்.

### முதலாவது முதலில்

- வேலை நெரிசல் ஏற்படும்போதெல்லாம் குழம்பிப் போய் விடாமல், எந்த வேலையை முதலில் முடிக்க வேண்டும். எதை பிற்பாடு முடிக்க வேண்டும் எனத் தீர்மானித்து ஒவ்வொன்றாய் நிறைவேற்ற வேண்டும். நீங்களே செய்ய வேண்டிய வேலைகளை மட்டும் நீங்கள் கவனித்து, மற்ற வேலைகளை நம்பகமானவர்களிடம் ஒப்படைத்து செய்விக்க வேண்டும்.

### திறமை காட்டுங்கள்

- வேலை சிறியதோ, பெரியதோ... அதில் உங்கள் திறமையைக் காட்டுங்கள். சிறிய வேலையில் தன் திறமையை வெளிக்காட்டாதவர்கள் பெரிய பொறுப்பில் அதனை வெளிப்படுத்த முடியாது. 'என் தகுதிக்கு இது ஒன்று பொருந்தும்! பொருந்தாது' என்று பொறுப்புக்களை தட்டிக் கழிப்பது திறமையின்மையைக் காட்டும்.

### இலக்கை நோக்கி

- இலக்கு இல்லாத வாழ்க்கை இலவம் பஞ்சைப் போல இங்கும் அங்கும் அலைந்து கொண்டிருக்கும். உங்கள் வாழ்க்கைப் பயணம் ஓர் இலக்கை நோக்கி முன்னேறுவதாக இருக்க வேண்டும். போகிற போக்கில் வெற்றி பெறுவதைவிட நீங்கள் விரும்புகிற இலட்சியப் போக்கிலே வெற்றிபெறுவதே சிறப்பு.

### உங்களை நம்பும் உலகம்

- இந்த உலகமே ஒருவரை ஒருவர் நம்பியே வாழ்ந்து கொண்டிருக்கிறது. எல்லாரும் எல்லாரையும் நம்ப வேண்டும். நம்பாமல் உயர்ந்தவர்களோ, நம்பிக்கெட்டவர்களோ யாரும் இல்லை. நம்பிக்கையை விதையுங்கள். வெற்றி விளையும்.

### தகுதியும் நினைப்பும்

- ஒருவனுக்கிருக்கும் அறிவு அவனுடைய அறிவைப் பற்றி அவனுக்கிருக்கும் நினைப்பு இரண்டும் வெவ்வேறானவை. ஓரளவு அறிவுள்ளவன் தன்னை மிகப் பெரிய அறிவாளி என நினைத்துக் கொண்டால் ஆபத்து.

'இறைவா! எப்போதும், என்னுடைய நினைப்பு என் தகுதியைவிடக் குறைந்தே இருக்கட்டும்! ஒருபோதும் தகுதிக்கு மிஞ்சிய நினைப்பு என்னை அணுகாமல் காப்பாற்று!' என்று பிரார்த்தியுங்கள்



### தன் கையே தனக்குதவி

- அவரவர் வேலைகளையெல்லாம் அவரவரே செய்யப் பழகவேண்டும். இத்தகைய பழக்கம் தன்னம்பிக்கையை வளர்ப்பதோடு, பிறரை நம்பி வாழும் சார்பு நிலையைத் தவிர்க்கும், லாண்டரி மூடியிருப்பதால் அழுக்குத் துணிகளை அணிபவரும், உணவு விடுதி மூடியிருந்தால் ரொட்டி, பழம் சாப்பிடுபவரும் வாழ்வில் வெற்றிபெற முடியாது.

### எதிர்ப்புகள்

- எதிர்ப்பே இல்லாமல் வாழ்வில் முன்னேற வேண்டும் என்று நினைப்பது, அலை ஓய்ந்தபின் கடலில் குளிப்பது போன்றது. காற்று எவ்வளவு வேகமாக வீசுகிறதோ அவ்வளவுக்கு காற்றாடி உயரப்பறக்கும். தடையில்லாத பயணத்தில் சுவை இருக்காது என்பதை உணருங்கள்.

### வாய்ப்பு

- வாய்ப்பு பலமுறை நம் வீட்டுக் கதவைத் தட்டாது. ஒரு முறை அல்லது இரண்டு முறை அல்லது மூன்றுமுறைதான் தட்டும். மூன்று முறையும் நழுவ விட்டவர்கள் பாடு திண்டாட்டம்தான். வாய்ப்பை எதிர் பார்த்துக் காத்திருக்க வேண்டும். வரும் போது தொக்குமாதிரிக் கொத்திக்கொள்ள வேண்டும்.

## இந்தவாரம் உங்கள் பலன்

**24.10.99 முதல் 30.10.99வரை**

ஜோதிடர் 'கானா'

### மேடம்:

பிரச்சனைகள் வந்து மறையும் பலன் உள்ளது. பணச்சிக்கல்கள் தீரும். உறவினர்கள் வருகையும், கல்வி தொழில் வளர்ச்சித்திட்டங்களும் காணப்படும். நீண்ட காலம் வருத்திய நோய் துன்பங்கள் மறையும். கார்த்திகை நட்சத்திரருக்கு மீனராசிக்காரரால் உதவிகள் வந்துசேரும்.
அதிஷ்ட நாட்கள் : ஞாயிறு, செவ்வாய.
அதிஷ்ட நிறம்: இளநீலம்; எண்: 09.
அதிஷ்ட திகதிகள்: 24, 27.

### இடபம்:

குருவின் வக்கிரகபலம் பணவசதிகளைப் பெருக்கும். திருமணத் தடைகளை விலக்கும். புதிய தொழில் வாய்ப்புக்கள் தேடிவரும். சிற்சில பிரச்சனைகள் இடையிட்டு வந்துபோகும். குடும்ப உறவினர்கள் குழந்தைகள் மகிழ்ச்சியாகக் காணப்படுவார்கள்.
அதிஷ்ட நாட்கள் : திங்கள், சனி.
அதிஷ்ட நிறம்: மருன்; எண்: 05.
அதிஷ்ட திகதிகள்: 25, 29.

### மிதுனம்:

8இல் செவ்வாய் உச்சமடைவதாலும், கிரகவக்கிரகம் கொள்வதாலும், பணவசதிகள் பெருக வாய்ப்புக்களும் பல பெரிய திட்டங்கள் நடைமுறைக்கு வரும். உறவினர்கள், நண்பர்கள் கௌரவிப்பார்கள். தொழில் சிறப்படையும். திருவாதிரை நட்சத்திரர் யோகங்களைப் பெறுவார்கள்.
அதிஷ்ட நாட்கள் : திங்கள், புதன்.
அதிஷ்ட நிறம் : இளம்பச்சை; எண்: 06.
அதிஷ்ட திகதிகள் : 24, 27.

### கடகம்:

ஜென்மராகுவால் பயண வசதி ஏற்படலாம். பணப்பிரச்சனைகள் தீரக்கூடிய பலன் ஏற்படும். அத்துடன் முயற்சிகள் நற்பலனைக் கொடுக்கும். பல மாற்றமான முடிவுகள் கிடைக்கும். பிள்ளைகளால் நன்மையான விடயங்கள் நடைபெறும். ஆயிலியப் பெண்களுக்கு விசேட பலன் உள்ளது.
அதிஷ்ட நாட்கள் : செவ்வாய், சனி.
அதிஷ்ட நிறம் : இளமஞ்சள்: எண் : 02.
அதிஷ்ட திகதிகள் : 27, 29.

### சிம்மம்:

சுக்கிரன் 2இல் உள்ளதால் விரும்பிய விடயங்கள் கைகூடும். பயணத் துக்கிடமுண்டு. திருமணப் பேச்சுக்கள் இடம் பெறும். கடன் பிரச்சனைகள் விரைவாகத் தீர்ந்துவிடும். பல முன்னேற்ற விடயங்கள், தொழில் என்பன சீரடையும். மகம் நட்சத்திரருக்கு பயண பலன் ஏற்படும்.
அதிஷ்ட நாட்கள்: திங்கள், வியாழன்.
அதிஷ்ட நிறம்: சாம்பல் நிறம்; எண்:03.
அதிஷ்ட திகதிகள்: 24, 28.

### கன்னி:

சுபவைபவங்கள் சிறப்பாக இடம் பெறும். உறவினர்கள் நண்பர்களின் தொடர்புகள் கிடைக்கும். புதிய ஆடை, ஆபரணச் சேர்க்கைகள் கிடைக்கும். மனதில் சிறுபயம் காணப்படும். திருமணமாகாத அத்த 5 நட்சத்திரப் பெண்களுக்கு விவாகயோகம் ஏற்படும்.
அதிஷ்ட நாட்கள்: வெள்ளி, சனி.
அதிஷ்ட நிறம் : மஞ்சள்: எண் : 09.
அதிஷ்ட திகதிகள்: 27, 28.

### துலாம்:

பல்வேறுபட்ட பிரச்சனைகளை ஜென்ம புதன் குறைக்கும். பலசந்தர்ப்பங்கள் பலவேலைகள் என்பன வந்துசேரக்கூடும். பண வசதிகளுடன், பொருளாதார நிலையும் உயரும். மனதில் ஏதேனும் ஏக்கம் காணப்படும். மீன சிம்ம ராசிக்காரரால் உதவிகள் கிடைக்கும்.
அதிஷ்ட நாட்கள்: வெள்ளி, வியாழன்.
அதிஷ்ட நிறம்:இளறோஸ்: எண்:01.
அதிஷ்ட திகதிகள்: 28, 30.

### விருட்சிகம்:

பணப்பிரச்சனைகள், கடன் பிரச்சனை என்பன இவ்வாரம் குறைவுபெறும். மனதில் பதற்றம் காணப்படும். பிரயாணம் வெற்றி பெறாது. இடைநடுவில் திரும்பவேண்டி ஏற்படும். முயற்சிகள் நன்மையைத் தரமாட்டாது. மேட ராசிக்காரரால் உதவிகள் வந்துசேரும்.
அதிஷ்ட நாட்கள் : திங்கள், வெள்ளி.
அதிஷ்ட நிறம் : வெள்ளை: எண்: 05.
அதிஷ்ட திகதிகள் : 28, 26.

### தனுசு:

2, 5, 10 ஸ்தான பலன்கொள்வதால் மனக்கவலைகள் குறையும். திடீர் திட்டங்கள் கைகூடும். கல்வி, வசதிகள் பெருகும். உத்தியோக உயர்வு காணப்படும். பெண்களுக்கு பல உயர்வான பலன் இவ்வாரம் கிடைக்கும்.
அதிஷ்ட நாட்கள்: செவ்வாய், வியாழன்.
அதிஷ்ட நிறம்: மஞ்சள்: எண்: 06.
அதிஷ்ட திகதிகள்: 24, 27.

### மகரம்:

எடுத்த விடயங்கள் தோல்வியில் முடியும். சண்டை சச்சரவுகள் காணப்படும். பலகருமங்கள் தாமதமடையும், எதிலும் அவதானமாக செயல்பட வேண்டும். திருவோண, அவிட்டக்காரருக்கு சிக்கல் நிலை தொடரும்.
அதிஷ்ட நாட்கள்: ஞாயிறு, புதன்.
அதிஷ்ட நிறம்: ஊதா: எண்: 07.
அதிஷ்ட திகதிகள்: 25, 29.

### கும்பம்:

நோய் துன்பங்கள் தீரும். பெரியோர்களின் ஆசீர்வாதம் கிடைக்கும். தொழில் நிலை விரிவடையும். பண வசதிகள் காணப்படும். குடும்பத்தில் கணவருடன் பயங்கரமான பிரச்சனைகள் ஏற்பட்டு மறையும். சதய, பூரட்டாதிப் பெண்கள் வாய்ப் பேச்சைக் குறைக்க வேண்டும்.
அதிஷ்ட நாட்கள்: செவ்வாய், வெள்ளி.
அதிஷ்ட நிறம்: பச்சை: எண்: 04.
அதிஷ்ட திகதிகள்: 29, 30.

### மீனம்:

சகோதரர்களால் பெரிய உதவிகள் வந்து சேரும். பணவசதியும் ஆலயதரிசனமும் காணப்படும். மனதில் சந்தோஷம் காணப்படும். சுபகாரியங்களுக்கு சென்று வருவீர்கள். உத்திரட்டாதிக்காரருக்கு சுபவாய்ப்பான நேரமாகும்.
அதிஷ்ட நாட்கள் : திங்கள், புதன்.
அதிஷ்ட நிறம் : பலவர்ணம்; எண் : 05.
அதிஷ்ட திகதிகள் : 24, 28.

# லேடீஸ் ஸ்பெஷல்

லேடீஸ் ஸ்பெஷல் லேடீஸ் ஸ்பெஷல் லேடீஸ் ஸ்பெஷல் லேடீஸ் ஸ்பெஷல் லேடீஸ் ஸ்பெஷல் லேடீஸ் ஸ்பெஷல்

## முப்பது வயதும் மூட்டுவலியும்

முப்பது வயதைக் கடந்த பெண்களுக்கு மூட்டு வலி வருவது சகஜம். எலும்புகள் தேய்மானத்தாலும் மூட்டுக்களின் தசைப்பகுதி தேய்வதாலும் இந்த வலி ஏற்படும். மெனோபாஸ் எனப்படும் மாதவிலக்கு நிற்கும் சமயத்தில் கல்சியம் பற்றாக்குறை, ஹோர்மோன் கோளாறு போன்றவற்றால் மூட்டுக்கள் தேய்மானம் ஏற்பட்டு வலி ஏற்படும். குளிர் காலத்தில் இந்த வலி அதிகமாக இருக்கும்.



குளிர் காரணமாக உடலில் இரத்த நாளங்கள் சுருங்கும். அதனால் ஏற்கனவே பாதிக்கப்பட்டுள்ள மூட்டுக்களில் இரத்த ஓட்டம் தடைப்பட்டு வலி அதிகமாக இருக்கும்.

மூட்டுவலி உள்ளவர்கள் குளிர்காலத்தில் அந்த மூட்டுக்களில் டாக்டர்கள் ஆலோசனைப்படி வலி நிவாரண கிறீம்களைத் தடவலாம்.

மூட்டுவலிதானே என்று அலட்சியமாக இருக்கக்கூடாது. டாக்டர்கள் ஆலோசனை பெற்று அதற்குரிய மருந்துகளைச் சாப்பிட வேண்டும். உருளைக்கிழங்கு, வாழைக்காய் போன்ற வாய்வு அதிகமுள்ள உணவுப் பொருட்களை சாப்பிடாமல் தவிர்க்கலாம்.

குளிர்ந்த நீரில் குளிக்கக் கூடாது. முழங்காலில் வலி என்றால் முழங்காலையே பாாத்துக்கொண்டிராமல் முடிந்த அளவிற்கு உடலின் மற்ற பகுதிகளை சுறுசுறுப்பாக வைத்திருக்கவேண்டும். உடற்பயிற்சி செய்ய வேண்டும்.

மூட்டுக்களை அசைத்து உடற்பயிற்சி செய்து வந்தால் மூட்டுவலி வரும் வாய்ப்புக் குறைவு.

## மேனி எழிலுக்கு மேலான யோசனை


தோல் பராமரிப்பிற்காகவும், சுருக்கங்கள் நீங்கவும், மென்மையான தோல் பெறவும் பலவகையான கிறீம்கள், லோஷன்கள் இப்போது விற்கின்றன. ஆனால் நாம் உண்ணும் உணவில் கண்ணும் கருத்துமாக இருக்க வேண்டும். சில எளிய வழிமுறைகளைக் கையாண்டாலே போதும் தோல் மென்மையடையும். தோலுக்கு வேறு பிரச்சனைகள் ஏற்படாது.

- எண்ணெய் அதிகம் சேர்த்து வறுத்த, பொரித்த மசாலா பண்டங்களை அடிக்கடி சாப்பிடக்கூடாது.
- ஒரு டம்ளர் நீருடன் கலந்த எலுமிச்சம்பழச்சாறுடன் ஒரு தேக்கரண்டி தேன் கலந்து பருகிவருவது நல்லது.
- வேக வைத்த காய்கறிகளையும் பப்பாளி, ஒரேஞ் பழங்களை அதிகளவில் சாப்பிட வேண்டும்.
- மலச்சிக்கல் இல்லாமல் பார்த்துக் கொள்ள வேண்டும்.
- தூங்கப்போவதற்கு முன்பாக முகத்தில் உள்ள மேக்-அப்பைக் கலைத்து விட்டுத் தூங்க வேண்டும்.
- தினமும் முகத்தை பன்னீர் கொண்டு துடைப்பது நல்லது. முகம் பொலிவு பெறும்.
- நிறைய தண்ணீர் குடிக்க வேண்டும்.
- குளித்து முடித்து பிறகு சிறிதளவு நீரில் பால் ஒரு கப் எடுத்துக் கலந்து அந்த நீரை முகத்திலும் கை, கால்களிலும் ஊற்றிக் கொள்ள வேண்டும். இதனால் தோல் மென்மையடையும்.
- வாரம் ஒரு முறையாவது முகத்தில் நீராவி படும்படி காட்டி சுத்தமாகத் துடைக்க வேண்டும். நீராவி தோலில் உள்ள நுண்ணிய துவாரங்களில் படிந்துள்ள அழுக்குகளையும் வெளியேற்றும்.

## எப்படிப் பராமரிப்பது?

குளிர்சாதனப் பெட்டியை நன்றாகப் பராமரிப்பது எப்படி என்று உங்களுக்குத் தெரியுமா?

விலையுயர்ந்த நவீன ரக குளிர்சாதனப் பெட்டிகளை வாங்குவதில் காட்டும் ஆர்வத்தை அவைகளைப் பராமரிப்பதிலும் காட்ட வேண்டும். நன்றாகப் பராமரித்தால் தான் குளிர்சாதனப்பெட்டியின் பயனை முழுமையாக அனுபவிக்க முடியும்.



- சூரிய ஒளி படாத இடத்தில் குளிர்சாதனப் பெட்டியை வைக்க வேண்டும். குளிர்சாதனப் பெட்டியை வைப்பதற்கென்று தனியான ஓர் இடத்தைத் தேர்ந்தெடுங்கள்.
- குளிர்சாதனப் பெட்டியின் கதவை அடிக்கடி திறக்கக்கூடாது. எந்த அளவுக்கு குறைவாகத் திறக்கிறோமோ அந்த அளவுக்கு அதன் ஆயுள் அதிகரிக்கும்.
- சமையலறையில் குளிர்சாதனப் பெட்டியை வைக்காமல் இருப்பது நல்லது.
- சுவரில் இருந்து 6 அங்குல இடைவெளி விட்டு குளிர்சாதனப் பெட்டியை வைக்க வேண்டும். குளிர்சாதனப் பெட்டியின் பின்பகுதியில் இருக்கும் 'கூலர்' குழாய்களில் காற்றோட்டம் கிடைக்க இந்த இடைவெளி அவசியம்.
- கூலர் கொயிலில் படிகிற தூசுகளை அவ்வப்போது நீக்க வேண்டும்.
- எளிதாக மோசமாகி விடும் உணவுப் பொருட்களை ஃபிரீஸரின் அருகில் இருக்கும் தட்டில் வைத்துப் பாதுகாக்கவும்.
- உணவுப் பொருட்களை சூடு ஆறிய பின்னரே குளிர்சாதனப் பெட்டியில் வைக்க வேண்டும். சூடான உணவுகளை உள்ளே வைத்தால் குளிர்சாதனப் பெட்டி விரைவில் மோசமாகிவிடும்.
- வாரத்தில் ஒருமுறையாவது ஃபிரீஸரில் இருக்கும் ஐஸ்சை நீக்க வேண்டும்.
- குளிர்சாதனப் பெட்டிக்கு முன்னால் ஒரு இறப்பர் ஷீட்டை விரித்து வையுங்கள். அதன் மேல் நின்றுதான் குளிர்சாதனப் பெட்டியை அடைக்கவோ, திறக்கவோ வேண்டும். இவ்வாறு செய்தால் விபத்துக்கள் எதுவும் ஏற்படாது.
- குளிர்சாதனப் பெட்டியின் நிறம் மங்கினால், அதன் வெளிப்பகுதியை குளியல் சவர்க்காரம் போட்டுக் கழுவலாம். பின் துடைத்துவிட்டு சிலிக்கண் பொலிஷ் போட்டு 'பொலிஷ்' பண்ணினால் புதிது போல் இருக்கும்.


# பட்டுச் சேலை பரிசுத் திட்டம்

மகளிர் மட்டும் மகளிர் மட்டும்



☆ ஒவ்வொரு வாரமும் ஒரு அதிஷ்டசாலி தேர்ந்தெடுக்கப்படுவார். வாரத்தில் ஒருவருக்கு மட்டுமே பட்டுச்சேலை பரிசு வழங்கப்படும்.

☆ கீழேயுள்ள கூப்பனை நிரப்பி தபால் அட்டையில் ஒட்டி அனுப்பினால் போதுமானது.

(பதிவுத் தபால்கள் ஏற்றுக்கொள்ளப்படமாட்டா)

☆ ஒருவர் ஒன்றுக்கு மேற்பட்ட கூப்பன்களையும் அனுப்பலாம்.

**வாரம் ஒரு பட்டுச் சேலை** Gp

பெயர்:..........................

முகவரி:..........................

..........................

தொழில்:..........................

கையொப்பம்:..........................

**உண்மை – நேர்மை – வெளிப்படைத் தன்மை**

பி.கு: அதிஷ்டசாலியாக தெரிவு செய்யப்படுகிறவர்கள் தமது புகைப் படங்களை அனுப்பினால் பிரசுரிக்க உதவும்.

**கூப்பனை அனுப்பிவைக்க வேண்டிய இறுதித் திகதி: 30-10-1999**

அனுப்பவேண்டிய முகவரி:- 'வாரம் ஒரு பட்டுச்சேலை', தினமுரசு வாரமலர், த.பெ.இல-1772, கொழும்பு.


# வழங்குவது 13 புவனா

# மோனிக்கா என் மோனிக்கா

தனது கையொப்பம் போல மோனிக்கா போலிக் கையொப்பம் போட்டு கடிதம் அனுப்பியதை டேவிட் தனது சபலத்தைத் தீர்க்கப் பயன்படுத்திக் கொண்டார்.

மோனிக்காவுக்கு அவரது விருப்பத்துக்கு பணிவதைத் தவிர வேறு வழி இருக்கவில்லை. அவர் மோனிக்காவை உடல் முழுவதும் தன் கைகளால் வருடினார்.

அவருக்கு அவளை மிக அண்மையில் பார்த்ததும் உடம்பெல்லாம் வியர்த்துவிட்டது. கைகால்கள் நடுங்கின.

மோனிக்கா அவரது நடுக்கத்தை வேடிக்கை பார்த்தாள். கலகலவென்று சிரித்தாள்.

அவருக்கு அப்போது என்ன தோன்றியதோ அவளை அத்தோடு விட்டுவிட்டார். தொட்டுப் பார்த்ததோடு திருப்திப்பட்டுக் கொண்டார்.

மோனிக்காவின் இளமை அவரைப் பயமுறுத்தி இருக்கலாம். இளம் பெண்ணான மோனிக்காவிடம் உறவு கொள்வது தன்னால் இயலாது போகலாம், அப்போது மோனிக்கா



தன்னை இளக்காரமாக நினைப்பாள் என்று வெட்கப்பட்டார்.

அதனால்தான் தொடுதலோடும், முத்தத்தோடும் மோனிக்காவை திருப்பி அனுப்பினார்.

ஆனாலும் தன் கௌரவத்தை விட்டுக் கொடுக்காமல், "உன்னைப் பார்க்கப் பாவமாக இருக்கிறது. அதனால்தான் இத்தோடு விடுகிறேன்," என்று அகங்காரமாகக் கூறினார்.

### தர்ம சங்கடம்

மோனிக்காவின் உளவியல் பட்டப்படிப்பில் பாலியல் உறவுகள் பற்றிய வகுப்புக்களும் இருந்தன.

இந்த வகுப்புக்களில் மாணவ, மாணவியர் தவறாமல் கலந்து கொண்டனர். ஆண் போதனாசிரியர்கள் வகுப்பு நடத்தும்போது மாணவிகள் கிண்டல் செய்வார்கள்.

பெண் போதனாசிரியர்கள் வகுப்பு எடுக்கும்போது கேட்கவே வேண்டாம். சந்தேகம் கேட்பதுபோல தர்மசங்கடமான கேள்விகளை மாணவர்கள் கேட்டுவிடுவர்.

சில பெண் போதனாசிரியைகள் கூச்சமே படமாட்டார்கள். பச்சையாக பதில் கூறி மாணவர்களை கிளுகிளுப்பாக்கி விடுவார்கள். வேறு சிலர் தர்மசங்கடப்படுவார்கள்.

பாலியல் வகுப்புகளில் ஆண்- பெண் உறவுச் சிக்கல்கள் பற்றி ஆழமான பல கருத்துக்களை மோனிக்கா கற்றுக் கொண்டாள்.

இந்த வகுப்புக்கள் பற்றி பின்னர் மோனிக்கா இவ்வாறு கூறியிருந்தாள்:

"பாலியல் பற்றி எதையும் மறைக்கவோ வெட்கப்படவோ வேண்டிய அவசியம் இல்லை. எமது பாலியல் உறவுகள் மதிப்பளிக்கப்பட வேண்டியவை. உரிய வகையில் பேணப்பட வேண்டியவை. பாலியலுக்கு உரிய மதிப்பளிக்கப்படாது போகுமானால் குடும்பங்களில் பாரிய விளைவுகளை எதிர்கொள்ள நேரிடும்.

பாலியல் பாரம்பரியத்தில் பலவிதமான மாற்றங்கள் இடம் பெற்றுள்ளன. ஆரோக்கியமான பாலுறவு இல்லாமையால் எனது தாயார் பல சிரமங்களை எதிர் கொள்ள வேண்டிய நிர்ப்பந்தம் ஏற்பட்டது.

அன்புக்கு இடமளியுங்கள். மோதல்களைத் தவிருங்கள். இப்பொழுதெல்லாம் 'எய்ட்ஸ்' பற்றி எச்சரிக்கையுடன் நடந்துகொள்ள வேண்டிய நிலையில் உள்ளோம். எமது பாலியல் வாழ்க்கையில் எச்சரிகையாகவும், பாதுகாப்புடனும் நடந்து கொள்ள வேண்டியவர்களாக இருக்கிறோம்!"

இதுதான் மோனிக்கா மனம் திறந்து வெளிப்படையாகக் கூறிய அபிப்பிராயம்.

பிளேய்லருடன் பலமுறை மோனிக்கா நெருங்கி உறவாடியபோதும் போதுமான எச்சரிக்கையுடனேயே நடந்து கொண்டாள். அதன் காரணமாகவே அவனது குழந்தைக்கு தாயாகும் கட்டத்தை அவள் அடையவில்லை.

பட்டப்படிப்பின் இறுதி ஆண்டில் செயல்முறைப் பயிற்சியில் ஈடுபடவேண்டும். போட்லண்டிலுள்ள பொதுப் பாதுகாப்பாளர் பணி

## சொர்க்கத்துக்கு போகலாமா?



மனையில் மோனிக்கா சேர்ந்து கொண்டு செயல்முறைப் பயிற்சியில் ஈடுபட்டாள்.

அனுபவசாலியான மார்ஷா குருஹெலர் என்பவர் மோனிக்காவுக்கு வழிகாட்டியாக இருந்தார்.

மோனிக்கா பட்டம் பெற்றபோது தனது தாயாருக்கே முதலில் தெரியப்படுத்தினாள். பின்னர் தந்தைக்கும், சிறிய தாயாருக்கும் தெரிவித்தாள்.

பட்டமளிப்பு விழாவுக்கு தாயார் வரவில்லை. தந்தையார்தான் பார்பராவுடன் வந்து கலந்துகொண்டார்.



பெற்றோருடன்

பொதுப்பாதுகாப்புத் துறையில் ஒரு வருடம் பயிற்சி பெற்றமையால், அங்கேயே நிரந்தரமான வேலை ஒன்றைப் பெற்றுக் கொண்டு போட்லண்டில் தங்கிவிட நினைத்தாள் மோனிக்கா.

போட்லண்ட் மோனிக்காவுக்கு மிகவும் பிடித்துவிட்டது. அதனை விட்டுப்பிரிய மனமில்லை.

போட்லண்டில் என்றால் யாரும் அறியாமல் பிளேய்லருடன் இருக்கலாம் என்பதும் அங்கேயே வாழ நினைத்ததுக்கு இன்னொரு காரணம்.

பிளேய்லரும் மோனிக்காவும் போட்லண்டில் கூடிக்குலாவுவது மோனிக்காவின் தந்தைக்குத் தெரியாது. தாயாருக்குத் தெரியும்.

மோனிக்காவை பிளேய்லரிடம் இருந்து பிரிக்க தாயார் திட்டம் தீட்டினார்.

வோஷிங்டனில் மோனிக்காவின் தாயாருக்கு வேண்டப்பட்ட உறவினர் ஒருவர் இருந்தார். அவரது பெயர் வோல்டர் காயே. பெரும் செல்வந்தர். அவரது பொழுது போக்கு அரசியல். ஜனநாயகக் கட்சியின் உறுப்பினராக இருந்தார். அக்கட்சிக்குள் பெரும் புள்ளிகளில் ஒருவர் என்றும் கூறலாம்.

அவர் மூலமாக மோனிக்காவுக்கு வோஷிங்டனில் நல்ல வேலை ஒன்றுக்கு ஏற்பாடு செய்யலாம் என்று மோனிக்காவின் தாயார் முயற்சி செய்தார்.

"மகளை வோஷிங்டனுக்கு அனுப்பி வைத்தால், அவளது தகுதிக்கு ஏற்றவேலை பெற்றுக் கொடுப்பது எனக்கு சிரமமல்ல," என்று கூறிவிட்டார் வோல்டர் காயே.

மோனிக்காவிடம் அதனைக் கூறினார் தாயார் மார்சியா. மோனிக்காவுக்கு அதில் இஷ்டமில்லை.

"உங்களையெல்லாம் பிரிந்து அந்தளவு தூரம் போயாக வேண்டுமா?" என்று கேட்டாள்.

"போய்த்தான் ஆகவேண்டும். அந்தப் பெரிய மனிதருக்கு நான் கூறிவிட்டேன். உன் பொருட்டு அவரும் வேலைக்கு ஏற்பாடு செய்து கொண்டிருக்கிறார். நல்ல சந்தர்ப்பம் இது. நழுவவிடாதே!" என்று பிடிவாதமாகக் கூறினார் மார்சியா.

மோனிக்காவுக்கு மறுக்க முடியவில்லை. மறுத்தால் தாயாரின் மனது காயப்படும் என்று கவலை கொண்டாள்.

ஆகவே, "நான் அங்கு செல்லத் தயாராக இருக்கிறேன்!" என்று கூறினாள்.

அவளது வாழ்வில் பல திருப்பங்களுக்குக் காரணமான பயணத்துக்கு அவள் சம்மதித்து விட்டாள்.

அமெரிக்காவை மட்டுமா- அகில உலகையே தன்னைப் பற்றிப் பேச வைக்கப்போகும் அந்த நாளுக்கான முதல் அடி வைப்பு இதுதான் என்பது அப்போது அவளுக்கும் தெரியாது. அவளை வற்புறுத்தி பெட்டி படுக்கையோடு வோஷிங்டனுக்கு அனுப்பிவைப்பதில் குறியாய் இருந்த அம்மா மார்சியாவுக்கும் தெரியாது.

மோனிக்கா திடீரென்று ஒரு முடிவுக்கு வந்தாள். தன்னோடு தனது தாயாரையும், தம்பி மைக்கேலையும் அழைத்துச் செல்வது தான் அந்த முடிவு.

முதலில் மறுத்த மார்சியாவுக்கு மகளின் அழைப்பைத் தட்ட முடியவில்லை. கூடவே சென்று தானும் அங்கொரு வேலை தேடிக் கொள்ளத் தீர்மானித்தார்.

### ரயில் பயணம்

மோனிக்கா தன் தந்தையிடமும், சிறிய தாயாரிடமும் விடைபெற்றுக் கொண்டாள். அவர்கள் இருவரும் மோனிக்காவைப் பிரிவதற்கு சிரமப்பட்டனர். கண்கலங்கி நின்றனர்.

மோனிக்கா தன் தாயாருடனும், தம்பியுடனும் வோஷிங்டன் நோக்கிப் புறப்பட்டாள். ரயில் மூலமே அவர்கள் வோஷிங்டனுக்குப் போய்ச் சேர்ந்தனர்.

தனியாக வீடு பிடிக்கும்வரை அவர்கள் தற்காலிகமாகத் தங்குவதற்கு வோல்டர் காயே ஏற்பாடு செய்து கொடுத்தார்.

மோனிக்காவைக் கண்டதும் வோல்டர் காயே அவளை மேலும்கீழுமாக சில நொடிகள் உற்று நோக்கினார். தன் நெற்றியை ஆட்காட்டி விரலால் கீறிக் கொண்டு யோசித்தார்.

அடுத்து அவரிடம் இருந்து பிறந்தது அந்தக் கேள்வி. அவர் கேலி செய்கிறாராக்கும் என்றே மோனிக்கா முதலில் எண்ணினாள்.

"வெள்ளை மாளிகையில் வேலை பார்க்க விருப்பமா?" என்பதுதான் வோல்டர் தொடுத்த வினா. வினாவா அது. வெள்ளை மாளிகையில் பணியாற்றுவது என்பது எத்தனை பேரின் கனா தெரியுமா? சுலபமாகக் கிடைக்கக்கூடிய சந்தர்ப்பமா அது?!

### தரையில் இல்லை

மோனிக்காவுக்கு என்ன பதில் கூறுவது என்றே தெரியவில்லை. சொர்க்கத்துக்கு போகிறாயா? என்று கேட்டால் யார்தான் வேண்டாம் என்று கூறுவார்கள். ஆகவே கேலி செய்கிறார் என்றுதான் அவளுக்குத் தோன்றியது.

அவரோ மறுபடியும் அதே வினாவையே கேட்டார்," என்ன வெள்ளை மாளிகை வேண்டாமா?"

மோனிக்கா தன் பெரிய கண்களை விரித்து அவரைப் பார்த்தபடி "தாங்கள் அவ்வாறு பெற்றுத் தந்தால் என்றும் நன்றியுடையவளாக இருப்பேன்" என்று பணிவாகக் கூறினாள்.

"நன்றாகப் பேசுகிறாய்" என்று சிரித்த வோல்டர்; "இரண்டு மூன்று நாட்கள் பொறுத்துக் கொள்" என்று கூறினார்.

மோனிக்காவுக்கு கால்கள் தரையில் இருந்து சில அடிகள் உயர்ந்து விட்டாற் போன்று பிரமை தட்டியது.

வெள்ளை மாளிகை அவள் மனக் கண்ணில் எழுந்தது.

'அமெரிக்காவின் ஜனாதிபதிக்கு அருகில் போகப்போகிறேன். என் அந்தஸ்து உயரப் போகிறது' என்று நினைக்க அவளுக்கு சந்தோசம் மனது கொள்ளாது நிரம்பி வழிந்தது.

(வருவாள்)

## இந்த வாரம் யாருக்கு பட்டுச்சேலை?

**மன்னார் வாசகிக்கு அதிஷ்டம்!**


| இவ்வாரம் பட்டுச்சேலை பரிசுபெறும் வாசகி | |
|---|---|
| இவர்தான் ☞ | சி. மரியாராணி, மூர்வீதி, மன்னார். |

பரிசுபெற்ற வாசகியை முரசின் பல்லாயிரம் வாசக, வாசகியர் சார்பில் வாழ்த்துவோம்.

அடுத்தவாரம் யாருக்கு? ஒருவாரம் பொறுமையாக இருக்கக் கூடாதா?!

இவ்வாரம் பரிசுக்குரியவர் பரிசு பெறும் திகதி பற்றி தபால் மூலம் அறிவிக்கப்படும். தபால் மூலம் அறிவிக்கப்படும் விபரங்களைப் பெற்றபின் எம்முடன் தொடர்பு கொண்டு பரிசினைப் பெறலாம்.





சக்தி தனக்கே கருவி யாக்கு-சிவ
சக்தி நடையாவும் நன்கு பழகும்- மனம்
சக்தி தனக்கே கருவியாக்கு முகம்
சார்ந்திருக்கும் நல்லருளும் அழகும்.
-சுப்பிரமணிய பாரதியார்.

## அந்தணனும் போக்கிரிகளும்

### பாப்பா முரசு சிறுகதை



அந்தணன் ஒருவன் ஆட்டுக்குட்டி ஒன்றை வளர்ப்பதற்காக சந்தையில் வாங்கினான். அவன் அதைத் தன் தோள்மீது போட்டுக்கொண்டு ஊருக்குத் திரும்பினான்.

அவன் ஆட்டுக்குட்டியைத் தோள்மீது சுமந்துகொண்டு வருவதை மூன்று போக்கிரிகள் கண்டார்கள். அவர்கள் மூவரும் அந்தணனிடமிருந்து அந்த ஆட்டுக்குட்டியை அபகரிக்கத் திட்டம் போட்டனர். அதன்படி மூவரும் தனித் தனியாகப் பிரிந்து சென்றனர்.

அந்தணன் ஆட்டுக்குட்டியைச் சுமந்துகொண்டு சிறிது தூரம் சென்றதும் ஒரு போக்கிரி எதிர்ப்பட்டு,

"அந்தணரே! அழுக்குப்படிந்த நாயைத் தூக்கிச் செல்கிறீரே! இதைப் பார்த்தால் மற்றவர்கள் உம்மைக் கேவலமாக நினைக்க மாட்டார்களா?" என்று கேட்டான்.

அதற்கு அந்தணன், "உனக்கு கண் இல்லையா? ஆட்டுக்குட்டியைப் பார்த்து நாய் என்கிறாயே!" என்று சொன்னான்.

"அந்தணரே! நாயைச் சுமந்து செல்வது உமக்கு விருப்பமானால் அதைச் சுமந்து செல்லும்!" என்று சொல்லிவிட்டுப் போனான் முதலாவது போக்கிரி.

அந்தணன் சிறிது தூரம் சென்றதும் இரண்டாவது போக்கிரி எதிர்ப்பட்டான்.

"ஐயா அந்தணரே! ஏன் சொறி நாயைத் தூக்கிக்கொண்டு செல்கிறீர்கள்? விலங்குகளின் மீது பிரியம் இருக்கலாம். அதற்காக நோய் பரவக்கூடிய நாயைத் தூக்கிச் செல்லலாமா?" என்று கேட்டான்.

இப்போது அந்தணனுக்குக் கோபம் வந்துவிட்டது, அவனைப் பார்த்து,

"உனக்கும் கண் தெரியவில்லையா? இது ஆட்டுக்குட்டி!" என்றான்.

"சுவாமி! என்னிடம் சொன்னது போன்று இதை ஆட்டுக்குட்டி என்று வேறு யாரிடமும் சொல்லிவிடாதீர்கள். உங்களுக்குப் பைத்தியம் என்று சொல்வார்கள்," என்று கூறிவிட்டு அவ்விடத்தை விட்டு நகர்ந்தான் இரண்டாவது போக்கிரி.

இன்னும் சிறிது தூரம் அந்தணன் சென்றபோது மூன்றாவது போக்கிரி எதிர்ப்பட்டான். அவன் அந்தணனுக்கு எதிரில் வந்து மூக்கைப் பொத்திக்கொண்டு,

"ஐயா! அந்தணரே, நோய்வாய்ப்பட்டிருக்கும் நாயிலிருந்து துர்நாற்றம் வருகிறது. அதை எங்கேயாவது விட்டுவிடுங்கள்!" என்று சொன்னான்.

'தொடர்ந்து மூன்று பேர் அது ஆட்டுக்குட்டியல்ல நாய்க்குட்டி என்று சொல்கிறார்களே! இது ஏதாவது அரக்கனின் வேலையோ?' என்று நினைத்துப் பயந்த அந்தணன் ஆட்டுக் குட்டியைப் போட்டுவிட்டு ஒரே ஓட்டமாக ஓடினான்.

போக்கிரிகள் மூவரும் அந்த ஆட்டுச்குட்டியை எடுத்துக்கொண்டு சந்தையில் விற்பதற்காகச் சென்றார்கள்.

## அதிசயம் - ஆனால் உண்மை!



→ குளியல் உடலை சுத்தப்படுத்துகிறது. ஆனால் குளிப்பது சட்டப்படி குற்றம் என்ற காலமும் இருந்தது. ஸ்பெயின் நாட்டிலேயே இந்தச் சட்டம் இருந்தது. யாராவது குளிப்பது தெரிந்தால் உடனே அவர்களைப் பிடித்து சிறையில் அடைத்து விடுவார்கள்.



← சில பூக்கள் சட்டென்று தங்கள் நிறங்களை மாற்றிக்கொள்ளும். 'பிரைம் ரோஸ்' எனப்படும் பூவின் இதழ்கள் மஞ்சள் நிறத்தில் இருக்கும். இவை மகரந்தச் சேர்க்கை முடிந்தவுடன் செம்மஞ்சள் நிறமாக மாறிவிடும்.



→ மோதிர விரல் என்றால் பெரிய விரலுக்கும் சின்ன விரலுக்கும் இடையில் உள்ள விரல். இந்த விரலில் மோதிரம் அணிவதால்தான் இதற்கு இப்பெயர் வந்தது. ஆனால் 15ம் நூற்றாண்டைச் சேர்ந்த ஐரோப்பியர்கள் திருமண மோதிரத்தை கட்டை விரலில் அணிவதை வழக்கமாகக் கொண்டிருந்தனர்.


## பெயர் வரக் காரணம்



இலங்கை, இந்தியா, பாகிஸ்தான், மாலைதீவுகள், நேபாளம் போன்ற நாடுகளின் நாணயம் ரூபாய். இந்த ரூபாய் என்ற சொல் ரூப்யம் என்ற வடமொழிச் சொல்லில் இருந்துதான் வந்தது.

பழங்காலத்தில் நாணயங்களுக்கு பொதுப் பெயராக வழங்கப்பட்ட சொல் ரூப். அப்போது வெள்ளி நாணயங்களை மட்டும் ரூப்யம் என்று அழைத்து வந்தார்கள். ஆனால் ரூப் என்பதை விட ரூப்யம் என்ற சொல் அதிகமாகப் பேசப்பட்டுவந்ததால் ரூப்யம் என்ற சொல்லில் இருந்துதான் ரூபாய் என்ற சொல் வந்தது.

## உயரமான வாடகை வீடுகள்



உலகிலேயே மிக உயரமான வாடகை வீடுகள் உள்ள அடுக்குமாடிகள் கொண்ட கட்டடம், அமெரிக்காவில் சிக்காக்கோ நகரில் உள்ள லினாய்ஸ் என்னும் இடத்தில் உள்ளது.

70 மாடிகளைக் கொண்ட இக்கட்டடத்தின் உயரம் 639.4 அடி ஆகும். இந்தக் கட்டடத்தில் 879 வீடுகள் வாடகைக்கு விடப்பட்டு வருகின்றன. இந்தக் கட்டடத்தின் பெயர் 'லேக் பொயிண்ட் டவர்' என்பதாகும்.

## ஏன் தெரியுமா?




நெருப்புக்கோழி கற்களையும், ஆணிகள் போன்ற சின்னச்சின்ன இரும்புத் துண்டுகளையும் விழுங்கிவிடும் என்று சொன்னால் நம்ப மாட்டீர்கள். ஆனால் இது உண்மைதான்.

செடி, கொடிகள், பழங்கள், தானியங்கள் என்று ஏராளமான உணவுப் பொருட்களை உண்ணும் நெருப்புக்கோழி கற்களையும், இரும்புத் துண்டுகளையும் ஏன் விழுங்குகிறது என்று தெரியுமா?

கற்களும், இரும்புத்துண்டுகளும் நெருப்புக் கோழியின் ஜீரண சக்திக்கு உதவுவதாக ஆராய்ச்சியாளர்கள் சொல்கிறார்கள்.

## கண்டுபிடிப்பாளர்கள்




ஆகாய விமானத்தைக் கண்டு பிடித்தவர்கள் ரைட் சகோதரர்கள் என்று உங்களுக்குத் தெரியும் அல்லவா? பறக்கும் பலூனைக் கண்டுபிடித்தவர்கள் யார் தெரியுமா?

ஃபிரான்ஸ் நாட்டைச் சேர்ந்த மாண்ட் கோல்பியர் சகோதரர்கள் இவர்கள் 1783ல் பலூனைக் கண்டுபிடித்தனர். ஆனால் அதில் அவர்கள் பறக்கவில்லை. முதலில் அந்த பலூனில் ஓர் ஆடு, ஒரு சேவல், ஒரு வாத்து ஆகியவற்றை அனுப்பிவைத்துப் பரிசோதித்தனர்.

அதன் பின்னர் அந்த வருட இறுதியில் சீன் பிரான்காய்ஸ் பிலட்ரே டீ கோசியர் மற்றும் பிரான்கோஸ் லாரண்ட் ஆகிய இருவரும் முதன் முதலாக பலூனில் பறந்தனர்.

## நட்சத்திரங்களின் நிறம்



சாதாரணமாக நாம் பார்க்கின்றபோது எல்லா நட்சத்திரங்களுமே ஒரே நிறத்தில்தான் தெரிகின்றன. ஆனால் டெலஸ்கோப் மூலம் பார்க்கும்போது நட்சத்திரங்கள் மாறுபட்டிருப்பதை அறியலாம்.

நட்சத்திரங்களின் சுற்றுப்புறத் தட்ப வெப்பநிலையே அவற்றின் நிறங்களைக் கட்டுப்படுத்துகின்றன. சூரியனின் சுற்றுப்புற வெப்பநிலை 5 ஆயிரம் பாகை செல்ஷியசாக இருக்கும்போது மஞ்சளும் வெள்ளையும் கலந்த நிறத்தில் இருக்கும். இதைவிட அதிக வெப்பமாக இருந்தால் அவை நீல நிறத்தில் காணப்படும்.

சுற்றுப்புற வெப்பநிலை 3 ஆயிரம் பாகை செல்சியசாக இருந்தால் நட்சத்திரங்கள் சிவப்பு நிறத்தில் காணப்படும்.

## சிறந்த வர்ணத்திற்கு பரிசு தரும் எண்ணம்!



மேலே உள்ள படத்திற்கு வர்ணம் தீட்டி தபாலட்டையில் ஒட்டி அனுப்புங்கள். சிறந்த வர்ணம் ஒன்றுக்கு பரிசு ரூபா 25/= காத்திருக்கிறது. அனுப்பவேண்டிய கடைசித் திகதி **30.10.1999.**

வர்ணம் தீட்டும் போட்டி இல: **319**
தினமுரசு வாரமலர்
த.பெ.இல. 1772
கொழும்பு.

### வர்ணம் தீட்டும் போட்டி இல: 317

பரிசுக்குரியவர்:
ஏ. ஷர்மிளா,
மஹ்மூத் பெண்கள் கல்லூரி, கல்முனை.

பாராட்டுக்குரியவர்கள்:

| | |
|---|---|
| செபஸ்ரியாம் பிள்ளை நிக்ஷன், முருங்கன் பிட்டி, முருங்கன். | மாணிக்கராசா ஜசோதரன், விபுலானந்தர் த.ம.வித்தியாலயம், திருகோணமலை. |
| ஐ. ஆயிஷா, ரி.பி.ஜாயாவித்தியாலயம், கிண்ணியா-03. | போல் பிரான்சிஸ், புனித சில்வெஸ்டர் கல்லூரி, கண்டி. |
| கே. அனுஹாசினி, தலவாக்கலை த.ம.வித்தியாலயம், தலவாக்கலை. | நிஸ்ரினா மிஹிலார்தீன், புதியுதீன் மஹா வித்தியாலயம், கண்டி. |
| எம். முஸ்தாக் அஹமட், மட்/ அறபா வித்தியாலயம், ஏறாவூர். | பி. யொஹான் பிரதீப் கிருஷ்ணா, க/ கதிரேசன் மத்திய கல்லூரி, நாவலப்பிட்டி. |
| எஸ். ரேகா, கல்வியியற் கல்லூரி, வவுனியா. | மலர்விழி மலர்மாறன், இந்து மகளிர் கல்லூரி, வெள்ளவத்தை. |

## விடுகதைகளும் விடைகளும்

1. சிறுக்கடுகு தலைக்குள்ளே ஊசி முனை தலைகொண்டு,
ஒய்யாரப் பாட்டுப் பாடிப் பறந்து வரும் விருந்தாளி, உட்கார்ந்து நீர் குடிப்பான்;
ஓர் அடியில் உயிர் விடுவான்.
அவன் யார்?
2. நீரில் பிறந்திருப்பாள்; நிலா வரச் சிரித்திருப்பாள்; தூங்காமல் விழித்திருப்பாள்;
தூய நிற வெள்ளையம்மா.
அவள் யார்?
3. வியப்பான போர்க்களத்தில் வீரர் எவருமில்லை. பலவண்ணக் கோலத்தில் பயன்படா வில் ஒன்று படுத்துக்கிடக்கிறது. எடுத்துப் போர் புரிய ஏற்றதோர் அம்பு இல்லை.
அது என்ன?
4. சின்னக் கொண்டைக்காரி;
ஊருக்கெல்லாம் சண்டைக்காரி.
அவள் யார்?
5. முத்துக் கோட்டைக்குள் மூன்று பேர் போனார்கள்; சண்டை நடந்தது;
இரத்தம் சிந்தியது; யாரும் திரும்பவில்லை.
அவர்கள் யார்?
6. பருத்தவன் பறக்கும்போது பார்வைக்குச் சிறுப்பான்.
அவன் யார்?
7. ஒற்றைக் கண் மனிதனைத் தொட்டாலே சுருக்.
அவன் யார்?
8. நாலுகால் அண்ணனுக்குக் கூடவே ஒரு கை.
அவன் யார்?
9. வாடாத பூ வைத்திருப்பான்; வண்ணங்களில் கலந்திருப்பான்;
அதிகாலையில் எழுந்து அகிலத்தையே எழுப்புவான்.
அவன் யார்?
10. கண்ணாடிக் கூட்டுக்குள் கல்யாண ஜோடி; கல்யாண ஜோடிக்கு பன்னிரெண்டு பிள்ளைகள்.
அது என்ன?

**விடைகள்**

| | |
|---|---|
| 1. நுளம்பு | 2. அல்லி |
| 3. வானவில் | 4. தீக்குச்சி |
| 5. வெற்றிலை, பாக்கு, சுண்ணாம்பு | |
| 6. விமானம் | |
| 7. தையல் ஊசி | 8. யானை |
| 9. சேவல் | 10. கடிகாரம் |

தொகுப்பு: ஜி மலர்விழி.

www.padippakam.com

## திக் திக் தொடர்

# சிகப்பு வணக்கம் 01

ஏர்போர்ட் லௌன்ஞ் உற்சாகத்தின் உச்சத்தில் இருந்தது.

ஆயிரக்கணக்கான மனிதத் தலைகள் வானத்தையே பார்த்தபடி லௌன்ஞ்சுக்கு உள்ளேயும், வெளியேயும் தெரிய, வானத்தின் கோடியில் ஒரு அலுமினியத்துண்டம் உற்பத்தியாகி அந்தக் காலை நேர வெயிலில் மினுமினுத்தது.

அடுத்த சில நிமிஷங்களில், அந்த அலுமினியத்துண்டு ஒரு சின்னப் பறவையாக மாறி, பிறகு கொஞ்சம் கொஞ்சமாய்ப் பெரிதாகி ரன்வேயின் கோடியில் இரையெடுக்கப்போகும் பறவையைப் போல் தாழ்ந்தது. அந்த விமானத்தில் இருந்து இறங்கப்போகும் நபர் ஒரு பிரதம மந்திரியோ ஒரு சூப்பர் ஸ்டாரோ கிடையாது. மொத்தம் பதினொரு பேர் அந்த விமானத்திலிருந்து இறங்கப் போகிறார்கள். எல்லோருமே இளைஞர்கள்.

அந்தப் பதினொரு பேர்களையும் வாசகர்களாகிய உங்களுக்கு அறிமுகப்படுத்த வேண்டிய அவசியம் இல்லை.

காரணம்?

அவர்களை நீங்கள் ஏற்கனவே பார்த்திருக்கிறீர்கள். டைட் க்ளோஸப்பில்- லாங் ஷார்டில்- வெற்றிக் களிப்பில்- தோல்வியின் சோகத்தில்- இன்னும் உள்ள பல நவரச பாவங்களில் உங்கள் வீட்டு வரவேற்பறையிலேயே அவர்களைப் பார்த்திருக்கிறீர்கள்.

அவர்கள் விக்கெட்டுக்களுக்கு இடையில் ஓடும்போது உங்களுக்கு மூச்சு வாங்கியிருக்கிறது. அவர்கள் காட்சை நழுவ விடும்போது உங்களுக்கு பிளட் பிரஷர் ஏறியிருக்கிறது. ஸ்டேடியத்தின் கூரைக்கு மேலே சிக்ஸர்க்காக பந்து பறக்கும்போது,



உங்கள் ரோமக்கால்கள் பரவசத்தில் குத்திட்டு நின்றிருக்கின்றன.

யூகம் செய்திருப்பீர்களே!

யூ...ஆர் கரெக்ட். விமானத்தில் வந்து கொண்டிருப்பது நம் இந்திய அணியின் கிரிக்கெட் வீரர்கள்தான்.

இங்கிலாந்து பயணத்தை மூன்றுக்கு இரண்டு என்ற விகிதத்தில் வெற்றிகரமாய் முடித்துக்கொண்டு திரும்பியிருக்கிறார்கள்.

விமானம் தன் மூக்கை நீட்டிக் கொண்டு, ரன் வேயில்- ஈரத்தரையில் சோப் வழுக்கிக்கொண்டு போகிற தினுசில் ஊர்ந்து கொண்டிருக்க, லௌன்ஞ்சில் முண்டியடித்துக்கொண்டு நின்றிருந்த இரசிகர்கள் கூட்டத்தில் உற்சாகம் கரை புரண்டது. சிலர் கைகளில் இருந்த அட்டைகளும் பேனர்களும் உயர்ந்தன. ஸ்கெட்ச் பேனர்களில் எழுதப்பட்ட வாசகங்கள் பளிச் சென்று தெரிந்தன.

"ஹார்ட்டியஸ்ட் வெல்கம் டு லெவன் ஃபென்டாஸ்டிக் சூப்பர் மென்!"

"வீ...ஆர்...ப்ரௌட் டு பி இண்டியன்ஸ்!"

"நரேஷ்...யூ...ஆர் க்ரேட்."

"வீ...லவ் பங்கஜ்."

விமானம் ரன்வேயை முடித்துக் கொண்டு, இயக்கத்தை நிறுத்திக்கொண்டு மௌனமாய் நிற்க, ஸ்டேர்ஸ் பொருத்தப் பட்டது.

எல்லாத் திசைகளிலும் கரகோஷம் அலைமோதிக் கொண்டிருக்க, விமானத்தின் வயிற்றிலிருந்து கிரிக்கெட் வீரர்கள் ஒவ்வொருவராய் வெளிப்பட ஆரம்பித்தார்கள்.

முதலில் டீம் மனேஜர். அடுத்ததாய் கேப்டன் நரேஷ். மூன்றாவதாக சுழற்பந்து வீச்சாளர் பங்கஜ். நான்காவதாய் வேகப் பந்து வீச்சாளர் விக்ரம் பாண்டே.

கிரிக்கெட் வீரர்களைப் பார்த்ததும் லௌன்ஞ்சில் இருந்த ரசிகர்களின் ஆரவாரச் சத்தம் ஏர்ஃபோர்ட்டைச் சின்னதாய் உலுக்கியது. அவர்களுடைய உற்சாக வரவேற்பைக் கையசைப்பால் ஏற்றுக் கொண்ட வீரர்கள் பதினொரு பேரும் லௌன்ஞ்சை நோக்கி வந்தார்கள்.

லௌன்ஞ்சைத் தொட்டதுமே கிரிக்கெட் போர்டு சேர்மன் ஆச்சார்யா, தன் கையில் இருந்த பொக்கேயை கேப்டன் நரேஷ் கையில் திணித்துவிட்டு, அவனை அப்படியே முழு உடம்பாய்ச் சேர்த்து அணைத்துக் கொண்டார்.

கிரிக்கெட் போர்டு சேர்மன் ஆச்சார்யாவை செக்யூரிடி ஃபோர்ஸ் பொலிஸ் அதிகாரி ஒருவர் வேகவேகமாய் நெருங்கினார்.

"ஸார்..."

"என்ன...?"

"கூட்டத்தை ரொம்ப நேரத்துக்குக் கண்ட்ரோல் பண்ணி வைக்க முடியாது. கிரிக்கெட் வீரர்களை உடனடியாய் இங்கேயிருந்து மூவ் பண்ணிடறது பெட்டர்."

ஆச்சார்யா லேசாய் கோபப்பட்டார்.

"ஏன் இப்படி அவசரப்பட நீங்க? ஏர்போர்ட்ல இருக்கிற ரசிகர்கள் ரொம்பவும் டீஸண்டானவங்க. அவங்க இங்கே கலாட்டா பண்றதுக்காக வரலை. கிரிக்கெட் டியர்ஸுக்கு வார்ம் வெல்கம் கொடுக்கத்தான் வந்திருக்காங்க தெரியுமா?"

"மே...பி...ஸார்...பட் ஸ்பை விங்கிலிருந்து எங்களுக்குக் கிடைத்த தகவல்படி நிலைமை சரியில்லை."

ஆச்சார்யா தன் இடதுகை ஆட்காட்டி விரலால் கன்னச்சதையை மெல்லக் கீறிக் கொண்டே கேட்டார்:

"நிலைமை சரியில்லைன்னா எப்படி..?"

அந்த செக்யூரிட்டி ஆபீஸர், ஆச்சாரியாவின் காதருகே குனிந்து அவருக்கு மட்டும் கேட்கிற மாதிரியான குரலில் சொன்னார்:

"இந்த ஏர்போர்ட் எல்லையை விட்டு பதினொரு கிரிக்கெட்டியர்ஸ் புறப்பட்டுப் போறதுக்குள்ளே, அதில் நாலு பேரையாவது கொல்லுவோம்னு 'நம் பாரதம்'ங்கிற ஒரு அமைப்பு எச்சரிக்கை விடுத்திருக்காங்க..."

"இந்த எச்சரிக்கை எப்போ உங்களுக்குக் கிடைச்சுது?"

"ஒரு பத்து நிமிஷத்துக்கு முந்தி..."

"நீங்க அந்த 'நம் பாரதம்' ஃபோன் மிரட்டலை நினைச்சு பயப்படறீங்களா..?"

"இது பயம் கிடையாது ஸார். ஒரு முன்னெச்சரிக்கை. இவ்வளவு பெரிய கூட்டத்துல யார் நல்லவன் யார் கெட்டவன்னு தெரியாது. பாதிப்பேரை செக் பண்ணவேயில்லை... ஏதாவது ஒரு விரும்பத்தகாத சம்பவம் நடந்துட்டா அதுக்கப்புறம் வருத்தப்பட்டுப் பிரயோசனமில்லை ஸார். ப்ரீவென்ஷன் ஈஸ் பெட்டர் தென் க்யூர்."

சேர்மன் ஆச்சார்யா தீர்மானமாய்த் தலையசைத்தார்.

"வெரி ஸாரி பொலிஸ்மேன். ஏர்போர்ட்ல ப்ரஸ் மீட்டிங்கை அட்டெண்ட் பண்ணிட்டுத்தான் எல்லா கிரிக்கெட்டியர்ஸும் வெளியே போவாங்க. பாதுகாப்பு சம்பந்தமான ட்யூட்டியை மட்டும் நீங்க ஸின்ஸியரா பார்த்தாப் போதும்."

சொன்ன ஆச்சாரியா, கிரிக்கெட் வீரர்கள் புடைசூழ ரசிகர்களின் ஆரவாரத்தில் நனைந்துகொண்டே 'ப்ரஸ் மீட்'டுக்கு ஏற்பாடு செய்யப்பட்டிருந்த வி.ஐ.பி. அறையை நோக்கிப் போனார். வழி பூராவும் வீரர்கள் மேல் ரோஜா இதழ்கள் பூமழையாய்ப் பொழிந்தன.

ஐந்து நிமிஷ சிரமமான நடைக்குப் பின் 'ப்ரஸ்மீட்'டுக்காக ஏற்பாடு செய்யப்பட்டிருந்த வி.ஐ.பி.அறைக்குள் கிரிக்கெட் வீரர்கள் நுழைய, உள்ளே வட்டமாய் நாற்காலிகளில் உட்கார்ந்திருந்த நிருபர்கள் எழுந்து நின்று கைகளைத் தட்டினார்கள்.

அதில் பாதிபேர் பெண்கள். கதவு சாத்தப்பட்டு- எல்லோரும் நாற்காலிகளில் உட்கார்ந்ததும், அந்த ஆங்கில வார இதழின் அழகான பெண் நிருபர் எழுந்து, மைக்கை தன் லிப்ஸ்டிக் பூச்சு உதட்டுக்குக் கொடுத்தபடி பேச ஆரம்பித்தாள்.

"இங்கிலாந்து சீரிஸை வெற்றிகரமாய் முடித்துக்கொண்டு தாயகம் திரும்பியிருக்கும் உங்களுக்கு ப்ரஸ் ரிப்போர்ட்டர்ஸ் சார்பில் எங்கள் வாழ்த்துக்கள்! இந்த சீரிஸ் முழுவதும் மிஸ்டர் நரேஷின் அதிரடி ஆட்டமும், மிஸ்டர் பங்கஜ்ஜின் சுழற்பந்து வீச்சும் மிகவும் அற்புதமாக இருந்தது. வெற்றி கிடைக்கக் காரணமாக இருந்த அந்த இருவருக்கும் ஸ்பெஷலாக..."

அந்தப் பெண் பேசப்பேச, நரேஷ் சட்டென்று மைக்கை கையில் எடுத்துக் கொண்டு குறுக்கிட்டான்:

"மன்னிக்க வேண்டும். நீங்கள் சொல்வதை நான் ஆட்சேபிக்கிறேன். இங்கிலாந்தை வெற்றி கொண்டதற்கு நானும் பங்கஜ் மட்டுமே காரணம் அல்ல. நாங்கள் பதினொரு பேருமே நன்றாகத்தான் விளையாடினோம். எங்கள் இருவர் ஆட்டம் இந்தத் தடவை பளிச்சென்று எடுபட்டது. அப்படி எடுபட்டதுக்குக் காரணம் மற்ற வீரர்கள் எங்களுக்குப் பக்கபலமாக இருந்ததுதான். ரன்னர் ஒத்துழைப்புக் கொடுத்தால்தான் ஒரு பேட்ஸ் மேன் ரன் ஏடுக்க முடியும் என்பதை மறந்து விடக்கூடாது." நரேஷ் பேச்சை நிறுத்த, பங்கஜ் இப்போது மைக்கை வாங்கிக் கொண்டு தொடர்ந்தான்.

"எஸ்... இந்த வெற்றிக்கு நாங்கள் இருவர் மட்டும் காரணம் கிடையாது. நான் என்னதான் திறமையாக பொலிங் செய்தாலும், பேட்ஸ் மேன் அடிக்கத்தான் செய்கிறார். எல்லைக் கோட்டை நோக்கி ஓடுகிற பந்தைத் தடுத்து நிறுத்தவும், காட்சுகளை விரயமாக்காமல் பிடிக்கவும் ஃபீல்டர்களின் முழு ஒத்துழைப்பும் தேவை. கிரிக்கெட் என்பதே டீம் கேம்."

அந்தப் பெண் அழகாகச் சிரித்தாள்.

"இருந்தாலும்... இந்த கிரிக்கெட்டில் தனிமனிதத் திறமையும் உண்டல்லவா? அன்று கவாஸ்கர், நேற்று டெண்டுல்கர், இன்று நீங்கள் இதை உங்களால் மறுக்க முடியுமா?"

பங்கஜ் இந்தக் கேள்விக்கு என்ன பதில் சொல்லப்போகிறான் என்பதைக் கேட்கும் ஆர்வத்தோடு அவனையே பார்த்துக் கொண்டிருந்த கிரிக்கெட் போர்டு சேர்மன் ஆச்சார்யாவுக்குப் பின்பக்கமாய் வந்து குனிந்தார் அந்த செக்யூரிட்டி ஆபீஸர். அவருக்கு மட்டும் கேட்கிற குரலில் சொன்னார்:

"ஸார்... ஒரு நிமிஷம் வெளியே வருகிறீர்களா?"

"எதற்கு...?"

"ப்ளீஸ்... வாருங்கள். ஒரு அதிர்ச்சியூட்டும் அவசரச் செய்தி உங்களுக்காகக் காத்துக் கொண்டிருக்கிறது. ப்ரஸ் மீட் இப்படியே நடந்துகொண்டு இருக்கட்டும். அதை டிஸ்டர்ப் செய்ய வேண்டாம்..."

ஆச்சார்யா குழப்பம் பரவிக்கொண்ட முகத்தோடு அந்த செக்யூரிட்டி ஆபீஸரைத் தொடர்ந்து வெளியே வந்தார். கதவு மறுபடியும் சாத்தப்பட்டது.

வெளியே இரண்டு உயர் பொலிஸ் அதிகாரிகள் வியர்வை பூத்த முகங்களோடு தெரிந்தார்கள். ஆச்சார்யா அவர்களை நெருங்கினார்.

"எஸ்... வாட்ஸ் த மேட்டர்...?"

**க்ரைம் சக்கரவர்த்தி ராஜேஸ்குமார்**

அதிகாரிகளில் ஒருவர் காய்ந்துபோன தொண்டையில் சொன்னார்:

"ஸார் இன்டலிஜென்ஸி பீரோவிலிருந்து வயர்லஸ் மூலமா இப்போது ஒரு செய்தி வந்தது."

"என்ன செய்தி...?"

"ஒரு பெண், மனித வெடிகுண்டாய் மாறி பெண் நிருபர் என்கிற போர்வையில் நிருபர்களோடு கலந்து ப்ரஸ் மீட்டில் உட்கார்ந்திருக்கிறாள். அவள் கையில் இருக்கும் ரிமோட் கன்ட்ரோல் பட்டன் எந்த விநாடியும் அழுத்தப்படலாம். இது சென்ட் பர்ஸண்ட் உறுதியான, உண்மையான செய்தி."

ஆச்சார்யா உறைந்தார்!

(தொடர்ந்து வரும்)

---

**'சிறை', 'தர்மயுத்தம்' போன்ற வெற்றிப்படங்களை இயக்கியவர் ஆர். சி.சக்தி. அவரது சூடும் சுவையும் கலந்த அனுபவங்கள் இங்கு தொடராகின்றன.**

# தர்ம யுத்தம் 11

'மனிதரில் இத்தனை நிறங்களா?' இது நான் இயக்கிய இரண்டாவது படம். கமலும், ஸ்ரீதேவியும் வித்தியாசமான, முற்றிலும் வேறு பட்ட பாத்திரங்களில் நடித்த படம்.

அப்போது ஸ்ரீதேவி எனக்கு அதிகப் பழக்கமில்லை. அந்தப் படத்தின் மூலம்தான் எனக்கு அறிமுகமே. அந்தப் படத்தில் அவர் ஏற்றிருந்த கதாநாயகி வேடம், புரட்சிகரமான கருத்துகளைக் கொண்டது. இன்னும் சொல்லப் போனால், சற்றே சர்ச்சையைக் கிளப்பக் கூடியதும்கூட.

'அந்த வேடத்தை அவர் ஏற்றுக் கொள்வாரா? ஒரு வேளை ஏற்றுக் கொண்டாலும், முழு ஈடுபாட்டுடன் நடிப்பாரா?' என்ற சந்தேகம் என் மனதுக்குள் இருந்தது.

முதல் நாள் படப்பிடிப்பின் இடைவேளையின் போதுதான் முழுக் கதையையும் அவரிடம் சொன்னேன். அவருடன் அவரது தாயார் ராஜேஸ்வரி அம்மாளும் இருந்தார்கள். அந்தப்



படத்தின் சில காட்சிகளை சற்று தயக்கத்துடன்தான் சொன்னேன்.

ஆனால் நான் பயந்ததற்கு மாறாக அந்தக் கதையையும், அவர் ஏற்றுக்கொண்ட கதா பாத்திரத்தையும் மிகவும் ரசித்தார்.

வெகுவாகப் பாராட்டினார்.

என் தயக்கத்துக்கான காரணம், அப்போது கமல்-ஸ்ரீதேவி, இளமையும், அழகும், திறமையும் கொண்ட காதல் ஜோடியாக தமிழகத்து ரசிகர்களின் மனதில் இடம் பெற்றிருந்தனர்.

ஆனால் அந்தப் படத்திலோ, இருவருக்கும் காதலும் இல்லை; கனவுக் காட்சிகளும் கிடையாது. அதனால்தான் இதை அவர் எப்படி ஏற்றுக் கொள்வாரோ என்று மனதுக்குள் பயந்தேன். அதிலும் குறிப்பாக தேவியின் அம்மா, ஏதேனும் மறுப்பு சொல்லக்கூடும் என்று எதிர்பார்த்தன். என்னுடைய பயம், கவலை அத்தனையும் பொய்யாகிப் போனது.

### திறமையானவர்

'மனிதரின் இத்தனை நிறங்களா?' படப்பிடிப்பின்போது ஸ்ரீதேவி காட்டிய ஆர்வமும், கொடுத்த ஒத்துழைப்பும், அவருடைய திறமையும் கண்டு பிரமித்துப் போனேன்.

இன்றும் நான் சொல்கிறேன். ஸ்ரீதேவி மாதிரி ஒரு திறமையுள்ள நடிகையைப் பார்ப்பது மிகவும் அபூர்வம். அவர் இந்தியத் திரையுலகின் நம்பர் ஒன்னாக இருந்த காலத்திலும், அவருடைய திறமைக்கு உரிய மரியாதை கிடைத்ததாக நான் நினைக்கவில்லை. அந்த அற்புதக் கலைச் செல்வியின் திறமை முழுமையாகப் பயன்படுத்தப்படாமல் போய்விட்டது என்பது தான் என் கருத்து.

படம் வேகமாக வளர்ந்து கொண்டிருந்த நிலை. ஒருநாள் இரவு, சாரதா ஸ்டூடியோவில் படப்பிடிப்பு. ஸ்ரீதேவி என்னை அழைத்து, "அம்மா ஏதாவது சொன்னாங்களா?" என்று கேட்டார். "இல்லையே! என்ன விஷயம்?" என்று கேட்டேன். "உங்ககிட்ட ஏதோ பேசணும்'னு சொன்னாங்க. அவங்களே பேசுவாங்க" என்றார்.

படப்பிடிப்பில் இருந்த பரபரப்பில் நான் அதில் அதிக கவனம் செலுத்தவில்லை. படப்பிடிப்பு தொடர்ந்தது.

அப்போது ராஜேஸ்வரி அம்மாள் வந்தார்கள். அவர்களிடம் பேசிக் கொண்டிருந்தபோது, நான் சொன்னேன். "அம்மா, படம் நல்லா வந்துகிட்டிருக்குது. இந்தப் படத்தின் மூலம் ஸ்ரீதேவிக்கு நல்ல பெயர் கிடைக்கும். ஆனால் ஒரு வேண்டுகோள். நீங்கள் ஏற்கெனவே கொடுத்திருக்கிற கால்ஷீட் போதாது. இன்னும் இரண்டு, மூன்று நாட்கள் அதிகம் தேவைப்படும். நீங்கள் எப்படியாவது அட்ஜஸ்ட் பண்ணிக் கொடுக்க வேண்டும்" என்றேன்.

அவர் சிரித்துக்கொண்டே, "எங்க கால்ஷீட் இருக்கட்டும். மொதல்ல உங்க கால்ஷீட் எங்களுக்கு வேணும்" என்றார்.

அவர் வேடிக்கையாகப் பேசுகிறார் என்று சிரித்துக் கொண்டேன். அவர், "இல்லை, இல்லை. நான் நெஜமாத்தான் சொல்றேன். உங்க கால்ஷீட் எங்களுக்கு வேணும்" என்றவர் தொடர்ந்து, "தயாரிப்பாளர் ஜாக்பாட் சீனிவாசனைப் பத்தி கேள்விப் பட்டிருக்கீங்களா?" என்றார்.

"ம், கேள்விப்பட்டிருக்கிறேன். 'நல்ல தயாரிப்பாளர்' என்று சொல்லியிருக்கிறார்கள்" என்றேன். "அவர் நல்ல புரொட்யூஸர் மாத்திரமல்ல, எங்க குடும்பத்தைப் பொருத்தவரையில எங்களில் ஒருத்தர். அவர் அடுத்த படம் எடுக்கப் போகிறார். அதுக்கு நீங்கதான் டைரக்டர். அவர் உங்களைச் சந்திப்பார். அவர் கேக்கற தேதியைக் கொடுத்து ஒத்துக்குங்க."

அந்த உள்ளங்களுக்கு மனதுக்குள் நன்றி சொல்லிவிட்டு, "சரி" என்றேன். இரண்டொரு நாட்களில் தயாரிப்பாளர் ஜாக்பாட் சீனிவாசன் என் வீட்டிற்கு வந்தார். கண்டிப்பாகப் பேசினார்.

"மத்தவங்க சொல்றதவிட நான் கம்மியாத்தான் சார் கொடுப்பேன். ஆனா கரெக்டா கொடுத்துருவேன்" என்று சொல்லிவிட்டு அந்தப் படத்திற்கு அவர் எனக்கு நிர்ணயித்திருந்த சம்பளத்தைச் சொன்னார்.

எனக்கு சற்று அதிர்ச்சியாக இருந்தது. "இல்லை சார், நான் வெளியில இதவிட அதிகமா வாங்கிட்டிருக்கேனே!" என்றேன்.

அவர் முடிவாக தனது கருத்தைச் சொல்லிவிட்டு, எனக்கு ஒரு அட்வான்ஸையும் தந்தார். பிறகு, "உங்களுக்கு எப்படி பேமெண்ட் வேண்டும்? மாதம், மாதம் கொஞ்சம், கொஞ்சமா வாங்கிக்கிறீங்களா? இல்ல, கடைசியில மொத்தமா வாங்கிக்கிறீங்களா?"

தொகை குறைவாக இருந்தாலும், அவர் பேசிய விதமும் அவரைப் பற்றி நான் கேள்விப்பட்டிருந்த செய்திகளும் என்னை சம்மதிக்க வைத்தன. அவர் சொல்லியபடியே மாதா மாதம் ஒன்றாம் தேதி கரெக்டாக பணம் கொடுத்தார்.

சில நேரங்களில் வேறு படப்பிடிப்புகளின் காரணமாக நான் ஒன்றாம் தேதி



பணம் வாங்க மறந்து விட்டால், நான் இருக்கும் இடம் தேடி வருவார். "சார்! உங்களுக்குச் சேர வேண்டியதை வாங்கிக்குங்க. இத வச்சிகிட்டு நான் ஏன் சுத்திகிட்டிருக்கணும்" என்று சொல்லி வேட்டிக்குள் அணிந்திருக்கும் அரை டிராயரில் இருக்கும் பணத்தை எடுத்துக் கொடுத்து விட்டுப் போவார்.

எனக்கு சரியாகப் பணம் கொடுத்தார் என்பது மாத்திரமல்ல; என்னுடைய உதவியாளர் சத்தியமூர்த்தி, தனது தந்தைக்கு உடல்நலம் சரியில்லை என்று ஊருக்குச் சென்றிருந்தார். அந்த நேரத்தில் அவரது முகவரியைப் பெற்று, மாதா, மாதம் அவருக்குச் சேரவேண்டிய பணத்தை மணியார்டர் செய்தார்.

உடன் இருந்தவர்கள் "அவர்தான் வேலைக்கு வரவில்லையே! எதுக்கு மணியார்டர் அனுப்புறீங்க?" என்று கேட்ட போது, "அவருக்கு இவ்வளவு பேசியிருக்கேன். அத மாசாமாசம் இப்படிக் கொடுக்குறதா சொல்லியிருக்கேன்." என்றார்.

(அனுபவங்கள் தொடரும்)

தர்மயுத்தம் பிறந்த கதை

www.padippakam.com

# வீரன் தான் பிரீன்

08

ஐரிஷ் விடுதலைப் போராட்டம் 750 வருடங்களுக்கு மேற்பட்ட நீண்ட நெடிய வரலாறு கொண்டது. 1900ம் ஆண்டு ஆரம்பம் வரை ஐரிஷ் மிதவாதத் தலைவர்கள் பிரித்தாளும் பிரித்தானியரால் ஏமாற்றப்பட்டனர். இந்நிலையில் 1913ம் ஆண்டு ஆயுதம் தாங்கிய ஐரிஷ் தொண்டர் படை உருவானது. இதுவே பிற்காலத்தில்–1919 ல் ஐரிஷ் குடியரசு இராணுவமானது. ஐரிஷ் தொண்டர் படையின் வீரன் தான் பிரீன். மனதை உலுக்கும் எழுச்சிமிகு உண்மை வரலாறு இது.

ஒரு சமயம் ஆயுதக் கொள்ளைக்காகச் சென்று வரும்பொழுது தான்பிரீன் பகைவர்களுடைய கையில் சிக்கும்படி நேர்ந்தது. அவனும் டிரீஸி முதலான நண்பர்களும் திப்பெரரியிலிருந்து திரும்பிவந்து கொண்டிருந்தார்கள்.

அப்பொழுது தான் பிரீனுடைய சைக்கிளில் காற்றுக் குறைந்து போய்விட்டதால் அது ஓடாது நின்று விட்டது. அவன் கீழே இறங்கி மற்றவர்களை முன்னால் செல்லும்படி விட்டு சைக்கிளுக்குக் காற்றடிக்க ஆரம்பித்தான்.

முன்னால் சென்ற தொண்டர்களை பொலிஸார் பார்த்து விட்டனர். அவர்கள் போகும் வழியிலே பொலிஸ் படை வீடுகள் இருந்தன. ஆனால் பொலிஸார் அந்த ஆறு தொண்டர்களிடம் நெருங்கத் துணியவில்லை. அவர்களுக்கு வழக்கமாயிருந்த தைரியத்துடன் விலகியிருந்து விட்டார்கள். தொண்டர்கள் வாயு வேகமாக மறைந்து விட்டார்கள்.

அந்நிலையில் தான் பிரீன் காற்றடித்துக் கொண்டிருக்கும் பொழுது ஒரு தடித்த பொலிஸ்காரன் அவனுடைய சட்டையைப் பிடித்து இழுத்தான். அதுவரை பொலிஸ் புலி அவன் பக்கத்தில் இருப்பதை தான் பிரீன் உணரவில்லை.

அவனுடைய இடது கையில் பூட்டுக்களை உடைப்பதற்கு உபயோகிக்கப்படும் இரும்புப் பட்டையொன்று இருந்தது. அவன் அதைக் கொண்டு பொலிஸ்காரன் மண்டையிலே அடித்து. மண்டை சரியாக இருக்கிறதா என்று பரீட்சை பார்த்தான்.

ஆசாமி அப்படியே அமர்ந்து விட்டான். உடனே தான் பீரின் றிவோல்வரை உருவி மற்றப் பொலிஸார் முன்பு அதை நீட்டிக் கொண்டு புறப்பட ஆரம்பித்தான்.

பொலிஸ் அதிகாரி "மரியாதையாகப் பணிந்துவிடு அல்லது சுட்டுவிடுவேன்!" என்று பயமுறுத்தினார்.

தான் பிரீன், "கைகளைக் கீழே போடுங்கள்! இல்லாவிட் டால் உங்களைக் கூட்டத்தோடு சுவர்க்கத்திற்கு அனுப்பிவிடுவேன்!" என்று பதிலுரைத்தான்.

பொலிஸார் அந்த உத்தரவுக்குப் பணிந்தனர். அச்சமயத்தில் தான் பிரீன் திடீரென்று தன் சைக்கிளில் ஏறி ஒரு முடுக்கு வழியாகப் பாய்ந்து சென்று விட்டான்.

அவன் அன்று தப்பியது மிகவும் ஆச்சரியம். ஏனென்றால் சில நிமிஷங்களுக்குள் அபாய அறிவிப்புக் கொடுக்கப்பட்டு, நகரைச் சுற்றிலும், தெருக்களிலும் சந்துகளிலும் ஏராளமான பட்டாளங்கள் தொண்டர்களைப் பிடிப்பதற்காக நிறுத்தப்பட்டன. ஆனால், அதற்குள் தான் பிரீன் தனது வெடிமருந்துச் சாலையில் தோழர்களுடன் சௌக்கியமாக அமர்ந்திருந்தான்.

தான் பிரீனுடைய வெடிமருந்துச்சாலை நெடுநாள் நிலைத்திருக்கவில்லை. அங்கு தொண்டர்கள் தங்களுக்கு வேண்டிய சௌகரியங்களைத் தாங்களே தேடிக்கொள்ள வேண்டியிருந்தது.

சமையல் செய்வதற்கும், தண்ணீர் கொண்டு வருவதற்கும் வேறு உதவியாளில்லை. ஒருநாள் தான் பிரீன் ஒரு வாளி தண்ணீர் கொண்டுவருவதற்கு வெளியே சென்றிருந்தான்.

அவன் திரும்புகையில் குடிசையிலிருந்து சுமார் ஐம்பது யார் தூரத்தில் வரும்பொழுது திடீரென்று குடிசையின் கூரை ஆகாயத்தில் எழும்புவதைக் கண்டான்.

அதே சமயத்தில் இடி இடித்தது போல் பல வெடிகுண்டுகள் வெடிப்பதையும் கேட்டான். ஒரு நிமிஷத்தில் வீடு முழுவதும் தீப்பற்றிக்கொண்டது. அவன் உள்ளேயிருந்த தன்னுடைய தோழருக்கு என்ன நேர்ந்ததோ என்று கவலையுற்றான்.

கையில் இருந்த வாளியைக் கீழே வைத்து விட்டுக் குடிசைக்குள் விரைந்தோடினான், மாடியில் ஏறிப்பார்த்தான். அங்கே பாடிசியோக் பேச்சற்றுக் கீழே கிடந்தான்.

தான் பிரீன் அவனைக் கைகளில் ஏந்திக் கொண்டு மேலிருந்து விழுந்து கொண்டிருந்த கொள்ளிக்கட்டைகளின் நடுவே எடுத்துச்சென்று அங்கேயிருந்த மல்டீன் ஓடைக்கரையில் கொண்டு வைத்தான்.

வாளியைக் கொண்டு வந்து அதிலிருந்த குளிர்ந்த நீரை அவனுடைய முகத்தில் இரண்டுமுறை தெளித்தான். உடனே கியோக் எழுந்து நின்று "ஏ முட சிகாமணியே! என்னைத்தண்ணீரில் அமிழ்த்திவிடுவாய் போலிருக்கிறதே!" என்று வேடிக்கையாகக் கோபித்துக்கொண்டான்.

தான் பிரீன் எப்படியாவது நண்பன் பிழைத்துக் கொண்டானே என்று ஆனந்தங் கொண்டான். அவர்கள் இருவருக்கும் குடிசையும் வெடிமருந்துச்சாலையும் அழிந்து போன கவலை மட்டும் தணியவில்லை.

தான் பிரீன் கையிலிருந்த காசையெல்லாம் வெடிமருந்துச்சாலைக்காகச் செலவழித்திருந்தான். இப்பொழுது ஒட்லியருடைய வீடு எரிந்து போனதிற்கு நஷ்டஈடும் கொடுக்கவேண்டியிருந்தது.

தோழர்களின் உதவியால் வீடு முன்னைப்பார்க்கிலும் அழகாக அமைக்கப்பட்டு விட்டது. எனினும் தான் பிரீனுடைய தொழிலுக்கு அவ்வீடு பின்னால் கிடைக்கவில்லை. அதனால் அவன் திப்பெரரிவாசியான ஓ கானல் என்பவருடைய வீட்டில் தனது தொழிற்சாலையை அமைத்துக் கொண்டான்.

அவ்விடத்தில் அவனுக்கு அதிக வெற்றியும் கிடைத்தது. ஏனென்றால் மீண்டும் வீடு வெடித்துவிடாமல் இருப்பதற்கு அவன் மிகுந்த முன்னெச்சரிக்கை எடுத்துக் கொண்டான்.

அந்த வீட்டில் இருக்கும்பொழுது தொண்டர்களுக்குச் சந்தோஷம் ஏற்படவில்லை. ஏனென்றால் அங்கு ஒருவிதமான சௌகரியமும் கிடையாது. படுக்கை, பாய், தலையணை எதுவும் கிடையாது. அவற்றை வாங்கப் பணமும் இல்லை.

பக்கத்து வீட்டுக்காரர்களிடம் இரண்டு கம்பளங்களை இரவல் வாங்கி வைத்துக் கொண்டு தரையிலே வைக்கோலை விரித்து அதன்மேல் ஒரு கம்பளத்தை விரித்துத் தொண்டர்கள் கிடப்பது வழக்கம்.

மேலேயிருந்துவரும் பனியைத் தாங்க முடியாமல் அவர்கள் ஏராளமான பழைய பத்திரிகைகளை உடல்களின் மீது போர்த்துக் கொண்டு அவற்றிக்கு மேலாகக் கம்பளத்தை மூடிக்கொள்வார்கள்.

கொஞ்சம் உருண்டு புரண்டு படுத்தால் பத்திரிகைகள் கிழிந்து போகும்; மீண்டும் குளிர் ஆரம்பித்துவிடும். ஆதலால், அவர்கள் அசையாமலே ஒரே நிலையில் படுத்திருந்து தினம் மூன்று மணிநேரம் உறங்குவது வழக்கம். குளிரைத் தவிர வேறு சில தொந்தரவுகளும் இருந்தன.

வீடு முழுவதும் சுண்டெலிகள் நிறைந்திருந்தன. இரவில் அவைகள் படுத்திருந்தவர்களின் தலைகளைக் கடித்துக் கடித்து எழுப்பிவிட்டுவிடும். தான் பிரீன் சில சமயங்களில் கோபத்துடன் எழுந்து அவற்றை அடிப்பது வழக்கம்.

அப்பொழுது ஸீன் டிரிஸி, "அண்ணா அவைகளை ஏன் அடிக்கிறாய்? நாமதான் கஷ்டப்படுகிறோம்! அவைகளாவது சந்தோஷமாயிருக்கட்டும்! உன்னுடைய தலையில் இருந்து கொஞ்சம் ரோமத்தை அவை கொண்டு போய்விட்டால் ஒன்றும் முழுசிப் போய் விடாது! என்று சாந்தப்படுத்துவது வழக்கம்.

தான்பிரீன் "இந்த சுண்டெலிகளுக்குப் பொலிஸாரிடம் என்ன உறவு? அவர்களைப் போலவே நாம் போன இடமெல்லாம் வந்து தொந்தரவு செய்கின்றனவே!" என்று கூறிப் பரிகசிப்பான்.

சிறிது காலத்திற்குப் பிறகு கியோக் வேறு வேலை காரணமாக வெளியேறி விட்டான். தான் பிரீனுக்கு உதவியாக ஸீன் ஹோகன் என்னும் நண்பன் வந்து சேர்ந்தான்.

அதிலிருந்து ஐந்து வருட காலம் அவர்கள் இணைபிரியாமல் இருந்தார்கள்.



ஹோகன், டிரிஸி, தான் பிரீன் மூவரும் மூன்று உடலும் ஒருயிரும் போல் ஐக்கியமாக வாழ்ந்து வந்தார்கள்.

அவர்களுக்குள் ஒரு கோபமான வார்த்தையோ, மனஸ்தாபமோ ஏற்பட்டதில்லை. அவர்கள் ஓ கானல் வீட்டில் இருக்கும் பொழுது ஸீமாஸ் ரோபின்ஸன் என்னும் உயரிய நண்பன் அவர்களோடு சேர்ந்து கொண்டான்.

இந்நால்வரும் வயது, நோக்கம், குணம் முதலியவற்றில் ஒத்திருந்தார்கள். அயர்லாந்தைச் சுதந்திர நாடாக்க வேண்டும் என்று அவர்கள் கண்ட கனவுகளுக்கும் தயாரித்த திட்டங்களுக்கும் அளவேயில்லை. இதன் பிறகு ஓ கானல் தமது வீட்டைத் திருப்பித்தர வேண்டுமென்று அவர்களுக்கு அறிவித்தார். அவர்கள் காலி செய்வதைத் தவிர வேறு வழியில்லை.

சட்டபூர்வமான உரிமைகளைப் பற்றி அவர்கள் அப்பொழுது வாதாடிக் கொண்டிருக்க முடியவில்லை. வாடகை கொடுத்தாகிலும் வேறு வீடுகளை அமர்த்த லாமென்றால் கண்ட வீடுகளில் வசிப்பது அபாயகரமாயிருந்தது.

ஏனென்றால் பொலிஸார் ஆங்கில ஆட்சியில் வெறுப்புக்கொண்ட ஐரிஷ்காரர்களைப் பிடிக்க வேண்டும் என்று தேடித் திரிந்து கொண்டிருந்தனர்.

அந்தச் சமயத்தில் தான் பிரீன் கூட்டத்தாருக்கு ஒரு நல்ல அதிர்ஷ்டம் பிறந்தது. ஸீன் ஹோகனுடைய உறவினர்களில் சிலர் தங்களுடைய பால் பண்ணை ஒன்றை அவர்களுடைய உபயோகத்திற்காகக் கொடுத்தான்.

அங்கே படுக்கை முதலிய வசதிகள் இருந்தன. ஆனால் வேளைக்குச் சாப்பாடு மட்டும் கிடைக்கவில்லை. தான் பிரீனுக்கு இதெல்லாம் பழக்கமாகிவிட்டது. முன்னால் தொண்டர் படையில் சேர்ந்த பொழுது அவன் பலநாள் உண்ண உணவின்றிப் படுக்க இடமின்றிக் கஷ்டப்பட்டுப் பழக்கமடைந்திருந்தான்.

பால் பண்ணை நாளடைவில் பொலிஸாருடைய கவனத்திற்குட்பட்டது. அவர்கள் 'தகர வீடு' என்று அதை அடையாளம் சொல்லி அழைப்பது வழக்கம்.

ஒரு சமயம் ஸீன் டிரிஸியும் தான் பிரீனும் டப்ளின் நகரிலிருந்து சில ஆயுதங்களைக் கொண்டுவருவதற்காக சைக்கிளில் சென்றனர். அவர்கள் கையில் பணமிருந்தால் ரயிலில் சென்றிருப்பார்கள். அத்துடன் குறிப்பிட்ட நேரத்திற்கு அங்கே செல்ல வேண்டியிருந்தது.

காலை எட்டுமணிக்குப் புறப்பட்டு, அன்று மாலை ஆறு மணிக்கு டப்ளினைச் சேரவேண்டியிருந்தது. அவர்கள் நூற்றுப்பத்து மைல் பிரயாணம் செய்து குறிப்பிட்ட நேரத்தில் டப்ளினை அடைந்தனர்.

அங்கு பில் ஷனாஹன் என்னும் நண்பனுடைய வீட்டில் தங்கியிருந்தனர். அதுமுதல் பில் ஷனாஹன், அவர்களுக்குப் பணத்தட்டுப்பாடு ஏற்படாமல் உதவி செய்து வந்தார்.

அவர்கள் டப்ளினிக்குச் சென்றது திங்கட்கிழமை. சனிக்கிழமைவரை அவர்களுக்கு அங்கு வேலையிருந்தது. சனிக்கிழமை காலை 8.30 மணிக்கு அதை விட்டுப் புறப்பட்டு அன்று மாலை திப்பெரரியில் கூடவிருந்த தொண்டர் படை அதிகாரிகளுடைய கூட்டத்திற்குக் குறித்த நேரத்தில் அவர்கள் வந்து சேர்ந்தனர்.

அவர்களுடைய கையில் ஆறு றிவோல்வர்களும், ஐந்நூறு துப்பாக்கிக் குண்டுகளும், ஆறு வெடிகுண்டுகளும் இருந்தன.

(பயணம் ...தொடரும்)

தமிழில் ப.ராமஸ்வாமி

# அரங்கம் அந்தரங்கம்

தமிழகத்தின் பிரபல நடிகர் ஒருவர் உட்பட சில முக்கிய பிரமுகர்கள் பற்றி கவியரசு கண்ணதாசன் எழுதி பெரும் சர்ச்சை கிளப்பிய தொடர்.

33

இதில் வரும் நிகழ்ச்சிகள் பல கற்பனையே: ஆனால் இதில் காணப்படும் பாத்திரங்கள் யாவும் உண்மையே!

அவர்களது பெயர்களைக் கூடக் கொஞ்சம் தான் மாற்றிக் கொடுத்திருக்கிறேன். விவரம் தெரிந்தவர்கள் எந்தப் பாத்திரம், யார் என்பதைப் புரிந்து கொள்வார்கள்.

இவர்களைப் பற்றிய ஏராளமான சம்பவங்கள் எனது குறிப்பில் இருக்கின்றன. ஆனால் அவையெல்லாம் ஒரே சம்பவத்தின் பல பதிப்புகளே!

நான் எழுதியுள்ள நாவல்களில் உயிரோடு உலாவும் சிலரை முழுக்க முழுக்கப் பாத்திரங்களாக்கி எழுதிய நாவல் இதுதான்.

இதில் நானும் ஒரு பாத்திரம். என்னோடு சம்பந்தப்படுத்தப் பட்டு வரும் கமலா, உண்மையில் வாழ்ந்த ஒருத்தி. ஆனால் இவளது உண்மைப் பெயர் வேறு.

–கண்ணதாசன்–

நன்கு திட்டமிட்டு முன்னேற முடியாமல் போனவர்கள் உண்டு. ஒரு திட்டமும் இல்லாமலே உச்சத்தில் வந்து உட்கார்ந்தவர்களும் உண்டு.

கடவுள் யாருக்குக் கை கொடுக்கிறான். யாரது கழுத்தைப் பிடிக்கிறான் என்பது கணிக்க முடியாத ஒன்று.

சந்தர்ப்பம் என்ற ஏணி சரியாக மாட்டிக் கொண்டால், எந்தக் கால்களும் மாடிக்குப் போய்ச் சேர்ந்து விடுகின்றன.

சனீசுவரன் சட்டைப் பாக்கெட்டில் அமர்ந்து கொண்டால், தவறான வழிகளில் 'டார்ச்லைட்' அடித்துக் காட்டுகிறான்.

எங்கோ பிறந்த 'டூப்ளே'வுக்கு பாண்டிச்சேரியில் சிலை இருக்கிறது. எங்கோ பிறந்த 'ராபர்ட் கிளைவ்' இந்தியாவை ஆள முடிந்தது.

இந்தியாவில் சிம்மாசனம், மயிலாசனமாக ஆனபோது காபூல் நகரத்து கஜினிமுகமதுவுக்கும் அதிலே உட்காரும் பாக்கியம் கிடைத்தது.

சிலருக்கு ஆண்டவன் ரிசர்வ் செய்கின்ற இடம் அவர்கள் கண்ணுக்குத் திடீரென்றுதான் தெரிகிறது. ஆனால் சந்திரசூரியன் கண்ணுக்கோ திட்டமாகவே தெரிந்தது.

கடவுள் கருணை வைத்து அவரைத் தலைவர் பதவியில் தள்ளிவிட்டார்.

தலைவராகி விட்டோமே என்பதற்காக அவரும் தத்துவம் பேசத் தொடங்கினார். அவர் பேசுகிறாரே என்பதற்காக ஜனங்களும் அதைக் கேட்டுக்கொண்டிருந்தார்கள். ஜனங்கள் கேட்கிறார்கள் என்பதற்காகப் பத்திரிகைக்காரர்களும் பிரசுரித்துக் கொண்டிருந்தார்கள்.

படத்திலே அவர் காதல் பாட்டுப் பாடுவதையும், கட்டிப் பிடிப்பதையும் பார்த்து பட்டிக்காட்டுப் பெண்களில் பல பேர் கோபியர்களாகி இருக்கிறார்கள்.

படித்தவர்கள் தான் அவரைக் கண்டு சிரித்தார்களே தவிர, கிராமத்துப் பெண்களுக்கு அவரிடம் ஒரு பிடிப்பு இருந்தது.

கிட்டத்தட்ட தமிழ்நாட்டின் ஏகபோக ஆதிக்கமே தன்னிடம் இருப்பதாக அவர் நினைத்ததிலும் தவறில்லை.

என்னதான் நடிகர் என்றாலும் சந்திரசூரியனுக்கு அரசியல் ராஜ தந்திரமும் தெரியும். சாணக்கிய தந்திரத்தில் அத்துப்படியானவரல்ல எனினும், சந்தர்ப்பத்தைச் சரியான நேரத்தில் பயன்படுத்திக் கொள்வதில் அவருக்கு நிகர் வேறு யாருமில்லை.

கூட்டத்தைப் பார்த்தால் கையெடுத்துக் கும்பிடுவதிலும், கூட்டத்துக்குள் ஓடிப்போய் குழந்தைகளைத் தூக்கி வைத்துக் கொள்வதிலும், கன்னிப் பெண்களில் இருந்து வயதான தாய்மார்கள் வரை கட்டியணைத்துத் தன் அன்பை வெளிப்படுத்துவதிலும் அவர் சமுதாயத்தில் தனித்தன்மை உள்ளவராக விளங்கினார்.

இதை 'நடிப்பு' என்றும், 'போலித்தனம்' என்றும் விமர்சித்தார்கள் பலர். நடிப்பாகவே இருந்தாலும் கூட அன்புக்கு எவ்வளவு சக்தி உண்டு என்பதைக் காட்டிக் கொண்டிருந்தார் அவர்.

சிறுவயதில் வறுமையிலே வாடியவர்: ஆனாலும் பணம் வந்தவுடனே அந்தப் பவிசைக் காட்டிக் கொள்ளாதவர். தான் பணம் வைத்திருப்பது உலகத்துக்கே தெரியாதபடி நடந்துகொண்டவர். லட்சம் லட்சமாகப் பணம் குவிந்தும் குறிப்பிட்ட அளவுக்குமேல் சொத்து வாங்காதவர். அவரது ஒரே தாகம் பெண்களிலும், புகழிலுமே இருந்தது.



"ஒன்றுமே இல்லாமல் ஒரு மனிதன் இலட்சக் கணக்கான மக்களின் ஆதரவைப் பெற்றுவிட முடியாது. ஏதோ சில நல்ல குணங்கள் இருந்ததால் தான் அவரது கட்சிக்கு அப்பாவிமக்கள் பல பேர் வந்தார்கள்" என்பது பலரது கணிப்பு.

நடிக்கும்போது வீரராக நடித்தாலும் சுபாவத்தில் சந்திரசூரியன் கோழை.

நாத்திகர் போலத் தோற்றமளித்தாலும் உள்ளுக்குள்ளே பக்தி உண்டு.

பெண்ணாசை உச்சம் என்றாலும் தாய்ப்பாசம் அதிகம் உண்டு.

பெரும் பணம் சேர்த்தாலும் கால் பாகத்தை யாவது தர்மம் செய்யும் சுபாவம் உண்டு.

சிலரை அடியோடு கவிழ்த்ததும் உண்டு; கவிழ்ந்து போன பலரைக் கை தூக்கி விட்டதும் உண்டு.

சரியாகச் சொன்னால் அவரது உள்ளத்தில் ஒரு பாதி இருட்டு: ஒரு பாதி வெளிச்சம்.

இறைவன் அவருக்கு ஏறுகிற படிக்கட்டை மட்டுமே இருபது வருஷத்துக்கு காட்டிக்கொண்டு வந்தான்.

அதிலே இன்னும் ஒரு படிக்கட்டை அவர் மிதிப்பதற்கான நேரம் வந்தது.

இந்திய வானத்தில் பல அரசியல் நட்சத்திரங்கள் தோன்றி இருக்கின்றன; விழுந்திருக்கின்றன. ஆனால் பத்து ஆண்டுகளுக்குமேல் மின்னிக் கொண்டிருந்த ஒரு துருவ நட்சத்திரம், தான் விழுவதற்கான ஒரு தேதியை நிர்ணயித்து அறிவித்தது இதுதான் முதல் தடவை.

ஆம், இந்தியாவில் பொதுத் தேர்தல் அறிவிக்கப்பட்டது.

அமெரிக்க ஜனத்தொகையைவிட, அதிக வாக்காளர்களைக் கொண்ட இந்தியா ஒரு அக்கினிப் பரீட்சைக்குத் தன்னைத் தயார் செய்து கொண்டது.

கவியரசு கண்ணதாசன்

இந்தியா தன் கையில் இருப்பதாக நம்பிக் கொண்டிருந்தவர்கள், இந்த அக்கினிப் பரீட்சைக்குத் தாங்களே ஏற்பாடு செய்தார்கள்.

அந்த நெருப்பு தங்களையும் எரிக்க முடியும் என்பதை மறந்த நிலையில் அவர்கள் போட்டிக்குத் தயாராகி விட்டார்கள்.

(அந்தரங்கம் வரும்)



படிப்பகம்

www.padippakam.com

கல் ஒழுங்கைக்குள்ளால் புழுதியை பரப்பியபடி வந்து நின்றது அந்த ஓட்டோ. சில சிறுவர்கள் அதற்கு பின்னால் மூச்சு வாங்க ஓடிவந்தார்கள். நாய்கள் வேறு குரைத்தபடி இருந்தன. மூரிவேலிக்கு மேலால் எட்டிப்பார்த்த முன்வீட்டு செல்லம்மா, "இஞ்சரப்பா வாத்தியார் பயணத்தாலை வந்து இருக்கிறார் போலை!" என்றாள். சுப்பையாண்ணைக்கும் தலைகால் புரியாத சந்தோசம். இனிமேல் அந்த அயல் களைகட்ட தொடங்கி விடும். இவ்வளவு நாளும் வாத்தியாரின் வீடுதான் வெறிச்சோடிக்கிடந்தது. இப்போ அவரும் மனைவி பாக்கியமும் கொழும்பில் இருந்து வந்து விட்டார்கள்.

அந்த கிணற்றை சுற்றி எவ்வளவு ஒற்றுமையாய் இருந்த குடும்பங்கள். கடந்த இடம் பெயர்வோடு வசதியைப் பொறுத்து தெல்லுக்கு தெல்லாய் குடி ஏறிக்கொண்டது. வசதி உள்ளவர்கள் கொழும்போடு ஐக்கியமாகி விட்டார்கள். பிள்ளையார் கோயில் திருவிழாவுக்கு மட்டும் வந்துவிட்டு போவார்கள். வாத்தியாரும் இரண்டு வருடங்களுக்கு பிறகு ஊருக்கு வந்து இருக்கிறார்.

ஓட்டோவில் இருந்து பாக்கியம் இறங்கியபின், வாத்தியாரும் இறங்கினார். அவருடைய கால் அந்த மண்ணில் பட்டபோது உடம்பில் உள்ள நரம்பு மண்டலமே ஒருமுறை சிலிர்த்தது. ஏதோ ஒருவித உணர்ச்சி.

# உயிரோடு கலந்த மண்



அந்த மண் அவர் பிறந்த மண், தவழ்ந்த மண், விளையாடிய மண். பெற்றோர் உற்றோர் பாசமுள்ளோர் காலடி பதித்த மண். இந்த மண்ணை விட்டு இவ்வளவு நாட்கள் அவர் பிரிந்ததே இல்லை! ஏனோ அவர் கண்கள் கலங்கின. மாமரத்தில் இருந்து குயில் ஒன்று கூவிக்கொண்டு இருந்தது. மாதுளையில் இருந்து அணில் ஒன்று கீச்சிட்டுக்கொண்டு இருந்தது. கோழிகள் கொக்கரித்துத் கொண்டு திரிந்தன. எங்கோ ஒரு பசுக்கன்று அம்மாவை அழைக்கும் சத்தம். இதோ அந்த பழைய சூழல்....!

முற்றத்தில் ஒரே மாஞ்சருகாக இருந்தது. பலாமரம் நிறையவே காய்த்து இருந்தது. வேலி திருத்தப்படாததால் கதியால் நிறையவே வளர்ந்திருந்தன. கிணற்றடியை பார்த்தார். துலா ஆடுகாலுக்குள் செருகுப்பட்டுக் கிடந்தது. பக்கத்திலே வைரவர் யாரோ இரண்டு பூ வைத்து இருந்தார்கள். முன்னர் இந்த முற்றத்தில் எவ்வளவு சிறுவர்கள் விளையாடிக் கொண்டு இருப்பார்கள். இப்போ வெறிச்சோடிக் கிடந்தது. "ஓய்வான காலத்தில் பேரப்பிள்ளைகள் விளையாடிக் கொண்டு இருக்க, இப்படியே ஒரு கரையாய் இருந்து பார்த்துக் கொண்டு இருக்க வேண்டும்!" என நினைத்து இருந்தார். "ம்!" எல்லாமே கனவாய் போய்விட்டது.

இப்போ அயலட்டை பெண்டுகள் எல்லாம் பாக்கியத்தோடு புதினம் கதைத்துக் கொண்டு இருந்தார்கள். "வாத்தியார் தேத்தண்ணி தாறதே! கோப்பி தாறதே, சாப்பாடு கொண்டு வரட்டே?", என்று ஆளுக்காள் கேட்டபடி. இதுகளுக்குத்தான் என்ன ஒரு, அன்பு, அக்கறை. "எனக்கு கொஞ்ச கிணத்துத்தண்ணி அள்ளித் தாங்கோ?" என்று கேட்டு வாங்கிக் குடித்தார். "மோனை உந்த சாக்குக்கட்டிலை இந்த முற்றத்திலை போட்டு விடு!" என்றவர் குரல் தழு தழுத்தது. புறங்கையை பிடரிக்கு கொடுத்தபடி மெல்ல சரிந்தார். மெல்லிய காற்று வீசிக்கொண்டு இருந்தது. இது நிஜம். எல்லாமே, எல்லாமே, அப்படியே! நம்பமுடியவில்லை! கண்கள் கலங்கின. கைகள் நடுங்கின. ஏதோ ஒரு பதட்டம்; மெல்ல கண்களை மூடினார். கடந்த இடம் பெயர்வு எல்லாரையும்தான் அலைத்து ஓய்ந்தது. இதில் வாத்தியார் மட்டும் விதிவிலக்கல்ல. சாவகச்சேரி, கிளிநொச்சி, வவுனியா என்று அலைந்து இறுதியில் கொழும்பில் உள்ள மகளோடு ஐக்கியமானார். கனடாவில் இருந்தும், இலண்டனில் இருந்தும் அவருடைய பிள்ளைகள் பணம் அனுப்பி இருந்தார்கள். அவருக்கு வேண்டிய சகல வசதியும் இருந்தது. ஆனாலும் அங்கு தங்க கூண்டுக்குள் அடைப்பட்ட பச்சைக்கிளியாக அவர் உடலும் உள்ளமும் மிகவும் சோர்ந்து போய்விட்டது.

மீண்டும் அவரவர் இடங்களுக்கு சனங்கள் திரும்பிக் கொண்டு இருந்தபோது அங்கே போய்விடவேண்டும். என துடித்தார். ஆனாலும் என்ன செய்வது அவரது பிள்ளைகளின் அன்புக் கட்டளையை அவரால் மீற முடியவில்லை. அவருடைய வாழ்க்கையில் மிகவும் கடினமான நாட்கள் அவை. "சீ நிம்மதியற்ற வாழ்க்கை. பாக்கியத்தின்ரை முகத்தையும் ரீ.வியையும் எத்தனை நாளைக்குத்தான் பார்த்துக் கொண்டு இருப்பது!"

ஊரிலை என்றால் பிள்ளைகளுக்கு பாடம் சொல்லிக் கொடுக்கலாம். கோயிலில் கந்த புராணம் படிக்கலாம். அவரிடம் படித்தவர்கள்தான் பெரும்பாலும் அங்கு வசிப்பவர்கள். ஊருக்கே வாத்தியார் அவர். இளைப்பாறிய பிறகுகூட சும்மா இருந்து விடவில்லை அவர். வெண்கட்டிக்கு பதில் மண் வெட்டியை கையில் எடுத்தார். வயதான காலத்தில்கூட வியர்வை சிந்தி உழைத்தார். உழைப்பு வீண் போகவில்லை. பிள்ளைகள் எல்லாம் சிறப்பாய் வாழ்ந்து கொண்டு இருக்கிறார்கள்.

சித்திரை பிறந்தது. வசந்தகாலம். எப்படியாவது ஊருக்கு போய்விடுவது என்று முடிவெடுத்தார். பிள்ளைகளுக்கு மன்றாட்டமாக ஒரு கடிதம் எழுதினார்.

**எஸ்.உத்திரன்**

"பிள்ளையள் என்ரை வாழ்க்கையிலை இவ்வளவு நாளும் ஓய்வில்லாமல் உழைத்திட்டன். நான் என்னுடைய கடமைகள் எல்லாவற்றையும் சரிவரச் செய்திட்டன் என்று தான் நினைக்கிறன். அதே மாதிரி நீங்களும் என்னையும் அம்மாவையும் நல்லாய் வைத்து பாதுகாக்க வேணும் என்று நினைப்பது எனக்கு சந்தோசமாய் இருக்கு. ஆனாலும் என்ரை கடைசி காலத்தை அமைதியாகவும், நிம்மதியாகவும் செலவழிக்க விரும்புறன். அதாவது நானும் அம்மாவும் ஊருக்கு போகின்றோம். அங்கை எவ்வளவுதான் பிரச்சனைகள் இருந்தாலும் அந்த மண்தான் எங்களுக்கு நிம்மதியை தரவேண்டும். நாங்கள் எங்கை இருந்தாலும் உங்களை நினைச்சுக் கொண்டுதான் இருப்பம்!" என சுருக்கமாக முடித்து இருந்தார். எல்லாமே ஒரு கனவு போலத்தான் இருந்தது.

மாலை 5 மணி. கோயில் மணி அடித்தோய்ந்தது. "இஞ்சருங்கோ எழும்புங்கோவன். இன்னும் சாப்பிடகூட இல்லை!" என்று பாக்கியம் வாத்தியாரை எழுப்பியபோது அவர் கைகள் விறைத்து இருந்தன. நாடித் துடிப்பு அடங்கி இருந்தது. அந்த மண்ணில் இருந்து தோன்றிய உணர்வுகள் அவருடைய உயிர் அந்த மண்ணோடு கலந்துவிட்டது. அவருடைய முகத்திலே அமைதியும், நிம்மதியும் தெரிந்தது. "ஐயோ என்ரை ராசா, என்னை விட்டுப் போட்டியே?" "ராசா, ஐயா, மாமா, வாத்தியாரே!" என்னும் எத்தனையோ ஒப்பாரிகள், அழுகுரல்கள். பாவம் இவர்கள் மத்தியில் தலைவிரிகோலமாய் பாக்கியம். இனி என்ன வெளிநாட்டில் இருந்து காசுவரும். ஏதோ ஏதோ சடங்குகள் எல்லாம் நடக்கும். யாரோ ஒருவர்? கொள்ளிபோடுவார். அவர் உடம்பு வேகத்தான் போகின்றது. ஆனாலும் ஒன்று மட்டும் நிஜம்! அவர் நேசித்த மண் அவரை கைவிடவில்லை. அவ்வளவுதான்.

---

**"அன்று இரவு பன்னிரண்டு மணி. என் கணவருடன் இன்னொருவர் தள்ளாடியபடி வந்தார். நான் அறைக்குள் ஓடினேன்..."**

சுவரில் அறைந்த ஆணியாக அமர்ந்திருந்தாள் அமலா. வீடெங்கும் இருள் படர்ந்து கிடப்பதை அவள் உணர்ந்ததாகத் தெரியவில்லை. வாசல் கதவு திறந்து கிடந்தது. அவள் வீட்டுச் சந்தியில் இருந்த தெருவிளக்கு பளிச்சென்று கண்சிமிட்டியது. அமலா வீட்டுச் சுவர்க் கடிகாரம் ஏழுமுறை ஒலமிட்டு ஓய்ந்தது. 'சரக் சரக்' சுந்தரின் செருப்புக்களின் ஓசை வாசலில் தேய்ந்தது. சுந்தர் அமலாவின் கணவன். உள்ளே நுழைந்தவனை ஆச்சரியம் கௌவியது. மின் விசையை அழுத்தியவன் அதிர்ந்து போனான்.

கூடத்தின் ஒரு மூலையில் உறைந்து போயிருந்தாள் அமலா. அவள் பள்ளிக் கூடத்திலிருந்து வந்து உடை மாற்றவில்லை என்று கண்டுகொண்டான் சுந்தர். அவளுடைய கண்கள் சிவந்து கன்னமேடுகள் உப்பியிருந்தன. சுந்தர் பதறியவனாய் அமலாவை, நெருங்கி அவள் தோள்களை ஆதரவோடு அசைத்தான்.

"அமலா... உனக்கென்னாச்சும்மா. ஸ்கூல்ல ஏதாச்சும் பிறொப்ளமா?"

பலமாக இல்லை என்று தலையசைத்தாள் அமலா.

"உங்க வீட்லருந்து செய்தி ஏதாவது..?"

அதற்கும் தலையசைத்து "இல்லை!" என்றவள், தான் பாடசாலையில் இருந்து கொண்டுவந்த கைப்பை யைத் திறந்து நான்காக மடிபட்டிருந்த ஒரு கடிதத்தைச் சுந்தரிடம் கொடுத்துவிட்டு அவனை ஏறெடுத்தாள். ஓர் இதயத்தின் சிதறலில் அவன் பார்வை பதிந்தது.

"பிரியமுள்ள ரீச்சர் அவர்களுக்கு,

சுவேதாவின் அன்பு வணக்கம். இதுவே என் இறுதி வணக்கமாகி விடுமோ என்று அஞ்சுகிறேன். "தாரமும் குருவும் தலைவிதிப்படி என்பார்கள்" என் குரு நீங்களாக அமைந்ததில் நான் ரொம்ப அதிஷ்டசாலி. ஆனால் தாரம் எனக்கு எமனாக மாறும் என்று நான் நினைக்கவில்லை ரீச்சர்.

நான் கெட்டிக்காரி புத்திசாலி என்றெல்லாம் நான் படிக்கும் காலத்தில் நீங்களும், மற்றைய ஆசிரியர்களும் பாராட்டியதெல்லாம் என் ஞாபகத்தில் இருக்கிறது. என்ன இருந்தும் என்ன? பெண்ணாகப் பிறந்து விட்டால் பல துன்பங்கள் இருக்கு ரீச்சர்.

நான் கல்வி உயர்தரம் சித்தியடைந்து மருத்துவப் படிப்புக்கு தெரிவான மாணவி என்பதும் நீங்கள் அறிவீர்கள். அப்போது நீங்களடைந்த மகிழ்ச்சி என்ன அப்பா சொன்ன வார்த்தைகளால் அடிபட்டுப் போனதல்லவா?

"சுவேதா படிச்சது போதும் ரீச்சர்... இதுக்கு மேல அவபடிச்சி உத்தியோகம் பாத்து அப்புறம் மாப்பிள எங்க தேடுறது?"

அப்பா சொன்னதை எதிர்த்து நீங்கள் வாதாடிவீர்கள். நான் டாக்டராகும் விருப்பத்தை விநயமாக இழந்தேன். அப்பாவை மீறிப் பழக்கமில்லாத அம்மா. நான் தோற்றுப் போனேன்.

"எனக்கு இப்போ கலியாணம் வேண்டாம்!" என்று கண்கலங்கினேன். அதுவும் எடுபடவில்லை.

திடீரென்று ஒருநாள் அப்பா அம்மாவிடம் சொன்னதை எதேச்சையாகக் கேட்க நேர்ந்தது.

"சுவேதாவிக்கு மாப்பிள்ளை பார்த்திட்டன். நல்ல பையன். குடிபுகையில்லாதவன், தனியார் நிறுவனத்தில் வேலைபார்க்கிறான். பெயர் கஜன்."

தமிழ்நாட்டில் எனது பதினெட்டாவது வயதில் கஜனுக்கு மனைவியானேன்.

"ஐயோ பாவம்!" சுந்தர் சொல்லிவிட்டு அமலாவைப் பார்த்தான். மேலே படியுங்கள் என்று அவள் ஜாடை காட்டினாள் சுந்தர் தொடர்ந்தான்.

அமைதியான கஜனின் தோற்றத்துள் அனுகுண்டின் குணம் இருக்கும் என்று நான் நினைக்கவில்லை.

"நான் என்ன செய்தாலும் நீ ஏன் என்று கேட்கக்கூடாது!"

முதலிரவன்று என் கணவன் பேசிய முதல் வசனம் இதுதான். அவர் நேரங்கழித்து வரும் இரவுகள்தான் அதிகம். ஏன் என்று கேட்டால் உதை அடி, கேட்காமல் இருந்தால், "ஏண்டி எவ்வளவு திமிர் உனக்கு? புருஷன் வந்தா எழும்பி மரியாதை பண்ணக் கூடாதா மூலையில போய் உக்காந்திட்டா."

'பளார்.' என் கன்னம் சிவக்கும்.

வலி தாங்காமல் அழுதால் "ஏண்டி அழறே இப்ப ஒன்ன என்ன பண்ணிற்றன்?" சொல்லிக்கொண்டு தீக்குச்சியை எரித்துக் கன்னத்தில் அடையாளமிட்டு மகிழ்வான்.

"இவன் புருஷனில்ல. ராட்சதன்" சுந்தர் ஆத்திரத்தில் பல்லை நெறும்பினான்.

ரீச்சர் இதையெல்லாம் என்னைப் பெற்றவங்களுக்குத் தெரியப்படுத்த மாட்டேன். அவங்களாவது சந்தோஷமா இருக்கட்டும் என்றுதான் நடிக்கிறேன்.

ரீச்சர். அந்தப் பயங்கர இரவைப் பற்றிச் சொல்லட்டுமா?

அன்று இரவு பன்னிரண்டு மணியிருக்கும் என் கணவரின் வருகையை அழைப்பு மணி அறிவித்தது. பதற்றத்துடன் கதவைத்

# தாரமும் குருவும்



**ரூபராணி**

திறந்தேன்.

என் கணவருடன் இன்னொருவர் தள்ளாடியபடி உள்ளே வந்தார்.

சாராய நெடி எங்கும் பரவியது. நான் மிரண்டு போய் அறைக்குள் ஓடினேன். என் கணவர் என்னைத் தொடர்ந்து வந்து, "ஏண்டி ஓடறே? அவனென்ன பூச்சாண்டியா. கொஞ்சநேரம் அவனுக்குக் கம்பனிக்குடு. அவனுக்கு நான் கடனாளி. நீ அதத் தீர்த்திடு!"

சுந்தர் தன்னை மறந்து கத்தினான். "இவன் புருஷனா? ச்சே கொடியவன், காடையன்." அமலா விம்மினாள்.

"ரீச்சர் இதைக் கேளுங்கள்!" சுவேதாவின் குரல் மீண்டும் கேட்கிறது.

என் கணவர் சொன்னதைக் கேட்டு வீடதிரக் கத்தினேன். அந்தப் புதியவன் அறையின் உள்ளே வர என் கணவர் வெளியேறினார். என் போராட்டம் தோற்க பலாத்காரம் வெற்றி கண்டது. கடனும் தீர்ந்தது.

இப்போது நான்... கிழிந்த பாயில் சிதைந்துபோன பொம்மை. சில வாரங்களில் எனக்கு விடாத ஜுரம் பத்துப் பன்னிரண்டு நாளாக வாட்டி எடுத்தது. என் கணவனிடம் சொன்னேன். பனடோல் போடு சரியாயிடும் என்று சொல்லிப் போனவர் மூன்று நாட்களாக வரவில்லை. அடுத்த வீட்டு அம்மாளுடன் ஆஸ்பத்திரிக்குப் போனேன். என்னோட யூறின், ப்ளட் ரெஸ்ற் றிப்போர்ட்டுடன் டாக்டரை அணுகினேன். அவர் அதைப் பார்த்துவிட்டு ஒரு துண்டில் எதையோ எழுதித்தந்து உன் புருஷனுடன் வந்து என்னைப் பார் என்றார்.

டாக்டர் தந்த துண்டைப் பார்த்தேன்.

சுவேதா வயது 19

எச்.ஐ.வி. பொசிட்டிவ். என்று எழுதி சிவப்பு மையினால் அடையாளமிடப்பட்டிருந்தது.

நான் செத்துக்கொண்டே வாழ்கிறேன் ரீச்சர். என் வேஷம் வெளுத்துவிட்டது. நடிக்கும் திறன் என்னைவிட்டு நழுவிப் போகிறது.

என்னைப் பெற்றவர்களும் மற்றவர்களும் நிஜங்களைத் தரிசிக்கட்டும். கிட்டப்பார்வையில் தெரியும் பெண்களை வைத்து விடுதலை பேசாதீர்கள் ரீச்சர். தொலைவில் ஆங்காங்கே பெண்கள் பலிக்கடாக்களாகிறார்கள். இதில் படியாதவர்கள் என்ன படித்தவர்களுந்தான் அடக்கம்.

"ரீச்சர்...ரீச்சர்... என் குரல் கேட்கிறதா? இதற்குமேல் என் கை நகர மறுக்கிறது."

நன்றியுடன் உங்கள் மாணவி
சுவேதா.

சுந்தரின் கையிலிருந்த கடிதம் நடுங்கியது. அவன் கண்களில் இருந்தும் நீர் வடிகிறது.

---

பேரிரைச்சலை விழுங்கிய வண்ணம் தரையில் உருண்டு நின்ற விமானத்திலிருந்து சபாபதி. அருகிலிருந்த மனைவி ருக்குமணியைப் பார்த்து மென்மையாக புன்னகைத்தார். அச்சிரிப்பூடே வெற்றிக்களிப்பினிழைகளை மிக நுணுக்கமாக கண்டறிந்த அவர் மனைவி 'திருப்திதானே' என்பது போல ஆசுவாச மூச்சை விட்டவளாக எழுந்து கொண்டாள். பாக்குகளைத் தேடியெடுத்து அவர் கைகளிரண்டில் தந்தவள் தன்னுடையதை தோளில் மாட்டியவளாக கடந்து வெளியேறினாள்.

பலாலி விமான நிலையத்து தரையில் காலூன்றியபோது சபாபதியின் மனசுள் பல சிறகுகள் பட், பட்டென்று விரிந்து கொண்டதில் பரவசமாகிப் போனார். துள்ளிக் குதித்து, வட்டமடித்து, சீட்டியடித்து ஓடும் வேகம். அவரது கால்களுக்கு அப்படியொரு உற்சாகத்துள்ளலில் தம்மை மறந்து சுற்றும்முற்றும் பார்வையைப் பரப்பி நின்றார் சிறு குழந்தையின் ஆர்வத்துடன்.

எத்தனை வருடப் பிரிவின் பின்னர் எத்தனை மன வழுத்தங்களின் பளுவையிறக்கி வைக்கவென்று, எத்தனை ஆர்வத்துடன் வந்திறங்கியுள்ளார். அந்த சுமைகளை, அந்த மூச்சுக்களை, சுமந்ததில் நைந்துபோன இதய நாளங்களுக்கு பலமும், புத்துணர்வும், பிறந்த மண்ணில் தானென்பதை புரிந்துகொண்டபோது, இதயத்து ஏக்கங்கள் அவரை எப்படி வாட்டின.

தொண்ணூற்றைந்து இறுதியில் யாழ் நகரம் இராணுவ வசமாகியபோது, மண்ணைவிட்டு, மனிதர்களை பிரிந்து, இளைய மகனையிழந்து இறுக்கிய துயர முடிச்சுக்களின் வலிகளோடு கொழும்புக்கு வந்தவர் மகளுடன் கூலிக்கு வீடெடுத்துப்பட்ட அவஸ்தைகள்.

பணமாக கொட்டியளந்தாலும், நிம்மதியாக இருக்க முடியாத வீட்டுக்காரரது கண்டிப்புக்கள், கறார்களுக்கிடையில் அவர்களுக்கு கூழைக்கும்பிடு போட்டு, மகள் குழந்தைகளுடன் வீடென்கிற பெயரில் ஆட்டுப்பட்டி போன்ற அடைப்புக்குள் முடங்கிய பொழுதுகளில் சொந்த வீட்டைப் பார்த்துப் பார்த்து, கட்டிவிட்டு கால்நீட்டவும் முடியாத கட்டடத்துள் காற்றுக்காக ஏங்கியவண்ணம், கனவுகளற்ற, நினைவுகள் முட்டும் தூக்கமில்லாத பொழுதுகளை புழுக்கங்களுடன் கழித்த நாட்கள் இன்னுமதிக முடிச்சுக்களாக மனசில் விழுந்தன.

ருக்குமணி மருமகளின் பிரசவத்துக்காக ஃபிரான்ஸ் பயணமாக, அவர் கொழும்பிலேயே தங்கிக்கொள்ள வேண்டியதாகியது. ஒரு வருடத்தில் அவருக்கும் மகன் விஸா அனுப்பியிருந்தான். போனார் எதிர்பார்ப்புக்களுடன். ஏமாற்றம் காத்திருந்தது.

சே! வாழ்க்கையா? எனுமளவிற்கு மனசைக் கட்டிப் போட்டவர்களாக, தாமுண்டு, வேலையுண்டு ஓட்டம், ஓட்டம், எதைப்பிடிக்க, பணத்தை துரத்திப் பிடிக்க அப்படியொரு ஓட்டம் ஓடுகிறார்கள். கொழும்பில் மகளுடனிருந்த

**"உணர்வோடு கலந்து,கரைந்துவிடத் துடித்த மண்ணின் வாசனை இடமாற்றங்களால் இதயத்தை நோகடித்த நிகழ்வு"**

சின்ன வீட்டிற்குள் பெரிதாய் விரிந்த மனக்குமுறல்கள், தாபங்களை பகிர்ந்துகொள்ள முடியாதவர் வெளிநாட்டில் மகன் வீட்டில் சுமைகளை இறக்குமெண்ணக் கனவுகளுடன் காலடிவைத்தவர் தனக்குள்ளே சுருண்டார்.

ஒன்றா இரண்டா அத்தனை இழப்புக்களைக் கண்டு களைத்துப் போய்க்கிடந்தது இதயம். எங்காவது ஏதாவதொரு இடத்தில் இறக்கவொரு ஏகாந்தம் தேவைப்பட்டது. அது மகள் வீடாயிருந்தாலென்ன, மகன் வீடாயிருந்தாலென்ன மனம் கரைய, வாய்விட்டு அழுதுதீர்த்துவிட

# மண்ணைத் தேடி...



**ஜெ. சூரியன்**

உணர்வுகள் தவியாய்த் தவித்துக் கொண்டிருந்தன. ஆழத்தில் கிடக்கும் நினைவுச் சுமையை மேலெடுத்து, ஊற்றாக உயிருட்டமாக அனுபோட்டுப் பார்க்கும் தீராத வேட்கை வாட்டிக் கொண்டிருந்ததில் நிறைய எதிர்பார்ப்புக்கள் இருந்ததொன்றும் ஆச்சரியமில்லை.

எங்காவது தனிமையில் நினைவுகளை மீட்டி உணர்வோடு கலந்து, கரைந்துவிடத் துடித்த மண்ணின் வாசனை. இடமாற்றங்களினால் இதயத்தை நோகடித்த நிகழ்வுகளென்று எத்தனையோ. ஆனால் அங்கேயும் அவர் தேடிய தனிமை கிடைக்கவில்லை. எப்போ நாட்டுக்குத் திரும்பப் போகிறேன் என நிமிஷமும் துடிக்கவைத்தன மாறாக.

மேல்துண்டும், வேஷ்டியுமாக, வேப்பமரத்து நிழலில், சாய்வு நாற்காலியில் கண்மூடும் சுகத்தினை அதிகமாக்கும் மெல்லிய தென்றலின் வருடல் வந்து, மோதி, வெறும் பனி முகடுகளில், கவிந்த மேக இருளில் பொழுது தெரியாத விடியல்கள் விரக்தியை தூண்டிவிட்டன. மூடிய கண்ணாடிகளின் பருமனுக்கப்பால் பார்க்கும் பூமி இன்னும் இருளோடு கலந்து மனசை இன்னுமதிக இருட்டிலமுக்கும், சூழ்நிலைக் கைதியாக மனவுணர்வுகள் சிறைப்பட்டுத் தத்தளித்ததில் அவரது சுதந்திரமான மூச்சுக்கள் எதற்கோ ஏங்கின.

மகன் அவரது பிடிவாதத்தினால் திருப்பியனுப்ப சம்மதித்தானென்பதைவிட, அவரது மனசுள்ளே புதைந்து கிடந்த நியாயமான தாபங்களை புரிந்து கொண்டதில் சம்மதித்தானென்பதே உண்மை.

"டேய் ராஜா. நாம என்னதான் மாடிமனையிலை வசிச்சாலும், தனிவண்டிவைச்சு சொகுசாக வாழ்ந்தாலும், ஊரும் அந்த எங்கள் நாட்டு குடிசைக்கும், குயிலின் கூவலைச் ஏந்திவரும் காற்றுக்கும் ஈடாகாது. ஏன்னா அது நம்முடையது அந்த நம்முடையதென்கிற உணர்வே, நம்மனசுள் ஒரு பரவசத்தென்றலின் வருடலாக இதம் கொடுக்கிறது. சுதந்திரமென்பது எத்தனை பெறுமதி வாய்ந்ததென்று இப்படியான அலைவுகள் அவமதிப்புக்கள் ஒன்றிவாழும் நிலைமையிலேற்படும் வேதனைகளில்தான் பெரிதும் தெரிகிறது. என்ற தந்தையின் வார்த்தைகளினூடே தெரிந்த அர்த்தங்களில் அவரது தவிப்பையுணர்ந்தவனாக விடைகொடுத்தான்.

இதோ இப்போ தம் பூமியின் தழுவலில் மெய்மறந்தவராக, பரவசக் களிப்பில் பாதி சுமை குறைந்தவராக நின்றார். அந்த சுகத்தை துண்டித்தாள் மனைவி ருக்மணி தோளில் தட்டி. அவளுடன் நடந்தார்.

சோதனைகள் முடிந்து வெளியே வருவதற்குள் போதும் போதுமென்றாகிவிட்டது. ம். எல்லாவற்றுக்கும் சேர்த்து ஒரு பாட்டம் வீட்டில் தனிமையில் கத்திப் பேசி திட்டித் தீர்த்துவிடலாமென மனசுள் கறுவியவராக வெளியேவந்து தமது ஊருக்குப் போகும் பஸ்ஸிலேறி அமர்ந்து கொண்டார். ஒவ்வொரு சென்றி பொயின்டிலும் இறங்கி ஏறி ஐ.சி.காட்டி, பாதி புரிந்தும் புரியாத சிங்களத்தில் பதில் தந்து கிட்டத்தட்ட ஒன்பது தடைமுகாம்களில் விவரம் கொடுத்து, சலித்துப் போனவர் மனசில் ஆ...இவையெல்லாம் வீட்டில் போய் உட்கார்ந்து காலை நீட்டி காற்றுவாங்க காணாமல் போய்விடுமென்று கரணம் போட்டது.

மெயின் ரோடோடு இருந்த அவரது வீட்டு முன்னால் இறக்கிவிட்ட பஸ் கண்களைவிட்டு மறைந்துபோக பார்த்து நின்றார். நிஜமா இது. இப்படியொரு பரவசந்திலிதுவரை பறந்ததாக நினைவில்லை. என்னவொரு சுகம். எங்கேயெல்லாம் போய்வந்தார். எங்குமே தொடாத இந்த மெய்மறந்த போதை எப்படி இங்கு..!? ஓ! இதுதான் நம்முடையதென்கின்ற உணர்வின் உந்துதலா? சுற்றிச் சுழன்று பார்வையை ஓடவிட்டவர் பதறினார்.

எத்தனையழகாக இளைய மகன்பார்த்து பார்த்து வளர்த்திருந்தான் அந்த கொத்து மல்லிச் செடியை. வாசலோடு வெளியே வேண்டாமென்றபோது கேட்கவில்லை. வெளிக்கேட்டின் வளைவில் இரண்டு பக்கங்களிலும் அடர்த்தியான பச்சையிலைகளின் மீது கொத்தாக, வெள்ளை வெளேரென்று பூக்கள். உண்மையில் அவரை கலையுணர்வு அத்தமானதுதான்.

அந்த செண்டுமல்லியின் மேல் கொப்புகளெல்லாம் முறிந்து, கருகி, ஆடுமாடு கடித்தது போக, அப்பப்ப பெய்கிற மழையை வாங்கி அடியில் சில துளிர்களைத் தந்து தண்டுக் குவியலாக நின்றது. அதன்மேலே உள் மதிலோரமாக நின்ற தென்னை மரத்திலிருந்து விழுந்து கிடந்த ஓலை அவரது மனசை என்னவோ செய்தது.

"வந்ததும், வராததுமாக உங்களது பணம் சேர்க்கும் வேலையை ஆரம்பிச்சாச்சா ஓலை, மட்டையளை பிறகு சேர்க்கலாம். முதலிலை உள்ளவாங்க." எனக்கூறிய வண்ணம் திரும்பிய ருக்மணி கொஞ்சமும் எதிர்பார்க்கவில்லை அப்படியொரு நிகழ்ச்சியை.

பைகளை கீழே வைத்த சபாபதி, ஓலையை எடுக்கவென ரோட்டோடு நடந்து மதிலோரமாக மண்டிக்கிடந்த செடிகளை மிதித்து அடிமட்டையை எக்கிப்பிடிக்க குனிந்தார். அவ்வளவுதான் இதுவரை சேர்த்து வைத்திருந்த மனக்கிலேசங்களத்தனையும் ஒட்டு மொத்தமாக ஒரே சொல்லாக வெளியேற்றும் வார்த்தை சிதறலாக "ஐயோ!" வென்ற அலறல் சபாபதியின் அடிவயிற்று மூச்சுக்களை முறுக்கிவெளியே கதறலாக பிறந்தது. கால்கள் சிதற கண்ணிவெடியின் சத்தத்தில் அவரது தாபங்களின் கூக்குரல் கரைந்து காணாமல் போக இரத்த வெள்ளத்தில் துடித்துக்கொண்டு கிடந்தார்.



படிப்பகம்

# இது இல்லையென்றால்....



**மோ**கம் என்பது
ஒரு தாகம்!
போகம் என்பது
ஒரு வேள்வி!
காமம் என்பது
ஒரு வேகம்!
உலகம் உள்ளவரை
காமம்
இருக்கும் என்பதுதான்
உண்மை!
காற்றடித்த பை
என்பர் உடலை!
கட்டை என்றுரைப்பர்
உடலை!
ஓட்டைப் பாத்திரம்
என்றுமுரைப்பர் உடலை!
காற்றுப் போகும்வரை
தேகம் தினவெடுக்கும்!
கட்டை சாயும்வரை
உணர்ச்சி கொப்பளிக்கும்!
ஓட்டைப் பாத்திரத்தில்
உள்ளது தீரும்வரை
ஈரம் தொடர்ந்திருக்கும்!
ஆணுக்குப் பெண்
வேண்டும்!
பெண்ணுக்கு ஆண்
வேண்டும்!
பூ இன்றி
காய் இல்லை!
காய் இன்றி
கனி இல்லை!
ஆண் இன்றி
பெண் இல்லை!
பெண் இன்றி
ஆண் இல்லை!
போகம் இல்லையெனில்
உலகம் சுடுகாடு!
காமம் இல்லையெனில்
உலகம் வெறும் கூடு!
காற்றின்றி உலகம்
இயங்காது!
காமம் இன்றியும்
உலகம் இயங்காது!
ஆண் இரும்பு
பெண் காந்தம்!
ஒன்றை ஒன்று
கவர்வது இன்பம்!
ஒன்றிடம் ஒன்று
இழப்பதும் இன்பம்!
ஒன்றில் ஒன்றை
விதைப்பதும் இன்பம்!
ஒன்றுக்குள் ஒன்றாய்
உணர்வதும் இன்பம்!
சிற்றின்பம் என்பது
மெத்தப் பொய்!
பேரின்பம் என்பதே
மெத்தப் பொருத்தம்!
மலரினில் வண்டு
மதுவருந்துதல் இன்பம்!
கனியினில் அணில்
உணவருந்துதல் இன்பம்!
கொய்யாவைக் கிளி
கொத்துதல் இன்பம்!
கரும்பினில் எறும்பு
மொய்ப்பது இன்பம்!
பலாவை ஈக்கள்
பதம் பார்ப்பது இன்பம்!
அறுசுவை உணர்ந்து
ஐம்புலன் மகிழும்
தேக சங்கமம்பேரின்பம்!
கடலில் நதி
கலப்பது பேரின்பம்!
மண்ணோடு நீர்
கலப்பது பேரின்பம்!
பெய்த மழை
பூமிக்குள்
கலப்பது பேரின்பம்!
கலப்பு இல்லையேல்
புதிது முளைக்காது!
கலப்பு இல்லையேல்
புதுமை பிறக்காது!
கலப்பு இல்லையேல்
மாற்றம் இருக்காது!
கலப்பு இல்லையேல்
இயக்கம் தொடராது!
கலப்பு அவசியம்
கலப்பது இரகசியம்!
கலப்புக்கு
நெம்புகோல் காமம்!
கலப்பதற்கு
ஊக்குதல் மோகம்!
கலப்பதன்
உச்சம்தான் யாகம்!
மன்மதன் அம்புகள்
பறக்கும்!
மஞ்சத்தில் வம்புகள்
நடக்கும்!
நெஞ்சத்தில் போர்க்களம்
பிறக்கும்!
கொஞ்சத்தான் தேகங்கள்
துடிக்கும்!
அஞ்சத்தான் செய்யும்
மஞ்சம்!
பாரத்தாலும்
காமப் பரதத்தாலும்
அஞ்சத்தான் செய்யும்
மஞ்சம்!
தேகம் வெறும் கூடு
என்பது பொய்தான்!
தேகம் பெரும் ஏடு
என்பது மெய்தான்!

# இலக்கிய நயம்

**தருவது ரசிகன்**

அழுக்குடம்பு
என்பர் சித்தர்!
காமத்தின் மன்றத்தில்
அமுதக் குடமாகும் தேகம்
அள்ளிக் குடிப்பர்
தீரும்வரை தாகம்!
உடம்பெல்லாம் மாயும்
உடம்பெல்லாம் மாயம்!
காற்றடித்த பையல்ல
காற்றில் பறக்கும் பை!
'தேன் சொரியும்
பொழுதுகள்!
தேவ சுகம்
காணுங்கள்!
தாகமெல்லாம் தீருங்கள்
தேகமெல்லாம் நனையுங்கள்!'
பஞ்சப் பொதியாக
தேகங்கள் மிதக்க
சிந்தைக்குள்
ஜாலங்கள் புரியும்!
அழுக்குடம்பை
அழகாக மாற்றுவது காமம்!
பொய்யுடம்பை மெய்யாக்கி
போற்றவைப்பது காமம்!
நாற்றமடிக்கும் உடலை
நறுமணமாக்குவது காமம்!
மாரனின் லீலைகளுக்கு
தோரணம் கட்டுவது காமம்!
மண்ணுலகம் சிறக்க
மன்மதன் நடத்துவது காமம்!
மையலால் உலகை
மெய்மறந்து ரசிப்பதும்
காமம்! காமம்! காமம்!
இதனால்தான் பொய்கையார்
என்னும் தமிழ்ப் புலவர்
பின்வருமாறு போற்றுகிறார்
மன்மதனையும்! காமத்தையும்!

"அழுக்குடம்பு யாத்தநீர் மெல்லியலை ஆணம்
முழுக்காட்டி மன்றின் முன் கைத்தாக்
-குழி இக்கூடல்
என்னே செறிநாமம் பூட்டும் இயல்மாரன்
மன்னரசால் மாண்பூப்பு உலகு"

# சிந்தியா பதில்கள்

✻ காதலுக்கு கண் இல்லை என்பது உண்மையா?

எம். ரஸாக், மாத்தளை.

காமத்துக்குத்தான் கண் இல்லை.

மேல் நாடொன்றில் பூங்கா ஒன்றில் இரவு நேரத்தில் பெண் ஒருத்தியை பலாத்காரமாக முத்தமிட்டான் இளைஞன்.

மறுநாள் அவனை அடையாளம் கண்டு பிடித்துவிட்டார் பெண்ணின் தந்தை.

அவர் கோபத்தோடு அவனிடம், "நேற்றிரவு அந்த இருண்ட மூலையில் வைத்து என் மகளை முத்தமிட்டாயா? நியாயமா?" என்று கேட்டார்.

இளைஞனும் வருத்தத்துடன்; "எனக்கும் வருத்தமாகத்தான் இருக்கிறது. இன்றுதான் அவளை பகல் வெளிச்சத்தில் பார்த்தேன். என்ன முட்டாள்தனமாக நடந்திருக்கிறேன் நேற்றிரவு!" என்று கூறினான்.

✻ யாழ் பல்கலைக்கழக வெள்ளிவிழா மலர் தனியான ஆங்கிலத்தில் வெளியிடப்பட்டுள்ளதே?

இ. மலரவன், யாழ்ப்பாணம்.

அடிமைப்புத்தி போகாதய்யா! தமிழ் மக்களது விமோசனத்துக்காக எண்ணற்ற விலை கொடுத்த மண்ணிலிருந்து, தமிழைத் தூக்கி எறியும் அடிமைத்தனமான சிறு கூட்டம் இருப்பது கவலைக்குரியது! தமிழில் பேசுவதற்கே வெட்கப்படும் பேராசிரியர்கள் சிலரது வேலைதான் இது. சிங்களப் பல்கலைக் கழகங்கள் தனிச் சிங்களத்தில் மலர்கள் வெளியிட்டு மொழிப் பற்றை காண்பிப்பதை நம்மவர்கள் பின்பற்ற வேண்டும்!

✻ மூன்றில் இரண்டு பெரும்பான்மை கிடைத்தால் மூன்று மாதத்துக்குள் இனப் பிரச்சனைக்குத் தீர்வு காண்பதாக ஜனாதிபதி கூறியுள்ளாரே?

எஸ். நிர்மலராஜ், கொழும்பு-06.

மூன்றில் இரண்டு கிடைக்காது போனால் மேலும் ஐந்தாண்டுக்கு கோவிந்தா தானா? அது போக எப்படித் தீர்ப்பேன் என்று கூறவில்லைத்தானே? ஜே.ஆர். மாவட்ட சபையைக் கொடுத்துவிட்டு இனிமேல் தமிழர்களுக்கு பிரச்சனையே இல்லை என்று கூறினார் அல்லவா!

✻ சிந்தியா! எதிர்க்கட்சித் தலைவருக்கு ஜனாதிபதி எழுதிய கடிதம் பற்றி உமது அபிப்பிராயம்?

க. ராமநாதன், வவுனியா.

இப்படிக் கடிதம் எழுதியதும், அதனைச் செய்தி ஊடகங்களுக்கு கொடுத்ததுமே பிரசார உத்திதானே! முதலில் வஞ்சகமாய் புகழ்ந்துவிட்டு பின்னால் பிளந்து கட்டிவிட்டார்!

✻ இலங்கையில் 40 ஆயிரம் பேர் போதைப் பொருளுக்கு அடிமையாக உள்ளார்களாமே?

சி. கவிதா, கல்கிசை.

இதைவிட மோசமான பேரினவாதப் போதைக்கு பல இலட்சம்பேர் அடிமைகளாக உள்ளார்களே!

✻ பாகிஸ்தானில் இராணுவ ஆட்சி ஏற்பட்டுள்ளது நன்மையா? தீமையா?

எம். பாருக், மாவனல்லை.

பாராளுமன்ற ஆட்சி இருந்த போதும், இராணுவம்தான் தீர்மானிக்கும் உரிமை உடையதாக இருந்தது. இப்போது நேரடியாக பொறுப்பேற்றுள்ளது; அவ்வளவுதான் வித்தியாசம்.

சில மாதங்களுக்கு முன்னர் ஒரு கேள்விக்குப் பதிலளிக்கும்போது 'நவாஸ் ஷெரீப் எதனையும் இராணுவத்துக்கு மாறாகச் செய்ய முடியாது. 'செய்ய நினைத்தால் தூக்கியெறிந்து விடுவார்கள்' என்று கூறியிருந்தோம், ஞாபகமிருக்கிறதா?!

✻ இலங்கை கிரிக்கெட் வீரர்களில் தற்போது முன்னணியில் நிற்பவர் யார்?

கே. தேவநேசன், மொரட்டுவ.

கலுவிதாரண! கல்லுமாதிரி நிற்கிறார்!

✻ தமிழ்ப் பட உலகில் நம்பர் வன் நடிகை யார்? மீனா, சிம்ரான், ரம்பா? காரணம்?

ஆ. ஜெயசங்கர், பதுளை.

இதற்கு 'இந்திய டுடே' கூறிய கருத்தைத் தருகிறேன்; மீனாவுக்கு வயதாகிவிட்டது! ரம்பாவிடம் கவர்ச்சி மட்டுமே இருக்கிறது! சிம்ரானிடம் துடிப்பும் இருக்கிறது, நடிப்பும் இருக்கிறது. ஆகவே முதலிடம் கிடைத்திருக்கிறது!

✻ பிரியங்கா, சோனியா, இருவரில் யாருக்கு மதிப்பு அதிகம்?

க. இந்துமதி, பண்டாரவளை.

சந்தேகமே வேண்டாம், பிரியங்கா! அவர் ஒருநாள் பிரதமராவார் பாருங்கள்!

✻ சிந்தியா! அழகு பார்ப்பவர் கண்ணிலா? பெண்ணிலா? (பதில் சொல்லாவிட்டால் தலை வெடிக்கும்)

ம. ரமா, அம்பாறை.

வரருசி என்றொரு புலவர் இருந்தார். அவர் காட்டு வழியே போய்க் கொண்டிருந்த போது ஓர் அரக்கன் வழிமறித்தான்.

"நான் கேட்கும் கேள்விக்கு சரியான விடை தந்தால் உம்மை விட்டுவிடுவேன். இல்லை என்றால் உம்மைக் கொன்றுவிடுவேன்!" என்று மிரட்டினான்.

"என்ன கேள்வியப்பா?" என்று கேட்டார் புலவர்.

"நீர் வாழ்ந்த நகரத்தில் எந்தப் பெண் மிகுந்த அழகானவள்?" என்று கேட்டான்.

"எந்தப்பெண்ணுமே அவளை விரும்பும் ஆடவனுக்கு அழகாகத்தான் காட்சி அளிப்பாள்!" என்றார் புலவர்.

அரக்கன் மறைந்துவிட்டான்.

✻ சிந்தியா! சாமியார்கள் பற்றிய கதை சொல்லி நீண்டநாள் ஆயிற்றே?

கே.வி. கிருபானந்தன், அவிசாவளை.

கவியரசு கண்ணதாசன் சொன்ன கதை:

திருக்கயிலாய பரம்பரை, செவ்வூர் ஆதினம், சைவ சிகாமணி சம்பந்த சுவாமிகள் மரணத்தறுவாயில் இருந்தார்.

அவரை வழியனுப்புவதற்காக சிஷ்யர்கள் கூடியிருந்தார்கள்.

ஒவ்வொரு சிஷ்யனும் சம்பந்த சுவாமிகளைப் பற்றி புகழ்ந்து பேசினான்.

"சுவாமிகளைப் போல ஆண்மையை அடக்கிக் கடும் விரதம் இருந்து நைஷ்டிக பிரமச்சாரியாக வாழக்கூடியவனே அடுத்த பட்டத்திற்கு வரவேண்டும்!" என்று ஒவ்வொரு சிஷ்யனும் பேசினான்.

"அவரைப் போல எந்தப் பெண்ணையும் ஏறெடுத்துப் பார்க்காதவன் யார்?" என்று கேள்வி எழுந்தது.

"நான் தான்!" என்று கத்தினான் சிஷ்யன் ராமானந்த சுவாமி.

"இல்லை, நான்தான்!" என்று கத்தினான் சிஷ்யன் சூடாமணி சுவாமி.

"இல்லை இல்லை நானேதான்!" என்று கத்தினான் பிரமானந்த சுவாமி.

"உஷ்! சத்தம் போடாதீர்கள். சூடாமணி சுவாமிதான் அதற்கு இலாயக்கானவன்!" என்றார் சாகக்கிடந்த சம்பந்த சுவாமி.

"எப்படிச் சொல்கிறீர்கள்?" என்று ஒலமிட்டார்கள் மற்ற சிஷ்யர்கள்.

"அவன் என் மகன்!" என்று கூச்சலிட்ட சம்பந்த சுவாமிகளின் ஆவி அமைதியாகப் பிரிந்தது.

✻ ஜனாதிபதித் தேர்தலில் தமிழர்கள் யாரை ஆதரிக்கலாம்?

எல். சேந்தன், கொழும்பு-12.

ஒரு தமிழ் பேசுபவர் போட்டியிட்டால், இரு பெரும்பான்மை கட்சிகளுக்கும் எதிர்ப்பைக் காண்பிக்க அவருக்கு புள்ளடி போடலாம். உலகுக்கு நம் உணர்வைக் காட்ட அது ஒரு வழியுமாகலாம்.

✻ ஆளும் கட்சியும், ஐ.தே.கட்சியும் இணைந்தால் எப்படியிருக்கும்?

இ. வைகுந்தன், கனடா.

உலகுக்கு முன்பாக 'ரீல்' சுற்றிக் காட்டியபடி தமிழ் பேசும் தரப்பின் தலையில் உலக்கையால் அடிப்பார்கள்.

✻ தமிழ்க் கட்சிகள் எல்லாம் ஒன்றுபட்டு அரசை எதிர்த்தால் என்னாகும்?

பா. விஸ்வநாதன், மன்னார்.

சூரியன் மேற்கே உதித்து கிழக்கே மறையும்.

✻ கொழும்புக் கைதுகளுக்கு தொல்லை தவிர்ப்புக் குழு விளக்கம் கேட்கிறதாம்? இது எப்படி இருக்கிறது?

சு. நல்லைநாதன், மட்டக்குளி.

வகை தொகையற்ற கைதுகள் செய்து முடித்து பொலிசாரும், படையினரும்கூட களைத்துப் போய் ஓய்வுபெறும் இடைவேளை வரும்பாருங்கள். அப்போதுதான் விளக்கம் கேட்பதுபோல கேட்டுவிட்டு, ஏதோ அதனால்தான் கைதுகள் ஓய்ந்தது போல திரிப்பார்கள் பாருங்கள் கூத்து! யப்பா, பொருத்தமான குழுவைத்தான் அம்மையார் நியமித்திருக்கிறார்!



'ஜோடி' படத்தில் பிரசாந்த்-சிம்ரான்

✻ ஐஸ்வர்யா நடித்த 'தாளம்' எப்படி?

எ.்.்.. இன்சமாம், புத்தளம்.

நம் இரசனைக்கு ஏற்ற கதையல்ல! பாடல் காட்சிகளுக்காக வேண்டுமானால் இரசிக்கலாம்.

ஸ்போர்ட்ஸ்

## புதிய நம்பிக்கை நட்சத்திரம்



**இ**ந்தியாவின் கர்நாடக மாநிலத்தில் இருந்து பல கிரிக்கெட் வீரர்கள் தோன்றிக் கொண்டிருக்கிறார்கள். ஜி.ஆர். விஸ்வநாத்தில் இருந்து தற்போது இந்திய அணியில் பிரகாசித்து வரும் ராகுல் ட்ராவிட் வரை. ஸ்ரீநாத், கும்ப்ளே, பிரசாந்த், ஜோஷி போன்றவர்களும் கர்நாடகக்காரர்கள்தான்.

இவர்களைத் தொடர்ந்து கடைசியாக இந்திய அணியில் இடம் பிடித்திருக்கும் கர்நாடக வீரர் விஜய் பரத்வாஜ். இவரின் வயது 22. சகலதுறை ஆட்டக்காரர்.

சமீபத்தில் கென்யாவின் தலைநகர் நைரோபியில் நடந்த 4 நாடுகள் போட்டித் தொடரில்தான் பரத்வாஜ் அறிமுகமானார். இப்போட்டித் தொடரில் இவர் 10 விக்கெட்டுக்களைக் கைப்பற்றினார். 85 ஓட்டங்களை எடுத்தார். இதில் 3 முறை அவுட் இல்லை.

இவற்றையெல்லாம் விட முதல் பங்கேற்ற போட்டித் தொடரிலேயே தொடர் நாயகன் விருதைப் பெற்று சாதனையும் படைத்துள்ளார். இவ்வாறு பல பெருமைகளைப் பெற்றாலும் பரத்வாஜ் சந்தோஷமின்றி இருக்கிறார். இறுதிப் போட்டி வரை வந்து கோப்பையை இந்திய அணி வெல்லாததே அதற்குக் காரணம்.

இந்தியாவின் இந்த நம்பிக்கை நட்சத்திரம் பற்றிப் பெருமை கொள்ளக்கூடிய இன்னொரு விடயம்- இவரால் தொடக்க ஆட்டக்காரர் முதல் கடைசி இடவரிசை வரையிலும் சிறப்பாக 'ஆட முடியும் என்பதுதான்.

## பயிற்சியாளராகச் செல்வாரா குரோஞ்ச்?

**உ**லகின் தலை சிறந்த அணிகளில் ஒன்றாக தென்னாபிரிக்கா அணி திகழ்கிறது. இந்த அணியை கட்டுக்கோப்பாக வைத்திருப்பவர் 30 வயதான சகலதுறை வீரர் ஹன்னி குரோஞ்.

இம்மாத இறுதியில் இங்கிலாந்து சென்று 5டெஸ்ட் போட்டிகளில் தென்னாபிரிக்க மோதவுள்ளது. இந்நிலையில் தென்னாபிரிக்க கிரிக்கெட்சபை ஓர் அறிவிப்பை வெளியிட்டது. 'இங்கிலாந்துடன் நடைபெறும் 2வது டெஸ்ட் போட்டிக்குப் பின் கப்டன் பதவியை மாற்றுவது குறித்து ஆலோசிக்கப்படும்' என்பதே அந்த அறிவிப்பு.

இந்த அறிவிப்பு குரோஞ்சிற்கு அதிருப்தியைக் கொடுத்தது. இந்நேரத்தில் இங்கிலாந்து கவுண்டி அணிகளில் ஒன்றான கிளாமோர்கன் அணி தனக்கு பயிற்சியாளராக வரும்படி குரோஞ்சிற்கு அழைப்பு விடுத்தது.

கிளாமோர்கன் அணிக்குப் பயிற்சியாளராகச் செல்ல விருப்பம் தெரிவித்த குரோஞ், தென்னாபிரிக்க கிரிக்கெட் சபையிடம் அனுமதி கோரினார். குரோஞ்சின் கோரிக்கை மறுக்கப்பட்டுவிட்டது.

"அடுத்த உலகக்கோப்பை (2003ம் ஆண்டு) வரை குரோஞ் தான் தென்னாபிரிக்க அணியின் கப்டன். அவர் பயிற்சியாளராக இங்கிலாந்து சென்றால் தாய் நாட்டுக்காக விளையாடுவது தடைப்பட்டுவிடும். இதை உணர்ந்த குரோஞ்சும் தன் முடிவை மாற்றிவிட்டார்," என்று தென்னாபிரிக்க கிரிக்கெட் சபையின் நிர்வாக இயக்குநர் அலி பச்சர் கூறியுள்ளார்.

## ஓய்வு பெறுகிறார் லார்சன்

**நி**யூஸிலாந்து கிரிக்கெட் அணியின் முன்னாள் கப்டன் கெவின் லார்சன ஓய்வு பெறுவதாக அறிவித்துள்ளார். 37 வயதான லார்சன் உடல் நலக்குறைவு காரணமாக கிரிக்கெட்டில் இருந்து விலகுவதாகத் தெரிவித்துள்ளார்.

நடந்து முடிந்த உலகக் கோப்பைப் போட்டியில் தொடர் நாயகன் விருதை வென்றவர் தென்னாபிரிக்காவின் லான்ஸ் குளுஸ்னர். இவர் உலகக்கோப்பைப் போட்டித் தொடரில் ஒரு முறை மட்டுமே அவுட்டானார். அவரை அவுட்டாக்கியவர் லார்சன்.

1990ம் ஆண்டு இந்தியாவுக்கு எதிராக நியூஸிலாந்தில் உள்ள டுனடின்னில் நடைபெற்ற ஒரு நாள் போட்டியில் அறிமுகமானார் லார்சன். பின் 1994ல் நியூஸிலாந்து அணிக்கு கப்டனாகப் பதவியேற்றார்.

121 ஒருநாள் போட்டிகளில் விளையாடியுள்ள லார்சன் 113 விக்கெட்டுக்களை வீழ்த்தியுள்ளார். 1994 முதல் 1996 வரை 8 டெஸ்ட் போட்டிகளில் பங்கு பற்றி 8 விக்கெட்டுக்களை வீழ்த்தியுள்ளார்.

## இவர்தான் அவர்



சத்யராஜ்




www.padippakam.com

# திருமறை தரும் பொது நெறி

## புதிய ஆகமம் 23

ஆண்டவருடைய திருவுள்ளப்படி பூவுலகில் மாநிடனாகப் பிறந்து அரும்பெரும் போதனைகளின் மூலம் மக்களின் மனத்தை இறைவன் பால் இட்டுச் சென்றவரான இயேசு பிரான், இவ்வுலகை விட்டுப் பரலோகம் செல்லும் காலம் வெகுவிரைவாக வந்து கொண்டிருந்தது. இவ்வுண்மையை இயேசுபிரான் முன்கூட்டியே உணர்ந்து கொண்டார்.

தமது இறுதிக் காலத்தில் தமது சீடர்கள் அனைவரும் தம்முடனேயே இருக்க வேண்டும் என்றும் விரும்பினார். தம்முன் திரண்டிருந்த மக்களுக்கான அறிவுரைகளைக் கூறிமுடித்த பின்னர், தமது சீடர்களை தன்னிடம் அழைத்தார். "பாஸ்கா திருநாள் இன்னும் சில நாட்களில் வரவிருக்கிறது. அவ்விழாக்களின் போது, மாநிட மகன் சிலுவையில் அறையப்படுவதற்கெனக் காட்டிக் கொடுக்கப்படவிருக்கிறார்!" என்றார்.

# கடைசி இராப்போசனம்

முன்பு பல தடவைகள், தமது சாவுக்கான காலம் நெருங்கி வந்து விட்டதாகக் கூறியிருந்தார். ஆனால் இப்பொழுது இயேசுபெருமான் தமது முடிவுபற்றிக் கூறிய முறை சீடர்களைத் துன்பக் கடலில் அமிழ்த்தியது. பாஸ்கா திருநாள் வேளையிலேயே அவர் காட்டிக் கொடுக்கப்படுவார்! என்றும் கூறியமையினால், சீடர்களின் துயரம் பன்மடங்காகியது.

இயேசு பெருமான் தனது சீடர்களுடன் பெத்தானியாவில் சீமோன் இல்லத்திருந்தார்.



அங்கு உணவருந்திக் கொண்டிருந்தபோது, ஒரு பெண் இயேசுபெருமானை அணுகினார். தன்னுடன் எடுத்து வந்திருந்த நறுமணம் மிக்க தைலம் நிரம்பிய புட்டியைத் திறந்து அத்தைலத்தை இயேசு பிரானின் தலையில் அப் பெண் ஊற்றினார். அத்தைலத்தின் நறுமணம் எங்கும் பரவியது.

இதனைக்கண்ட இயேசுபிரானின் சீடர்கள் சிலர் கோபங்கொண்டனர். அப்பெண்ணின் செயலைத் தடுக்க முன்வந்தனர். "இவ்வாறு ஏன் இந்தத் தைலத்தை வீணாக்குகிறாய்? இதனை விற்றால் பெரும் பணம் வந்து சேருமே; அப்பணத்தை ஏழைகளுக்குக் கொடுத்திருக்கலாமே!" என்றார்கள்.

இதை அறிந்த இயேசு, "ஏன் இந்தப் பெண்ணுக்குத் தொல்லை கொடுக்கிறீர்கள்? அவர் எனக்குச் செய்தது முறையான செயலே. ஏனெனில் ஏழைகள் எப்போதுமே உங்களோடு இருக்கிறார்கள். ஆனால் நான் எப்போதும் உங்களோடு இருக்கப் போவதில்லை. இவர் இந்த நறுமணத் தைலத்தை எனது உடல்மீது ஊற்றி எனது அடக்கத்திற்கு ஆயத்தம் செய்தார். உலகம் முழுவதும் எங்கெல்லாம் இந்நற்செய்தி அறிவிக்கப்படுமோ அங்கெல்லாம் இப்பெண் செய்ததும் எடுத்துக்கூறப்படும்; இவரும் நினைவுகூரப்படுவார் என்று நான் உறுதியாக உங்களுக்குச் சொல்கிறேன்!" என்று கூறினார்.

### கயபாவில் கூட்டம்

தலைமைக் குருக்களின் மாளிகை 'கயபா' எனப்படும். இம்மாளிகையின் முற்றத்தில், இயேசுபிரான்மீது பொறாமை கொண்டு, எப்படியாவது அவரை ஒழித்துக் கட்டிவிட வேண்டும் என்று நாட்டம் கொண்டோரும் வந்து கூடியிருந்தனர். ஏற்கனவே குறிப்பிட்டபடி, இயேசு பிரானுடைய போதனைகளைக் கேட்கத் திரளும் மக்கள் கூட்டமோ அல்லது அவருடைய சீடர்களோ அறியாமல் இயேசு பிரானைப் பிடித்துவிட வேண்டும் என்று இவர்கள் திட்டம் தீட்டினர்.

இயேசுபிரானைப் பிடித்தாலும் அவரைத் தாங்களாகவே தீர்த்துக்கட்டிவிடாமல் சட்டங்களை மீறி நடந்த ஒரு குற்றவாளியாக நீதி விசாரணைக்கு உட்படுத்த வேண்டும் என்று இவர்கள் தீர்மானித்தனர். என்னென்ன குற்றங்களை இயேசுபிரான் புரிந்துள்ளார் என்பதை வரிசைப்படுத்திக் கொண்டனர்.

தலைமைக் குருக்களின் மாளிகையில் கூட்டம் முடியும் வேளையில், முன் வாயிற் காவலன் ஒருவன் ஓடி வந்து, தலைமைக் குருவைப் பார்ப்பதற்கு ஒருவன் வந்திருப்பதாக அறிவித்தான். அவனை உள்ளே அனுப்பி வைக்குமாறு குரு கூறினார்.

### காட்டிக் கொடுக்கத் துணிந்தவன்

இயேசு பெருமானின் சீடர்களுள் ஒருவனான யூதாசு இஸ்காரியோத்து தயங்கித் தயங்கி உள்ளே வந்தான். அவனைக் கண்டதும் அக்கட்டத்திலிருந்த பரிசேயர்களுக்கு அவனை அடையாளம் தெரிந்து விட்டது. எங்கே தங்களுடைய-இயேசுபெருமானுக்கு எதிரான திட்டங்கள் பற்றி நோட்டம் பார்க்க இவன் அனுப்பப்பட்டிருப்பானோ, என்று அஞ்சினர்.

யூதாசை தலைமைக்குரு அம்மண்டபத்தின் பிறிதொரு மூலைக்கு அழைத்துச் சென்று, அவன் அங்கு வந்தமைக்கான காரணத்தை வினவினார். இயேசு பிரானைப் பிடிப்பதற்கு இக்குழுவினர் தக்க சந்தர்ப்பத்தை எதிர்பார்த்துக் காத்திருக்கும் சங்கதி தனக்கும் தெரியும் என்று தலைமைக் குருவிடம் சொன்னான். இயேசுவைப்பிடித்துக் கொடுப்பதற்கான சரியான சந்தர்ப்பத்தில் தானே அவரைக் காட்டிக் கொடுக்கப் போவதாகவும் குறிப்பிட்டான்.

யூதாசை ஓரிடத்தில் அமர்த்திவிட்டுத் தலைமைக்குரு தனது சகாக்களிடம் வந்து யூதாசின் கூற்றைத் தெரிவித்தார். பழம் நழு விப் பாலில் விழுந்த கதை போலாகிவிட்டதை உணர்ந்த அக்கூட்டத்தினர், தங்கள் திட்டம் சீராக நடைபெறப் போகிறது என்று மகிழ்ச்சியடைந்தனர். யூதாசுக்கு தக்க சன்மானம் கொடுத்துவிடலாம் என்றும் அவர்கள் முடிவெடுத்தனர்.

தலைமைக்குரு முப்பது வெள்ளிக்காசுகள் கொண்ட ஒரு பையை யூதாசிடம் கொடுத்து, வெகு சீக்கிரத்தில் காரியத்தை முடித்துத்தருமாறு கேட்டுக் கொண்டார். யூதாசு விடை பெற்றான்.

பாஸ்கா விழாவின் முதல் நாளன்று இயேசு பிரான் எங்கே விருந்துண்பது என்பது பற்றி சீடர்கள் இயேசுபிரானை அணுகி வினவினர். "புளிப்பற்ற அப்பத்தை உண்டு. பாஸ்கா விழாவின் முதல் நாளன்று கொண்டாடுவதற்கு எங்கே ஏற்பாடு செய்ய வேண்டும்?" என்று கேட்டனர். அதற்கு இயேசுபிரான், "நீங்கள் நகருக்குள் போங்கள். ஒரு கலசத்தில் நீர் கொண்டு செல்லும் ஒருவரைக் காண்பீர்கள். குறிப்பிட்ட ஒரு நபரின் பெயரைக்கூறி. அவரிடம், 'என் நேரம் நெருங்கி விட்டது; என் சீடர்களுடன் உமது வீட்டில் பாஸ்கா கொண்டாடப்போகிறேன்' எனப் போதகர் கூறுகிறார்' என்ற சொல்லுங்கள்! என்றார்.

இதன்படியே சீடர்கள் இயேசுபிரான் குறிப்பிட்ட அதே நபரைக் கண்டார்கள். இயேசு பிரான் கூறியபடியே அந்த நபரிடம் கூறினார்கள். அவரும் பெருமகிழ்வுடன் தனது சம்மதத்தை அளித்தார்; விருந்துக்கான ஆயத்தங்களையும் செய்தார்.

அன்று மாலையானதும், தனது சீடர்கள் அனைவரும் சூழ்ந்துவர அந்த இல்லத்தை வந்தடைந்தார் இயேசு பிரான். ஒரு மேசையில் புளிப்பற்ற அப்பங்களும் ஏனைய பல உணவுப் பண்டங்களும் பரப்பப்பட்டிருந்தன. அனைவரும் உண்ணத் தொடங்கியதும், இயேசுபிரான், "உங்களில் ஒருவன் என்னைக் காட்டிக் கொடுப்பான் என உறுதியாகக் கூறுகிறேன்!" என்றார்.

இயேசுபிரான் இவ்வாறு கூறியதும் சீடர்கள் அனைவரும் பதற்றமடைந்தனர். தங்களில் எவரை அவ்வாறு குறிப்பிடுகிறார் என்ற ஏக்கம் சீடர்களை வாட்டி வதைத்தது. இவர்களுள் ஒருவனாக அமர்ந்திருந்த யூதாசு ஸ்காரியோத்து திருதிருவென விழித்தான். எவருமே அறியாமல், தலைமைக் குருக்கள் மாளிகையில் தான், இயேசு பிரானைக் காட்டிக் கொடுக்க நடத்திய பேரம் பற்றி இவருக்கு எவ்வாறு தெரிந்தது என்று துணுக்குற்றான். இருப்பினும் தனது உணர்ச்சிகளை வெளிப்படுத்தாமல் சமாளித்துக் கொண்டான்.

ஏனைய சீடர்கள் ஒவ்வொருவராக எழுந்து இயேசுபிரானிடம் "ஆண்டவரே! நானா உங்களைக் காட்டிக் கொடுக்கப் போகிறேன்?" என்று கேட்டார்கள். தனது தலையை அசைத்தே 'இல்லை' என்று பதிலளித்தார். பின்னர், "என்னுடன் பாத்திரத்தில் தொட்டு உண்பவனே என்னைக் காட்டிக் கொடுப்பான். மானிட மகன் தம்மைப்பற்றி, மறைநூலில் எழுதியுள்ளபடியே போகிறார். ஆனால், ஐயோ அவரைக் காட்டிக் கொடுக்கிறவனுக்கும் கேடு விளையப்போகிறது. அம்மனிதன் பிறவாமலே இருந்தால் அவனுக்கு நலமாயிருக்கும்!" என்றார்.

இவ்வார்த்தைகளைக் கேட்ட யூதாசு எழுந்து, "போதகர் அவர்களே நீங்கள் என்னைக் குறிப்பிடுகிறீர்கள் போலுள்ளது!" என்றான். இயேசு பிரான், "நீயே சொல்லிவிட்டாயே!" என்றார். யூதாசு வேறு எதுவும் பேச முடியாமல் இருக் கையில் அமர்ந்து கொண்டான்.

### "நீயே சொல்லிவிட்டாயே?"

ஓரளவு அமைதி ஏற்பட்டாலும் எல்லோருடைய மனத்திலும் பெரும் புயல் வீசியவண்ணம் இருந்தது. யாவரும் அமர்ந்ததும் இயேசுபிரான் எழுந்து ஓர் அப்பத்தைத் தன் கையில் எடுத்தார். அதனைப் பிட்டு சீடர்களுக்குக் கொடுத்தார்.

"இதைப் பெற்று உண்ணுங்கள்; இது எனது உடல்" என்றார். பின்பு கிண்ணத்தை எடுத்துக் கடவுளுக்கு நன்றி செலுத்தி அவர்களுக்குக் கொடுத்து, "இதில் உள்ளதை அனைவரும் பருகுங்கள்; ஏனெனில் இது எனது உடன்படிக்கையின் இரத்தம்; பலருடைய பாவ மன்னிப்புக்காகச் சிந்தப்படும் இரத்தம். இனிமேல் என் தந்தையின் ஆட்சி வரும் அந்நாளில்தான் நான் உங்களோடு திராட்சைப் பழ இரசத்தைக் குடிப்பேன்; அதுவரை குடிக்கமாட்டேன் என நான் உங்களுக்குச் சொல்கிறேன்" என்றார்.

உணவருந்தும் போது வேறு எதையுமே எவரும் பேசவில்லை. துதிப்பாடல்களை மட்டும் பாடினார்கள். எல்லோரும் சோகமாகவே காணப்பட்டனர். உணவு உண்டபின் எல்லோரும் எழுந்து ஒலிவ மலைக்குச் சென்றார்கள். உறங்குவதற்கு முன்பு இயேசுபிரான் தனது சீடர்களைப் பார்த்து,

"இன்றிரவு நீங்கள் அனைவரும் என்னை விட்டு ஓடிப்போவீர்கள். ஏனெனில் 'ஆயரை வெட்டுவேன்,அப்போது மந்தையிலுள்ள ஆடுகள் சிதறடிக்கப்படும்' என்று மறைநூலில் எழுதியுள்ளது. நான் உயிருடன் எழுப்பப்பட்ட பின்பு உங்களுக்கு முன்பே கலிலேயாவுக்குப் போவேன்!" என்றார். அதற்குப் பேதுரு அவரிடம், "எல்லோரும் உம்மை விட்டு ஓடிப்போய் விட்டாலும் நான் ஒருபோதும் ஓடிப்போக மாட்டேன்!" என்றார். இயேசு அவரிடம், "இன்றிரவில் சேவல் கூவுமுன் மும்முறை நீ என்னை மறுதலிப்பாய் என உறுதியாக உனக்குச் சொல்கிறேன்!" என்றார். பேதுரு அவரிடம், "நான் உம்மோடு சேர்ந்து இறக்க வேண்டியிருந்தாலும் உம்மை ஒருபோதும் மறுதலிக்க மாட்டேன்!" என்றார். அவ்வாறே சீடர்கள் அனைவரும் சொன்னார்கள்.

(தொடர்ந்து வரும்)

**திருமறை [பு.ஆ] 20 விடை:** மறை நூல் அறிஞரும் பரிசேயரும்

**பரிசு பெறுவோர்:**

1. ஆ. பெஞ்சமின், 212, ரத்தொட்டவீதி, மாத்தளை.
2. செல்வி வி.மரிய சுசிலா, 97/2, தாழையடி கடற்கரை, சிலாபம்.
3. செல்வி சரோஜினி பர்னாந்து, 10/6,கிராமோதய மாவத்தை,ஒபயசேகரபுர, ராஜகிரிய.
4. ஏ.டப்.எம். இஜ்லால், 254ஏ, நாவின்ன, உலுவிடிக்கே, காலி.
5. ரி.ஏ. சராவுடீன், பதுரியா வீதி, றிஸ்வி நகர், புதிய காத்தான்குடி-01.

**திருமறை [பு.ஆ] 23 வினா :-** இயேசு பிரானைக் காட்டிக் கொடுப்பதற்கு என்ன வெகுமதி கொடுக்கப்பட்டது?

ஒக்டோபர் 30 க்கு முன்பாக விடைகளை அனுப்பிவைக்க வேண்டியமுகவரி:
**திருமறை-பு.ஆ.23-தினமுரசு வாரமலர், த.பெ.இல-1772, கொழும்பு.**




## கத்தரித்த கருத்துப் படம்




## காதிலை பூ கந்தசாமி

Regd. as a News Paper at the G.P.O. (QD/40/NEWS/99)

www.padippakam.com



அருள் ஜுவலர்ஸ்
ARUL JEWELLERS
பெண்களின் அழகோ இரகசியம்! அதை
எங்களது வண்ண நகைகள்மின்னிப்பேசுகின்றன.
கிளை:
105, காலி வீதி,வெள்ளவத்தை,கொழு-06 580230
3 SEA STREET, COLOMBO 11
செட்டியார் தெரு, கொழும்பு
436331




# சொத்து



ஸ்ரீ கல்யாணி ஜுவல்லஸ்
SRI KALYANY JEWELLS
புன்னகை சிந்தும் பெண்ணுக்கு
மின்னிடும் பொன்னகை பேரழகு
5 SEA STREET, COLOMBO 11
செட்டியார் தெரு, கொழும்பு
323657


→ உலகம் 18ம் நூற்றாண்டில் தான் பல புரட்சிகரமான முன்னேற்றங்களைக் கண்டது. அறிவியலின் அபாரமான வளர்ச்சியால் இந்நூற்றாண்டில் பல புரட்சிகரமான மாறுதல்கள் தலையெடுத்தன. எந்திர சாதனங்களைப் பயன்படுத்தும் முறைகளும் 18ம் நூற்றாண்டில் தான் பரவலாயின.

அக்காலத்தில் இங்கிலாந்தை ஆட்சி புரிந்த மூன்றாவது ஜோர்ஜ் மன்னர், அறிவியல் ரீதியில் ஆக்கங்களை ஊக்கப்படுத்தினார்.

இன்று இலண்டன் மாநகரில் மூன்றாவது ஜோர்ஜ் மன்னர் காலத்தில் உருவாக்கப்பட்ட எந்திர சாதனங்களைக் கொண்ட இலண்டன் அறிவியல் அருங்காட்சியகம் திறுவப்பட்டுள்ளது. இக்காட்சியகத்தில் வைக்கப்பட்டுள்ள மின் அழுத்தம் ஏற்படுத்தும் ஒரு கருவியையே இங்கு காண்கிறீர்கள். 1747ல் கண்டுபிடிக்கப்பட்ட 'லெய்டன் ஜார்' என்ற பெயருடைய கருவி இது.

இன்று வன்னியில் வானொலி கேட்பதற்கு மின் அழுத்தம் ஏற்படுத்த சைக்கிளை பயன்படுத்துவதும் எதிர்கால வரலாற்றில் குறிக்கப்படலாம். இவ்வாறு காட்சியாக வைக்கப்படலாம்.

↘ நீரிழிவு ஒருநோயல்ல: உடலிலுள்ள ஒரு சுரபி செயலற்றுப் போவதால் ஏற்படும் ஒரு குறைபாடு என்றுதான் மருத்துவ நிபுணர்கள் கூறுகின்றனர். இன்சுலின் என்ற ஒரு திரவத்தை பாங்கிரியஸ் என்ற சுரபி சுரந்து, நாம் உண்ணும் உணவினை சக்தியாக்கி உடலின் பல பாகங்களுக்கும் இரத்தத்துடன் கலந்து அனுப்ப உதவுகிறது. இந்தப் பாங்கிரியஸ் ஏதோ ஒரு காரணத்தினால் இன்சுலினைச் சுரக்காமல் விட்டுவிடுகிறது. இதனால் பலவிதமான நோய்கள் உடலில் குடிகொண்டு விடுகின்றன.

இயற்கை முறையில் இன்சுலின் சுரக்காமற்போனால், செயற்கை முறையிலான இன்சுலினை ஊசிமூலம் உடலில் செலுத்தும் முறையினை கனடாவைச் சேர்ந்த ஃபிரெடரிக் பாண்டிங் 1922ல் கண்டுபிடித்தார். இதற்குமுன்னர் நீரிழிவுக்குள்ளானவர்கள் இன்சுலின் இன்றி இறந்து போனார்கள்.

சாமுவேல் டேவிட்சன் என்ற இங்கிலாந்தின் கிளாஸ்கோ நகரவாசி, 1923ல் தனது 11வது வயது முதல் தனது வாழ்நாள்வரை மொத்தம் 78 ஆயிரத்தி 900 தடவைகள் இன்சுலினை ஊசி மூலம் தன் உடலில் ஏற்றி உலக சாதனை புரிந்திருக்கிறார். ●







→ வியன்னா நகரில் உள்ள கம்பியூட்டர் வளாகத்தின் அழகான தோற்றம்தான் இது.

இங்கு பாரிய கம்பியூட்டர்கள் குத்தகை அடிப்படையில் அரச நிறுவனங்கள், தொழில் நிறுவனங்கள் என்பவற்றுக்கு வழங்கப்படுகின்றன. இங்கு இணைத்துக் கொள்ளும் நிறுவனங்கள் தங்களுக்கான தனியான தொழிலியல் நிபுணர்களையோ, பொறியியலாளர்களையோ வைத்திருக்கத் தேவையில்லை. இந்த கம்பியூட்டர் நிறுவனமே கவனித்துக் கொள்ளும் இதனால் செலவு மிச்சம்.

இதன் பிரமாண்டமான எழில்மிகு வளாகத்தை ஃபிரீடென்ஸ்ரீச் ஹண்டர் வாசர என்னும் கலைஞர் வடிவமைத்துள்ளார்.




← ஒருவருடைய உறுப்பினை வேறொருவருக்கு மாற்றி வைத்து சத்திர சிகிச்சை செய்வது இன்று பிரபல்யம் அடைந்து விட்டது. குறிப்பாக சிறுநீரக மாற்று சிகிச்சைதான் அதிகமாக நடைபெற்று வருகிறது. அதுவும் இளவயதினருக்குத்தான் இத்தகைய உறுப்பு மாற்றுச் சிகிச்சையைத் தாக்குப்பிடிக்க முடியும்.

இப்படத்தில் காணப்படும் தம்பதியினர் விக்டோரியா 77 வயதானவர். ரொபட் 77 வயதானவர். இவர்கள் மணம் முடித்து 49 வருடங்களின் பின்னர், கணவரின் சிறுநீரகம் செயலற்றுப் போனது.

தனது முதுமையையும் ஒரு பொருட்டாகக் கருதாது, தனது கணவருக்காக 1995ம் ஆண்டு தனது சிறுநீரகம் ஒன்றைக் கொடுத்து உதவினார் விக்டோரியா.

↑ இந்த வகையில் உலகிலேயே 'மிகவும் வயதான பின்பு சிறுநீரகத்தை வழங்கியவர்' என்ற பெருமையை விக்டோரியா பெற்றுள்ளார். அமெரிக்காவின் சான் ஃபிரான்சிஸ்கோ மருத்துவமையத்தில் இச்சத்திர சிகிச்சை வெற்றிகரமாக நடந்தேறியது.

தனக்காக தன் மனைவி செய்த பெருதவியை மெச்சி ரொபட் விக்டோரியாவுக்கு அன்பு முத்தம் கொடுக்கிறார். இளம் வயதிலும் நடுத்தர வயதிலும் சிறுநீரகத்தை தானமாக கொடுத்தோர் பலர் உள்ளனர். 77 வயதில் தானம் செய்தவர் இவர் மட்டும்தான். இதுதான் காதலா?!




← உலகின் மிகச் சிறந்த சுழற்பந்து வீச்சாளர் சக்லெய்ன் முஷ்டாக். தற்போது விளையாடிக் கொண்டிருக்கும் சுழற்பந்து வீச்சாளர்களில் ஷேன் வோர்ன், முத்தையா முரளிதரன், அனில் கும்ப்ளே ஆகியோரும், சக்லெய்ன் முஷ்டாக்குமே தலைச் சிறந்தவர்கள்.

ஒருநாள் போட்டிகளில் குறைந்த போட்டிகளில் பந்து வீசி நூறு விக்கெட்டுக்களையும், 200 விக்கெட்டுக்களையும் சாய்த்த வீரர். 111 ஒருநாள் போட்டிகளில் ஆடி 210 விக்கெட்டுக்களைச் சாய்த்துள்ளார். சிறப்பான பந்து வீச்சு 29 ஓட்டங்களுக்கு 5 விக்கெட்டுகள்.

22 டெஸ்ட் போட்டிகளில் கலந்துகொண்டு 97 விக்கெட்டுக்களைக் கொய்திருக்கிறார். டெஸ்டில் சிறப்பான பந்து வீச்சு 32க்கு 5.

உலகக் கோப்பைப் போட்டியில் இந்தியாவின் முன்னாள் வேகப்பந்து வீச்சாளர் சேட்டன் சர்மா மட்டுமே அடுத்தடுத்து மூன்று பந்துகளில் மூன்று விக்கெட்டுக்களை (ஹட்-டரிக்) வீழ்த்தியிருந்தார்.

இம்முறை உலகக் கோப்பைப் போட்டியில் சக்லெய்ன் முஷ்டாக் ஸிம்பாப்வே அணிக்கெதிராக ஹட்-ட்ரிக் சாதனை படைத்துவிட்டார்.

27.11.1976 இல் பாகிஸ்தான் லாகூரில் பிறந்த 23 வயதான இந்த வலதுகை சுழற்பந்து வீச்சாளருக்கு வருங்காலம் பிரகாசமாக உள்ளது.

# 1வது ★★ 3வது பிறந்தநாள் வாழ்த்து



(J.Kanista) கனிஷ்ரா 1999.08.18 / ஜோன்சன்-நிரோஜ் 1999.09.20

பம்பலப்பிட்டி இல. 07 நந்தன கார்டனில் வசிக்கும் ஜெயக்குமார் அனோசா தம்பதிகளின் செல்வப் புதல்வி (J.Kanista) கனிஷ்ரா (1999.08.18) 1வது பிறந்த நாளையும் செல்வப் புதல்வன ஜோன்சன்-நிரோஜ் (1999.09.20) 3வது பிறந்தநாளையும் நமது இல்லத்தில் வெகு விமர்சையாகக் கொண்டாடினார்கள். இவர்களை அன்பு அப்பா, அம்மா, அம்மம்மா, அப்பப்பா, அப்பம்மா, அருத்மாவத்தை மாமாமார், மாமிமார், பெரியப்பா, பெரியம்மா, மாமா (ஜெர்மன்), அத்தை (ஜெர்மன்), அத்தை யாழ்ப்பாணம், சித்தப்பா, சித்தி ஆகியோர் யேசு நாதரின் அருளுடன் ஆயகலைகளும் பெற்று பல்லாண்டு நீடூழி வாழ்கவென வாழ்த்துகிறார்கள்.

தகவல்: ஜெயக்குமார் (அப்பா)



படிப்பகம்